வெளியீடு 20-3-2007

Issued: 20-3-2007

7555
13.06.07

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஆகஸ்ட் 8, 2006—தொகுதி 8—எண் 2

Tuesday the 8th August, 2006—Volume 8—No. 2

...ப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

...Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

**8-8-2006**

## உள்ளடக்கம்


பக்கங்கள்

**1. வினாக்கள்-விடைகள்—**

நட்சத்திரக்குறியிட்ட வினாக்கள் 271-294

**2. தகவல் கோரல்—**

(அ) பெப்சி, கோகா-கோலா குளிர் பானங்களைத் தடை செய்யக் கோருதல் 294-295

(ஆ) கரூர் தொகுதியில் மணல் எடுப்பதற்கு மக்கள் எதிர்ப்பு 295-296

**3. கவன ஈர்ப்பு—**

சீர்காழி தொகுதி, பனங்காட்டாங்குடி ராஜாத்தி அண்ணி நடுநிலைப் பள்ளியை அரசு எடுத்து நடத்தக் கோருதல் 296-299

**4. சாலை விபத்தில் காயமுற்ற நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தனுஷ்கோடி ஆதித்தன் அவர்களுக்குச் சிறப்பு சிகிச்சை—மாண்புமிகு முதல்வருக்கு நன்றி** 300-305

திரு. பா. வேல்துரை 301

திரு. மு. அப்பாவு 301-302

*திரு. டி. சுதர்சனம் 302

திரு. ஜி.கே. மணி 302-303

திரு. சி. கோவிந்தசாமி 303

திரு. வை. சிவபுண்ணியம் 303-304

திரு. மு. கண்ணப்பன் 304-305

*திரு. கு. செல்வம் 305

**5. அறிவிப்பு—**

பேரவை அலுவலில் மாற்றம் 305

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தருமபுரி நகரில் பட்டு நூல் விற்பனை மையம் ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக வட தமிழ்நாட்டிலே தருமபுரியில் இன்றைக்கு அதிகமான பட்டு நூல் உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். அதுவும் தருமபுரியில் நூற்றுக்கும் மேற்பட்ட பட்டு நூல் உற்பத்தி ஆலைகள் நடைபெற்று வருகின்றன. இவர்கள் அனைவரும் காஞ்சிபுரத்தில் இருக்கின்ற பட்டு நூல் கொள்முதல் நிலையத்தில் கொண்டு வந்துதான் விற்பனை செய்ய வேண்டிய ஒரு நிலை உள்ளது. அதற்கு உரிய பாதுகாப்பும், பேருந்து வசதிகளும் சரியில்லாத காரணத்தினால் அங்கே இருக்கின்ற விவசாயிகளுடைய நலன் கருதி இந்த பட்டு நூல் விற்பனை மையத்தை தருமபுரியிலே துவங்க அரசு முன்வருமா என்பதை நான் தெரிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டு நூல் விற்பனை, இன்றையதினம் தருமபுரியிலே தனியார் பல இடங்களிலே கொள்முதல் செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படிக் கொள்முதல் செய்யும்போது அரசாங்கம் நிர்ணயித்திருக்கின்ற விலை, கர்நாடக மாநிலத்திலே எந்த விலைக்கு விற்கப்படுகிறதோ, காஞ்சிபுரம் கூட்டுறவுச் சங்கத்திலே எந்த விலைக்கு விற்கப்படுகிறதோ, அதே விலைக்குத்தான் வாங்கவேண்டும் என்று சொல்லப்பட்டு, இன்று பட்டு நூல் ஒரு கிலோ 1,300 ரூபாய்க்கும், பட்டுக் கூடு ஒரு கிலோ 150 ரூபாய்க்கும் அங்கே தனியார் கொள்முதல் செய்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் இதை கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் கொள்முதல் செய்யவேண்டும் என்று விரும்புவாரேயானால் அவர்களே ஒரு கூட்டுறவுச் சங்கத்தை அங்கே உருவாக்கிக்கொண்டால் அதன்மூலம் அவர்கள் கொள்முதல் செய்வதற்கு அரசாங்கம் எல்லாவிதமான உதவிகளையும் செய்து தரும்.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே அரசு சார்பில் நடைபெறுகின்ற பட்டுக் கூடு விற்பனை மையத்திலே இடைத்தரகர்களுடைய ஆதிக்கம் தலை ஓங்கி, இன்றைக்கு விவசாயிகள் சரியான விலை பெறமுடியாத அளவுக்கு, [illegible] ய ஆதிக்கம் வந்துகொண்டிருக்கிறது.

22742
சென்னை-600 009





உதாரணமாக இன்றைக்கு அந்த விற்பனை மையத்தில் இருக்கின்ற முன்னாள் முதலமைச்சருடைய படத்தை எடுத்துவிட்டு, இன்றைய முதலமைச்சருடைய படத்தை மாட்டுவதற்குக்கூட அனுமதி இல்லாமல் அங்கே அதிகாரிகள் திணறிக் கொண்டிருக்கிறார்கள் என்பது இதற்கு ஓர் உதாரணமாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதன்மீது நடவடிக்கை எடுப்பாரா என்பதைப் பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல பட்டு நூல் கொள்முதல் செய்வதிலே ஏதாவது பிரச்சினை இருக்குமானால் அதைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும். படம் மாட்டுவதைப் பற்றி இங்கே சொன்னார்கள். அது குறித்து உரிய நடவடிக்கை எந்த முறையிலே எப்படி எடுக்க வேண்டுமோ அப்படி அரசாங்கம் அந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளும்.

*முற்பகல் 9–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்திலும் பட்டு உற்பத்தி அதிகரித்து வருகிறது. இதை விற்பதற்கு பெங்களூர் நகரம் நோக்கிச் செல்ல வேண்டியிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியதைப்போல, தருமபுரியில் மிகவும் குறைவாக வாங்குகிறார்கள் என்ற புகார் இருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, தருமபுரியிலே ஒரு விற்பனை வளாகத்தை அரசு ஏற்படுத்த முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கர்நாடகா மாநிலத்திற்குச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. காஞ்சிபுரத்திலேயே TANSILK என்ற நிறுவனம் இயங்கிக் கொண்டிருக்கின்றது. அங்கேயே கொண்டுபோய் விற்கலாம். நியாயமான விலைக்கு தரமான பட்டு அங்கே கொள்முதல் செய்யப்படுகிறது. நான் ஏற்கெனவே சொல்லியதைப்போல, மாண்புமிகு உறுப்பினர்கள் யாராவது தாங்கள் வசிக்கின்ற பகுதியிலே பட்டு அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது;

[2006 ஆகஸ்ட் 8

நூல்கள் கொள்முதல் செய்யப்பட வேண்டுமென்றால், அவர்களே அங்கே ஒரு கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்திக்கொண்டால், அதற்கு அரசு அத்தனை உதவிகளையும் செய்யும் என்று தெரிவித்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. திக. ராஜா.

**திரு. திக. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான ஜவ்வாது மலையிலே, புங்கம்பட்டு நாட்டிலே, அந்த மலைக் கிராமத்திலே, 100 ஏக்கர் பரப்பளவிலே பட்டுக் கூடு உற்பத்தி மையம் இயங்கி வந்தது. இப்போது மழை இல்லாத காரணத்தினாலே அங்கே பட்டு உற்பத்தி என்பது நிறுத்தப்பட்டிருக்கிறது. அங்கே கட்டிக்கொடுக்கப்பட்ட குடியிருப்புகள் மற்றும் கிடங்குகள் எல்லாம் வீணாக, இன்றைக்கு சிதிலமடைந்து கொண்டிருக்கின்றன. அந்த நிலங்களில் இப்போது முட்புதர்கள் வளர்ந்துகொண்டிருக்கின்றன. நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு 2 ஏக்கர் நிலம் தருகிற திட்டத்தின்கீழ், அந்த 100 ஏக்கரை, 50 மலை வாழ் மக்களுக்குப் பிரித்துத்தர நம்முடைய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி எங்கே நீர்ப் பற்றாக்குறை இருக்கிறதோ அந்த இடங்களிலேயெல்லாம் பட்டு உற்பத்தியை ஊக்குவிக்க வேண்டுமென்றும், பட்டுக் கூடுகள் அதிகமாக உற்பத்தி செய்ய மலைப்பகுதிகளிலே இருக்கக்கூடிய ஏழையெளியவர்களுக்கு உதவ வேண்டுமென்றும் மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும், இரண்டும் சேர்ந்து, சொட்டு நீர்ப் பாசன முறையை அமல்படுத்துவதற்காக, 100 per cent. 100 சதவீதம் மானியம் கொடுப்பது என்று முடிவெடுத்து, மத்திய அரசாங்கம் 50 சதவீதமும், மாநில அரசாங்கம் 50 சதவீதமும் சொட்டு நீர்ப் பாசனத்திற்காக உதவி செய்து வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அந்த 100 ஏக்கர் நிலத்திலேயும் சொட்டு நீர்ப் பாசனத்தின் மூலமாக பட்டுக் கூடுகளை உற்பத்தி செய்வதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே மொத்தம் எவ்வளவு பட்டு நூல் உற்பத்தியாகிறது?



2006 ஆகஸ்ட் 8]

அது எந்தெந்த மாவட்டங்களிலே அதிகளவு உற்பத்தி செய்யப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டு நூலினுடைய உற்பத்தி ஒவ்வொரு ஆண்டிற்கும் வித்தியாசப்படுகிறது. ஆனால், பட்டு நூல் சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, கோவை, வேலூர் போன்ற மாவட்டங்களிலே அதிகமாக உற்பத்தியாகிறது. இன்னும் சில மாவட்டங்களிலே இப்போது புதிதாக ஏழையெளியவர்கள் பட்டுக் கூடுகளை உற்பத்தி செய்வதிலே ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 12, திரு. நா. இராமகிருஷ்ணன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**12—**

### பேருந்து வசதி

***32—திரு. நா. இராமகிருஷ்ணன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கம்பம் தொகுதியில் உள்ள மேகமலைக்குக் கூடுதலாகப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திண்டுக்கல் மூலம் கம்பம், சின்னமனூர், தேனி ஆகிய இடங்களிலிருந்து மேகமலைக்கு 12 தனி நடைகளும், தனியார் பேருந்துகள்மூலம் 4 தனி நடைகளும் இயக்கப்படுகின்றன. இந்நடைகளில் பயணிகள் விழுக்காடு மிகவும் குறைவாக உள்ளது. எனவே, கூடுதலாகப் பேருந்துகள் இயக்க அவசியமில்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேகமலை பகுதி என்பது முற்றிலும் தேயிலைத் தோட்ட விவசாயிகள் நிறைந்த பகுதி. 6,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இங்கே பணிசெய்து வருகின்றார்கள். அந்த மேகமலைப் பகுதிக்குச்

செல்லுகின்ற பேருந்துகள் மிகவும் பழமை வாய்ந்தனவாகவும், இயக்குவதற்கு தகுதியற்ற நிலையிலேயும் இருக்கின்றன. ஞாயிற்றுக்கிழமை, வாரத்தில் ஒரு நாள் விடுமுறை, அன்றையதினம், அவர்கள் மளிகைச் சாமான்கள் வாங்குவதற்கு தரைப் பகுதிக்கு வரும்போது, இட நெருக்கடி காரணமாக பேருந்தின் கூரையிலே அமர்ந்து வருகின்றார்கள். அவர்களுடைய பாதுகாப்பையும், நலனையும் கருதி, இவ்வரசு மேலும் கூடுதல் பேருந்துகளை அவ்வழித்தடத்தில் இயக்குவதற்கு முன்வருமா என்று அறிய விழைகின்றேன்.

*முற்பகல் 9–40*

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஞாயிற்றுக்கிழமை ஒரு நாளுக்காக மற்ற அத்தனை நாட்களிலும் சேர்த்து இயக்குவது என்பது இயலாது. அன்றைக்கு வேண்டுமானால் கூடுதலான நடைகளை விடுவதற்கு அதிகாரிகளை விட்டு ஆய்வு செய்யச் சொல்லி, அந்த ஏற்பாட்டை இந்த அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஞாயிற்றுக்கிழமை அந்தத் தோட்டத் தொழிலாளர்களுடைய வசதிகளைக் கருத்தில்கொண்டு மேலும் பேருந்து விடுவதாக, அதைப் பரிசீலனை செய்வதாக அமைச்சர் கூறியதற்கு நன்றி. இயங்குகின்ற அந்தப் பேருந்துகள் மிகவும் தகுதியற்ற நிலையில், பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. அந்தப் பேருந்துகளை அகற்றிவிட்டு, புதிய பேருந்துகள் விடுவதற்கு, அந்தப் பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகளை இயக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றே அறிவிக்கப்பட்டிருக்கிறது. வெகு விரைவில் அந்தப் பணிகள் தொடங்க இருக்கின்றன. மற்ற பேருந்துகள் புதிதாக விடுவதற்கு இந்த அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1996 ஆம் ஆண்டு நான்காம் முறையாக முதலமைச்சராகப் பதவியேற்றபோது, அதற்கு முந்தைய ஆட்சி route



variation, அதேபோல curtailment போன்றவற்றையெல்லாம் அவர்கள் தாராளமாக வழங்கிவிட்டு, கிராமப்புறப் பகுதிகளிலே பேருந்துகள் செல்லாமல் செய்த நிலையை உடனடியாக ஓர் அரசாணை பிறப்பித்து, மீண்டும் அவற்றையெல்லாம் இரத்து செய்து, அந்த route variation, அதேபோல curtailment என்று அந்த ஆட்சி போட்டதையெல்லாம் இரத்து செய்து, கிராமப்புறங்களுக்கு பஸ் விட்டார்கள். அதேபோல, இந்த முறையும், நீதிமன்றத்தினுடைய ஆணை இருப்பதாக அமைச்சர் நேற்றுகூட இந்த அவையிலே தெரிவித்தார்கள். அதற்கு ஒரு சட்டம் இயற்றியாவது, கடந்த கால ஆட்சியிலே கிராமப்புறங்களையெல்லாம் புறக்கணித்துவிட்டு, route variation என்றும், curtailment என்றும் வந்ததை இரத்து செய்து மீண்டும் கிராமப்புறத்திற்கு பஸ் விடுவதற்கு (குறுக்கீடு) அமைச்சர் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி மாத்திரம் கேளுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நேற்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கிராமங்களிலே மக்கள் வசதிக்கேற்ப, அரசுப் பேருந்துகளை அந்தப் பகுதிகளிலே இயக்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது உண்மை. கடந்த காலத்தில் அவர்கள் நீதிமன்றத்தின் மூலமாக கிராமப்புறத்தில் சென்ற பேருந்துகளையெல்லாம் நகர்ப்புறத்திற்குக் கொண்டுவந்துவிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல அவற்றை மீண்டும் இயக்க முடியுமா என்பதைப் பற்றியும் ஆராயலாம். ஆனால், ஒன்று, ஏற்கெனவே அவர்கள் ஆட்சி அதிகாரத்தில் இருந்தபோது, அரசுப் பேருந்துகளையெல்லாம் உடனடியாக நாங்கள் தனியாருக்குத் தரப் போகிறோம் என்ற ஓர் ஏற்பாட்டைச் செய்தார்கள். அப்போது இன்றைக்கு இருக்கிற முதலமைச்சர் அதிகாரத்தில்கூட இல்லை. ஓரே ஒரு வார்த்தைதான் சொன்னார். அவர்கள் தனியாருக்குக் கொடுத்தால், நாங்கள் வந்தால் அரசுடைமை ஆக்குவோம் என்றார். அந்தப் பிரச்சினை அப்போதே முடிந்துவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல வாய்ப்பு இருக்குமானால் அதைப்பற்றியும் யோசிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரிலே வாகனங்களுடைய எண்ணிக்கை மிகவும் பெருகிவிட்ட நிலையில், பொதுவாக பேருந்துகளிலே பயணிப்பது என்பது மிகவும் கடினமான காரியமாக இருக்கிறது. கம்யூனிஸ்ட் போன்ற கட்சிகள் ஆளுகின்ற மாநிலங்களில், கொல்கத்தா போன்ற நகரங்களில்கூட வெள்ளை பஸ், பச்சை பஸ் என்று பல்வேறு திட்டங்களின்கீழ் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. அதுபோன்று, சென்னை நகருக்கு மினி பஸ் அல்லது வேறு திட்டங்களின்கீழ் பல்வேறு வகையிலே பேருந்துகள் இயக்கப்படுமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளை காலை போக்குவரத்துத் துறை மானியம் இருக்கிறது. இதைப்பற்றி அறிவிப்பு வர இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** பேரவைத் தலைவர் அவர்கள் எனக்கு அனுமதி அளித்ததற்கு நன்றி. ஆடி மாதம் வந்துவிட்டால் 10 வாரங்கள், 15 வாரங்கள் என்று கோயில்களிலே திருவிழாக்கள் நடைபெறும். தற்போது பெரியபாளையத்தில் கோயிலுக்கு மாட்டு வண்டிகளில் பக்தர்கள் வரக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருக்கிறது. வட சென்னைப் பகுதியிலேயிருந்துதான் வாரந்தோறும் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட நபர்கள் அந்தக் கோயிலுக்குச் செல்கிறார்கள், நேர்த்திக் கடனைச் செலுத்துவதற்கு. ஆகவே, சென்னை பாரிமுனையிலிருந்து – கூடுதல் பேருந்துகள் விடுவது சம்பந்தப்பட்ட கேள்வி என்பதால் – ஞாயிற்றுக்கிழமை, வெள்ளிக்கிழமைகளில் கூடுதலாக பேருந்துகள் விடப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவைக்கேற்ப அதிகப்படுத்திக்கொண்டிருக்கிறோம். நேற்றுகூட நம்முடைய மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் வட சென்னைப் பகுதிகளிலே ஏழு புதிய ரூட்களைத் தொடக்கி வைத்து இங்கு வந்திருக்கிறார்கள். சென்னை மாநகரத்தின் தேவைக்கேற்ப அதிகப்படுத்தி, புதிய வழித்தடங்களை உருவாக்குவோம்.





ஞாயிற்றுக்கிழமைகளில். அதேபோல் வெள்ளிக்கிழமைகளில் தேவையான அளவிற்கு பேருந்துகளை விடச்சொல்லி ஏற்கெனவே ஆணையிடப்பட்டிருக்கிறது. படிப்படியாக 2,100 வழித்தடங்களிலிருந்து இப்போது 2,300 வழித்தடங்கள் வரை கூடுதலாக்கி இருக்கிறோம். இன்னும் அதிகமாகத் தேவையானால், அதிகப்படுத்தித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்போரூர் தொகுதியில் அமைந்துள்ள மறைமலை நகரானது, டாக்டர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட நகர். அங்கு 50,000–க்கும் மேற்பட்ட பொதுமக்கள் வாழ்கின்றனர். ஆனால், இதுவரை சென்னைக்கு மாநகரப் போக்குவரத்து நேரடி வசதியில்லை. அமைச்சர் அவர்கள் செய்துத் தருவார்களா? அதேபோன்று, திருப்போரூர் நகரானது, முருகன் கோவிலுக்குப் பிரசித்தி பெற்ற ஊரு நகர். அதற்கும் சென்னை மாநகரப் போக்குவரத்து நேரடித் தொடர்பு ஏற்படுத்தப்பட இருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கையை பல சட்டமன்ற உறுப்பினர்கள், இன்றைக்கு சென்னையைச் சுற்றியிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம், இங்கு விரிவுபடுத்தப்பட்ட பகுதிகளுக்குப் பேருந்துகள் விடவேண்டும், அதுவும், சென்னையிலிருந்து நேரடியாக விடவேண்டுமென்று தெரிவித்தார்கள். நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் அவர்களே என்னிடம் தெரிவித்தார்கள். அதை வைத்து ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. நாளை மானியக் கோரிக்கையிலே அந்த அறிவிப்பு வெளியாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கே இந்தக் கேள்வியைக் கேட்பதாக இருந்தேன். இன்று வாய்ப்பு அளித்தீர்கள் நன்றி. இராயபுரம் தொகுதியிலிருந்து காலங்காலமாக

[2006 ஆகஸ்ட் 8

புதுவை மாநிலத்திற்கு மக்கள் சென்று கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் கோயம்பேடு வந்து, அங்கிருந்து புதுவைக்குப் போவது என்பது மிகவும் சிரமமாக இருக்கின்ற ஒன்று. 20 ஆண்டுகளுக்கு முன்புகூட "மெட்ராஸ் டு பாண்டிச்சேரி" என்ற படம், இராயபுரத்தை மையமாக வைத்துத்தான் எடுக்கப்பட்டது. எனவே, மீண்டும் நேரடியாக கிழக்குக் கடற்கரைச் சாலை வழியாக, பேருந்து விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து பாண்டிச்சேரிக்கு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் புதிய பேருந்தை இயக்கவேண்டுமென்று, நேற்றுதான் நமது மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். நேற்று ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** நீங்கள் கேட்டேன் என்கிறீர்களா? (குறுக்கீடு) அவர் கேட்டார், நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, அமைதி, அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு உறுப்பினர் ஐந்தாண்டுக் காலம் தொடர்ந்து அந்தப் பகுதியிலே powerful அமைச்சராக இருந்தவர். அவர் காலத்திலேயே அந்தப் பேருந்தை விட்டிருக்கலாம். இப்போது நம்முடைய தலைவர், முதல்வர் அவர்கள் காலத்தில், நிச்சயமாக அந்தப் பேருந்து அங்கிருந்து விடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டையிலிருந்து ஏற்கெனவே சென்னைக்கு 332–A என்ற விரைவுப் பேருந்து வந்துகொண்டிருந்தது. அது கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னால் நிறுத்தப்பட்டுவிட்டது. எனவே, பட்டுக்கோட்டை மக்களுடைய கோரிக்கையை ஏற்று, — Ultra Deluxe என்று சொல்லக்கூடிய நவீன பஸ்களை விடுகிறீர்கள், அந்தப் பேருந்துகளில் ஒன்றை வழங்கி, மீண்டும் இயக்க அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2006 ஆகஸ்ட் 8]

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றே அறிவித்திருக்கிறோம். எங்கெங்கு விரைவுப் பேருந்து நிறுத்தப்பட்டு இருக்கிறதோ, புதிதாக மீண்டும் அந்தப் பகுதியிலேயிருந்து விரைவுப் பேருந்தைத் தொடங்குவதற்கு இந்த அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 13, திரு. அ. தமிழரசு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**13—**

## பேருந்து வசதி

***1596—திரு. அ. தமிழரசு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, சேலத்திலிருந்து ஓமலூர் வரை செல்லப்பிள்ளைகுட்டை ஊராட்சி வழியாகச் சென்று வந்த பேருந்தை மீண்டும் அதே வழித்தடத்தில் இயக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, செல்லப்பிள்ளைகுட்டை ஊராட்சி வழியாக ஓமலூர் வரை நகரப் பேருந்து ஒன்று இன்று முதல் இயக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேருந்தானது, கலைஞர் ஆட்சியிலே விடப்பட்ட பேருந்து. கடந்த அ.இ.மு.க. ஆட்சியிலே நிறுத்தப்பட்டது. கிராமப் பயணிகள் பயனடைகின்ற வகையிலே, சேலம் பேருந்து நிலையத்திலிருந்து சூரமங்கலம், பாகல்பட்டி, செல்லப்பிள்ளைகுட்டை ஊராட்சி வழியாக ஓமலூர் பேருந்து நிலையத்தை அடைகின்ற ஒரு பேருந்து, இதை மீண்டும் இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கு பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சண்முகவேலு.

[2006 ஆகஸ்ட் 8

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரிடம் இந்தக் கேள்வியையொட்டி வருகின்ற கேள்வியாக கேட்க விரும்புகிறேன். எங்களது உடுமலைப்பேட்டைத் தொகுதியிலே இருக்கிற மானுப்பட்டியிலிருந்து இளையமுத்தூர் வரை செல்லக்கூடிய பாதை, கிராமச் சாலைத் திட்டத்தின் மூலமாகப் போடப்பட்டது. அங்கு போக்குவரத்து அதிகமாக உள்ளது. ஏற்கெனவே செல்கின்ற நகரப் பேருந்துகளில் ஏதாவது ஒரு வண்டியை விடுவதற்கு கடந்த எங்களது ஆட்சிக் காலத்திலேயே கடைசி நேரத்திலே, அனுமதி பெறக்கூடிய ஒரு சூழ்நிலையில், தேர்தல் காரணமாக நிறுத்தப்பட்டுள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வந்து, அந்தப் பேருந்தை விடுவதற்கும், அதேபோல, அதே பகுதியில் இருக்கக்கூடிய பூதநத்தம் – அரிசன மக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதி – அங்கிருந்து திருமூர்த்தி நகர் வரை செல்லக்கூடிய பேருந்தும் நிறுத்தப்பட்டுள்ளது. நிறுத்தப்பட்ட அந்தப் பேருந்தை விடுவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்து அதைச் செய்து தருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9–50*

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடுமலைப்பேட்டை பகுதியில் தேவைப்படுகின்றபோது, நமது சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அதிகாரிகளைவிட்டு விரைவில் ஆய்வு செய்து, அந்தப் பகுதி சரியாக இருக்குமானால், நிச்சயமாகப் பேருந்து இயக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்தில், கொடைக்கானல் மிக முக்கியமான ஒரு பகுதி. ஆனால், கொடைக்கானலிலிருந்து நீண்ட தொலைவில் இருக்கக்கூடிய நகரங்களுக்குப் போக்குவரத்து வசதி என்பது இல்லை. அருகில் இருக்கக்கூடிய பழனி மலையிலிருந்து கொடைக்கானல் மலைக்கு Rope car வசதியை செய்து தர எதிர்காலத்தில் அரசு பரிசீலிக்குமா என்பதனைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.



2006 ஆகஸ்ட் 8]

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றி மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சரோடு பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி அறிவிப்பினை அவர்கள்தான் தரவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகாபலிபுரத்திலேயிருந்து, திருக்கழுக்குன்றம், செங்கற்பட்டு, காஞ்சிபுரம், அரக்கோணம், திருத்தணி செல்லும் வழித்தடத்தில் தினமும் 8 நடைகள் பேருந்துகள் நேரடியாக இயக்கப்பட்டன. அவை கடந்த கால ஆட்சியிலே நிறுத்தப்பட்டு விட்டன. மீண்டும் அந்தப் பேருந்துகளை இயக்க நம்முடைய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசு விரைவுப் பேருந்துகளே இவருடைய தொகுதியிலுள்ள பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லவேண்டுமென்று சொன்னார். அங்கு அந்த வசதி இப்போது அவர்களுக்குச் செய்து தரப்பட்டிருக்கிறது. எனவே, சட்டமன்ற உறுப்பினர் சொல்கின்ற கோரிக்கையை எடுத்து ஆய்வு செய்து, அது இந்தப் போக்குவரத்துக் கழகங்களுக்குச் சரியாக இருக்குமானால், இலாபகரமாக இருக்குமானால், அந்தப் பணியை நிச்சயமாகச் செய்வோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூரிலிருந்து திருக்கண்ணாபுரம், திருச்செங்காட்டாங்குடி வழியாக, நன்னிலம் தொகுதியிலுள்ள திருமருகலுக்குச் சென்று வந்த No.13, அந்த பஸ், கடந்த 3½ ஆண்டு காலமாக நிறுத்தப்பட்டுவிட்டது. அந்தப் பகுதியிலே சாலை வசதியும் சரியாக இருக்கிறது; வசூலும் கம்மியாக இருக்காது. இருந்தபோதிலும். அது நிறுத்தப்பட்டுவிட்டது. மீண்டும் அம்மக்களின் வசதிக்காக அதை இயக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் கடந்த வாரம் அங்கிருந்து விரைவுப் பேருந்து சென்னைக்கு வரவேண்டுமென்று சொன்னார். அன்றைக்குக்கூட இதைப்பற்றிச் சொல்லவில்லை. சொல்லியிருந்தால், எப்படி விரைவுப் பேருந்து இயக்கப்பட்டதோ, அதேபோல, இந்தப் பேருந்து வழித்தடத்தையும் இயக்கியிருக்கலாம். ஏற்கெனவே, சட்டமன்ற உறுப்பினர் சொன்னதைக் கேட்டு, சென்னைக்கு விரைவுப் பேருந்து வந்திருக்கிறது. இதையும் ஆய்வு செய்யலாம். பொதுப்படையாக சட்டமன்ற உறுப்பினர்கள், எந்தெந்தப் பகுதியிலே பேருந்து நிறுத்தப்பட்டிருக்கிறதோ, அதை எழுத்துமூலமாக தெரிவித்தாலே, அதை ஆய்வு செய்து, மீண்டும் அந்தப் பகுதிகளிலே பேருந்துகளை இயக்குவதற்கு இந்த அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகளை இயக்குகிற நேரத்தில், எவ்வளவு பேருந்துகளை இயக்கினாலும், மாவட்டத் தலைநகரங்களில் இருக்கிற பள்ளிகளுக்கு, கல்லூரிகளுக்கு மாணவ மாணவிகள் கூடுதலாகச் செல்கின்ற காரணத்தினாலே, அந்தக் காலத்தை, கல்வி அமைச்சரோடு பேசி, அந்தப் பள்ளிகளை, குறைந்தது அரை மணி நேரம் முன்னாலே திறக்கிற விதத்தில் செய்தால் மாணவ மாணவிகள் வசதியாகச் செல்வதற்கு வாய்ப்பிருக்கும். ஒரே நேரத்தில் கல்லூரிக்குச் செல்கிற மாணவர்களும், அதேநேரத்தில் பள்ளிக்குச் செல்கிற மாணவர்களும், வேலைவாய்ப்புக்குச் செல்கிறவர்களும் செல்வதால், எவ்வளவு பேருந்துகளை நாம் இயக்கினாலும், அதனைச் சரி செய்ய முடியாத நிலையிருக்கிறது. அதை அரசு ஆய்வு செய்யுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், அவர்களுடைய மானியக் கோரிக்கையிலே தெரிவித்திருக்கிறார்கள்; அரசுக் கல்லூரிகள் எல்லாம் இரண்டு shift-களாக, 7½ மணியிலிருந்து 12½ மணி வரை, 1½ மணியிலிருந்து 5½ மணி வரை என்று, இரண்டு shift-களாக ஆக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். படிப்படியாகத்தான் அதைக் கொண்டு வரமுடியும். ஏற்கெனவே, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எல்லாம், அந்தந்தப் பகுதிகளிலே





இதுபோல் செய்து, மக்களிடம் அதற்குச் சரியான வரவேற்பு இல்லாத காரணத்தால், தனி நேரங்களிலே அதை ஆரம்பிக்கப்பட முடியவில்லை. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சருடைய முயற்சி வெற்றி பெறுமானால், எங்களுக்கு மிகவும் சுலபமாக இருக்கும் இந்தப் பேருந்துகளை இயக்குவதற்கு என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சீனிவாசன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் அவர்கள்.

**14—**

## குடியிருப்புகள்

**•529—திரு. கு. சீனிவாசன்:**

*மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வால்டாக்ஸ் சாலையில் நடைபாதையிலுள்ள ஏழை மக்களுக்கு, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின்மூலம் குடியிருப்புகளைக் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?*

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன், வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.

முற்பகல் 9—55

**திரு. கு. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்டாக்ஸ் சாலையிலுள்ள ஜமுனா தோட்டம், பல் மருத்துவமனை அருகே உள்ள குடிசைப் பகுதி, மூர் மார்க்கெட் போன்ற இடங்களில் ஏழை மக்கள் அதிகமாக தெரு ஓரங்களில் வசித்து வருகிறார்கள். இப்படி அவர்களுக்கெல்லாம் குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் வீடுகளைக் கட்டித் தரும்போது அவர்களை சென்னை மாநகர எல்லைக்கு அப்பால் நெடுந்தொலைவிற்கு இடம் பெயரச் செய்யாமல் பூங்கா நகர் சட்டமன்றத் தொகுதியிலே உள்ள இடத்தில் குடிசை மாற்று வாரியம் வீடுகளைக் கட்டித் தர வேண்டும். ஏனென்றால், அவர்களெல்லாம் ரிக்ஷா ஓட்டுபவர்கள், bus stand, railway station போன்ற இடங்களில் பழம், பூ வியாபாரம் செய்பவர்கள். அவர்களை நெடுந்தொலைவிற்கு இடம் பெயரச் செய்தால் அவர்களுடைய தொழில் பாதிக்கும். குடும்பங்கள் வறுமையில் வாடும். அதற்காக பூங்கா நகர் சட்டமன்றத்

தொகுதியில் 49—வது வட்டத்தில் உள்ள M.U.C. ground என்கின்ற இடம் சுமார் 50,000 சதுர அடி பரப்பளவு உள்ளது. அந்த இடத்தில் – Collector land என்று சொல்வார்கள். அந்த இடத்திலேயே அந்தத் தொகுதிக்குள்ளேயே அந்த மக்களுக்கு குடிசை மாற்று வாரியத்தின்மூலம் வீடுகளைக் கட்டித்தர அரசு முன்வருமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தைப் பொறுத்தவரையில் நிலங்களை ஆர்ஜிதம் செய்வதற்கு அதிகாரம் இல்லை. புறம்போக்கு இடங்களை அரசிடமிருந்து பெற்று, அல்லது பெரிய நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள் மூலமாக நன்கொடையாக இடம் கொடுக்கப்படுகிறபோது அந்த இடங்களில் மட்டும் வீடுகள் கட்டித்தரப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்வதோடு, அவர் குறிப்பிடுகின்ற இடத்தில் அவர்களே முன் நின்று அந்த ஏற்பாடுகளைச் செய்து தருவார்கள் என்று சொன்னால் அங்கேயும் கட்டப்படும்.

இந்தத் துறைக்கு நான் பொறுப்பேற்றவுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னையில் குடிசைப் பகுதிகளில் தனிக் கவனம் செலுத்தி அனைத்துக் குடிசைகளையும் மாற்றி புதிய கட்டடங்களில் குடியமர்த்த வேண்டும் என்று அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இங்கே அமர்ந்திருக்கின்ற நம்முடைய உள்ளாட்சி மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் சென்னையை சிங்காரச் சென்னையாக ஆக்க வேண்டுமென்று பாடுபட்டு மேயராக இருந்தபோது அற்புதமாகச் செயல்பட்டார்கள். அவர்களும் குடிசைகளை மாற்ற வேண்டுமென்று எங்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து கொண்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் ஒரு திட்டத்தை இந்தத் துறை உருவாக்கி இருக்கிறது என்பதைத் தெரிவிப்பதோடு, இதுபோன்ற கேள்விகளை சென்னையிலுள்ள பிற பகுதிகளில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களும் கேட்கலாம் என்பதற்காக முழுமையான விவரங்களை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

சென்னை நகரை குடிசைகளற்ற ஒரு நகரமாக மேம்படுத்த, ஆட்சேபகரமற்ற மற்றும் ஆட்சேபகரமான குடிசைப் பகுதிகளில் வாழும் அனைத்துக் குடும்பங்களுக்கும் அடுக்குமாடி குடியிருப்புகள் அமைத்து மறுகுடியமர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் 2006–2013 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படும். இத்திட்டத்தின்கீழ்



சென்னையில் உள்ள 1,11,151 குடும்பங்களுக்கு ரூபாய் 1856 கோடி செலவில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் ஜவஹர்லால் நேரு தேசிய நகர சீரமைப்புத் திட்டத்தின்கீழ் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்திற்கான செலவினை மத்திய அரசு 50 விழுக்காடும், மாநில அரசு, தலைவர் கலைஞருடைய அரசு, 50 விழுக்காடும் தந்து இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது. இந்தத் திட்டத்தின் பணிகள் நிறைவேற்றப்படும்போது சென்னை வால்டாக்ஸ் சாலையில் நடைபாதையில் வாழும் குடும்பங்களுக்கு அடுக்குமாடி வீடுகள் அமைக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அஃதன்னியில், சென்னை நகரில் உள்ள 22,330 குடும்பங்கள் சாலையோரங்களிலும், நடைபாதைகளிலும் குடிசைகள் அமைத்துக் கொண்டு எந்தவித அடிப்படை வசதியுமின்றி, குறிப்பாக ஜார்ஜ் டவுன், மத்திய இரயில் நிலையம் அருகிலும், இருப்புப் பாதையினையொட்டியும், மாம்பலம் நெடுஞ்சாலை, கொன்னூர் நெடுஞ்சாலை, திருவொற்றியூர் நெடுஞ்சாலை, வால்டாக்ஸ் சாலை, கிரியப்பா தெரு, ரிச்சி தெரு, எண்ணூர் நெடுஞ்சாலை ஆகிய இடங்களில் வாழ்ந்து வருகின்றனர். இப்பகுதியில் வாழும் குடிசை வாழ் பகுதி மக்களை அடுக்குமாடி குடியிருப்புகள் அமைத்து மறுகுடியமர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. இதுபோன்ற ஆட்சேபகரமான பகுதிகள் வேறு எங்காவது இருக்குமேயானால், அவற்றையும் எங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால், கலைஞர் அரசு அதற்கும் திட்டமிட்டு, அவர்களையும் அடுக்குமாடிக் குடியிருப்புகளில் குடியமர்த்த ஆவன செய்யும்.

முற்பகல் 10–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தின்மூலமாகக் கட்டப்படுகின்ற வீடுகள், பழுதுபார்க்கப்படாத நிலையிலே இருக்கின்ற காரணத்தினால், அந்தக் கட்டடங்களெல்லாம், காரையும், சுண்ணாம்பும், சிமெண்டும் உதிர்ந்து, வெறும் செங்கற்களாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன. அவற்றை ஒழுங்குபடுத்தி, அந்தக் குடிசை மாற்று வாரியத்தின் வீடுகளிலே வசிக்கின்ற அந்த ஏழையெளிய மக்களுக்கு, அதைச் சுத்தப்படுத்தி, மறுபடியும் அவர்களுக்கு, அந்தக் கட்டடங்களை

உறுதியுள்ளதாக, உத்தரவாதம் உள்ளதாக உருவாக்கித் தருவதற்கு குடிசை மாற்று வாரியம் முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதைப்போல, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சென்னையிலேயுள்ள 63,000 வீடுகள் மற்றும் வெளியிலே உள்ள 7,300 வீடுகள் ஆகியவற்றைப் பழுதுபார்ப்பதற்கு, இரண்டாம் பாகம் வேலைத் திட்டத்தில் 10 கோடி ரூபாயையும், மானியமாக 10 கோடி ரூபாயையும், ஆகமொத்தம் 20 கோடி ரூபாயை ஒதுக்கி, இந்த வீடுகளைப் பழுதுநீக்கம் செய்வதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள்; நிதியொதுக்கீடு செய்திருக்கிறார்கள். எனவே, விரைவில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்விக்கு விடை காண்கின்ற வகையில், அனைத்துக் குடியிருப்புகளையும் சீரமைத்து, தரமானவையாக, பாதுகாப்புள்ள வீடுகளாக ஆக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோட்டிலே, முத்தாம்பாளையம் ஹவுசிங் போர்டிலே, Phase I, Phase II, Phase III என்று மூன்று பிரிவுகளாகப் பிரித்தெடுத்தார்கள். அதிலே நிறைய வீடுகள் காலியாக இருக்கின்றன; கடந்த ஆட்சிக் காலத்திலே எடுத்த வீடுகள் காலியாக இருக்கின்றன. காலியாக இருக்கின்ற அந்த வீடுகளெல்லாம் இதுவரை நிரப்பப்படாமல் இருக்கிற சூழ்நிலையிலே, இன்னும் பல ஆயிரக்கணக்கான, நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலங்களை எடுத்து, நில உரிமையாளர்களிடமும் ஒப்படைக்காமல், 4 (i) Notification, Notice 6 எல்லாம் அனுப்பி, வழக்குகள் நிலுவையிலே இருக்கின்றன. அப்படி எடுத்த தேவையில்லாத நிலங்களை, மக்கள் குடிபோகாத பகுதி நிலங்களைத் திருப்பி ஒப்படைக்கின்ற திட்டம் அரசிடம் ஏதாவது உள்ளதா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். மேலும், எனது தொகுதியிலே, பெருந்துறையிலே, கொங்கு கல்லூரிக்கு அருகிலே, ஈங்கூர் ஊராட்சியிலே, வீட்டு வசதி வாரியத்தால் கையகப்படுத்தப்பட்டு, பிரித்துக் கொடுக்கப்பட்ட வீடுகள், யாராலும் ஏற்றுக்கொள்ளப்படாமல், நிறைய வீடுகள் காலியாக இருந்து கொண்டிருக்கின்றன. அதையெல்லாம் குறைந்த விலையிலே, மக்களுக்குத் திருப்பியளிக்கிற திட்டம் ஏதாவது இருக்கிறதா என்பதை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி குடிசை மாற்று வாரியத்தைப் பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற கேள்வி, வீட்டு வசதித் துறை சம்பந்தப்பட்டது. இருந்தாலும், பதில் சொல்கின்றேன். இப்பொழுது தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் இதுபோன்ற பிரச்சினைகள் இருக்கின்றன. நான் யாரையும் குறை சொல்ல விரும்பவில்லை. நிர்வாகச் சீர்கேட்டின் காரணமாக, சொத்துக்களெல்லாம் முறைப்படுத்தப்படாமல் இருக்கின்றன. எனவே, இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர்கள் பலபேர், இதுபோன்ற பிரச்சினைகளைப் பல்வேறு பகுதிகளிலேயிருந்து என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். என்றாலும், அனைத்து சொத்துக்களையும் கண்டறிந்து, கையகப்படுத்தி, ஒவ்வொரு சொத்தினுடைய நிலை என்ன, யார் யார், எங்கெங்கே ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் கண்டறிந்து, கம்ப்யூட்டரிலே ஏற்றி, பிறகு website-ம் திறக்க இருக்கின்றோம். எனவே, இந்தச் சொத்துக்களையெல்லாம் ஒழுங்குப்படுத்துகிறபோது, இதுபோன்ற இடங்களெல்லாம் சீரமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், திருப்பிக் கொடுக்கப்படுமா, ஏன் இவ்வளவு காலம் உங்களாலும் பயன்படுத்தப்படவில்லை என்று கேட்கின்றார்கள். குறிப்பாக, 100 ஏக்கர் நிலத்தை நாங்கள் கையகப்படுத்துகிறபோது, அது ஏதோ பெரிய ஜமீன்தாரிடத்திலேயிருந்து உச்சவரம்பிலே எடுக்கப்பட்ட மிச்சவரம்பு நிலம் என்று தலைவருடைய அரசு கருதவில்லை. காரணம், அந்த 100 ஏக்கர் பரப்பளவில் சிறு விவசாயிகள், குறு விவசாயிகளெல்லாம் இருக்கிறார்கள். அவர்களுடைய கனவுகள், அவர்களுடைய வாழ்க்கை, அந்த இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கரிலே இருக்கும் என்பதை உணரக்கூடிய இடத்திலேதான், தலைவர் அவர்கள் எங்களை வளர்த்திருக்கின்றார்கள். எனவே, பரிவோடு கவனித்தாலும்கூட அதற்கெல்லாம் காரணம், அந்த 100 ஏக்கரில், ஏதோ ஒரு பகுதியில், ஒரு 10 ஏக்கர், 20 ஏக்கருக்கு உரியவர்கள், அந்த நில உடைமையாளர்கள் வழக்கு மன்றத்திற்குச் சென்றிருக்கின்ற காரணத்தினால், அதற்குத் தீர்வு, கோர்ட்டினுடைய தீர்ப்பு வந்ததற்குப் பிறகு, தீர்ப்பில் என்ன சொல்லப்படுகிறதோ, அந்தத் தொகையையும் சேர்த்துப் பங்கீடு செய்து, அதற்குப் பிறகு பிளாட்டுகளை உருவாக்கி, அதன் பிறகுதான் விலை நிர்ணயம் செய்ய முடியும் என்கின்ற காலகட்டத்திலே, அப்படிப்பட்ட காலதாமதம் இருக்கிறது. அதையெலலாம் தவிர்ப்பதற்கு, அற்புதமான

நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இது, 20, 25 ஆண்டுகாலப் பிரச்சினை. இன்னும் 3 மாதத்திற்குள் முழுமையாக அவையெல்லாம் உரிய முறையில் வகைப்படுத்தப்பட்டு, website open பண்ணி, நீங்கள் ஒரு பொத்தானை அமுக்கினால், உங்களுக்குப் பதில் கிடைக்கக்கூடிய அளவிற்கு, இந்தத் துறை உருவாக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10—05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத் திட்டம், கிராமப்புறப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன். என்னுடைய தொகுதியிலே மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களாக இருக்கிற, பிற்படுத்தப்பட்ட பட்டியலிலே இருக்கிற, முத்தரையர் இன மக்கள், இன்றைக்கும் 100—க்கு 95 விழுக்காடு மக்கள் குடிசைகளிலே கூட்டம் கூட்டமாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அந்த மக்களுக்கு ஒரு சிறப்புத் திட்டத்தை உருவாக்கி, வீடுகள் கட்டித் தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கின்ற சென்னை, மதுரை, கோவை போன்ற நகரங்களில் நம்முடைய ஜவஹர்லால் நேரு தேசிய நகர சீரமைப்புத் திட்டத்தில் மாநில அரசு 50 விழுக்காடு, மத்திய அரசு 50 விழுக்காடு என்ற திட்டத்திலேயும், அதற்குக் கீழே உள்ள மக்கள் வாழ்கின்ற இடங்களில் வேறு ஒரு திட்டத்திலே மத்திய அரசு 80 விழுக்காடும், மாநில அரசு 20 விழுக்காடும் என்ற திட்டத்திலேயும், 10 இலட்சத்திற்குக் கீழே உள்ள நகரங்கள் எடுக்கப்பட்டு சீரமைத்து வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல, அந்தக் கிராமங்களிலுள்ள வீடுகளை மாற்றி, வீடுகள் கட்டும் அந்தப் பணிகள் உள்ளாட்சித் துறைமூலமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**15—**

## மானியம்

**•379—திரு. சி. கோவிந்தசாமி:**

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பனியன் தொழிலைப் பாதுகாக்கும் பொருட்டு, "சி. பாரம்" குறித்து 90 சதவிகிதம் மானியம் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம். "சி. படிவம்" பெறாமல் மேற்கொள்ளப்படும் இடை மாநில விற்பனையில் விதிக்கப்படும் 10 சதவிகித மத்திய விற்பனை வரியில், 90 சதவிகிதத்தைப் பின்னலாடை உற்பத்தியாளர்களுக்குத் தொழில் ஊக்குவிப்புத் திட்டச் சலுகையாகத் திருப்பித் தரும் திட்டம், ஏற்கெனவே 4-4—2005 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வணிகர்கள், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. கோவிந்தசாமி, அதேபோல, திரு. மோகன் கந்தசாமி ஆகியவர்களுடைய வேண்டுகோளையெல்லாம் ஏற்று, நம்முடைய நிதிநிலை அறிக்கையிலேயே இத்திட்டம் வெளியிடப்பட்டிருக்கிறது. 13-5—2002 முதல் 3-4—2005 வரையிலான காலத்திற்கும், வரியைக் கைவிடுதல்மூலமாக நீட்டித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இது நம்முடைய முதலமைச்சர் அவர்கள், அவர்களுடைய வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு நிதிநிலை அறிக்கையிலே வெளியிட்டதாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியை இந்தச் சட்டமன்றக் கூட்டத்தொடர் துவங்குகிறபோது எழுப்பினேன். மாண்புமிகு வணிக வரித் துறை

அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, "சி. படிவம்'' சமர்ப்பிக்காதவர்கள் 10 சதவிகிதம் வரி செலுத்தினால், ஊக்குவிப்புத் திட்டத்தின்மூலம் 9 சதவிகிதம் திருப்பித் தரக்கூடிய அந்தத் திட்டம் 2002 ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருப்பதற்காக, தொழில் உடைமையாளர்கள் பெரும் வரவேற்பைத் தெரிவித்திருக்கின்றார்கள். நானும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றுகூட தொழில் உடைமையாளர் சங்கத்தினுடைய தலைவர் திரு. மோகன் கந்தசாமி அவர்கள் தலைமையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், நிதி அமைச்சர் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களையும் சந்தித்து நன்றி தெரிவிக்க இங்கே வந்துள்ளார்கள் என்பதையும் தெரிவித்து, எனது நன்றியையும் மீண்டும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நான் இந்தக் கேள்வியின்மூலமாக மேலும் ஒரு கேள்வி எழுப்ப விரும்புவது, திருப்பூரில் உள்நாட்டு விற்பனைக்காகத் தயாரிக்கக்கூடிய பனியனுடைய விலை 20 ரூபாயிலிருந்து அதிகபட்சம் 40 ரூபாய்க்குள்ளே வருகிறது. இப்பொழுது டில்லி போன்ற பல மாநிலங்களில், 100 ரூபாய்க்குக் குறைவாக விலையுள்ள பனியன்களுக்கு முற்றிலுமாக வரிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அந்தவகையிலே, உள்நாட்டு பனியன் உற்பத்திற்கு மட்டும் அந்த வரிவிலக்கு அளிக்க வாய்ப்பிருக்கிறதா என்பதை அறிய விரும்புவதோடு, இந்த 9 சதவிகிதம் மானியமாக, 10 சதவிகிதம் செலுத்தி 9 சதவிகிதம் திருப்பி வாங்குகிற நிலை இருக்கிறது. அரசுக்கு வருவாய் 1 சதவிகிதம்தான் அதிலே வருகிறது. ஆகவே, நடைமுறையில் சில நிர்வாகச் சிக்கல்கள் அதிலே வருகிற காரணத்தினால், அந்த 1 சதவிகிதத்தை நேரடியாகக் கட்டுவதற்குரிய வழியை உருவாக்க முடியுமா என்பதை அமைச்சர்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–10

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மத்திய அரசினுடைய 10 சதவிகித வரி என்பதாலே, அந்த 9 சதவிகிதம் மானியமாகத் தரப்பட்டு வருகிறது. இங்கே 20 ரூபாய் முதல் 40 ரூபாய் வரை என்று குறிப்பிட்டார்கள். முன்னாலே அவர்கள் கேட்டிருக்கின்றபோது, 100 ரூபாய்க்கு உள்ளே உள்ள பனியன்களுக்கு வரி விலக்கு அளிக்கப்படுமா என்று கேட்டிருந்தார்கள். பெரும்பகுதி பனியன்கள், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதால், அதிலேயுள்ள வரி வருவாயைக் கணக்கில்கொண்டு, அதேபோல அதிலே வரி விலக்கு கொடுக்கிறபோது, இடர்ப்பாடுகளும்





ஏற்படும் என்பதைக் கருத்தில்கொண்டுதான் இதை ஆய்வு செய்ய வேண்டியிருக்கிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு அது கொண்டு செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் மாவட்டத்திலே இருக்கிற காங்கேயம் பகுதியிலே, தேங்காய் எண்ணெய் உற்பத்தி என்பது மிகப் பெரிய அளவிலே இருந்துகொண்டு இருக்கிறது. இந்தத் தேங்காய் எண்ணெய் முழுவதுமாக வெளிமாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறது. இந்தத் தேங்காய் எண்ணெய் சம்பந்தப்பட்டிருக்கிற கேரளா மாநிலத்திலே அரவைக்கு வைக்கிற கொப்பரைத் தேங்காய்க்கு வரி இல்லை. ஆனால், நம்முடைய மாநிலத்திலே அரவைக்கு வைக்கிற கொப்பரைத் தேங்காய்க்கு 4 சதவிகிதம் வரி இருக்கிறது. அந்த வரியை நீக்க வேண்டுமென்ற கோரிக்கையை நாங்கள் கொடுத்திருந்தோம். அது நீக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொப்பரைத் தேங்காய்க்கு உரிய வரியை நீக்குவது பற்றிய பரிசீலனை இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருந்து தடவப்படாத பாண்டேஜ் இரக துணிகளுக்கு ஏற்றுமதிக்காக மத்திய அரசு மானியம் வழங்கி வருகிற நிலையில் தமிழக அரசு விதித்திருக்கக்கூடிய விற்பனை வரி இரத்து செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இது நீண்ட காலமாக இருந்து வருகிற பிரச்சினை. பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1996–2001 வரையிலான தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில்தான் பின்னலாடை உற்பத்தியாளர்கள் ஏற்றுமதி செய்வதற்கு வசதியாக அப்போதிருந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள்

பெரியவர் திரு. மோகன் கந்தசாமி, சுப்பராயன் போன்றவர்கள் எல்லாம் சேர்ந்து, எங்களைப் போன்ற மற்ற கட்சியினரையும் அழைத்துச்சென்று, தலைவர் கலைஞர் அவர்களிடத்திலே கோரிக்கை வைத்து, விற்பனை வரியைக் குறைக்கச் செய்து ஒரு நல்ல புத்துயிரை அந்தக் காலத்திலே பெற்றார்கள். ஆகவே, மீண்டும் கலைஞர் ஆட்சி வந்திருக்கின்ற காரணத்தினால், இந்த ஆட்சியில் உள்நாட்டு விற்பனை பின்னலாடைக்கு, வரிக் குறைப்பு செய்யப்படுமா? மேலும், இந்தத் தொழில் அபிவிருத்திக்கு விற்பனை வரித் துறையின்மூலம் வரிச் சலுகைகள் பல்வேறு வகையில் அளிக்க இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாலேயே நான் குறிப்பிட்டேன். இது உள்நாட்டு விற்பனை, வெளிநாட்டு விற்பனை என்று பிரித்து அறிவதிலே சிக்கல் ஏற்படும் என்கிற காரணத்தினாலே, இதில் தொடர்ந்து இதேநிலை நீடிக்கப்படும். இது ஒரு சதவிகித அளவிற்குத்தான் வரி என்பது கணக்கிடப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) பெப்சி, கோகா-கோலா குளிர் பானங்களைத் தடை செய்யக் கோருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அவசரப் பொது முக்கியத்துவம்... (குறுக்கீடுகள்) சொல்லுங்கள், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள், சொல்லுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். ஓர் உறுப்பினர் எழுந்து நின்று பேசும்போது இன்னொருவர் குறுக்கிடாதீர்கள். உட்காருங்கள்.





**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று இந்தியா முழுக்க பெப்சி, கோகா—கோலா போன்ற குளிர் பானங்கள் தடை செய்யப்பட வேண்டுமென்ற ஒரு வேண்டுகோள் இருந்து வந்து கொண்டிருக்கிறது. பல மாநிலங்களிலே பொதுவாக குஜராத், இராஜஸ்தான், சட்டீஸ்கர், மத்திய பிரதேசம் போன்ற மாநிலங்களிலே அவை தடை செய்யப்பட்டிருக்கின்றன. நச்சுப் பொருளை அதிகமாகக் கொண்டிருக்கின்ற இந்த கோகா—கோலா, பெப்சிக்கு தமிழகத்திலும் நம்முடைய முதல்வர் அவர்கள், தடையைக் கொண்டு வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடை கொண்டுவருவதில் எந்தத் தடையுமில்லை. ஆனால் ஒன்று, இங்கே தடை செய்து, பாண்டிச்சேரியில் விற்றால் என்ன செய்வது? இங்கே தடை செய்து வேறு மாநிலத்திலே விற்றால் என்ன செய்வது? ஆகவே, ஏக இந்தியாவை சிந்திக்கின்ற நாம், ஏக இந்திய அளவில் இந்தத் தடை வருமேயானால், அதை ஆதரிக்கத் தயாராக இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

### (ஆ) கரூர் தொகுதியில் மணல் எடுப்பதற்கு மக்கள் எதிர்ப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் சட்டமன்றத் தொகுதியில், இன்று கரூர் தாலுக்கா அலுவலகம் முன்பு, 5 ஊராட்சிகளுக்குட்பட்ட பொதுமக்கள் உண்ணாவிரதம் இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை நிலவுகிறது. காரணம் கரூர் சட்டமன்றத் தொகுதியிலே, ஆண்டாள் கோவில் மேல்பாகம் ஊராட்சி, ஆண்டாள் கோவில் கீழ்பாகம் ஊராட்சி, கருப்பம்பாளையம் ஊராட்சி, அப்பிபாளையம் ஊராட்சி, விசுவநாதபுரம் ஊராட்சி ஆகிய 5 ஊராட்சிகளுக்குட்பட்ட 12 கிணறுகள் அமைந்துள்ள இடங்களிலும், விவசாயத்திற்கு நீர் எடுத்துச் செல்லப்படும் கிணறுகள் அமைந்துள்ள இடங்களிலும் பொதுப் பணித் துறைமூலம் அரசு மணல் எடுத்து வருகிறது. இவ்வாறு மணல் எடுப்பதைத் தடைசெய்ய வேண்டுமென்று ஐந்து ஊராட்சி மன்றங்களாலும் தீர்மானம் இயற்றப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் வழங்கப்பட்டுள்ளது. இருந்தபோதும், மணல் எடுப்பதைத் தமிழக அரசு நிறுத்தவில்லை. அந்தப் பரபரப்பான

[திரு. வே. செந்தில் பாலாஜி] [2006 ஆகஸ்ட் 8

சூழ்நிலையில் இன்று கரூர் தாலுகா அலுவலகம் முன்பே ஐந்து ஊராட்சிகளைச் சேர்ந்த பொது மக்களும் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். இத்தகைய பதற்றத்தைத் தணிக்க தமிழக அரசு மணல் எடுப்பதை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாக கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல்: 10—15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணல் தட்டுப்பாட்டைத் தவிர்ப்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆங்காங்கே இருக்கிற சூழ்நிலைகளுக்கேற்ப மணலை அள்ளிக்கொள்வதற்காக புதிய குவாரிகளைத் திறப்பதற்கான அனுமதியை இந்த அரசு வழங்கி இருக்கிறது. பொதுமக்கள் பல்வேறு இடங்களிலும் ஆங்காங்கே இதுபோன்ற எதிர்ப்பைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். எதிர்ப்பை, மக்களைவிட அங்கே இருக்கிற சில தனிப்பட்டவர்களும் சேர்ந்து செய்கிறார்கள் என்கிற செய்தியும் (மேசையைத் தட்டும் ஒலி) அரசாங்கத்திற்கு வந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இதுபற்றி தீர விசாரித்து, நிச்சயமாக இந்த அரசு உரிய முடிவை எடுக்கும்.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பதில் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) நீங்கள் என்னிடம் முன்னனுமதி எதுவும் வாங்கவில்லை. என்னிடம் எழுதியும் கொடுக்கவில்லை. உட்காருங்கள்.

## 3. கவன ஈர்ப்பு

### சீர்காழி தொகுதி, பனங்காட்டாங்குடி ராஜாத்தி அண்ணி நடுநிலைப் பள்ளியை அரசு எடுத்து நடத்தக் கோருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. •திரு. எம். பன்னீர்செல்வம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. எம் பன்னீர்செல்வம்.



2006 ஆகஸ்ட் 8]

**•திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சீர்காழி தொகுதி, அகரஎலத்தூர் பனங்காட்டாங்குடி ராஜாத்தி அண்ணி தனியார் நடுநிலைப் பள்ளியை தாளாளரால் நடத்த முடியாததாலும், கட்டட வசதி இல்லாமையாலும் ஏற்பட்டுள்ள இன்னல்கள்" குறித்த அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**•மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் சரகம், பனங்காட்டாங்குடி, ராஜாத்தி அண்ணி உதவி பெறும் நடுநிலைப் பள்ளியின் நிர்வாகி, தொடர்ந்து பள்ளியை நடத்த இயலாத காரணத்தால், அதில் பணிபுரியும் ஆசிரியர்களுடன் அப்பள்ளியை அரசிடம் ஒப்படைக்க சம்மதம் தெரிவித்ததன் அடிப்படையில், இப்பள்ளியை அரசு ஏற்று நடத்துவதற்கான கருத்துருவை தொடக்கக் கல்வி இயக்குநர் அரசுக்கு அனுப்பியுள்ளார். இக்கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

2. இப்பள்ளியின் தற்போதைய நிலை பின்வருமாறு:-

இப்பள்ளியில் 258 மாணவ, மாணவிகள் பயில்கின்றனர். 9 ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். பள்ளியில் இரண்டு லைட் ரூப் கட்டடங்கள் உள்ளன. இட வசதி, தோட்ட வசதி, விளையாட்டிட வசதி உள்ளது. ஆசிரியர்களுக்கு மட்டும் கழிப்பிட வசதி உள்ளது. மாணவ, மாணவிகளுக்குத் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள மறைவு தட்டிகளாலான கழிவறை பயன்படுத்தப்படுகிறது. 2 கைப்பம்புகள் குடிநீர் வசதி உள்ளது. 2006—2007 ஆம் கல்வியாண்டில் 'அனைவருக்கும் கல்வி' இயக்கத் திட்டத்தின்கீழ், 3 வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. இது தவிர பள்ளியை நடத்த அருகில் சமுதாயக்கூடமோ, வேறு இடவசதியோ இல்லை. மேற்கொண்டு தற்காலிக ஏற்பாடாக, ஷிப்டு முறையில் பள்ளி நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதை உடனடியாக நடைமுறைப்படுத்த, சம்பந்தப்பட்ட உதவி தொடக்கக் கல்வி அலுவலருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம்.

**திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். சீர்காழி தொகுதி, கொள்ளிடம் சரகம், பனங்காட்டாங்குடி, ராஜாத்தி அண்ணி உதவிபெறும் நடுநிலைப் பள்ளியின் நிர்வாகி தொடர்ந்து பள்ளியை நடத்த இயலாத காரணத்தால், அதில் பணிபுரியும் ஒன்பது ஆசிரியர்களுடன் அரசிடம் ஒப்படைக்கச் சம்மதம் தெரிவித்ததன் அடிப்படையில், இப்பள்ளியை அரசு ஏற்று நடத்துவதற்கான கருத்துருவைத் தொடக்கக் கல்வி இயக்குநர் அவர்கள் அரசுக்கு அனுப்பியுள்ளதாகவும், இக்கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதாகவும் விவர அறிக்கையில் உள்ளது.

தற்சமயம் இப்பள்ளியில் 210 மாணவர்களும், 190 மாணவிகளும் படித்து வருகிறார்கள். மொத்தம் 400 மாணவ, மாணவிகள் படித்து வருகிறார்கள். ஆனால், விவர அறிக்கையில் 258 மாணவ, மாணவிகள் படித்து வருவதாகச் சொல்லியுள்ளார்கள். இந்த எண்ணிக்கை கடந்த ஆண்டுகளிலே எடுக்கப்பட்ட புள்ளிவிவரமாக இருக்கலாம். தற்சமயம் தீப்பிடிக்காத கூரைக் கட்டடங்கள் இரண்டு மட்டும்தான் உள்ளன. வருகின்ற 2006–2007 ஆம் கல்வி ஆண்டில் 'அனைவருக்கும் கல்வி' இயக்கத் திட்டத்தின்கீழ் 3 வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்டத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் விவர அறிக்கையில் சொல்லியுள்ளார்கள். அப்பள்ளியின் நிர்வாகியும் தன்னால் நடத்த இயலவில்லை என்றும், அரசே எடுத்துக் கொள்வதற்கு ஒப்புதலும் கொடுத்துவிட்டதால் அரசே நடத்தினால்தான் அப்பள்ளி மாணவ, மாணவிகளுக்கு ஏற்பட்டிருக்கும் இன்னல்களைப் போக்கமுடியும் என்பதாலும், இல்லையென்றால் பள்ளியை மூட வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்பதாலும், இதனை மறுபரிசீலனை செய்து, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே அப்பள்ளியை அரசே எடுத்து நடத்திட ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கையினைக் குறித்து கல்வி மானியக் கோரிக்கையினுடைய விவாதத்தின்போதும் மாண்புமிகு உறுப்பினர்





சீர்காழி பன்னீர்செல்வம் அவர்கள் எடுத்துரைத்தார்கள். அதிலே பதிலுரையிலே நான் தெரிவிக்கின்றபோதுகூட, 'மாணபுமிகு உறுப்பினர் அவர்கள் மகிழத்தக்க வகையிலே இது பரிசீலிக்கப்படும்' என்று அன்றைக்கு அறிவித்தேன். அதைத் தொடர்ந்து துறையின் சார்பிலே அந்தப் பள்ளியினுடைய நிர்வாகிகளிடத்திலே அவர்கள் பேசி, அவர்களும் அந்தப் பள்ளியிலே இருக்கக்கூடிய இடம், கட்டடம், தளவாடச் சாமான்கள் ஆகிய அத்தனையையும் மொத்தமாக அரசுக்கு அளிப்பதற்கு இசைவு தெரிவித்திருக்கிறார்கள். எனவே, அதன் அடிப்படையில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையினை ஏற்றும், அங்கே படிக்கக்கூடிய மாணவர்களுடைய நலன் கருதியும், இந்த அரசு, அந்தப் பள்ளியை இந்த ஆண்டே ஏற்று நடத்தும் என்று நான் இந்த அவையிலே தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பள்ளியினுடைய மாணவர்கள் எண்ணிக்கையைக் குறித்து அவர்கள் தெரிவித்தார்கள். துறையிலேயிருந்து கொடுத்திருக்கக்கூடிய தகவலை நான் இங்கே தெரிவித்திருக்கிறேன். இருந்தாலும், பள்ளியினுடைய மாணவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருந்தாலும், வரக்கூடிய 2006–2007 ஆம் ஆண்டிலே எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய 'அனைவருக்கும் கல்வி' இயக்கத்தின் சார்பிலே அங்கே 3 வகுப்பறைகள் கொண்ட புதிய கட்டடம் ஒன்று கட்டப்படும். மாணவர்களுடைய தேவைக்கேற்ப தொடர்ந்து கட்டடங்கள் கட்டுவதற்கும், கழிப்பறை போன்ற வசதிகளைச் செய்வதற்கும் படிப்படியாக அரசு ஏற்பாடு செய்யும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம்.

**திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளியை இந்த ஆண்டே அரசு எடுத்து நடத்துவதாக அறிவித்ததற்கு நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறையினுடைய அமைச்சர் அவர்களுக்கும் சீர்காழி தொகுதி மக்கள் சார்பாகவும், அப்பகுதிவாழ் மக்களின் சார்பாகவும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

## 4. சாலை விபத்தில் காயமுற்ற நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தனுஷ்கோடி ஆதித்தன் அவர்களுக்குச் சிறப்பு சிகிச்சை - மாண்புமிகு முதல்வருக்கு நன்றி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சனிக்கிழமை அன்று நெல்லை தொகுதியினுடைய பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஆர். தனுஷ்கோடி ஆதித்தன் அவர்கள் எதிர்பாராத விதமாக விபத்திலே சிக்கி, தூத்துக்குடி மருத்துவமனையிலே அவசரச் சிகிச்சைப் பிரிவிலே சிகிச்சை பெற்று வருகிற நேரத்திலே, நமது மாண்புமிகு முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் அதிலே முழுமையான அக்கறை கொண்டு, அவருக்கு வேண்டிய நல்ல சிகிச்சைகளையெல்லாம் பெறுவதற்கான முயற்சிகளையும் – நேற்று இரவு 9¾ மணிக்கு நமது முதல்வரிடத்திலே அவரை எப்படியாவது சென்னைக்குக் கொண்டுவந்து வைத்திய வசதி செய்து அவருடைய உயிரைக் காப்பாற்ற வேண்டுமென்று சொல்லி, அவரிடத்திலே கோரிக்கை வைத்தபொழுது, முதல்வர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொல்லி, மருத்துவக் குழுவையெல்லாம் அங்கே அனுப்பி, வேண்டிய சிகிச்சைகளைப் பெறுகின்ற வாய்ப்பை உருவாக்கி, இன்றைக்கு அவரை சென்னைக்குக் கொண்டுவருவதற்கான ஒரு நிலையை எடுத்து உதவி இருக்கிறார்கள்.

இவ்வளவு வேலைகளுக்கு இடையிலேயும், முதல்வர் அவர்கள் ஒரு சட்டமன்ற உறுப்பினர் இரவு 9¾ மணிக்கு வைத்த அந்தக் கோரிக்கையை ஏற்று, அதை நடைமுறைப்படுத்தி, காலையிலே எனக்குத் தகவலும் சொல்லி இருப்பதை நான் நினைத்துப் பார்த்தபொழுது, உண்மையிலேயே ஒரு முதல்வர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு முன்னுதாரணமாக விளங்குகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எப்படி தொகுதி முழுக்க, நாடு முழுக்க உள்ள ஒவ்வொரு பிரச்சினையிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெள்ளத் தெளிவாக உணர முடிகிறது. அவர்களுக்கு நெல்லை மாவட்ட மக்களினுடைய சார்பாகவும், எனது தொகுதி மக்களினுடைய சார்பாகவும் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. தனுஷ்கோடி ஆதித்தன் அவர்களுடைய உடல்நிலை விரைவாகத் தேறிவர வேண்டும் என்று சொல்லி இறைவனைப் பிரார்த்தித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5–8–2006 ஆம் நாள், மாண்புமிகு முன்னாள் மத்திய அமைச்சரும், நெல்லை நாடாளுமன்ற உறுப்பினருமான மாண்புமிகு தனுஷ்கோடி ஆதித்தன் அவர்கள் குடும்பத்தோடு நெல்லையிலிருந்து தூத்துக்குடிக்குச் சென்றபோது, எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட மிகப் பெரிய துயரச் சம்பவமான அந்த விபத்தில், அந்த இடத்திலேயே மாண்புமிகு முன்னாள் அமைச்சருடைய துணைவியார் இறந்த துயரச் சம்பவத்தைக் கேள்விப்பட்டதும் நாடே வருத்தப்பட்டது. அதுமட்டுமல்லாமல், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாகத் துயரப்பட்டு, அங்கே இருந்து நிலைமைகளை உன்னிப்பாகக் கவனித்து, மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள் தூத்துக்குடி ஏ.வி.எம. மருத்துவமனையிலே சிகிச்சைப் பெற்று, கொஞ்சம் அதிகமான பாதிப்பு ஏற்பட்டதை அறிந்து, உடனடியாக மதுரை, அப்போலோ மருத்துவமனைக்குத் தொடர்புகொண்டு, அங்கிருந்து ஒரு மருத்துவக் குழுவை 6 ஆம் தேதி அதிகாலையிலேயே தூத்துக்குடிக்கு அனுப்பி, பரிசோதித்து, அவர்கள் கொடுத்த ஆலோசனையை ஏற்று, அந்த மருத்துவர்கள் அங்கே சிறப்பாக அவர்களைக் கவனித்ததன் பயனாக சற்று முன்னேற்றம் ஏற்பட்டதன் காரணமாக, மேலும் தீவிர சிகிச்சை அளித்து, அவருடைய உயிரை எப்படியாவது காப்பாற்ற வேண்டுமென்பதற்காக இன்று விமானம் ஏற்பாடு செய்து, விமானத்திலே சென்னையிலிருந்து அப்போலோ மருத்துவமனையின் தலைசிறந்த மருத்துவர்களையும் அனுப்பி, இன்று தூத்துக்குடியிலிருந்து பகல் 12 மணியளவில் சென்னைக்குக் கொண்டுவந்து அவருடைய உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்ற மனித நேயத்தோடு – நம்முடைய மாண்புமிகு வேல்துரை அவர்கள் சொன்னதுபோன்று இரவு 10 மணிக்குக்கூட உன்னிப்பாகக் கவனித்து, என்ன நிலையில் இருக்கின்றார் என்பதையெல்லாம் சொல்கின்ற அளவிற்கு ஒரு மனித நேயத்தோடு இருக்கின்றவர் மாண்புமிகு நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள். இந்த வேளையிலே நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினருடைய உயிருக்காக இவ்வளவு சிரமம் எடுத்து இத்தனைப் பணிகளுக்கிடையே, அவருடைய உயிரைக் காப்பாற்றுகின்ற இந்த அரிய உதவியைச் செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை, தமிழகம் மட்டுமல்ல, இந்தியாவில் இருக்கின்ற அத்தனை பேர்களுமே, ஒரு மனிதநேயம் உள்ள முதல்வரைப் பாராட்டாமல் இருக்கமாட்டார்கள். அவருடைய இந்த முயற்சிக்கெல்லாம், கடவுள் நல்ல பலனை

திரு. தனுஷ்கோடி ஆதித்தன் அவர்களுக்குக் கொடுத்து, அவருக்கு நல்ல முறையிலே சிகிச்சை பலனளித்து, அவர் நல்ல முறையிலே வரவேண்டுமென்று வாழ்த்தி அமர்கிறேன்.

*முற்பகல் 10—25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் மத்திய அமைச்சர் திரு. தனுஷ்கோடி ஆதித்தன் அவர்கள், திடீரென்று ஏற்பட்ட விபத்தின் காரணமாக அவருடைய துணைவியார் மரணமடைந்தார்; இவருக்கும், இரண்டு கால்களிலும், கைகளிலும், மிகப் பெரிய அளவில் எலும்பிலே முறிவு ஏற்பட்டது. அதை முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஒவ்வொரு மணி நேரமும் என்ன நடக்கிறது என்று மாவட்ட ஆட்சித் தலைவருக்கு செய்தி சொல்ல வேண்டுமென்று ஆணையிட்டு, அதன்படி ஒவ்வொரு மணி நேரமும் என்ன முன்னேற்றம் இருக்கிறது, என்ன பின்னடைவு இருக்கிறது என்பதையெல்லாம் விவரமாக தினம்தினம், 3 தினங்களாகக் கேட்டறிந்து, அப்போலோ மருத்துவக் குழுவை அனுப்பி, 8 மணி நேரத்திற்குமேல் அங்கே மருத்துவச் சிகிச்சை செய்து, அதற்குப் பின்னாலே இன்று காலை மதிப்பிற்குரிய தினத் தந்தியினுடைய நிறுவனர் சிவந்தி ஆதித்தன் அவர்கள் நம்முடைய முதலமைச்சர் அவர்களிடம் வேண்டுகோள் வைத்தபோது, உடனடியாக அத்தனை ஏற்பாடுகளையும் ஏற்கெனவே செய்துவிட்டேன், யாரும் கேட்காமலேயே நானே செய்துவிட்டேன் என்று சொல்லி, இன்று 2 மணியளவிலே விமானத்திலே மருத்துவர் குழுவை அங்கே அனுப்பி, அவரை அப்போலோ மருத்துவமனைக்குக் கொண்டுவந்து சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்த முதலமைச்சர் அவர்களுக்கு காங்கிரஸ் கட்சி தன்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, நன்றி சொல்ல இருக்கிறார்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் மக்களிடமிருந்து கோரிக்கை வரப்பெற்றாலும் சரி அல்லது மக்களுடைய பிரதிநிதிகளிடமிருந்து கோரிக்கை வரப்பெற்றாலும் சரி, அதை உடனடியாக ஏற்றுச் செய்பவர்.



கோரிக்கை வராமலேகூட, தனக்கு வந்த செய்தியைக் கொண்டு அவர் உடனடியாக உதவி செய்யக் கூடியவர் என்பதற்கு இதுவொரு சான்று. அந்தவகையிலேதான் ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு விபத்து என்று சொன்னவுடனே, அவருடைய துணைவியார் மறைவு குறித்து, அதுசம்பந்தமாகவும் தொலைபேசியில் பேசி, அவர் விபத்தில் அடிபட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில் உயிர் காக்க ஒரு மாமருந்தாக, உயிர் காக்கும் மருத்துவராக இருந்து, அந்த நிலையிலே அவரை அழைத்து வரச் செய்து, மருத்துவ வசதி வழங்கிய அந்த மாமனிதருக்கு மக்கள் பிரதிநிதிகளின் சார்பிலே, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் மத்திய அமைச்சரும், தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. தனுஷ்கோடி ஆதித்தன் அவர்கள், அவருடைய குடும்பத்தோடு சென்றபோது எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட விபத்தின் காரணமாக, கடுமையாகப் பாதிக்கப்பட்ட நிலையில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவருக்கு உரிய சிகிச்சை அளித்து, அவரைப் பாதுகாக்க வேண்டுமென்ற உணர்வோடு, ஒரு மக்கள் பிரதிநிதியாக பணியாற்றக்கூடிய ஒருவரைப் பாதுகாக்க வேண்டுமென்பதற்காக, மனித நேய உணர்வோடு பெரும் முயற்சி எடுத்துக்கொண்டு, அவருக்கு உரிய சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் மத்திய அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ,தனுஷ்கோடி ஆதித்தன் அவர்கள் விபத்தின் காரணமாக மிகப் பெரும் அளவிலே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவருக்கு, வலது கை துண்டிக்கப்பட்டுவிட்டது என்ற செய்தி இன்று காலையிலே சொல்லப்பட்டது. இப்படி மிகப் பெரிய பாதிப்புக்கு உள்ளாகி இருப்பவரை எப்படியாவது உயிர் பிழைக்க வைக்க வேண்டும் என்பதற்கான முயற்சியை நமது தமிழக முதல்வர் அவர்கள் எடுத்திருக்கிறார்கள். குறிப்பாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை

இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள்; நோயின் தன்மை அறிந்து, தேவை அறிந்து உதவுவதற்கான முயற்சிகள் எடுப்பதிலே நமது முதலமைச்சர் அவர்கள் மிகுந்த ஆழமான, தீவிரமான, அந்தச் சிறப்புக்குரிய கண்ணோட்டத்தை செலுத்துவார் என்பதற்கு உதாரணங்கள் ஏராளமாக உண்டு. இடையிலே உங்களது அறையிலே பேசிக்கொண்டிருந்தபோது, நோயின் தன்மையைக் கண்டறிந்து முதலாவதாக சிகிச்சை அளிப்பதற்கும், உயிரைக் காப்பதற்கும் உரிய முயற்சி எடுத்த செய்தியை, பேரவைத் தலைவர் அறையிலேயே அனைத்து உறுப்பினர்களும் இருந்தபொழுதே குறிப்பிட்டுச் சொன்னார்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர், கொறடா எல்லாம் இருந்தபொழுது, மாண்புமிகு அமைச்சர் துரைமுருகனைப் பற்றிச் சொல்கிறபோது சொன்னார்கள். அப்படி நோயின் தன்மையைக் கண்டறிவதற்கான முயற்சியைக்கூட நம்முடைய முதல்வர் அவர்கள் எடுப்பார் என்பதற்குரிய உதாரணமாக அது இருந்தது. அவருடைய இந்த முயற்சி என்பது, மரியாதைக்குரிய தனுஷ்கோடி ஆதித்தன் அவர்களுடைய உயிரைப் பாதுகாப்பதற்குரிய ஓர் அவசர முயற்சி. இதற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதல்களையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன்.

**திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் மத்திய அமைச்சரும், காங்கிரஸ் கட்சியினுடைய முக்கிய தலைவர்களில் ஒருவருமான தனுஷ்கோடி ஆதித்தன் அவர்கள், நெல்லையிலே இருந்து தூத்துக்குடி செல்லுகின்ற வழியில், எதிர்பாராமல், ஒரு கடுமையான விபத்துக்கு ஆட்பட்டு, அவருடைய துணைவியாரையும் இழந்ததோடு, அவரும் பெருமளவில் பாதிக்கப்பட்டு, உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்ற அந்தக் காலகட்டத்தில், நம்முடைய அரசு, குறிப்பாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மனிதாபிமானத்தோடு சிறந்த சிகிச்சையை அவர்களுக்குத் தருகின்ற வகையிலே, அவருடைய உயிரையே காப்பாற்றுகின்ற அளவில் நல்ல சிகிச்சையை மேற்கொள்வதற்கு முறையான நடவடிக்கைகளை எடுத்து, இன்றைக்கு சிறந்த மருத்துவ



வசதி அவருக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. அவர் விரைவில் குணம் பெற்று, எப்பொழுதும்போல் பொதுப் பணியில் ஈடுபடுவதற்கு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய ஆவலை, விழைவை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

***திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் மத்திய அமைச்சர், இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர், மதிப்பிற்குரிய தனுஷ்கோடி ஆதித்தன் அவர்கள், சில தினங்களுக்கு முன்பு எதிர்பாராத வகையிலே சாலை விபத்திலே சிக்கி, தன்னுடைய துணைவியாரை இழந்து, மருத்துவமனையிலே போராடிக் கொண்டிருக்கும் அன்னாருக்கு மருத்துவ உதவிகளை மேற்கொண்டு, அனைத்து உதவிகளையும் செய்து தந்துள்ள நம்முடைய தமிழக முதல்வர் அவர்களுக்கு விடுதலைச் சிறுத்தைகள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

## 5. அறிவிப்பு

### பேரவை அலுவலில் மாற்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 10–08–2006 ஆம் நாளன்று எடுத்துக்கொள்ளப்படவிருக்கும் மானியக் கோரிக்கை எண் 27–தொழில் துறை மற்றும் மானியக் கோரிக்கை எண் 31–தகவல் தொழில்நுட்பவியல் துறை ஆகியன 19–08–2006 அன்றும், 19–08–2006 ஆம் நாளன்று எடுத்துக்கொள்ளப்படவிருக்கும் மானியக் கோரிக்கை எண் 15–சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை மற்றும் மானியக் கோரிக்கை எண் 49–இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை ஆகியன 10–08–2006 ஆம் நாளன்றும், பேரவையின் ஒப்புதலுடன் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(குறுக்கீடு)*

**திரு. டி. ஜெயக்குமார்:** பேரவைத் தலைவர் அவர்களே, அலுவல் ஆய்வுக் குழு கூடி..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுபபினர் திரு. டி. ஜெயக்குமார், உட்காருங்கள். (குறுக்கீடு) கலந்து பேசி ஆயிற்று, உட்காருங்கள். இதற்கெல்லாம் நடைமுறை இருக்கின்றது, உட்காருங்கள்.

## 6. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

| | | | |
|---|---|---|---|
| (அ) | கோரிக்கை எண் 3 | - | நீதி நிருவாகம் |
| (ஆ) | கோரிக்கை எண் 24 | - | உள் துறை - சிறைச்சாலைகள் |
| (இ) | கோரிக்கை எண் 33 | - | சட்டத் துறை |
| (ஈ) | கோரிக்கை எண் 41 | - | வருவாய்த் துறை |
| (உ) | கோரிக்கை எண் 51 | - | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு |

### (அ) கோரிக்கை எண் 3 – நீதி நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2006–2007* ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் *3*–நீதி நிருவாகம். மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நீதி நிருவாகம் பற்றிய *3* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.*176,81,21,000*/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் *1688*, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறையில் நீதிமன்றத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய *3* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*176,81,21,000*/–ல் ரூ.*100*/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2354*, திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய *3* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*176,81,21,000*/–ல் ரூ.*100*/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2740*, திரு. க. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *3608*, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பள்ளிப்பட்டு தொகுதி, பள்ளிப்பட்டு நகரில் உள்ள உரிமையியல் நீதிமன்றத்தோடு புதிய குற்றவியல் நீதிமன்றத்தினை நிறுவ வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய *3* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*176,81,21,000*/–ல் ரூ.*100*/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *4673*, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய *3* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*176,81,21,000*/–ல் ரூ.*100*/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *9368*, திரு. து. செல்வராஜ்.

**திரு. து. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளைத் துரிதமாக விசாரித்து தீர்ப்புகளை உடனுக்குடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1941, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2659, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மெட்ராஸ் ஹை கோர்ட் என்பதனை மாற்றி தமிழ்நாடு உயர் நீதிமன்றம், சென்னை, தமிழ்நாடு உயர் நீதிமன்றம், மதுரை கிளை என்றும் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2818, திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக நீதிமன்றங்களில் தேங்கியுள்ள வழக்குகளை விரைவாக முடித்திட காலியாக உள்ள நீதிபதிகள் பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

முற்பகல் 10—35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3021, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "டில்லி, உச்ச நீதிமன்றக் கிளை சென்னையில் இயங்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3891, திரு. கோஎல். இளவழகன்.

**திரு. கோஎல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்திலுள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் உள்ள கோப்புகளையும், வழக்கறிஞர்கள் வழக்காடுவதையும் முழுமையாகத் தமிழிலேயே இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4496, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் ரௌடிகளை ஒடுக்க கடுமையான சட்டத்தை இயற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7267, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்திலுள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் தேங்கியுள்ள வழக்குகளை உடனடியாக முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைகக வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7444, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்திலுள்ள அனைத்து ஏழை, எளிய மக்களுக்கு நீதி வழங்கும் வகையில் நடமாடும் நீதிமன்றங்களை அதிகப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7623, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிராமப்புற மக்கள் அரசு வழங்கும் இலவச சட்ட உதவி பற்றித் தெரிந்துகொள்ள விளம்பரங்கள் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைகக வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3463, திரு. கே. உலகநாதன்.



**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியிலுள்ள நீதிமன்ற வளாகத்தில் வழக்கறிஞர்களுக்கு நூலகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4173, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்ககிரியிலுள்ள நீதிமன்றத்திற்குத் தனி நீதிபதி ஒருவரை நியமனம் செய்து, தேங்கியுள்ள சிறு வழக்குகளை விசாரித்து உடனடியாகத் தீர்ப்பு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி திருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3150, திரு. இரா. இராம்பிரபு.

**திரு. இரா. இராம்பிரபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பரமக்குடி சட்டமன்றத் தொகுதி, பரமக்குடி நகரில் இருக்கக்கூடிய நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடங்கள் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5062, திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணி தொகுதி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதி பொது

மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான சார்பு நீதிமன்றம் ஏற்படுத்தித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3628, திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகம் முழுவதும் நடுவர் நீதிமன்றம் மற்றும் சிவில் நீதிமன்றங்களில் காலியாகவுள்ள பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2091, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வழக்கறிஞர்களுக்கு ஓய்வூதியம் மாதம் ரூ.2,500/— வழங்கும் திட்டம் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3185, திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உயர் நீதிமன்ற நீதிபதி பதவிகளில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த நீதிபதிகளை நியமித்து, சமூக நீதியை நிலைநாட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5125, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதியில் அமைந்துள்ள உரிமையியல் நீதிமன்றம், முதல் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம், இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் மற்றும் சார்பு நீதிமன்றம் ஆகியவை இணைந்த ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் அரசுக்குச் சொந்தமான இடத்தில் பொதுமக்களுக்கு வசதியாகக் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4603, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள், புதிய நீதிமன்றக் கட்டடங்கள் கட்ட 61 திட்டங்களுக்கு ரூ.206/— கோடி செலவில் திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதால், வேண்டிய நிதியைப் பெற்று பணிகள் உடனடியாக ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6566, திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செந்தூரில் சார்பு நீதிமன்றம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1972, திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டையில் இயங்கும் கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தை வேறு இடத்திற்கு மாற்றம் செய்யாமல், புதுக்கோட்டை மாவட்ட மக்களின் நலன் கருதி புதுக்கோட்டையில் தொடர்ந்து செயல்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2605, திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேனி—பெரியகுளம் சாலையில் அனைத்து மாவட்ட நீதிமன்றங்களில் பணிபுரிபவர்களுக்கு குடியிருப்புகளைக் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4456, திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராசபாளையம் நகரில் முன்சீப் நீதிமன்றம் புதியதாகத் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2901, திரு. கு. செல்வம்.

***திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உயர் நீதிமன்றத்தில் தமிழில் வாதிடுவதற்கான வழிவகைகள் காண வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6495, திரு. சி. சின்னசாமி.

**திரு. சி. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மருங்காபுரி சட்டமன்றத் தொகுதி மக்கள் பயனடைகின்ற வகையில் மணப்பாறை தாலுகா சிவில் கோர்ட் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருவதற்கு, புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7541, திரு. கே.எஸ். விஜயகுமார்.

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் மாவட்ட நீதிமன்றத்தில் J.M.1 அல்லது J.M.2 இதில் ஏதாவது ஒரு J.M. ஊத்துக்கோட்டை பேரூராட்சிக்கு இடமாற்றம் (shifting) செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1524, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி தாலுகா, முன்சீப் கோர்ட்டுக்குக் கூடுதல் கட்டடங்கள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2010, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நன்னிலத்தில் புதிய நீதிமன்றக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6936, திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கம்பம் தொகுதி, உத்தமபாளையத்தில் உள்ள நீதிமன்றக் கட்டடங்கள் பழுதடைந்துள்ளதால், புதிய நீதிமன்றக் கட்டடங்கள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3385, திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குடியாத்தம் சட்டமன்றத் தொகுதியில் நீதிமன்ற வளாகத்திற்கு இடம் உள்ளது. அதற்கான நிதி ஒதுக்கீடு செய்து, ஒருங்கிணைந்த நீதிமன்றம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3400, திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகை நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5643, திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேடசந்தூரில் உள்ள நீதிமன்றம் வாடகைக் கட்டடத்தில் இயங்குகிறது. அதற்கு அரசு சார்பில் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7989, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டத்தில ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் திருவண்ணாமலையில் ஒரே இடத்தில் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6109. டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கபிலர்மலைத் தொகுதியிலுள்ள பரமத்தி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8095, திரு. ஆர். ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகாசியில் நீதிமன்றத்திற்குக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7262, திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருமங்கலத்தில் சார்பு நீதிமன்றம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8281, திரு. ம. குணசேகரன்.



**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரையில் உள்ள உரிமையியல் நீதிமன்றம் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களிலுள்ள வழக்கறிஞர்களுக்கு ஓய்வு அறை ஒன்று கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8496, திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெருந்துறை தொகுதிக்குட்பட்ட 106 வருவாய்க் கிராம மக்கள் பயன்பெறும் வகையில் பெருந்துறையில் சார்பு நீதிமன்றம் (Sub-court) அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8713, திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் நீதிமன்றத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

முற்பகல் 10—40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9222, திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டிலுள்ள நீதிமன்றங்களில் தேங்கிக் கிடக்கும் இலட்சக்கணக்கான வழக்குகளை விரைந்து முடிப்பதற்கு விரைவு நீதிமன்றங்கள் கூடுதலாக அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7150, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதியில் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1666, திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி, பேரூரில் வாடகைக் கட்டடத்தில் வசதியில்லாமல் இயங்கி வரும் நீதிமன்றங்களுக்கு, பல ஆண்டுகளுக்கு முன்பே இடம் ஒதுக்கப்பட்டும், புதிய கட்டடம் சொந்தமாக இல்லாமல் இயங்கி வரும் நீதிமன்றங்களுக்கு, உடனடியாகக் கட்டடம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5568, திரு. செ.ம. வேலுசாமி.



**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பல்லடத்திலுள்ள நீதிமன்றத்திற்குப் புதிய, கூடுதலாகக் கட்டடம், கழிப்பிட வசதிகள் போன்றவை கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5257, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீதிமன்றக் கட்டடத்தில் ஜெராக்ஸ் மெஷின் வழங்கவும் மற்றும் கணினிமயமாக்கவும் வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5368, திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகங்கை மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தைக் கட்டி முடிக்க நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3800, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரியில் அரசு அறிவித்தும் அமர்வு நீதிமன்றம் ஆரம்பிக்கப்படாமல் இருப்பதால் ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2967, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுகாவில் அதிக அளவில் முந்திரி, பீடி, தையல், கட்டுமானம், இரப்பர் என பல்லாயிரக்கணக்கான தொழிலாளிகள் இருப்பதால் Labour Court ஒன்றை குழித்துறையில் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2933, திரு. பி. தங்கமணி.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதியில் திருச்செங்கோட்டில் புதிய கோர்ட் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,81,21,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 24 – உள் துறை – சிறைச்சாலைகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 24 – உள் துறை – சிறைச்சாலைகள். மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உள் துறை – சிறைச்சாலைகள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.75,83,46,000/— மற்றும்



மூலதனக் கணக்கில் ரூ.7,06,20,000/— ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1824, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிறையில் உள்ள கைதிகளுக்கு நாள்தோறும் ஒரு மணி நேரம் தியானம், அகிம்சை, தேசப்பற்று ஆகியவற்றைப் புகட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை – சிறைச்சாலைகள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,83,46,000/— மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,06,20,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9110, திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சோளிங்கர் தொகுதியில் சிறைச்சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை – சிறைச்சாலைகள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,83,46,000/— மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,06,20,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3266, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை – சிறைச்சாலைகள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,83,46,000/— மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,06,20,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9370, திரு. து. செல்வராஜ்.

**திரு. து. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்திலுள்ள சிறைச்சாலைகளை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை – சிறைச்சாலைகள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,83,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,06,20,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1925, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை – சிறைச்சாலைகள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,83,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,06,20,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2349, திரு. கே.வீ. ராமநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4516, திரு. தி.க. இராஜா.

**திரு. தி.க. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிளைச் சிறைகளில் பணியாற்றும் வார்டன்களுக்கு குடியிருப்பு வசதி செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை – சிறைச்சாலைகள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,83,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,06,20,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5024, திரு. கே.எல். இளவழகன்.



**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், ஆற்காடு சட்டமன்றத் தொகுதி, ஆற்காடு நகரில் கிளைச் சிறைச்சாலை கட்டப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை – சிறைச்சாலைகள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,83,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,06,20,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7179, திரு. வீ.அ.த. கலியவரதன்.

**திரு. வீ.அ.த. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், முகையூர் தொகுதியில் அரகண்டநல்லூர், மணலூர்பேட்டை, கண்டாச்சிபுரம், கஞ்சனூர், கெடார் காவல் நிலையங்கள் உள்ளன. ஆனால், எனது முகையூர் தொகுதியில் கிளைச் சிறைச்சாலையே இல்லை. இதற்கு ஒரு கிளை சிறைச்சாலை அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை – சிறைச்சாலைகள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,83,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,06,20,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7634, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிறைச்சாலைகளில் கைதிகளுக்கு புதிய சிந்தனையைத் தூண்டும் வகையில் யோகா பயிற்சி மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை – சிறைச்சாலைகள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,83,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,06,20,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7744, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி, தருமபுரி போன்ற மாவட்டங்களிலுள்ள கிளைச் சிறைச்சாலைகளில் மருத்துவ வசதிகள் ஏற்படுத்த மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை – சிறைச்சாலைகள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,83,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,06,20,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8740, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், மேட்டூரில் கிளைச் சிறைச்சாலை ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை – சிறைச்சாலைகள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,83,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,06,20,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7283, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிறைச்சாலைகளில் நன்னடத்தையுடன் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக இருக்கக்கூடிய ஆயுள் தண்டனைக் கைதிகளுக்கு அரசு பொது மன்னிப்பு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை – சிறைச்சாலைகள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,83,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,06,20,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2661, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆயுள் தண்டனை பெற்ற கைதிகளில் பத்து ஆண்டு கழிந்தவர்களை அவரவர் குற்றத்தின் தண்டனையை ஆய்வு செய்து, பொது மன்னிப்பு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை – சிறைச்சாலைகள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,83,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,06,20,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2817, திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை – சிறைச்சாலைகள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,83,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,06,20,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5143, திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கரன்கோவில் தொகுதியில் இயங்கி வருகின்ற சிறைச்சாலை வட்டாட்சியர் அலுவலக வளாகத்திற்குள் இருப்பதால் இட நெருக்கடி ஏற்படுகிறது. எனவே, தனியாக சிறைச்சாலை அமைக்க புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை – சிறைச்சாலைகள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,83,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,06,20,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2897, திரு. கு. செல்வம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2701, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு முழுவதுமுள்ள சிறைச்சாலைகளில் சிறைக் கைதிகளுக்கு வழங்கப்படும் உணவுப் பொருட்களின் தரம் மற்றும் அளவு குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை – சிறைச்சாலைகள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,83,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,06,20,000/–ல ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2632, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உடுமலைப்பேட்டையிலுள்ள சிறைச்சாலைக்குப் புதிய கட்டடம் கட்டி, நவீனப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை – சிறைச்சாலைகள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,83,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,06,20,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2483, திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேனி மாவட்டம், உத்தமபாளையம், பெரியகுளம் சிறைச்சாலைகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை – சிறைச்சாலைகள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,83,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,06,20,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2009, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிறைச்சாலை கைதிகளுக்கு சுகாதார வசதிகள் மற்றும் உணவுத் தரத்தை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை – சிறைச்சாலைகள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,83,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,06,20,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4451, திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராசபாளையம் நகர் பகுதியில் கிளைச் சிறைச்சாலை ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை – சிறைச்சாலைகள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,83,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,06,20,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நான் அதைத்தான் கேட்டேன். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, (குறுக்கீடு) கொஞ்சம் உட்காருங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நீதிமன்றக் கிளை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே, தலைவர் கலைஞர் அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) முயற்சி எடுத்து அந்த இடத்தைப் பெற்றார்கள். அதுமட்டுமல்ல. G.O. 449—ன்படி 56 கோடியே 45 இலட்சம் ரூபாய்க்கு ஆணை வெளியிடப்பட்டது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில். அப்போது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே கட்டடம் கட்டுவதற்கு அடிக்கல் எல்லாம் போடப்பட்டு, அந்தப் பணியெல்லாம் துவங்கப்பட்டது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், இங்கே வழக்கறிஞர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். சரி, சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் தவறான தகவலைத் தருகின்றார்கள். அன்றைக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** தவறான தகவலை நான் தரவில்லை. நான் தெளிவாகச் சொல்கிறேன். அரசாணை எண் 449—ன்படி, ரூ. 56.45 கோடியிலே உயர் நீதிமன்றத்தினுடைய மதுரை கிளையை, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேதான் அந்த நடவடிக்கைகள், கட்டுமானப் பணிகள் எல்லாம் தொடங்கி நடந்துகொண்டிருந்தன. அதைத் தொடர்ந்து நீங்கள் செய்தீர்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ஆணைகள் வெளியிடப்பட்டு, பணிகள் நடந்துகொண்டிருந்தன; தொடர்ந்து நடவடிக்கை நீங்கள் செய்தீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்.

**திரு. டி. ஜெயக்குமார்:** 65 கோடி ரூபாய் அன்றைக்கு அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலேதான் நிதி ஒதுக்கப்பட்டு செலவு செய்யப்பட்டது. அதேபோல, விழுப்புரத்திலே...

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 65 கோடி என்பதே தவறு. 55 கோடியே கொடுக்கவில்லை. நான் தெளிவாகச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் அவர்கள் பேசுகின்ற கருத்துகளிலே குறுக்கிட விரும்பவில்லை. ஆனால், சில உண்மைகளை மறைத்துவிடக் கூடாது. மதுரையிலே உயர் நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்காக plan போட்டு, அடிக்கல் நாட்டி, பணத்தை ஒதுக்கி, எல்லாம் செய்தது கலைஞர். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல, சென்னையிலே எழிலார்ந்த மருத்துவமனை 104 கோடி ரூபாய் செலவிலே கட்டுவதற்கு ஒப்புதல் தரப்பட்டு, plan approval செய்து tender விடப்பட்டு, அடிக்கல் நாட்டியதும் கலைஞர். (மேசையைத் தட்டும் ஒலி) நான் இதைச் சொல்வதற்குக் காரணம், சில கட்டடங்கள், சில அறிவிப்புகள், ஒரு ஆட்சிக் காலத்திலே நிறைவேற்றப்படுகின்றன. பிறகு அடுத்து வருகின்ற ஆட்சி அதை முடித்து வைக்கிறது. முடித்து வைக்கின்ற காரணத்தினாலே கடந்த கால ஆட்சி அந்தச் சாதனைகளைச் செய்யவில்லை என்று சொல்வது முறையாகாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் அந்த G.O. Number-ஐக்கூடத் தருகின்றேன். G.O. Ms. No. 256, dated 22-3-2002. இந்த அரசாணையின்படிதான் 44 கோடியே 91 இலட்சத்து 33 ஆயிரம் ஒதுக்கப்பட்டது. வேண்டுமென்றால் அந்த அரசாணையை நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள். அதன்பிறகு revise...

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** அந்த அரசாணை எண் 449 நான் சொல்லியிருக்கிறேன். அதைப் பாருங்கள். அந்த அரசாணையிலே நீங்கள் திருப்பி என்ன பண்ணியிருக்கிறீர்கள் என்றால்... (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் பேசிக்கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** ஏற்கெனவே கழக ஆட்சிக் காலத்தில், அதற்கு திட்டமிடப்பட்டது; plan approval—படி 56 கோடியே 45 இலட்சம். அதைக் குறைக்க வேண்டுமென்று சொல்லி நீங்கள் என்ன பண்ணினீர்கள்? நீங்கள் G.O. போடுகிறீர்கள். 33 கோடிக்கு போட்டு, அப்புறம் ஒரு 7 கோடியைச் சேர்த்து, 44 கோடி, மூன்று கட்டமாக அதை உயர்த்தி இருக்கிறீர்கள் பின்னாலே. அதைச் செலவழிக்கிறபோது எப்படிச் செலவழிக்க வேண்டுமென்று, ஏனென்றால் இவ்வளவு rich ஆக — ஏற்கெனவே அப்போதிருந்த சம்பந்தப்பட்ட துறையிலே இருந்த உயர் அதிகாரி ஒருவர் இது ரொம்ப கூடுதலாக இருக்கிறது. இதற்கு சலவைக் கல் போட வேண்டியதில்லை. இதையெல்லாம் modify செய்து — செலவழிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று திட்ட மதிப்பீட்டைக் குறைத்துப் பார்த்திருக்கிறார்கள். அப்புறம் நீதிமன்றம், உயர் நீதிமன்றத்தினுடைய நீதிபதிகள் அதற்குச் சம்மதிக்கவில்லை. அதனாலேதான் அதனுடைய திட்ட மதிப்பீடே மூன்று தடவை மாற்றப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்ட மதிப்பீட்டைக் குறைத்து மதிப்பிட்டதாகச் சொன்னார்கள். சிக்கன நடவடிக்கைகள் என்ற அளவில்——இவர்கள் மிகையாகத் திட்ட மதிப்பீட்டைத் தயார் செய்திருந்தார்கள். என்னென்ன பணியை அவர்கள் எடுத்திருந்தார்களோ——அதே பணியை, திட்ட மதிப்பீட்டை நாங்கள் குறைத்து, அதே தரத்தோடுதான் நாங்கள் அந்தக் கட்டடத்தை முடித்திருக்கின்றோம். அந்தத் திறப்பு விழா நிகழ்ச்சியிலேகூட மாண்புமிகு தலைமை நீதியரசர் அவர்கள், மிகச் சிறப்பான முறையில் இந்தக் கட்டடம் அமைந்திருக்கிறது, தரமாக இருக்கிறது, ஆசியாவிலேயே தரமுள்ள கட்டடம் அந்த நீதிமன்றம் என்பதைப் பாராட்டித்தான் அந்த வகையிலே அன்றைக்குப் பேசினார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-25 •

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பிருந்த ஆட்சி ஏதோ கட்டடத்திற்கான செலவை திமுக. ஆட்சியிலே உயர்த்தியதைப் போலவும், பிறகு இவர்கள் குறைத்துவிட்டதைப் போலவும், ஒரு கருத்தை மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் சொன்னார். அங்கே தரைகள் எப்படிப் போடவேண்டும் என்பதிலே ஒரு கருத்து வேறுபாடு வந்தது. Marble Stone போடுவதா அல்லது என்ன கல் போடவேண்டும் என்பதிலே ஒரு கருத்து வேறுபாடு வந்தது. Marble போட்டால் அதிகச் செலவாகும். Mosaic போட்டால் குறைந்த செலவாகும். அதை அப்போது ஒரு பொறியாளர் உங்களுக்கு அறிவுரையாகச் சொல்லியிருக்கிறார், அதைக் குறைத்தீர்கள். உடனே தலைமை நீதிமன்ற நீதிபதி, அங்கே போய்ப் பார்த்துவிட்டு, இவ்வளவு எழிலார்ந்த கட்டடத்தைக் கட்டியிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், தரைகளுக்கு அழகான பளிங்குக் கற்களைப் போட்டால் நன்றாக இருக்கும் என்று சொன்னவுடன், மறுபடியும் நீங்களே அந்தச் செலவை ஏற்றுக்கொண்டு, புதிய கட்டடத்திலே அந்தக் கற்களைப் பதித்து அழகாகக் கட்டியிருக்கிறீர்கள். அதிலே எந்தக் குறைபாடும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம்.

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே 2006-2007 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையின்மீது விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. 2001-லிருந்து 2006 வரை நடைபெற்ற ஆட்சியைப் பற்றி, அங்கே நடந்த சாதனைகளைப் பற்றி, முன்னாள் அமைச்சர் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர் சொல்வது திருவள்ளூரிலே மாவட்ட நீதிமன்றம் வந்ததாகச் சொல்கிறார். இதுவரை அந்த மாவட்ட நீதிமன்றம் திருவள்ளூருக்கு வரவில்லை.

அதேபோன்று, இந்தப் பிரச்சினைகளைப் பற்றி தாங்கள் செய்தது, தங்கள் ஆட்சியிலே செய்தது, தங்கள் ஆட்சியிலே செய்தது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையிலே, இந்தப் புத்தகத்திலே இருக்கின்ற குறிப்புகளை வைத்து,



இந்தப் பிரச்சினையைப் பற்றி பேசாமல், பழைய ஆட்சியைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தால், இந்த நிலைமை இந்த மானியத்தைப் பற்றி இதிலே இருக்கின்ற நல்லது கெட்டது பற்றிப் பேசுவதற்கு அவர்களுக்கு முடியாமல், நாங்கள் இதைச் செய்தோம், நாங்கள் அதைச் செய்தோம், என்று சொல்லிக் கொண்டிருந்தால், எங்கே போய் முடியும் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

அதுமட்டுமல்ல, முன்னால் இத்தனை சாதனைகளையெல்லாம் நாங்கள் செய்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அந்தச் சாதனைகளுக்கெல்லாம்தான் மக்கள் 2006 சட்டமன்றத் தேர்தலிலே தீர்ப்பு அளித்துவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தீர்ப்புக்குப் பின்னாலே, நாங்கள் இதைச் செய்தோம், அதைச் செய்தோம் என்று இங்கே சொல்லிக் கொண்டிருப்பது அவ்வளவு நல்லதல்ல. இவர்கள் இந்த மானியத்தைப் பற்றி மட்டும் இங்கே பேச வேண்டும் என்று தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நேரம் ஆகிறது. (குறுக்கீடு) நேரம் ஆகிறது.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே-

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், அவருடைய அரசு, அ.தி.மு.க. அரசு சிக்கன நடவடிக்கையைக் கடைப்பிடித்ததாக இங்கே சொன்னார்கள். அவர் சொல்வது விந்தையாக இருக்கின்றது. காரணம் அவர்களுடைய, எதிர்க்கட்சித் தலைவர் தனது வளர்ப்பு மகன் திருமணத்திற்காக ரூபாய் 100 கோடி செலவழித்தாரே, (மேசையைத் தட்டும் ஒலி) அது சிக்கன நடவடிக்கையா என்பதை அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர், (குறுக்கீடுகள்) நீங்கள் உரையாற்றுங்கள் (குறுக்கீடுகள்) உரையாற்றுங்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) தலையிடக்கூடாது, உட்காருங்கள்.

(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று பேசிக் கொண்டிருந்தனர்.)

மற்றவர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஜெயக்குமார் பேசுங்கள். (குறுக்கீடுகள்) நேரத்தை வீணாக்காமல் சீக்கிரம் பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மற்றவர்கள் உட்காருங்கள். மற்ற எல்லோரும் உட்காருங்கள். திரு. விசுவநாதன் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியென்றால் முதலமைச்சருடைய குடும்ப இல்லங்களிலே நடைபெற்ற அந்தத் திருமணங்களுடைய, அந்த வரவு—செலவுகளை இந்தச் சட்டமன்றத்திலே வைப்பதற்குத் தயாரா? (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** எங்களுடைய முதலமைச்சர், திருமண வரவு-செலவு எல்லாம் ஒரு பைசாகூட விடாமல் சரியாக கணக்கு வைத்திருக்கிற ஒரு முதலமைச்சர் இந்தியாவிலேயே தலைவர் கலைஞர்தான்; தரத் தயார். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசுங்கள். என்ன சொல்லவேண்டுமோ சொல்லுங்கள், இல்லையென்றால் திரு. ஜெயக்குமார் பேச ஆரம்பியுங்கள். யார் பேசுகிறீர்கள்? நீங்கள் பேசுகிறீர்களா? பேசுங்கள். (குறுக்கீடு) நேரத்தை வீணாக்காமல் சீக்கிரம் பேச ஆரம்பியுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நிறைய மானியங்கள் எடுத்திருக்கின்றீர்கள். மாண்புமிகு உறுப்பினர், அருமை அண்ணன் திரு. சுதர்சனம் அவர்கள்கூடச் சொன்னார்கள். கடந்த காலத்தினுடைய சாதனைகளையெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்று. ஆனால், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள், இந்த அவைக்குச் சம்பந்தமில்லாத — அரசினுடைய நிதிநிலையைப் பற்றி, சிக்கன நடவடிக்கையைப் பற்றி நான் சொன்னேன்—வெளியில் நடக்கின்ற சம்பவங்களையெல்லாம் இங்கே உதாரணம் காட்டிப் பேசுவது, சபையினுடைய மரபுக்கு, விதிக்கு உகந்ததா என்பதனை



மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் மூலமாகக் கேட்க விரும்புகின்றேன். அவற்றை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கவேண்டுமென்று நான் சட்டப் பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11—30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு, உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார். (குறுக்கீடுகள்)

***திரு. பி.கே. சேகர்பாபு:** அதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்குங்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** இல்லை, இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள், சம்பந்தமில்லாத விஷயத்தைப் பற்றிப் பேசியதாக. அரசுத் துறை மதிப்பீட்டிலே, கடந்த அ.தி.மு.க. ஆட்சியிலே, திட்ட மதிப்பீட்டிற்கு மேலே எத்தனை சதவிகிதம் கூடுதலாகச் செலவழித்தீர்கள் என்று விசாரணை கமிஷன் வைத்தால் சந்திக்கத் தயாரா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, அடுத்த subject-க்குப் போங்கள். (குறுக்கீடுகள்) திரு. டி. ஜெயக்குமார், பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** திட்ட மதிப்பீட்டிற்கு மேலே பல நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் செலவழித்திருக்கின்றது அ.தி.மு.க. ஆட்சி. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பி.கே. சேகர்பாபு, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இடையூறு பண்ணிக்கொண்டே இருக்கிறீர்கள் நீங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே நாம் நிதிநிலை அறிக்கையின்மீதுதான் விவாதித்துக் கொண்டிருக்கின்றோம். மாண்புமிகு முன்னாள் முதலமைச்சருடைய வளர்ப்பு மகனைப் பற்றியெல்லாம் நாட்டு மக்களுக்குத் தெரிந்த காரணத்தினால், அதைப்பற்றியெல்லாம் இந்த அவையிலே விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை; அது தனிப்பட்ட விவகாரம். அரசாங்கத்திற்கும் அதற்கும் சம்பந்தம் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Right. அடுத்தது, அடுத்தது. *(குறுக்கீடுகள்)* திரு. டி. ஜெயக்குமார், பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள், சொல்லிவிட்டார்கள், இல்லையா?

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அதை எடுத்துவிடச் சொல்லுங்கள், எடுத்துவிடச் சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேறு subject-க்குப் போங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். இதற்குப் பிறகு வேறு என்ன வேண்டும்? *(குறுக்கீடுகள்)* அவர்கள் சொன்னதற்கு, அவர்களே பதில் சொல்லிவிட்டார்கள், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* எல்லோரும் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார், பேசுங்கள், நேரமாகி விட்டது.

*(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் எழுந்து நின்று, கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)*

அமைச்சர் அவர்கள் தகுந்த பதிலைச் சொல்லிவிட்டார். *(குறுக்கீடுகள்)* நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள் உட்காருங்கள். அதை நான் சொல்லவேண்டும். நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள் சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* திரு. டி. ஜெயக்குமார், பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள் முதலிலே உட்காருங்கள்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறை, நீதி நிருவாகம் பற்றிய மானியக் கோரிக்கையில்



விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. இதிலே பேசியவர்கள் 100 கோடி ரூபாய் செலவிலே வளர்ப்பு மகனுக்குத் திருமணம் செய்து வைத்தார்கள் என்று ... *(குறுக்கீடுகள்)* இருங்கள், இருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான் சொல்லிக் கொண்டிருக்கிறார், இல்லையா? *(குறுக்கீடுகள்)* அவர் என்ன சொல்கிறார் என்று கேட்டுவிடுவோமே? *(குறுக்கீடுகள்)* அவர் என்ன சொல்கிறார் என்று கேட்போம்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** இல்லை, இல்லை. நான் சொல்ல வந்ததை முதலில் கேளுங்கள். *(குறுக்கீடுகள்)* நான் சொல்ல வருவதை முழுமையாகக் கேட்டுக் கொள்ளுங்கள். 100 கோடி ரூபாய் செலவு செய்து திருமணம் செய்து வைத்த வளர்ப்பு மகன் மீதே, ஹெராயின் வழக்கு போட்டார்களே, அந்த ஹெராயின் வழக்கு எதற்காகப் போட்டார்கள்? *(கூச்சல்—குழப்பம்)* அது இப்போது எந்த நிலையிலே இருக்கிறது என்பதை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்வாரா? *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒன்று, திருமணத்திற்குச் செலவழி[illegible]து என்பதெல்லாம் அவர்களுடைய சொந்த விருப்பம் போல. ஆக, அதையெல்லாம் இங்கே பேசவேண்டியது இல்லை. *(குறுக்கீடுகள்)* திரு. டி. ஜெயக்குமார், பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள், திரு. டி. ஜெயக்குமார், பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. வேதரத்தினம். *(குறுக்கீடுகள்)*

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள்.

**திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மானியக் கோரிக்கை சம்பந்தமாக மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் அவர்கள் உரையாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இடையே அமைச்சர் அவர்களும் குறுக்கிட்டு சில விளக்கங்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், இந்த மானியத்திற்குச் சம்பந்தமில்லாமல், திருமண விழாச் செலவு பற்றிக் குறிப்பிட்டதனால், இந்தச் சர்ச்சை ஏற்பட்டுள்ளது. மானியத்திற்கும், இதற்கும் சம்பந்தமில்லை என்பதை மாண்புமிகு

அமைச்சர் திரு. வீராசாமி அவர்களும் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பிரச்சினை இல்லாமல் நீங்குவதற்கு, சுமூகமாக இந்தச் சபை நடைபெறுவதற்கு, அதை சபைக் குறிப்பிலேயிருந்து நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற கட்சித் தலைவர் மாண்புமிகு அண்ணன் கண்ணப்பன் அவர்கள் சொன்னார்கள். எதைப்பற்றி என்பதை விளக்கமாகச் சொல்லவேண்டும். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு 5 மானியக் கோரிக்கைளை நாம் நிறைவேற்ற வேண்டும். நான் எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கும், உறுப்பினர்களுக்கும் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்து பதிவாகியிருக்கிறது. நான் சொன்ன கருத்தும் பதிவாகியிருக்கிறது. நான் சொன்ன கருத்திலேயிருந்து அது இந்தச் சட்டமன்றத்திற்கு அப்பாற்பட்ட விவகாரம் என்று தெரிவித்திருக்கிறேன். எனவே, அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கித்தான் ஆக வேண்டும் என்பது இல்லை. அவர் சொன்னதற்கு நான் விளக்கம் தந்தாகிவிட்டது. எனவே, தயவுசெய்து தொடர்ந்து பேசுவதற்கு மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. ஜெயக்குமார் அவர்களை... (குறுக்கீடுகள்)

*முற்பகல் 11—35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒன்று, எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நான் சொல்வதைக் கேளுங்கள். It is not an unparliamentary word. அதனால்தான் அவைக்குறிப்பிலே இருக்கிறது. யாரும் அதைப்பற்றிப் பேச வேண்டாம். அவைக்குறிப்பிலிருந்து நீக்குவதும், நீக்காமல் இருப்பதும் என்னுடைய விருப்பம். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஜெயக்குமார், பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஜெயக்குமார், பேசுங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன், கேளுங்கள். Unparliamentary word இல்லை, அது. அதனாலே, நான் அதை நீக்குவதும், நீக்காமல் இருப்பதும் என்னுடைய discretion, அதை யாரும் கேட்க முடியாது. திரு. ஜெயக்குமார், பேசுங்கள். (குறுக்கீடுகள்)



*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கோஷமிட்டுக்கொண்டு அவையைவிட்டு வெளியேறினர்.)*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் அவர்கள்... (குறுக்கீடுகள்) ஆக வெளிநடப்புச் செய்வதற்காகவே தினம் வருகிறார்கள் என்பதை நிரூபித்துக்கொண்டிருக்கிறார்கள். அதுவரையிலும் ரைட். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கண்ணப்பன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் அவர்களும் கடந்த ஐந்தாண்டுகளாக இங்கே இருக்கிற வாய்ப்பைப் பெற்றிருக்கவில்லை. நாங்கள் இந்தச் சட்டமன்றத்திலேயே அமர்ந்திருந்தவர்கள். அப்போது இதே சட்டமன்றத்திலே ஒவ்வொரு கட்சித் தலைவரைப் பற்றியும் அன்றைய முதலமைச்சர் சொன்ன வார்த்தைகளையெல்லாம் நீக்க வேண்டுமென்று சொன்னால், சென்ற ஆண்டுகளின் நடவடிக்கைக் குறிப்புகளை முழுவதுமாக எடுக்க வேண்டியிருந்திருக்கும். எதையும் சம்பந்தம் இல்லாமல் சொல்லவில்லை, தனிப்பட்ட முறையிலே சொல்லவில்லை. சிக்கனத்திற்காகச் சொல்கிறபோது இதைச் சுட்டிக்காட்டினால் இவ்வளவு கோபம் வருகிறது. ஆனால், தகர டப்பாவோடும், கிழிந்த துணியோடும் என்று பேசியதெல்லாம் இந்தச் சட்டமன்றக் குறிப்பேட்டில் இடம்பெற்றிருக்கிறது. சம்பந்தமே இல்லாமல் பேசியிருக்கிறார்கள். அன்றைய முதலமைச்சர் 'மரம் வெட்டி' என்று ஒரு கட்சித் தலைவரைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள். பேசாத தலைவர்களே இல்லை. ஏன், உங்கள் தலைவரைப் பற்றியே இங்கே எவ்வளவு விமர்சித்தார்கள் என்பதெல்லாம் தெரியும். அவை எல்லாம் அவைக்குறிப்பிலே இருக்கின்றன. வெளியிலே நடைபெற்ற, பொதுக்கூட்டத்திலே பேசுவதைப்போல கடந்த காலங்களிலே முதலமைச்சரே இதே சட்டமன்றத்திலே பேசினார்கள். அதனால், அதையே நாங்கள் பின்பற்ற வேண்டுமென்று விரும்பவில்லை. ஆனால், அதே நேரத்திலே, சிக்கனம் என்று வருகிறபோது எடுத்துக்காட்டாகச் சொன்னது இந்தச் சபையிலே இடம்பெறுவதிலே எந்தவிதமான தவறும் இருக்க முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கண்ணப்பன் அவர்கள். (குறுக்கீடுகள்) லாபியிலே சத்தம் வருகிறது பாருங்கள். லாபியிலே சத்தம் போடுபவர்கள் எல்லோரையும் வெளியேற்றுங்கள். (குறுக்கீடு) அவைக் காவலர்கள், லாபியில் சத்தம் வரக்கூடாது.

**திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கைக்கு சம்பந்தம் இல்லாமல் இங்கே சில கருத்துகள் சொல்லப்பட்டு, தொடர்ந்து விவாதம் சுமுகமான முறையில் நடைபெறாமல்...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் பொடா சட்டத்தில் கைது செய்யப்பட்டபோது 'பாஸிஸ்ட் ஜெயலலிதா, கொடுங்கோல் ஜெயலலிதாவை ஆட்சியிலிருந்து அகற்றியே தீருவேன்' என்று அன்றைக்குச் சொன்னாரே, அதைப்பற்றி இப்போது அண்ணன் கண்ணப்பன் அவர்கள் என்ன சொல்கிறார்?

**திரு. மு. கண்ணப்பன்:** அதைப் பற்றி விவாதம் இப்போது நடைபெறவில்லை. சொல்ல வேண்டிய நேரத்தில் சொல்ல வேண்டிய இடத்திலே சொல்லுவோம். அதைப்பற்றி பரிதி கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. இப்போது முறையாக இந்த விவாதம் நடைபெறுவதை வேண்டுமென்றே எதிர்க்கட்சிகளை வெளியேற்றுவதற்குத் திட்டமிட்டு, வெளியேற்றுகின்ற வகையிலே அமைச்சர்கள் பேசி வெளியேற்றியிருக்கிறார்கள். அவைத் தலைவரும் அதை அனுமதித்திருக்கிறீர்கள். ஆகவே, அவைத் தலைவருடைய நடவடிக்கையைக் கண்டித்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

*(மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையைவிட்டு வெளிநடப்புச் செய்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாரும் அவர்களை வெளியேற்றவில்லை. அவர்களாகவே வெளியேறி இருக்கிறார்கள். நாங்கள் யாரும் வெளியேற்றவில்லை. அவர்களாகவேதான் வெளியேறி இருக்கிறார்கள். போகட்டும்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியிலே சட்டம்-ஒழுங்கு நன்றாக இருந்தது என்று சொன்னார். பொடா சட்டத்தைப் தவறாகப் பயன்படுத்தி, அவர்களுடைய பொதுச் செயலாளரைச் சிறையிலே போட்டார்களே, அது அரசியல் பழிவாங்கும் நோக்கம் இல்லையா? அந்த ஆட்சியிலே சட்டம்-ஒழுங்கு சரியாக இருந்ததா? இது சட்டத் துறை சம்பந்தப்பட்ட மானியம்; இந்தச் சட்டத் துறை சம்பந்தப்பட்ட



மானியத்திலே, அவர் சொன்ன மாதிரி, அவர்களுடைய பொதுச் செயலாளரைப் பொடா சட்டத்திலே அரசியல் பழி வாங்கும் நோக்கத்தோடுதான் சிறையிலே போட்டார்கள். அதற்கு எல்லா எதிர்க்கட்சிகளும் அன்றைக்குக் குரல் கொடுத்தன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் முன்னாள் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் இங்கே பேசி முடித்தபோது, அவரை, எதிரே உட்கார்ந்திருந்த முன்னாள் முதலமைச்சர் அவர்கள், "இவர் காலி டப்பா, அதிலே ஏதாவது வாசனை இருக்கும் என்று பார்த்தேன், இவர் ஒரு காலிப் பெருங்காய டப்பா" என்று சொன்னார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்போது, திரு. குணசேகரன், அமைதியாக உட்காருங்கள்.

முற்பகல் !!—40

**திரு. டி. சுதர்சனம்:** காலிப் பெருங்காய டப்பா என்று சொல்லியிருக்கிறார்கள். அவையெல்லாம் அவைக் குறிப்பிலே இருக்கிறது. அவற்றை நீக்க வேண்டுமென்று சொன்னோம். அன்று அவை நீக்கப்படவில்லை. அதனாலே, இதையும் நீக்க வேண்டிய அவசியமில்லை என்பதை இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்றக் கட்சித் தலைவர் அண்ணன் கண்ணப்பன் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அவர்கள் பேசுவதை நான் வரவேற்கிறேன். இருந்தாலும்கூட, இந்த மன்றத்தில் திரு. டி. ஜெயக்குமார் அவர்கள் குறிப்பிட்டது, சிக்கன நடவடிக்கை. சிக்கன நடவடிக்கைக்குக் கடந்த காலங்களிலே என்ன நடவடிக்கை எடுத்தார்கள், எப்படி நடந்தது என்பதைச் சுட்டிக்காட்டினார்கள். அதில் தவறில்லை. ஆனால், இந்த மாமன்றத்திலே கடந்த ஆட்சிக் காலத்தில் முதலமைச்சர் அவர்கள்,

எதிர்க்கட்சி வரிசையிலேயிருந்த தலைவர்களைப் பார்த்துப் பேசியது, அந்த நேரத்திலே கட்சிகளைப் பற்றிக் கொச்சைப்படுத்தியது, கொஞ்சநஞ்சமல்ல. காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அண்ணன் எஸ்.ஆர்.பி. அவர்களைக் குறிப்பிட்டது, காலிப் பெருங்காய டப்பா என்று மட்டுமல்ல; இவர் ரொம்ப ஆணவக்காரர், திமிர் பிடித்தவர், என்று பேசியதும் இந்தச் சட்டமன்றத்திலே; எஸ்.ஆர்.பி. ரொம்ப ஆணவத்திலே இருக்கிறார், திமிர் பிடித்தவர் என்று சொன்னார்கள். அதுமட்டுமா, பா.ம.க.—வைப் பார்த்து — பாட்டாளி மக்கள் கட்சி, இவர்களெல்லாம் மரம் வெட்டி கட்சி. இன்னும் ரொம்ப மோசமாகப் பேசினார்கள். கம்யூனிஸ்ட் கட்சி, மகத்தான கட்சி. எவ்வளவு பெரிய கட்சி? அந்தக் கட்சியைப் பற்றிச் சொன்னார்கள். "உலகத்திலே தகரம் கண்டுபிடிப்பதற்கு முன்பு, உண்டியலைக் கண்டுபிடித்தவர்கள்" என்று, எவ்வளவு கொச்சைப்படுத்தினார்கள்? அதைவிட இன்னும் மேலாக, எல்லாக் கட்சிகளையும், கட்சித் தலைவர்களையும் தனிப்பட்ட முறையிலே— பேராசிரியர் எவ்வளவு உயர்ந்த பண்புள்ளவர்— பேராசிரியரைப் பற்றிப் பேசினார்கள். இன்னும் நிறைய இருக்கிறது. ஆகவே, கடந்த வரலாறுகள் நிறைய இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன். அதையெல்லாம் புரிந்துகொண்டு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் முறையாக நடந்து கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை சுமுகமாக நடக்க வேண்டும், எதிர்க்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயக்குமார் அவர்களுடைய பேச்சு தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்ற கருத்தோடுதான், மாண்புமிகு அமைச்சர் சொன்ன கருத்தைக்கூட, அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலே, "வெளியிலே நடந்தது, இதைப் பற்றிப் பேசவேண்டிய அவசியமில்லை" என்று எடுத்துச் சொன்னேன். அதையும் மீறி அவர்கள் வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள். இப்படி எதிர்க்கட்சிகள் வெளிநடப்புச் செய்ததைப்பற்றி, கடந்த காலத்திலே முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள், என்ன சொல்லியிருக்கிறார் என்பதைச் சொல்வதன்மூலம், இது அவர்களுக்குப் பொருந்தும் என்ற காரணத்தினாலே, அதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

"மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது, கடந்த மூன்று



நாட்களாக நடைபெற்ற விவாதத்திற்கு, இப்போது என் பதிலுரையை அளிக்கத் துவங்குகிறேன். இன்றைக்கு எனக்கு எதிரே ஒரு விந்தையான காட்சியைக் காண்கின்றேன். எதிர்க்கட்சி வரிசைகள் எல்லாம் காலியாக இருக்கின்றன. இப்படி அவைக்கு வராமல் புறக்கணித்துவிட்டால், காலியாக எதிர்க்கட்சி வரிசைகளைப் பார்த்தால், நான் கவலை கொள்வேன் என்று எதிர்க்கட்சித் தலைவர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் கருதுவார்களேயானால், அவர்கள் ஏமாந்து போவார்கள்; ஏமாற்றம்தான் அடைவார்கள்" என்று சொல்லிவிட்டு, "இங்கே காலியாக இருக்கின்ற இந்த வரிசைகளைக் கண்டு நான் சிறிதும் கவலைப்படவில்லை" என்று சொன்னார். ஆனால், நாங்கள் கவலைப்படுகிறோம். "காலியான இந்த எதிர்க்கட்சி வரிசைகள் எதைக் காட்டுகின்றன? இரண்டு விஷயங்களை எல்லோருக்கும் காட்டுகின்றன. ஒன்று, நம்மை எதிர்ப்பதற்குத் தமிழ்நாட்டில் யாரும் இல்லை என்பதைக் காட்டுகின்றன." இப்போது அவர்கள் வெளியேறியிருப்பதைப் பார்க்கும்போது, அதுவேதான் எங்களுக்கும் பொருந்துமா என்று எங்களுக்குத் தெரியவில்லை. "இன்னொன்று, நம்மை எதிர்க்கும், திறமையோ, திராணியோ, துணிவோ, தகுதியோ யாருக்கும் இல்லை என்பதை இந்தக் காலியான வரிசைகள் காட்டுகின்றன" என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைத்தான் மீண்டும் எதிர்க்கட்சியிலே இருக்கின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்ததைச் சொல்வதற்கு ஒரு வாய்ப்பு. இதே அவையில், இதே இடத்தில் எங்களுடைய தலைவர் தோழர் ஹேமச்சந்திரன் அவர்கள் இருந்தார்கள். எதிர்த்தாற்போல், அவர்களெல்லாம் இருந்தார்கள். மேற்கு வங்கத்தைப் பற்றி இவர் சொன்னவுடனே, அவர்களுக்குக் கோபம் வந்து, "இவருக்குச் சொந்த புத்தியும் கிடையாது, சொல் புத்தியும் கிடையாது, இனிமேல் நான் பதில் சொல்லப்போவது கிடையாது" என்றெல்லாம்கூடப் பேசியிருக்கிறார்கள். மேற்கு வங்காளத்திலே வாக்குப் பெட்டிகளையெல்லாம் தூக்கிக்கொண்டு ஓடிவிடுகிறார்கள் என்றெல்லாம்கூடச் சொன்னார்கள். அது கடந்த ஆட்சி. இன்றைக்கு மேற்கு வங்க மாநிலத்திற்கு ஒரு குழுவை அனுப்புவோம், தரிசு நில விநியோகம் எப்படி நடந்திருக்கிறது என்று நாங்கள் பரிசீலிப்போம் என்று, (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு சொந்த கௌரவம், சொந்த

விருப்பு வெறுப்பு இல்லாமல், மக்களுக்காக நன்மை செய்வது என்ற உயரிய நோக்கத்தில், முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பதைப்போல, இதை ஓர் உதாரணமாகச் சொல்ல விரும்புகிறேன். வலிந்து வெளிநடப்புச் செய்வதைக் கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதைவிடப் பெரிய பெரிய வார்த்தைகளெல்லாம் வந்தபோது, சந்தித்திருக்கிற அவைதான் இந்த அவை. ஆகவே, இந்த வார்த்தைகள் இருக்க வேண்டும். மதி.மு.க. நண்பர்கள், அவர்கள் போய்விட்டார்களே என்பதற்காக இவர்களும் வலிந்து போகவேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்து, அவையில் இருந்து பணியாற்றுவதற்கு முன்வரவேண்டுமென்றும், அன்பு மாண்புமிகு உறுப்பினர் காங்கிரஸ் தலைவர் திரு. சுதர்சனம் அவர்கள் சொன்ன கோரிக்கையை நானும் வலியுறுத்துகிறேன். மானியத்தின்மீது பேசுவோம், மக்களுக்காகப் பேசுவோம் என்றுகூறி அமைகிறேன்.

*முற்பகல் 11—45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகள்மீது மிக முக்கியமான விவாதங்கள் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நாங்களெல்லாம் பேசவேண்டும் என்று பெயர் கொடுத்திருக்கிறோம். எங்களுடைய நேரம் இப்படி வீணாவதைக் கண்டு மிகுந்த வருத்தம் அடையவேண்டியிருக்கிறது.

குறிப்பாக, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்கள், அவர்களுடைய கருத்தை இங்கே பதிவு செய்வதில் நமக்கு ஆட்சேபனை இல்லை. அமைச்சர் பெருமக்கள் மறுப்புத் தெரிவிப்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ள மனமில்லாதவர்களாக இருக்கிறார்கள். ஆனால், இதிலேயிருக்கிற வருத்தமான செய்தி என்னவென்றால், முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், சென்ற தடவை இருந்த சட்டமன்ற உறுப்பினர்களே. அதிலே எண்ணிக்கையிலேயே ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். எல்லாவற்றையும் இங்கே இருந்து கவனித்துக் கொண்டிருந்தவர்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எதைப் பேச எழுந்தாலும், அதற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டது. அநேகமாக ஆக்கபூர்வமான கருத்துகள் சொன்னதைக்கூட அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டதுதான் கடந்த அ.தி.மு.க. ஆட்சி காலத்திலுள்ள வரலாறு. ஆனால், இன்றைக்கு ஒரு செய்தியைச் சொல்வதை அவர்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள்.



இந்த அவையிலே, மதிப்புமிக்க தலைவர்களையெல்லாம் மிக அவமானப்படுத்துகிற வகையிலே, இங்கே அமைச்சர் பெருமக்களை விட்டெல்லாம் பேசச்செய்த வரலாறுகள் நடைபெற்றன. அப்படிப்பட்ட வரலாறுகள் இல்லாமல், இப்பொழுது இங்கே ஜனநாயகபூர்வமாகப் பேசுவதற்கு எதிர்க்கட்சிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற முன்னாள் முதலமைச்சர் அவர்கள் இரண்டு மணி, ஆறு மணித்துளிகள் பேசியிருக்கிறார். 126 நிமிடங்கள் பேசியிருக்கிறார்கள். எனக்குத் தெரிந்தவரையிலும், சட்டசபையில் இவ்வளவு நேரம் பேசுவதற்கு அனுமதிக்கப்பட்டதா என்பது ஐயத்திற்குரிய ஒன்று. அநேகமாக இதுதான் புதிய வரலாறு. அந்த வரலாறை டாக்டர் கலைஞர் அவர்கள் அனுமதித்திருக்கிறார்கள் என்று சொல்லுகிறபொழுது, அ.தி.மு.க. உறுப்பினர்களுக்கு நான் பணிவாக வேண்டுகோள்விடுவது, என்ன பேசவருகிறோம் என்பதை அவர்கள் முன்கூட்டியே தயாரித்துக்கொண்டுதான் வருகிறார்கள், பயிற்சி கொடுக்கப்படுகிறது. தினமும் மாலை 5-00 மணியிலிருந்து 7-00 மணி வரையிலும் பயிற்சி கொடுப்பதாகக் கேள்விப்படுகிறேன். ஆனால், அந்தப் பயிற்சி இங்கே பலனளிக்காமல் போய்விடுகிறது என்பதுதான் ரொம்ப வருத்தமான விஷயமாக இருக்கிறது. ஆகவே, பேசவேண்டிய விஷயங்களை அவர்கள் முறைப்படுத்திக் கொண்டுவந்து இங்கே பதிவுசெய்யவேண்டும். தேவையில்லாத விஷயங்களைச் சொல்லுகிறபோது, பதில் சொல்லுகிறபோது, அவர்கள் ஏற்றுக்கொள்ளுகிற மனப்பக்குவத்திற்கு ஆளாகவேண்டும். பாவம், அவர்களுடைய தலைவரே அப்படி ஆளாகாதபொழுது, தொண்டர்கள் எப்படியிருப்பார்கள் என்பதற்கு ஓர் உதாரணம்தான், அவர்களுடைய வெளிநடப்பு.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஜெயக்குமார் அவர்கள், அவர்களுடைய ஆட்சியிலே, ஏதோ நீதிமன்றங்களெல்லாம் அதிகமாகக் கட்டியதாக ஒரு பட்டியலை இங்கே போட்டார். சென்னையிலேயிருந்து தெற்குப் பகுதிக்குப் போகும்பொழுது, முதலிலே இருப்பது தாம்பரம்தான். 19—6—2004 அன்று, அன்றைய தலைமை நீதிபதி திரு. சுபாஷன் ரெட்டி, அந்தப் பகுதியினுடைய அமைச்சர் வளர்மதி, இவர் சட்டத் துறை அமைச்சர், இவர்கள் மூன்றுபேரும் சேர்ந்து ஒரு விழா எடுத்தார்கள். ஒருங்கிணைந்த நீதிமன்றத்தை உருவாக்குகிறோம் என்று அடிக்கல் நாட்டினார்கள். 19—6—2004 அன்று அடிக்கல் நாட்டியதோடு நிற்கிறதேயொழிய, இன்றையவரை அங்கு நீதிமன்றத்தினுடைய கட்டடமே கட்டப்படவில்லை என்பதுதான்

உண்மை. எனவே, இப்படி அறிவிப்பார்கள். ஆனால், எந்தக் கட்டடமும் கட்டுவது இல்லை என்பதுதான் அந்த ஆட்சியினுடைய நோக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. வேதரத்தினம்.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி நிருவாகம், உள் துறை – சிறைச்சாலைகள், சட்டத் துறை, வருவாய்த் துறை, இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு ஆகிய மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கும், வேதாரண்யம் தொகுதியிலிருந்து தொடர்ந்து மூன்றாவது முறையாக வெற்றிபெற வாய்ப்பளித்த, மரியாதைக்குரிய தமிழினத்தின் ஒப்பற்ற தலைவர், நமது மரியாதைக்குரிய தமிழக முதல்வர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும், உள்ளாட்சித் துறை அமைச்சர் மரியாதைக்குரிய, எங்களுடைய தளபதி அவர்களுக்கும், மின் துறை அமைச்சர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், வேளாண் துறை அமைச்சர் அவர்களுக்கும் மற்றும் என்னைத் தேர்ந்தெடுத்த வேதாரண்யம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், இந்த வெற்றிக்காக அரும்பாடுபட்டு உழைத்த கூட்டணிக் கட்சிகளுடைய தலைவர்களுக்கும், செயல்வீரர்களுக்கும் என்னுடைய முதற்கண் வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

*"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு"*

சரியான திட்டங்கள்மூலம் வருவாய் வரும் வழியைக் கண்டறிந்து, வந்த வருவாயை நல்லமுறையில் காத்து, வருவாய்க்குத் தகுந்தபடி திட்டங்களைத் தீட்டி, மக்களை மேன்மையடையச் செய்யும் அரசே நல்ல அரசு, சிறந்த அரசு ஆகும். அந்தவகையிலே நமது தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசு இன்று எல்லாத் துறைகளிலுமே முத்திரையைப் பதிக்கின்றவகையிலே, ஒரு சிறப்பான நிர்வாகத்தை ஏற்படுத்தித் தந்திருக்கிறது. பொதுவாக வருவாய்த் துறை என்பது, மற்ற எல்லாத் துறைகளுக்கும் தாய்த் துறையாக, மற்ற எல்லாத் துறைகளுடைய வளர்ச்சிக்கும் முதுகெலும்பாக விளங்குகின்ற ஒரு துறை. அந்தத் துறையிலே பேசுவதற்கு வாய்ப்புக் கிடைத்தமைக்கு நான் உள்ளபடியே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



முற்பகல் 11–50

இந்தத் துறைமூலம் பல்வேறு திட்டங்கள், பல்வேறு சலுகைகள், அதேபோல ஏற்கெனவே இருந்த பல்வேறு திட்டங்களுக்கு உதவித் தொகைகள் அதிகப்படுத்தி கொடுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாகச் சொல்லப்போனால், முதியோர் உதவித் தொகையில் ஆரம்பித்து, உடல் ஊனமுற்றோர், ஆதரவற்ற விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், ஏழை விவசாயத் தொழிலாளர்கள், வணிகர்கள் வரை, அனைத்துத் தரப்பு மக்களும் இந்தத் துறைமூலம் பயன்பெறுகிறார்கள்.

1969–லே நமது மரியாதைக்குரிய தலைவர் கலைஞர் அவர்கள்தான் மனு நீதி முகாம் கொண்டு வந்தார்கள். மக்கள், அரசு அதிகாரிகளை சந்தித்த காலம்போய், அரசு அதிகாரிகளே நேரடியாக கிராமங்களுக்குச் சென்று அவர்களுடைய குறைகளைக் கேட்டு, அதனை நிவர்த்தி செய்கின்ற ஓர் அருமையான ஏற்பாட்டைச் செய்து தந்த காரணத்தினால்தான், இன்றைக்கு மக்கள் நம்பிக்கையோடு இருக்கிறார்கள். நம்முடைய தேவைகளைக் கேட்டுப் பெறுவதற்கு அரசாங்க அதிகாரிகள் என்றைக்கும் நமக்கு ஒத்துழைப்பாக இருக்கிறார்கள், நம்மை வந்து சந்திக்கிறார்கள். அதேபோல, மாவட்டங்களிலே திங்கட்கிழமைகளில், ஒவ்வொரு திங்கட்கிழமையும் மனு நீதி நாள் நிகழ்ச்சி என்று சொல்லி மனுக்களைப் பெற்று, அதன்மீது நடவடிக்கை எடுக்கின்ற ஓர் அருமையான திட்டத்தையும் தலைவர் கலைஞர் அவர்கள்தான் முதன்முதலாக ஏற்பாடு செய்திருந்தார்கள்.

அதேபோல தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்திலே கிட்டத்தட்ட ஒவ்வொரு விவசாயக் குடும்பத்திற்கும் 2 ஏக்கர் வீதம் தரிசு நிலங்கள் மேம்பாடு செய்யப்பட்டு திருப்பிக் கொடுப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, தலைவர் கலைஞர் அவர்கள்தான் 1971–லே வீட்டுமனைப் பட்டாவே இல்லாமல், மற்றவர்கள் இடத்திலே குடியிருந்தவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா கொடுத்து – அவர்களுக்கு, கிராமத்திலே ஒன்று சொல்வார்கள் – இரவல்குடி என்று சொல்வார்கள். அப்படி இரவல்குடியாக இருந்தவர்களுக்கெல்லாம், பட்டாவைக் கொடுத்து பாதுகாத்த தலைவர் கலைஞர் அவர்கள்தான் இன்றைக்கு 2 ஏக்கர் நிலம் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். கிராமத்திலே ஒன்றைச் சொல்வார்கள்; நிலம் இல்லாதவர்களைப் பார்த்துச் சொல்வார்கள், புறம்போக்கு பயலே என்பார்கள். இன்றைக்கு நிலைமை மாற்றப்படப் போகிறது. அதனால்தான், ஏற்கெனவே—நமது மரியாதைக்குரிய கம்யூனிஸ்ட் கட்சித்

தோழர்கள் எல்லாம் இங்கே இருக்கிறார்கள்— ஒரு காலத்திலே மரியாதைக்குரிய மறைந்த பெரியவர் திரு. மணலி கந்தசாமி போன்றவர்கள் எல்லாம், தலைவரிடம் சொன்னார்கள். நாங்கள் ஆண்டாண்டு காலமாகப் போராடி, இரத்தம் சிந்தி நாங்கள் சாதிக்க முடியாததை, நீங்கள் ஒரு சொட்டு பேனா மையிலே சாதித்துக் காட்டிவிட்டீர்கள் என்று பெருமைப்பட சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதனால்தான் இன்றைக்கு, தலைவர் கலைஞர் அவர்கள், ஏற்கெனவே இருந்த உபரி நிலங்களை மீட்டு, உச்ச வரம்புச் சட்டம் கொண்டு வந்து, உபரி நிலங்களையும் மீட்டு, அந்த நிலங்களையெல்லாம் ஏழை மக்களுக்குப் பிரித்துக் கொடுத்தார்கள். அந்தக் காரணத்தினால்தான், இப்போது தேர்தல் அறிக்கையிலே நாங்கள் 2 ஏக்கர் நிலம் தருவோம் என்று சொன்னவுடனேயே, மக்கள் அதை ஏற்றுக்கொண்டு, இன்றைக்கு வாக்களித்திருக்கிறார்கள். ஏனென்றால், ஏற்கெனவே கொடுத்த தலைவர்தான் இன்றைக்கு இந்த அறிவிப்பை வெளியிடுகிறார் என்று எண்ணி நமக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்திருக்கிறார்கள். அந்தவகையிலே இன்றைக்கு நிலங்கள் எல்லாம் மேம்பாடு செய்யப்பட்டு, அதை ஒப்படைக்கின்ற நிகழ்ச்சி தொடங்க இருக்கிறது என்ற நல்ல செய்தி உண்மையாகவே வரவேற்கத்தக்கது.

அடுத்தபடியாக, வருமானச் சான்று. இப்போது அரசாங்கத்தினுடைய உதவிகளைப் பெறுவதற்கு, திருமண உதவித் திட்டம் போன்ற உதவிகளைப் பெறுவதற்கு 12 ஆயிரம் ரூபாய்க்கு மேலே, வருமானம் இருக்கக்கூடாது என்று இருக்கிறது. ஆனால், இன்றைக்கு அரசாங்க அதிகாரிகள் எல்லாம், வருவாய்த் துறையிலே வட்டாட்சியர் எல்லாம் 18 ஆயிரம் ரூபாய்க்கு குறைந்து யாரும் வருமானச் சான்று கொடுப்பதில்லை. அதனால், இந்த உதவித் திட்டங்களைப் பெறுவதற்குரிய வாய்ப்பு இல்லாமல் போகிறது. ஆகவே, நீங்கள் அந்த வருமானத்தை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால், இந்தத் திட்டத்திற்குரிய குறைந்தபட்ச வருமானத்தை அதிகப்படுத்திக் கொடுத்தால்தான், இதுபோன்ற திட்டங்களால் முழுமையாகப் பயனடைய முடியும் என்று நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, புறம்போக்கு நிலங்களுக்குப் பட்டா, 50 ஆண்டுகளாக, 100 ஆண்டுகளாக, இரண்டு—மூன்று தலைமுறைகளாக, புறம்போக்கு இடங்கள், மேய்க்கால் புறம்போக்கு, அதேபோல, கோயில் இடங்கள்,



மயானப் புறம்போக்கு, இதுமாதிரி இடங்களில் தொடர்ந்து குடியிருந்து வருகிறார்கள். அவர்களுக்குப் பட்டா இல்லை. அதேபோல மின் இணைப்பு கிடைப்பதில்லை. கோயில் இடங்களிலே மின் இணைப்பு கேட்டோம் என்றால், அந்தக் கிராம கோயில் நிர்வாக அலுவலர்களுடைய ஒப்புதல் பெற வேண்டும். அவர்கள் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். ஆக, பல கிராமங்களிலே இதுமாதிரி பிரச்சினை இருக்கிறது. அதிலும் வேதாரண்யம் பகுதி, அனைத்துமே கிட்டத்தட்ட கோயில் நிலங்கள் நிரம்ப உள்ள பகுதி.

இப்போது நம்முடைய தலைவர் அவர்கள்கூட, தொலைக்காட்சிப் பெட்டி தருவதாக அறிவித்திருக்கிறார்கள். ஆக, இந்தத் தொலைக்காட்சிப் பெட்டியை அங்கே இருக்கிற மக்கள் வாங்கிப் பார்க்க வேண்டுமென்றால், மின்சாரம் தேவை. இந்த மின்சாரம் இல்லாத நிலையிலே, அது சாத்தியப்படாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதனால், உடனடியாக, அந்த மேய்க்கால் புறம்போக்கு, மயானப் புறம்போக்கு, கோயில் நிலங்களில் இருக்கின்ற வீடுகளுக்கு பட்டா கொடுப்பதற்கு, இதுபோன்ற மின்சார வசதி செய்து கொடுப்பதற்குரிய வழிவகைகளைச் செய்ய வேண்டும். அதிலும் குறிப்பாக மயானப் புறம்போக்கு என்று இருக்கிறது. இரண்டு மயானம் இருக்கும். அதிகபட்சம் போனால் 10 சென்ட் போதும். 60 ஏக்கர் வரைக்கும் சில இடங்களிலே இருக்கிறது. மயானப் புறம்போககு 60 ஏக்கர், 70 ஏக்கர் என்று பல்வேறு இடங்களிலே பெரிய அளவிலே இருக்கிறது. ஆகவே, அதையெல்லாம் வகைப்படுத்தி, சாகுபடி செய்தவர்களிடமே திருப்பிக் கொடுக்க வேண்டும் அல்லது ஏதாவது ஒரு நிபந்தனையின் பேரிலாவது அவர்களுக்குப் பட்டா கொடுக்கவேண்டும். மீண்டும் எடுத்துக் கொள்வதற்கு வசதியாக ஒரு நிபந்தனையின் பேரிலாவது அவர்களுக்குப் பட்டா கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11—55

அடுத்தது, வேதாரண்யத்திலே கோயில் நிலங்கள்தான் எல்லாமுமே. கிட்டத்தட்ட 12 ஆயிரம் ஏக்கர். ஆசியாவிலேயே பெரிய கோயில் அந்தக் கோயில்தான். நிலம் உள்ள வசதியான கோயில் அந்தக் கோயில்தான்; வேதாரண்யேஸ்வரர் கோயில். அந்தக் கோயில் மனைகளில், டவுனிலேயே 600 பேர் குடியிருந்தார்கள். அதற்கு நீதிமன்றத்திற்குப் போய், தலைவர் கலைஞருடைய ஆட்சியிலே, 1971—லே 600 பேருக்கும் பட்டா கொடுத்தார்கள். திருப்பி அந்த இனாம்தாரர்கள் அன்றைக்கு என்ன செய்தார்கள் என்றால், அவர்கள் Appeal—க்குப் போனார்கள். அவை வேதாரண்யம் திருக்கோயிலுக்குச்

சொந்தமானது என்று சொல்லி, Appeal–க்குப் போனார்கள். Appeal–க்குப் போனவுடன், பட்டா கொடுத்தது தப்பு, மேலே இருக்கிற வீடு மட்டும்தான் உங்களுக்குச் சொந்தம் என்று சொல்லிவிட்டார்கள். அதிலே கொஞ்சம் பேர், 120 பேர் Appeal–க்குப் போனார்கள். மற்றவர்கள் வசதி இல்லாமல், அந்த அளவுக்கு ஒரு விழிப்புணர்ச்சி இல்லாத காரணத்தாலே Appeal–க்குப் போகவில்லை. Appeal –க்குப் போனவர்களுக்கெல்லாம் பட்டா கொடுத்தார்கள். பாக்கி 480 பேர்களுக்கு பட்டா வராத ஒரு நிலைமை இருக்கிறது. அவர்களுக்கெல்லாம் பட்டா கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பெரிய கிராமங்கள் சேர்ந்து ஒரு வருவாய்க் கிராமமாக உள்ளது. இரண்டு ஊராட்சிகள், ஒவ்வொரு ஊராட்சியிலும் 6,000 பேர் உள்ளனர். குறிப்பாகச், சொல்லப்போனால், செட்டிகுளம்–கரியாபட்டினம், வண்டுவாஞ்சேரி–அண்ணாபேட்டை இந்த கிராமங்களில், ஒவ்வொரு கிராமத்திலும் மக்கள் தொகை 6,000, 7,000 என்று இருக்கிறது. ஆனால், இவை இரண்டிற்கும் சேர்த்து ஒரே ஒரு V.A.O. தான் இருக்கிறார். ஒரே ஒரு வருவாய்க் கிராமம்தான் இருக்கிறது. ஆகவே, இதுபோன்ற பெரிய வருவாய்க் கிராமங்களைப் பிரித்து, தனித் தனி வருவாய்க் கிராமங்களாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது, இயற்கைப் பேரிடர். பொதுவாக என்னுடைய நாகப்பட்டினம் மாவட்டம், நீண்ட கடற்கரையை ஒட்டிய மாவட்டம். அந்த மாவட்டத்திலே மழை பெய்தாலும் சரி, புயல் அடித்தாலும் சரி, வெள்ளம் வந்தாலும் சரி, சுனாமி தாக்கினாலும் சரி, பாதிக்கப்படுவது நாங்கள்தான். அதனாலே அந்தப் பகுதிகளிலே பாதிக்கப்படக்கூடிய கிராமங்களை எல்லாம் கண்டறிந்து, அங்கே புயல் பாதுகாப்புக் கட்டடங்களைக் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சுனாமி பாதித்த பகுதிகளிலே இப்போது வீடுகள் கட்டுவதற்கு ஏராளமான நிதி கிடைத்திருக்கிறது. சுனாமி பாதித்த பகுதிகள், எப்போதுமே இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்படக்கூடிய பகுதிகள் —அந்தப் பகுதிகளுக்கெல்லாம் ஓர் அளவுகோல் வைத்திருக்கிறார்கள். ஒரு கிலோமீட்டர், ஒன்றரை கிலோமீட்டர், இரண்டு கிலோமீட்டர் என்று; அந்த அளவுகோல் இல்லாமல்— அனைத்துக் கிராமங்களுக்கும், கடற்கரையை ஒட்டிய அனைத்துக் கிராமங்களுக்கும், சுனாமி பாதித்த அனைத்துக் கிராமங்களுக்கும்



உடனடியாக concrete வீடுகள் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது, சுனாமி பாதிக்கிற சமயத்திலே, அதேபோல இயற்கைப் பேரிடர் வருகிற சமயத்திலே, எங்களுக்கெல்லாம் கைகொடுப்பது திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி, திருவாரூர் பகுதிகள்தான். இங்கே இருந்து 80 கிலோமீட்டர், 90 கிலோமீட்டர்; எல்லோரும் மூட்டை முடிச்சைக் கட்டிக்கொண்டு ஓடிவிடுவார்கள். அப்போது பெரிய அளவிலே ஒரு போக்குவரத்து நெருக்கடி ஏற்படுகிறது. ஆகவே, சுனாமி area–வில் ஏராளமான சாலைகளை மேம்பாடு செய்ய வேண்டும். பாலங்கள் கட்ட வேண்டும். அதுபோல பல்வேறு அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தால்தான் மக்கள் பாதுகாப்பாக உடனடியாகப் போய்ச் சேருவதற்கான வாய்ப்பு இருக்கும்.

அடுத்து, சுனாமியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, விவசாய நிவாரணம் கொடுக்கிறார்கள். அதை இடுபொருட்களாகக் கொடுக்கிறார்கள். அதிலே நிறைய முறைகேடுகள் நடப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதனாலே அதைப் பணமாகக் கொடுக்கவேண்டும். அது அந்தப் பகுதி மக்களினுடைய நீண்டநாள் கோரிக்கை.

அதேபோல, உப்பளத் தொழிலாளர்கள் பிரச்சினை. ஏராளமான உப்பளங்கள் எல்லாம் சுனாமியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு நிவாரணம் கேட்கிறார்கள். அந்த உப்பளத் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களிலே கடன் வாங்கியிருக்கிறார்கள். கடனைத் திருப்பிக் கட்ட முடியாத ஒரு நிலைமை உள்ளது. ஆகவே, அந்த உப்பளத் தொழிலாளர்கள், அந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலே பெற்றிருக்கின்ற கடனை நமது அரசு சுனாமி நிதியின்மூலமாக ஈடுசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது, சுனாமி பாதித்த 22 மாவட்டங்கள். அந்த 22 மாவட்டங்களிலும் நில வரியை இரத்துச் செய்யவேண்டுமென்று ஒரு கோரிக்கை அங்கே இருக்கிறது. ஆகவே, சுனாமி பாதித்த அந்த 22 மாவட்டங்களிலும் நில வரியை இரத்துச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சுனாமி நிவாரணம்–பெரிய ஊழல். அது ஒரு பெரிய வரலாறு. அதற்கு ஒரு விசாரணைக் கமிஷன் வைக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், சுனாமி நிவாரணத்தைப் பொறுத்தவரைக்கும், அப்போதிருந்த அமைச்சர்கள் எல்லாம்

வந்திருந்தார்கள், செய்தார்கள். அதிலெல்லாம் ஒன்றும் தப்பில்லை. ஆனால், சுனாமி நிவாரணம் வழங்கியதில் என்ன நடந்தது என்றால், அண்ணா தி.மு.க. கிளைக் கழகச் செயலாளரிலிருந்து, ஒன்றியச் செயலாளரிலிருந்து, மாவட்டச் செயலாளரிலிருந்து அங்கே தேர்தலில் போட்டியிட விரும்பிக் கொண்டிருந்த அத்தனை பேரும்—யார், யார் பட்டியல் கொடுத்தார்களோ, அந்தப் பட்டியலில் உள்ளவர்களுக்கெல்லாம் நிவாரணம் கொடுத்தாகிவிட்டது. இறந்துபோனவர்களையும் பட்டியலில் cover up பண்ணினார்கள். ஆக, பெருமளவு அதிலே ஊழல் நடந்திருக்கிறது. நிவாரணத்தில் மட்டும் ஊழல் என்று அல்ல, நிலம் எடுத்ததிலும் ஏகப்பட்ட ஊழல். நிலச் சொந்தக்காரர்களிடம் ஏராளமான கமிஷன் வாங்கிவிட்டார்கள். தொண்டு நிறுவனங்களுக்கு நிலம் ஒதுக்கீடு பண்ணியது, இடம் ஒதுக்கீடு பண்ணியது, வீடுகள் ஒதுக்கீடு பண்ணியது, இவற்றில் ஏகப்பட்ட ஊழல் நடைபெற்றிருக்கிறது. (குறுக்கீடு)அதற்கு ஒன்றும் விளக்கமே வேண்டியதில்லை. (குறுக்கீடு) ஏனென்றால், அந்த மாவட்ட ஆட்சித் தலைவரே (குறுக்கீடு) அந்த மாவட்ட ஆட்சித் தலைவரே, தவறு நடந்திருக்கிறது என்று ஒத்துக்கொண்டுவிட்டார். ஆகவே, அதிலே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இருங்கள், வேதரத்தினம். அவர் என்ன சொல்கிறார் என்று கேட்போம். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

*நண்பகல் 12–00*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தவறான தகவலைப் பதிவு செய்துகொண்டிருக்கின்றார். நிவாரணங்கள் எல்லாம் வரையறுக்கப்படுவது, பட்டியலிடுவது எல்லாமே மாவட்ட ஆட்சித் தலைவரினுடைய முழு அதிகாரத்தின்கீழ் வருகிறது. அவர் மாவட்ட அளவில் மற்றத் துறைகளுடைய அதிகாரிகளையும் குழுவில் சேர்த்துக் கொண்டு, அவர்தான் நிவாரணப் பொருள்களை வழங்குகின்ற அதிகாரம் படைத்தவர். மற்றும் மறுவாழ்வுக்குத் தேவைப்படும் இடங்களையும் தேர்வு செய்கின்ற முழுப் பொறுப்பும் மாவட்ட ஆட்சித் தலைவருடையதுதான். ஆனால், மாவட்ட ஆட்சித் தலைவரே ஒத்துக்கொண்டிருக்கின்றார் என்று மாண்புமிகு உறுப்பினர் பேசுவது எந்தவிதத்தில் பொருத்தமான கருத்தாக இருக்கும் என்பதனை நான் அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் மாவட்ட ஆட்சித் தலைவரைத்தான் குறை சொல்கிறார். வேறு யாரையும் சொல்லவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் ஒத்துக்கொண்டிருக்கிறார் என்றுதான் சொல்கிறார்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாவட்ட ஆட்சித் தலைவரைத்தான் சொல்கிறார். மாவட்ட ஆட்சித் தலைவர் (குறுக்கீடு) இதுமாதிரி குறைகள் இருக்கின்றன என்று சொல்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதுதான், அவரும் அப்படியேதான் சொல்கிறார்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாவட்ட ஆட்சித் தலைவர்தான் அதற்கு முழுப் பொறுப்பு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதுதான் சொல்கிறார், அந்த முழுப் பொறுப்புக்குரியவரே ஒத்துக்கொண்டிருப்பதாகத்தான் சொல்கிறார். வேறு எந்தக் கட்சியைப் பற்றியும் சொல்லவில்லை.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இல்லை, இல்லை. அதிலே ஒரு தனிப்பட்ட கட்சியின் இயக்கத்தைச் சார்ந்தவர்களுக்குத்தான் சலுகைகள் காட்டப்பட்டிருக்கின்றன என்பது நியாயம் இல்லாத வாதம். ஏனென்று சொன்னால், அவர்கூட வந்திருந்தார். நாங்கள் ஒரு மாதம் முழு நேரமும் அங்கே தங்கி இருந்து பாதிக்கப்பட்ட நாகப்பட்டினத்தில் மட்டும் கிட்டத்தட்ட 3 ஆயிரம் சடலங்களை 4 நாட்களுக்கு எடுக்கும் ஒரு சூழ்நிலை இருந்தது. அப்பொழுது மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவு போட்டு, மற்ற மாவட்டங்களில் இருக்கிற poclain–களை எல்லாம், கிட்டத்தட்ட 100 poclain-களை அங்கே அனுப்பி வைத்தார்கள். அந்த அளவிற்கு அங்கே நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டு, எதையும் எதிர்பாராமல் அந்த நடவடிக்கை நடந்தது. அதற்கு ஒரு தவறான, தப்பான – ஏனென்றால், உலக நாடுகள் எல்லாம் பாராட்டுகின்ற ஒரு பாராட்டுதலைப் பெற்றதனால் இவர்கள் ஒரு தவறான பதிவினை இங்கே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஆனால், சுனாமி மாவட்டத்திலிருந்து வந்த வேதரத்தினம், தென்றலாக, அழகாகப் பேசுகிறார். அவருக்கே இடையூறு வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அந்த சுனாமி நிதி வழங்கியதிலே தவறுகள் நடக்கவில்லை, அதை அதிகாரிகள்தான் செய்தார்கள் என்று சொன்னார்கள். யார் யார் தவறு செய்தார்களோ, அந்த அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரே நடவடிக்கை எடுத்திருக்கிறார். அதிலே குறிப்பாக நாகப்பட்டினம் வட்டம், கீச்சாங்குப்பம் கிராமத்திலே, சுனாமியால் இறந்தவர்களுக்கான நிவாரணத்தைப்பெற பொய்யான தகவல் மற்றும் ஆவணங்கள் அளித்து, 48 இலட்சம் ரூபாய் வரை மோசடிகள் செய்துள்ளதாகவும், அதன்பேரில் சென்னை உயர் நீதிமன்றத்தில் திரு. காத்தலிங்கம் என்பவரால் தொடரப்பட்ட வ்ழக்கில், நான்கு வார காலத்திற்குள் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென தீர்ப்புரை வழங்கப்பட்டதாக 28-6-2006 ஆம் நாள் நாளிதழிலே வெளியான தகவலினுடைய அடிப்படையிலே, இப்பொழுது விசாரணை நடந்துகொண்டிருக்கிறது. இறந்தவர்கள் பட்டியலைத் தவறாகக் கொடுத்து, பணம் வாங்கி இருக்கிறார்கள் என்பதற்காக கோட்டாட்சியர் விசாரணை செய்து கொண்டிருக்கிறார்கள்; அந்த அதிகாரிகள் மீதெல்லாம் நடவடிக்கை எடுக்கப்போகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வேதரத்தினம். (குறுக்கீடு) உட்காருங்கள், திரு. செங்கோட்டையன், பேசி முடியுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதிகாரிகள் தவறு செய்தால் அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பது பற்றி எங்களுக்குக் கவலை இல்லை. ஆனால், அண்ணா தி.மு.க.–விற்குச் சாதகமாகவே, இதிலே பல்வேறு சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்வதை மட்டும்தான் நாங்கள் கண்டிக்கிறோமேதவிர, இதிலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களும் சலுகை பெற்றிருக்கிறார்கள், காங்கிரஸ்காரர்களும் பெற்றிருக்கிறார்கள், எல்லாக் கட்சிக்காரர்களும் பெற்றிருக்கிறார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** அன்றைக்கு நிவாரணம் வழங்குகின்ற வேளையிலே, ஆளுங்கட்சியினுடைய தலையீடு இருந்தது என்பது எல்லா பத்திரிகைகளிலும் செய்தியாக வந்திருக்கிறது. எல்லாம் இருக்கிறது.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர், அடுத்த subject–க்கு போங்கள். (குறுக்கீடு)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் சரியாக விசாரணை செய்யவில்லை என்று ... (குறுக்கீடு) பொதுவாகவே முழு நிவாரணம் கொடுக்கும்போது, நான் அந்தப் பகுதியிலே இருந்தேன். எல்லாக் குப்பங்களிலேயும் குப்பங்களினுடைய அமைப்பு இருக்கின்றது. அங்கே தலைவர் இருக்கின்றார்கள், நாட்டாமை இருக்கின்றார்கள்., அந்த மிகப் பெரிய குப்பத்துக்கு அவர்கள் ஓர் அமைப்பு வைத்திருக்கிறார்கள். அந்த நாட்டாமையும், தலைவரும் என்ன பட்டியல் கொடுக்கின்றார்களோ, அவர்களுக்குதான், அந்த நிவாரணம் வழங்கப்பட்டது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வேதரத்தினம், அடுத்த subject–க்கு போங்கள்.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிற்கிறார்கள். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள், குப்பத்திலே இருக்கின்ற நாட்டாமை மற்றும் பெருந்தனக்காரர்கள் அவர்கள் கொடுத்த பட்டியலை வைத்துதான் பணம் கொடுத்தோம் என்று சொன்னார்கள். அது எப்படிச் சரியாக இருக்கும்? அவர்கள் கொடுக்கலாம், அதிலே தவறு இல்லை. ஆனால், அவர்கள் கொடுக்கின்ற பட்டியல் சரியானதுதானா என்று நம்முடைய துறை பார்த்திருக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, அப்படி பெற்ற பட்டியலிலே, உண்மைக்கு மாறான தகவலைத் தந்து, 40 இலட்சம் ரூபாய்க்கு மேலே மோசடி செய்யப்பட்டிருக்கிறது, ஊழல் நடந்திருக்கிறது என்ற விவரத்தைத்தான் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு)

*பிற்பகல் 12–05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இவர் நிற்கிறாரே! (குறுக்கீடு) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், அமைச்சர் நிற்கிறார்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அந்தப் பட்டியலை மாவட்ட ஆட்சித் தலைவரிடம்தான் அந்தக் குப்பத்தினுடைய தலைவர் கொடுத்திருக்கின்றார். அந்தப் பட்டியலைச் சரிபார்க்க வேண்டியது மாவட்ட ஆட்சித் தலைவருடைய பொறுப்பு. அவர்தான் அந்தப் பட்டியலை சரிபார்த்துக் கொடுத்திருக்க வேண்டும். அதற்குவந்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்கள் எப்படிப் பொறுப்பாவார்கள்? இவர்கள்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இருங்கள், அமைச்சர் நிற்கிறார் அல்லவா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு எதிர்க் கட்சியினுடைய துணைத் தலைவருக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்; அதிலே அதிகமாக, தவறாகப் பெயரைச் சொல்லி பணம் வாங்கி இருப்பது அ.தி.மு.க.விலே இருப்பவர்கள் என்பதுதான் மாண்புமிகு அமைச்சருடைய குற்றச்சாட்டு.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** வாதத்திற்கு வாதம், எதிர்வாதம் என்று தவறாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், எது இருந்தாலும், மாண்புமிகு அமைச்சர் என்ற பொறுப்பிலே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. ஒவ்வொரு sentence—க்கும் நீங்கள்தான் எழுந்து, எழுந்து counter பண்ணுகிறீர்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இல்லை, இல்லை. நியாயமாக வாதங்கள் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். ஏதாவது, தவறுகள் நடந்திருந்தால், அது ஒட்டுமொத்தமாக ஒருசாராரையே சாரும் என்று சொல்வது எந்தவிதத்திலும் நியாயம் இடையாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர், அடுத்த subject-க்குப் போங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களிடம் கேட்பது, சென்னையிலே சுனாமி நிதி முறையாக வழங்கப்பட்டதா? எல்லாம், உங்களுக்கு வேண்டியவர்களுக்கு, விருப்பப்பட்டவர்களுக்குத்தான் கொடுத்தார்கள். அதை நீங்கள் இல்லை என்று மறுக்க முடியுமா? எல்லாம் உங்களுக்குத் தெரியும். எத்தனை இலட்சம் பேருக்குக் கொடுத்தார்கள் என்று கேளுங்கள். (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. இந்தச் சபையிலே இந்தமாதிரி சுனாமி அடிப்பதை நாங்கள் விரும்பவில்லை. வேறு subject-க்குப் போங்கள். (குறுக்கீடு) உறுப்பினர், வேறு subject-க்குப் போங்கள்.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே-(குறுக்கீடுகள்) ஒரு நிமிடம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொன்னார்கள்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் மட்டும் பேசட்டும்.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** ஒரு நிமிடம், ஒரு நிமிடம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் முடிக்கிறார். (குறுக்கீடு) நான் கூப்பிடுகிறேன். (குறுக்கீடு) முடித்துவிடட்டும், கூப்பிடுகிறேன். (குறுக்கீடு) முடித்துவிடட்டும், கூப்பிடுகிறேன்.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்வது உண்மைதான். அவர் இருந்தார், நான் அங்கேயே குடியிருக்கிறேன். அடுத்தது, அவர், குப்பத்திலே மட்டும் நிவாரணம் கொடுக்கவில்லை, குப்பத்துத் தலைவர்கள், அவர்களுடைய பொறுப்பாளர்களை வைத்துத்தான், அவர்கள் கொடுத்த லிஸ்ட் அடிப்படையில்தான் கொடுத்ததாகச் சொல்கிறார்கள். மற்ற இடங்களிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது, அதுதான் பிரச்சினையே. ஆக, அதற்கு ஒரு விசாரணை கமிஷன் வைத்தால்தான் உண்மை புரியும். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே சொல்லிக்கொள்ளலாம், அதிலே ஒன்றும் தப்பு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்த விஷயத்திற்குப் போங்கள்.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** அடுத்தது, சிறைச்சாலைகள். சிறைச்சாலைகளைப் பொறுத்தவரையில், வாரத்திற்கு ஒருநாள் அசைவ உணவு வழங்க வேண்டுமென்று ஒரு கோரிக்கை இருக்கிறது. அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது, சிறைச்சாலையிலே இருக்கும் பெற்றோர்களைப் பார்ப்பதற்கு மாணவ, மாணவிகள் செல்லும்போது, அந்த சனி, ஞாயிறு இரண்டு நாட்களுக்கு- (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முடித்துவிடட்டும், முடித்துவிடட்டும், கூப்பிடுகிறேன். திரு. கலைராஜன், கூப்பிடுகிறேன். (குறுக்கீடு) திரு. கலைராஜன், நான் கூப்பிடுகிறேன். (குறுக்கீடு) அவர் பேச்சை முடிக்கப் போகிறார், கூப்பிடுகிறேன்.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** அதிலே, பள்ளி நாட்களில் போவதற்கு சிரமமாக இருக்கிறது. பள்ளி நாட்களில் அந்தப் பெற்றோரைப் போய்ப் பார்ப்பதற்கு பெரிய சிரமமாக இருக்கிறது. பள்ளிக்கு leave போட வேண்டியதாக இருக்கிறது. ஆகவே, சனி, ஞாயிறு இரண்டு தினங்களிலே, அவர்களுக்குச் சிறப்பு அனுமதி கொடுப்பதற்கு வாய்ப்பு வசதி இருக்கிறதா என்பதைத் தாங்கள் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, ஆயுள் தண்டனை பெற்ற கைதிகளுக்குத் திறந்தவெளிச் சிறைச்சாலைகள் இரண்டு இருக்கின்றன, சிங்காநல்லூரிலும், சேலத்திலேயும். இதிலே விவசாயப் பணிகளை, நவீன விவசாயத்தைக் கற்றுக்கொள்வதற்கு, அந்த ஆயுள் தண்டனைக் கைதிகளுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கின்றது. மற்ற மத்தியச் சிறைகளிலும், அதுபோன்ற வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தது, சிறைகளில் மருத்துவர்கள், மருந்தாளுநர்கள், செவிலியர்கள் எல்லாம்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் முடித்துவிட வேண்டும்.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** இப்போதுதான் ஆரம்பித்திருக்கிறேன். இடையிலே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் 7, 8 பேர் பேச வேண்டியிருக்கிறது. அமைச்சர் இறுதியில் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** செவிலியர்கள் எல்லாம் அயற்பணியில் நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள் உடனடியாக transfer வாங்கிக்கொண்டு போய்விடுகிறார்கள். ஆகவே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** ஒரே ஒரு கருத்துதான் பாக்கி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, சொல்லிவிடுங்கள். (குறுக்கீடு) அவர் Senior Member



**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** ஆகவே, அவர்களை எல்லாம் சிறைத் துறைமூலமே அந்தப் பணியிடங்களுக்கு நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். யோகாசனம், தியானம் எல்லாம் ஏற்கெனவே டெல்லியிலே இருக்கிற சிறைச்சாலைகளிலே மிகச் சிறப்பாக கற்றுக் கொடுத்து, அதன்மூலம் அந்தக் கைதிகள் எல்லாம் திருந்துவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அதைப்போல, ஆயுள் தண்டனைக் கைதிகள், 10 ஆண்டுகள், 15 ஆண்டுகளாகச் சிறையில் வாடுகிறார்கள். அவர்களை, பொதுவாக நம்முடைய பேரறிஞர் பெருந்தகை அண்ணா பிறந்த நாள், இதுபோன்ற தினங்களிலே விடுதலை செய்வது வழக்கம். அதுபோல இந்த ஆண்டு நீங்கள் அதைப் பரிசீலித்து, 10 ஆண்டுகளுக்கு மேல் சிறையில் வாடுகின்ற அந்தக் கைதிகளை எல்லாம் விடுதலை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தது, நீதிமன்றத்தைப் பொறுத்தவரைக்கும், கும்பகோணத்திலே நீதிமன்றக் கட்டடங்கள்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** இரண்டே நிமிடம். இரண்டே நிமிடத்திலே முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இரண்டு நிமிடமா? நீங்கள் தென்றலாகப் பேசுவீர்கள் என்று பார்த்தால், திருப்பி சுனாமியாக அடிக்கிறீர்கள்?

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** நீதிமன்றக் கட்டடங்கள் எல்லாம் — உரிமையியல் நீதிமன்றமும், குற்றவியல் நீதிமன்றமும் தனித்தனியே உள்ளது. பொது மக்கள் இதனால் ரொம்பக் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, ஒருங்கிணைந்த நீதிமன்றம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல சிலபேர்..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேதரத்தினம் அவர்கள் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர். இன்னும் நிறையப் பேர் பேச வேண்டும். நேரத்தினுடைய அருமை கருதி, அவர் பேச வேண்டும் என்று நினைப்பதை எழுதி சம்பந்தப்பட்ட அமைச்சரிடத்திலே கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர், நன்றி சொல்லிவிடுங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி முடித்துவிடட்டும்.

*பிற்பகல் 12–10*

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிலபேர், அதாவது, ஏழை எளிய மக்கள் சட்டத்தை ஒழுங்காகக் கடைபிடிக்க நினைக்கிறார்கள். ஆனால், பணக்காரன், ஓர் அந்தஸ்திலே, அதிகாரத்திலே உள்ளவர்கள், சட்டத்தின் சந்து பொந்துகளில் புகுந்து காலதாமதம் செய்வதற்கு நினைக்கிற காரியமெல்லாம் இங்கே நடைபெறுகிறது. (மணியடிக்கப்பெற்றது) விசாரணை, சம்மன் என்று வந்தால்தான், முதுகு வலி, இடுப்பு வலி, மூட்டு வலி என்று இப்படியெல்லாம் வருகிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்துக்கொள்ளுங்கள். திரு. ராம. சுப்புராம். (குறுக்கீடு) No Point of Order. திரு. கலைராஜன், நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். இது அவருடைய கன்னிப் பேச்சு.

***திரு. ராம. சுப்புராம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்ச் சமுதாயக் காவலர், தமிழ்த் தாயின் தவப் புதல்வர்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கலைராஜன், நான் உங்களைக் கூப்பிடுகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, நான் கூப்பிடுகிறேன்.

**திரு. ராம. சுப்புராம்:** முத்தமிழ் அறிஞர் அய்யா, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களே, இளைய சமுதாயத்தின் நம்பிக்கை நட்சத்திரம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, சட்டசபை காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் மாண்புமிகு திரு. சுதர்சனம் அவர்களே, சட்டப் பேரவை உறுப்பினராக உள்ள சான்றோர் பெருமக்களே, உங்கள் அனைவருக்கும் முத்தான முதல் வணக்கத்தைத் தெரிவித்து, எனது உரையைத் துவங்குகின்றேன். காலத்தின் அருமை கருதி, நான் உரையாக ஆற்றாமல், என்னுடைய உரையை வேகமாக வாசித்துவிடுகின்றேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் என்னைப் பொறுத்தருள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வாய்ப்பளித்த அகில இந்திய காங்கிரஸ் கட்சியின்



ஒப்பற்ற தலைவர் அன்னை சோனியா காந்தி அவர்களுக்கு பணிவான வணக்கத்தை இந்த மாமன்றத்தின்மூலமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நான் எழுகின்றபோதும், எழுந்து தொழுகின்றபோதும், எண்ணுகின்ற மந்திரம், எழுதுகின்ற மந்திரம், சிந்தனைச் சிற்பி சிதம்பரம் என்பதே. காங்கிரஸ் கட்சியில் சாதாரணத் தொண்டனாக இருந்த எனக்கு ஓர் அரசியல் முகவரி தந்தவர்; ஆசியாவின் சிறந்த நிதி அமைச்சர் என்ற விருதையும், புகழையும் பெற்றவர்; பொருளாதார மேதை; சட்ட வல்லுநர்; சிவகங்கை மண்ணின் மைந்தர்; திருமயம் தொகுதி வாக்காளப் பெருமக்களின் ஆதரவோடு நான் இந்த மாமன்றத்திற்கு வருவதற்குத் துணை நின்றவர்; என்னுடைய நெஞ்சம் நிறைந்த அன்புத் தலைவர், இந்தியப் பேரரசின் நிதி அமைச்சர் மாண்புமிகு திரு. ப. சிதம்பரம் அவர்களுக்கு என் நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

என்னுடைய வெற்றிக்காகத் திருமயம் தொகுதிக்கு வந்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரித்த தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் மரியாதைக்குரிய திரு. கிருஷ்ணசாமி, Ex. M.P. அவர்களுக்கும், மத்திய திட்ட அமலாக்கத் துறை இணை அமைச்சர், மக்கள் தளபதி மாண்புமிகு திரு. ஜி.கே. வாசன் அவர்களுக்கும் என் உளமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், கால்பந்து, கபடி போன்ற விளையாட்டுகளில் கடைசி 5 மணித்துளிகள் எந்த அளவுக்கு வேகமும், விறுவிறுப்பும் இருக்குமோ அந்த அளவுக்கு ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சியினர் வேகத்தோடும், விவேகத்தோடும் தேர்தல் பணியாற்றிட ஆக்கமும், ஊக்கமும் தந்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் போற்றுதலுக்கும், வணக்கத்திற்கும் உரிய திரு. கார்த்தி ப. சிதம்பரம் அவர்களுக்கு என் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்தகால அ.தி.மு.க. ஆட்சியின் அமைச்சர் ஒருவர், அதற்கு முந்தைய அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அமைச்சராக இருந்த ஒருவர், இந்த இரண்டு அமைச்சர்களையும் வென்று, இந்த மாமன்றத்திற்கு நான் வருவதற்கு பெரிதும் உறுதுணையாக இருந்த எனது திருமயம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், மேலும் என் வெற்றிக்காக உழைத்த திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய தேசிய காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் ஆகிய கட்சிகளின் தலைவர்களுக்கும், நிர்வாகிகளுக்கும், செயல் வீரர்களுக்கும், ஒத்துழைப்பு நல்கிய அரசு அலுவலர்கள், ஆசிரியப் பெருமக்கள், விவசாயப்

பெருமக்கள், வியாபாரப் பெருமக்கள், தொழிலாளர் நண்பர்கள், பத்திரிகை நண்பர்கள் ஆகிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியினை இந்த மாமன்றத்தின்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக நிதி அமைச்சர் பேராசிரியர் அவர்கள் இந்த அவையின்மூலம் தமிழக மக்களுக்கு அளித்த நிதிநிலை அறிக்கையின் பயன் இதோ:

"அஞ்சுகத் தாய் ஈன்றெடுத்த அருங்கலைஞர் ஆட்சியிலே அஞ்சுகமே மிஞ்சும் அகம்" அதாவது, மாண்புமிகு தமிழக முதல்வர் அய்யா கலைஞர் அவர்களது ஆட்சியில் தமிழகம் வளம் பெறும், தமிழக மக்கள் நலன் பெறுவர். இதுதான் 2006–2007–க்கான நிதிநிலை அறிக்கையின் விளக்கமாகும். முத்துத் தமிழ் வழங்கி, முத்தமிழ் கவிஞராகப் போற்றப்பெறும் தொல்காப்பியத் தென்றல், மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும் என்ற பேரறிஞர் அண்ணாவின் கோட்பாட்டைப் போற்றும் வகையில், முன்பே ஆண்ட காலகட்டத்தில் கடல் அலைகள் கவிதைபாடும் கன்னியாகுமரியில் பெருந்தலைவர் காமராஜருக்கு அழகான மணிமண்டபம் கட்டியதை மீண்டும் நினைவு கூர்ந்து மகிழ்கின்றேன்.

சீடர் காமராஜருக்கு அழகிய நினைவு மணிமண்டபம் கன்னியாகுமரியில் அமைத்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், பெருந்தலைவர் காமராஜரின் குரு தீரர் சத்தியமூர்த்தி பிறந்த என் தொகுதியின் தலைமை இடமான திருமயத்தில் தக்கதோர் நினைவு மண்டபம் அமைத்து, தியாகச் செம்மல், சொல்லின் செல்வர், மனோகரா நாடகத்தில் முதன்முதலாக மனோகரனாக நடித்த நடிப்புச் செல்வர், பண்டித நேருவால் வீரத் தளபதி என்று பாராட்டப் பெற்ற பாரத விடுதலைப் போராட்ட வீரத்திலகம், தீரர் சத்தியமூர்த்தியின் தியாகச் செயலைப் போற்றும் வண்ணம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைப் பணிந்து வேண்டுகிறேன்.

பிற்பகல் 12–15

"படித்ததினால் அறிவுபெற்றோர் ஆயிரம் உண்டு. பாடம் படிக்காத மேதைகளும் பாரினில் உண்டு" என்ற கவியரசர் கண்ணதாசன் கவிதைக்கு ஏற்ப உட்பொருளாய், இலக்கணமாய் எழுந்து நின்ற பெருந்தலைவர் காமராஜர் பிறந்த ஜூலை 15 ஆம் நாளை கல்வி



வளர்ச்சி நாளாக அறிவித்த மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்கி நான் மகிழ்கின்றேன்.

தீரர் சத்தியமூர்த்தி பிறந்த திருமயத்தில்தான் முதன்முதலாக மலையைக் குடைந்து, கல்லிலே கலைவண்ணம் கண்ட மகேந்திரவர்மப் பல்லவர், நரசிம்மவர்மப் பல்லவர் அமைத்த எழில் கொஞ்சும் சிவன்–பெருமாள் குடவரை ஆலயமும் கி.பி. 17 ஆம் நூற்றாண்டில் இராமநாதபுரம் மாமன்னர் சேதுபதி விஜயரகுநாத தேவர் அமைத்த பிரம்மாண்டமான ஊமையன் கோட்டையும் திருமயத்தை அழகுபடுத்துகின்றது.

ஆன்மீகச் சிறப்பும், வரலாற்றுச் சிறப்புமிக்க குடவரை ஆலயங்களும், கோட்டையும் உடைய திருமயத்தை மகாபலிபுரம் போல மத்திய அரசின் தேசியச் சுற்றுலா மையமாக அறிவித்திட நமது தமிழக அரசு ஆவன செய்ய வேண்டுமாய்ப் பணிவுடன் வேண்டுகின்றேன்.

திருமயத்தை மத்திய அரசு தேசிய சுற்றுலா மையமாக அறிவிக்க மத்திய நிதி அமைச்சர் மாண்புமிகு ப. சிதம்பரம் அவர்களிடம் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று, என் தொகுதியைச் சேர்ந்த திருமயம் புலவர் முத்து வெங்கடேசன் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வருவாய்த் துறை: வருவாய்த் துறை என்பது நாட்டின் வளாச்சிக்கு முக்கிய பங்கு வகிக்கின்ற ஒரு துறையாகும். மற்ற துறைகள் அனைத்தும் இந்தத் துறையைச் சார்ந்தே இயங்க முடியும் என்பதற்கு இதுவே முக்கியச் சான்றாகும். வருவாய்த் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பைப் படித்துப் பார்க்கும்பொழுது, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அனைத்து விளக்கங்களையும் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அவற்றில் ஒன்றிரண்டு கருத்துகளை மட்டும் நான் சொல்ல விரும்புகின்றேன். வருவாய்த் துறையினுடைய பணிகள், சாதிச் சான்று, வருமானச் சான்று, இருப்பிடச் சான்று வழங்குதல், சொத்து மதிப்புச் சான்று வழங்குதல். துப்பாக்கி உரிமை, குடியுரிமை உரிமை, சினிமாக் கொட்டகை உரிமை, இதுபோன்ற பல்வேறு பணிகளைத் தெளிவாக அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

குவாரியைப் பற்றி, கல் குவாரியைப் பற்றி என்னுடைய கருத்து. அதாவது, ஏற்கெனவே, 1990 ஆம் ஆண்டிற்கு முன்பு அரசு குவாரிகள், வட்டாட்சியர் அலுவலகத்தில் பொது ஏலம் விடப்பட்டு, உரிமம்

வழங்கும் நடைமுறை இருந்தது. 1990 ஆம் ஆண்டிற்குப் பிறகு, தற்சமயம் உதவி இயக்குநர் (சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்) (A.D. Mines & Minerals) அவர்களால் அரசு குவாரிகளுக்கு உரிமம் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் வட்டாட்சியரின் பார்வைக்கு வராமல் உள்ளதால், தவறான முறையில் குவாரிகள் வெட்டி எடுக்கும் வாய்ப்புகள் அதிகம் உள்ளது. எனவே, மீண்டும் பழைய முறையிலேயே வட்டாட்சியர் அலுவலகத்தில் பொது ஏலம் விடப்பட்டு, வட்டாட்சியரின் பரிந்துரைக்குப் பின்பே உரிமம் வழங்கப்படவேண்டும் என்று பணிவோடு நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, DWCRA System - Development of Women and Children in Rural Areas கிராமப்புற பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் என்ற பெயரில் தற்சமயம் பெரிய முதலாளிகள் பினாமியாக கல் குவாரி நடத்தி வருகின்றனர். அதை உரிய முறையில் அரசு கண்காணித்து வரைமுறைப்படுத்த வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுப்புராம், சீக்கிரம் முடித்து விடுங்கள்.

**திரு. ராம. சுப்புராம்:** அடுத்து 2–C பட்டா மர வரி. ஒவ்வொரு வருவாய்க் கிராமத்திலும் வருவாய்த் துறையினால் தர்பார் காலத்தில் கடமை ஏகசால் 2–C பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. கடமை 2–C பட்டா என்றால், ஒரு மரத்திற்கு ஒருவர் 2–C பட்டா வாங்கினால், அந்த மரத்திற்கு 2–C மர வரி செலுத்தி, மரத்தின் மேல்பலனை மட்டுமே அனுபவிக்க முடியும். மரத்தை வெட்ட முடியாது. ஆனால், அந்த மரம் காற்றில் விழுந்துவிட்டாலோ, பட்டுப்போய் விட்டாலோ, அதுகுறித்து வருவாய்த் துறைக்குத் தகவல் மட்டும் தெரிவித்து மரத்தை வெட்டிக்கொள்ளலாம். ஆனால், ஏகசால் 2–C பட்டா என்றால், மரத்திற்கு 2–C மர வரி செலுத்தி, மேற்சொன்னது போன்று, மரத்தின் மேற்பலன் மட்டுமே அனுபவிக்க முடியும். மரத்தை வெட்ட முடியாது. ஆனால், அந்த மரம் காற்றில் விழுந்துவிட்டாலோ, பட்டுப்போய் விட்டாலோ, வருவாய்த் துறைக்குத் தகவல் தெரிவிப்பதுடன், மர மதிப்பில் பாதியை அரசுக்குச் செலுத்தி, மரத்தை வெட்டிக்கொள்ள வேண்டும். இப்படி வழங்கப்பட்ட 2–C பட்டாக்கள் தறசமயம் அனுபவத்தில் உள்ள முன்னோர்களின் பெயர்களில் இருப்பதுடன், அந்த மாரங்களில் பெரும்பாலான மரங்கள் தற்சமயம் பூமியில் இல்லை. இதனால் வருவாய்த் துறையினரால் 2–C மர வரியை வசூலிக்க இயலவில்லை. தற்சமயம் புதிய மரங்கள் பூமியில் உள்ளன. அந்த



மரங்களுக்கு 2–C பட்டா இல்லாமல் 2–C மர வரி வசூலிக்க இயலவில்லை. எனவே, தற்சமயம் பூமியில் உள்ள மரத்தைக் கணக்கெடுத்து, சம்பந்தப்பட்ட அனுபவதாரர்களுக்கு 2–C பட்டா வழங்கி, அரசிற்குப் புதியதாக மர வரி வசூலிப்பதுடன், நிலுவைத் தொகையும் சம்பந்தப்பட்டவரிடம் வசூல் செய்து, அரசுக்கு இழப்பு ஏற்படாமல் செய்யலாம் என்பது என்னுடைய பணிவான கருத்து.

கடந்த 1996 ஆம் ஆண்டு இன்றைய முதல்வர் அய்யா கலைஞர் அவர்கள் தலைமையில் நல்லாட்சி நடைபெற்றது. அந்தப் பேரவையில், அப்போது திருமயம் சட்டப் பேரவை உறுப்பினராக இருந்தவர் மறைந்த அண்ணன் வெ. சின்னையா ஆவார்கள். புதுக்கோட்டை சமஸ்தான மாமன்னராக இருந்து மறைந்த ராஜகோபால தொண்டைமான் அவர்களின் திருவுருவச் சிலையை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில், கடந்த 14–3–2000 அன்று இன்றைய முதல்வர் அவர்கள் திறந்து வைத்த மாபெரும் நிகழ்ச்சியில் மறைந்த முன்னாள் பேரவை உறுப்பினர் அமரர் அண்ணன் வெ. சின்னய்யா அவர்களின் நீண்ட கால கோரிக்கையான திருமயம் தாலுகாவைப் பிரித்து, பொன்னமராவதியை தனி தாலுகாவாக அறிவிக்க வேண்டும் என்று தங்களிடத்தில் கோரிக்கை வைத்துப் பேசினார்கள். அந்தக் கோரிக்கையைத் தாங்கள் ஏற்றுப் பேசும்போது இலுப்பூர், மணமேல்குடி ஆகிய இரு தனித் தாலுகாகளை உருவாக்கியதுபோல, 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற (மணியடிக்கப்பெற்றது) பேரவைத் தேர்தலில் மீண்டும் தங்கள் தலைமையில் நல்லாட்சி நடக்குமேயானால், முதல் ஆணையாக பொன்னமராவதியை தனித் தாலுகாவாக அறிவித்து கையெழுத்திடுவேன் என்று மக்கள் ஆரவாரத்திற்கிடையில், மாண்புமிகு இன்றைய முதல்வர் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள் என்பதை மெத்தப் பணிவோடு இந்த மாமன்றத்தில் நினைவுபடுத்தக் கடமைப்பட்டுள்ளேன். (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன் சார்.

பிற்பகல் 12–20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்த 2–C பட்டாவுக்காக இவ்வளவு நேரம் நீங்கள் விளக்கம் கொடுக்க வேண்டியதில்லை. மரம் என்று சொன்னால் எல்லோருக்கும் தெரியும். சீக்கிரம் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. ராம. சுப்புராம்:** தீ விபத்து நிவாரண உதவி. கிராமங்களில் நடைபெறும் தீ விபத்துகளுக்கான நிவாரண உதவிகளை உடனடியாக வழங்கிட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எந்தவிதமான வசதி வாய்ப்பும்

இல்லை. வட்டாட்சியரால் வழங்கப்படும் சின்னஞ்சிறு நிவாரண உதவிகள்கூட காலம் கடந்து வழங்கப்படுவதால், பாதிக்கப்பட்டவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். இந்த நிலையை மாற்றிட பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக உதவி கிடைத்திடும் வகையில், சட்டமன்ற உறுப்பினர்களே நிதி வழங்கும் வகையில் உடனடி நிவாரணத்திற்கென தனியாக நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைப் பணிவோடு வேண்டுகின்றேன்.

கடந்த 2000 ஆம் ஆண்டு, மாண்புமிகு கலைஞர் அரசு இதே அவையில், வேலூரில் அரசு சட்டக் கல்லூரி தொடங்கப்படும் என்று அறிவித்தது. ஆனால், ஆட்சி மாற்றம் ஏற்பட்ட காரணத்தால், அரசு சட்டக் கல்லூரியை அ.தி.மு.க. ஆட்சி தொடங்கவில்லை. இப்போது வேலூரில் அரசு சட்டக் கல்லூரி தொடங்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமாய்ப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எந்த ஊரில் கேட்கிறீர்கள்?

**திரு. ராம. சுப்புராம்:** வேலூரில்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா, திருமயத்திற்கும் வேலூருக்கும்?

**திரு. ராம. சுப்புராம்:** முடித்துவிடுகிறேன், சார். முடிவுரைதான், முடித்தாகிவிட்டது. இருங்கள், இதை அப்புறம் பேச முடியாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அப்போது நீங்கள் எல்லாவற்றையும் எழுதிக் கொடுத்துவிடுங்கள், சுப்புராம்.

**திரு. ராம. சுப்புராம்:** இல்லை, முடிவுரைதான். வேறு ஒன்றுமில்லை சார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முடித்துவிடுங்கள்.

**திரு. ராம. சுப்புராம்:** ஆக, சரித்திரத்தில் புத்தர் காலம் பொற்காலம் என்பது போல, தமிழகத்தில் இந்த ஐந்து ஆண்டுகளும் பொற்கால ஆட்சியாக அமையும். இந்தப் பொற்கால ஆட்சி தொடர்ந்து நல்லாட்சியாக அமையும் என்று சொல்லி, இந்த வாய்ப்பினை நல்கிய மாண்புமிகு சட்டப் பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன். திரு. வேல்முருகன், நீங்கள் 7 நிமிடங்கள்தான் பேச வேண்டும். குறுக்கீடு இல்லாமல் பேச வேண்டும.

**திரு. தி. வேல்முருகன்:** நான் சட்டப் பேரவையினுடைய நடவடிக்கைகளைக் குறிப்பு எடுத்துக்கொண்டிருக்கிறேன். மற்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எவ்வளவு நேரம் தரப்பட்டதோ, அதைவிட கொஞ்சம் அதிகமாகத் தரும்படி கேட்டுக்கொண்டு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சிறப்புச் சலுகையெல்லாம் கிடையாது.

**திரு. தி. வேல்முருகன்:** நீதி நிருவாகம், உள் துறை – சிறைச்சாலைகள், சட்டத் துறை, வருவாய்த் துறை, இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு ஆகிய தமிழகத்தினுடைய மிக முக்கியமான ஐந்து துறைகளில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டத் துறை. இன்றைக்கு மக்களுக்கான சட்டங்களை, அதிகமாக இயற்றுகிற ஒரு நாடாக இந்தியா இருந்து வருகிறது. அதே நேரத்தில், அந்தச் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதிலும், இயற்றப்பட்ட அதிகமான சட்டங்களை நடைமுறைப்படுத்துவதிலும் உலக அளவிலேயே பின்தங்கியுள்ள நாடுகளிலும் இந்தியா முதலிடத்திலே இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு இதுபோல் இயற்றப்படுகிற இந்தச் சட்டங்களைக் கண்காணித்து அந்தச் சட்டங்கள் ஒழுங்காக நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பதைக் கண்காணித்து, அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு அந்தந்தத் துறையின் வாயிலாக தனி அதிகாரிகளை நியமனம் செய்து, அதைக் கண்காணிப்பதற்கான நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதற்கான காரணம், இன்றைக்குப் பொது இடங்களிலே புகையிலை பிடிப்பதற்குத் தடைச் சட்டம், சினிமா ஆபாச வன்முறை வக்கிரங்களைத் தடுப்பதற்கான தடைச் சட்டங்கள், அதேபோல், இன்றைக்குப் பல்வேறு சட்டங்கள், 18 வயதுக்கும் குறைந்தவர்கள் புகையிலை பிடிப்பதற்கோ அல்லது அவர்கள் மது அருந்துவதற்கோ தடைச் சட்டம் இருக்கிறது. ஆனால், இன்றைக்கு அது நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்று சொன்னால், இல்லை.

அதுபோல், விளம்பரப் படங்கள் எது வேண்டுமானாலும் விளம்பரப்படுத்தப்படலாம் என்கிற நிலையிருக்கிறது. அதைக் கட்டுப்படுத்துவதற்கான சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. ஆனால், அதைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை என்பது இந்த நாட்டிலே இல்லை.

அதுபோல், குழந்தைத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தக் கூடாது என்று சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. ஆனால், இன்றைக்கு எல்லா நிலைகளிலும் குழந்தைத் தொழிலாளர்கள் பணியில் அமர்த்தப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதைக் கட்டுப்படுத்துவதற்கு, அதைக் கண்டிப்பதற்கான சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கை என்பது இந்த நாட்டிலே இல்லாத ஒரு சூழ்நிலையிருக்கிறது.

அதேபோல், சுயநிதிக் கல்லூரிகளில் இன்றைக்குப் பல்வேறு கட்டணக் கொள்ளைகள் நடந்துகொண்டிருக்கின்றன. அந்தக் கட்டணக் கொள்ளையைக் கட்டுப்படுத்துவதற்கு, அரசு சட்டம் இயற்றியிருக்கிறது. மூன்று ஆண்டுகள் முதல் 7 ஆண்டுகள் வரை அவர்களுக்குச் சிறைத் தண்டனை விதிக்கலாம் என்ற சட்டம் இருக்கிறது. ஆனால், இது நாள் வரைக்கும், அந்தச் சட்டத்தின்படி, எந்தவொரு கல்லூரியினுடைய நிர்வாகத்தினர்மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்றால், நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், இந்தச் சட்டங்களை இயற்றுவதை, நாம் இயற்றுவதோடு விட்டுவிடுகிறோம். இயற்றப்பட்ட சட்டங்களைக் கண்காணித்து, அவற்றை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு இந்த அரசு சரியான ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–25*

அதேபோல், கடந்த கால அண்ணா தி.மு.க. ஆட்சிக் காலத்தில் டாஸ்மாக் கடைகளைத் திறந்தார்கள். பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக அந்தக் கடைகளைத் திறந்ததற்கு நாங்கள் எதிர்ப்பு தெரிவித்தோம். அதற்காக எங்கள் மகளிர் அணி சார்பாக ஒரு போராட்டத்தை நடத்தினோம். இந்தப் பூட்டு போடும் போராட்டம் என்பது, மக்களுக்கான ஒரு அத்தியாவசியமான போராட்டம். ஏழை எளிய மக்கள், அவர்கள் சம்பாதித்து வருகிற பணத்தை அரசுக்



கடைகளில் கொடுத்துவிட்டு, அவர்கள் காலியாக வீட்டுக்குச் செல்கிறார்கள். அந்தக் குடும்பங்கள் எல்லாம் பாதிக்கப்படுகின்றதே என்ற ஒரு நல்ல நோக்கத்திற்காக அந்தப் போராட்டம் நடத்தப்பட்டபோது, ஆயிரக்கணக்கான பெண்கள் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது வழக்கு தொடுக்கப்பட்டு, சிறைச்சாலையில் இருந்து வெளியே வந்து இருக்கிறார்கள். இன்று 15 நாட்களுக்கு ஒரு முறை நீதிமன்றத்திற்கு குழந்தைகளோடு சென்று அலைந்து கொண்டு இருக்கிறார்கள். அதனால் தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு நம்முடைய சட்டத் துறை அமைச்சர் அவர்களும் அந்த பாட்டாளி மக்கள் கட்சியினுடைய மகளிர்மீது போடப்பட்ட, அந்த பூட்டுப் போடும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள்மீது போடப்பட்ட வழக்குகளைத் திரும்பப் பெற்று, அந்த வழக்கிலிருந்து அவர்களை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல கடந்தகால அ.தி.மு.க.வினுடைய ஆட்சியின்போது தாமரைக்கனி என்ற சட்டமன்ற உறுப்பினரால், என்னுடைய தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினரான பண்ருட்டியார் அவர்கள் தாக்கப்பட்டார். அவர்கள் தாக்கப்பட்டதை எதிர்த்து எங்கள் கட்சியினுடைய நண்பர்கள் பல இடங்களில் சில அறப் போராட்டங்களை நடத்தியபோது, பல்வேறு வழக்குகள் தொடுக்கப்பட்டு, இத்தனை ஆண்டுகள் ஆகியும் — 1991–ல் போடப்பட்ட வழக்குகள், 2006 வரையில், எங்கள் கட்சியினுடைய ஆயிரக்கணக்கான நண்பர்கள் இன்றும் பல்வேறு நீதிமன்றங்களில் அலைந்து திரிந்து கொண்டு இருக்கிறார்கள். இந்த வழக்குகளையெல்லாம் இந்த அரசு திரும்பப் பெறவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பண்ருட்டி என்னுடைய தொகுதி. கடந்த கால ஆட்சியிலே, மாண்புமிகு சட்ட அமைச்சரிடத்திலே ஒரு வேண்டுகோள் வைத்தேன். அவரும் அதைப் பரிசீலிப்பதாக உறுதி தந்தார். ஆனால், ஆட்சி மாறி இருக்கிறது. இந்த அரசு – அமைச்சரிடத்திலே நான் கடிதம் தந்து இருக்கிறேன். குற்றவியல் உரிமையியல் நீதிமன்றம், குற்றவியல் நடுவர் உரிமையியல் நீதிமன்றம், இரண்டு நீதிமன்றங்களுக்கும் உயர்நீதிமன்றம் ஆணை பிறப்பித்து, அது வழங்கப்பட்டு இருக்கிறது. ஆனால், அதற்கான கட்டடங்கள் கடந்த 15 ஆண்டு காலமாக இல்லாமல் மிகவும் அவதியுறும் நிலையில் இருக்கிறது. பெண் வழக்கறிஞர்கள் ஒதுங்குவதற்கான ஒரு கழிப்பிட வசதிகூட அங்கு

இல்லை. ஆதலால் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தினை அமைக்க proposal தரப்பட்டு, மத்திய அரசினுடைய நிதியை எதிர்பார்த்து காத்திருப்பதாக கடந்தகால ஆட்சியாளர்கள் பதில் அளித்தார்கள்; இன்றைக்கு அந்தக் கோப்பு நிலுவையில் இருக்கிறது. ஆதலால், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள், அந்த அமைச்சர் சொன்ன அதே பதிலை சொல்லிவிடாமல், எப்படியாவது ஒரு நல்ல அறிவிப்பை இந்த நேரத்திலே அறிவிப்பார்கள் என்ற எதிர்பார்ப்போடு இருக்கிறேன். நூற்றுக்கு மேற்பட்ட வழக்கறிஞர்கள்கூட இன்றைக்கு இங்கே வந்திருக்கிறார்கள். இந்த நல்ல அறிவிப்பை இந்த அரசு அறிவிக்கும் என்று ஆவலோடு இருக்கிறார்கள். ஆதலால், பண்ருட்டியில் ஒரு ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகமும், அதேபோல், கடலூரிலே ஒரு ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகமும் கட்டித் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், நம்முடைய ஓய்வுபெற்ற நீதிபதிகளுக்காக – ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்றத்தினுடைய நீதிபதி திரு. ஸ்ரீராமன் அவர்களும், திரு. சைனி என்கிற நீதிபதி அவர்களும், டெல்லி உயர் நீதிமன்றத்திலே ஓய்வு பெற்ற நீதிபதிகளுக்கான சலுகைகளைப் பற்றி ஒரு வழக்கைத் தொடுத்தார்கள். அந்த வழக்கில் ஷெட்டி கமிஷனுடைய பரிந்துரையை ஏற்று, அன்றைய உச்ச நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி தலைமையில் இருந்த 3 நீதிபதிகள் கொண்ட குழு அவர்களுக்கு 16 சலுகைகளை அறிவித்து இருக்கிறது. அந்த 16 சலுகைகளில் 9 சலுகைகளை முத்தமிழ் அறிஞர், முத்தான தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் கடந்த காலத்தில் ஓர் அரசாணையின் மூலமாக நிறைவேற்றித் தந்து இருக்கிறார்கள். அப்படி நிறைவேற்றப்பட்ட அந்த சலுகைகளுக்காக, நீதிபதிகள் சார்பாக நன்றி சொல்லுகின்ற அதேவேளையில், இன்னும் அவர்களது கோரிக்கைகளில் ஒன்றான நீதிபதிகள் குடியிருப்புக் கட்டணம் 50 சதவிகிதமாகக் குறைக்க வேண்டும் என்று கேட்டு இருக்கிறார்கள்.

அதேபோல் மருத்துவ வசதி. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கின்ற அந்த மருத்துவ வசதிகள் நீதிபதிகளாக இருந்து ஓய்வு பெறுகின்ற தங்களுக்கும் அளிக்கப்பட வேண்டும் என்று அவர்கள் எல்லாம் கோரிக்கை வைத்து இருக்கிறார்கள். அதையும் இந்த நேரத்திலே இந்த அரசு கருணையோடு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோல் Leave Travel Allowance தமிழ்நாடு அளவிலே அவர்களுக்கு இருக்கிறது. இந்தியா முழுக்க அதை விரிவுபடுத்தித் தர வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அதையும் இந்த அரசு செய்து தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், விரைவு நீதிமன்றங்களில், விரைவாகத் தீர்ப்பை வழங்குகின்ற அந்த நீதிபதிகளுக்கு, அலுவலகம் மற்றும் வீடுகளிலே தொலைபேசி வசதி கேட்டு, மனு செய்து கொண்டு இருக்கிறார்கள். இதுநாள் வரையிலும் அது வழங்கப்படவில்லை. ஷெட்டி கமிஷனுடைய பரிந்துரையில் அது இடம் பெற்றிருக்கிறது. அதையும் இந்த அரசு ஏற்படுத்தித் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். மேற்சொன்ன இந்தச் சலுகைகளையெல்லாம் இந்த அரசு சட்டத் துறைமூலமாக செய்து தர வேண்டும் என்று இந்த நேரத்திலே வேண்டுகோள் வைக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் 10 ஆண்டு காலம், 15 ஆண்டு காலம், 18 ஆண்டு காலம், 19 ஆண்டு காலம் என்று பல்வேறு கைதிகள் சிறைச்சாலையில் இன்றைக்கு அடைபட்டுக் கிடக்கிறார்கள். எங்களை இந்த அரசு எப்படியாவது விடுதலை செய்யாதா என்ற ஏக்கத்தோடு, நாள் கணக்கில் மனுக்கள் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். அந்தச் சிறைக் கைதிகளை கருணையோடு, தாயுள்ளத்தோடு நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களும், சட்டத் துறை அமைச்சர் அவர்களும், நம்முடைய அவை முன்னவர் அவர்களும் சிந்தித்து பேரறிஞர் அண்ணா அவர்களினுடைய பிறந்த நாளிலோ, தந்தை பெரியார் அவர்களுடைய பிறந்த நாளிலோ, 8 ஆண்டுகள் அல்லது 10 ஆண்டுகள் கழித்தவர்களை விடுதலை செய்வதற்கு இந்த அரசு ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி விடுதலை செய்கின்றபோது, அரசு காப்பு விடுப்பு என்பது நம்முடைய அமைச்சர் பெருமக்களும், காவல் துறையினுடைய சிறைக் கண்காணிப்பாளர் அவர்களும் தருகின்ற அந்த விடுப்பின் அடிப்படையிலே, பரோலிலே வெளியே வருகின்றார்கள். பரோலில் வெளிவருகின்றவர்களுக்கு காவல் துறை ஆயுதம் தாங்கிய காவலர்கள் பாதுகாப்பு கொடுக்கிறார்கள். அவர்களுக்கு பல்வேறு ஜாமீன்கள் பெறப்படுகின்றன. இந்த நிலையில் வெளியே வருகின்றவர்களுக்கு அந்த பரோல் விடுப்பையும் கணக்கிலே எடுத்துக்கொண்டு, அவர்களை விடுதலை செய்வதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு உச்சநீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கி இருக்கிறது. பரோல் விடுப்பில் வெளியிலே வந்தவர்களை.

பரோல் விடுப்பை கணக்கில் எடுக்காமல் விடுதலை செய்வது முறையாகாது. அதையும் கணக்கில் சேர்த்துக்கொண்டு விடுதலை செய்ய வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி இருக்கிறது. அதன் அடிப்படையிலே அந்த சிறைக் கைதிகளை, அவர்கள் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள், அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–30*

அதேபோல் சிறைக் கைதிகள் இன்றைக்கு சிறைச்சாலையில் அவர்களுடைய குழந்தைகள் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் வேதரத்தினம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, சனிக்கிழமைகளில் அந்த வெள்ளை உடையில் ஏதோ ஓர் உணர்ச்சிகரமாகவோ அல்லது ஏதோ ஒரு சூழ்நிலையில் கைதியாகி உள்ளே விடப்பட்டிருக்கின்ற அவர்களை, தன்னுடைய குழந்தைகள் பார்க்கின்றபொழுது அந்த அரைக்கால் வெள்ளை உடையிலும், அரைக்கை சட்டை மேலாடைகளோடும், தான் பெற்ற குழந்தை பார்க்கின்றபொழுது மிக மிகக் கூனிக் குறுகி ஓர் அவலத்திற்குள்ளாகி, தவறைச் செய்து உணர்ந்துகொண்ட அந்த மனிதன் வேதனைப்பட்டு துடித்துக் கொண்டிருக்கிறான். ஆதலால், தான் பெற்ற குழந்தைகளோ, தன் மனைவியோ, தன் குடும்பத்தாரோ பார்க்கின்ற அந்த தினங்களில் சனி, ஞாயிறு தினங்களில், அந்த வெள்ளை உடையிலிருந்து மாற்றளித்து அவர்கள் விரும்புகின்ற உடையை அணிந்து அவர்களுடைய உறவினர்களைப் பார்ப்பதற்கு ஏதுவாக மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் இந்த விஷயத்தில் சரியான ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் வயதில் முதியோர்கள், தங்களுடைய இயற்கை உபாதைகளைக்கூட தங்களாலே பார்த்துக் கொள்ள முடியாமல் குளியல் அறைக்கு செல்வதற்கோ, கழிவறைக்கு செல்வதற்கோ முடியாதவர்கள் எல்லாம் இன்றைக்கு கடலூர் சிறைச்சாலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆக, அந்த முதியவர்களையெல்லாம் விடுதலை செய்வதற்கு, இந்த அரசு பொது மன்னிப்பளித்து விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அப்படி கிட்டத்தட்ட 15, 17, 18, 19 ஆண்டுகளாக ஏழுமலை, ஜான் ஆண்டனி, இராமலிங்கம், நடராஜன், வீரப்பன், செல்லதுரை என்பவர்கள் எல்லாம் இன்றைக்கு 18, 20 ஆண்டுகளாக கடலூர் சிறையிலே இருந்து வருகிறார்கள். இவர்களையெல்லாம், இந்த அரசு கனிவோடு பரிசீலித்து, அந்த கைதிகள்மீது இரக்கம் காட்டி ஒரு



நல்ல முடிவை இந்த அரசு அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல வருவாய்த் துறை, இன்றைக்கு அரசினுடைய வருவாய்த் துறையில் இருக்கின்ற வட்டாட்சியர், துணை வட்டாட்சியர், தாசில்தாருக்குக்கீழே இருக்கின்ற அந்தத் துறை அலுவலர்கள் பணியிடங்கள் எல்லாம் பல்வேறு இடங்களில் காலியாக இருக்கின்றன. அந்தக் காலியிடங்களை நிரப்புவதற்கு இந்த அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல வருவாய்த் துறையில் முந்தைய அரசால் தொகுப்பு ஊதியத்தில் பணி அமர்த்தப்பட்டவர்கள் 6,000 பேர் பணிபுரிகின்றார்கள். அந்த 6,000 பணியாளர்களுக்கும் நம்முடைய ஆசிரியர்களைப்போல் இந்த அரசு கால முறை தொகுப்பு ஊதியம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இன்றைக்கு கணவனால் கைவிடப்பட்ட கைம்பெண்களுக்கான உதவித் தொகை வழங்குவதற்கு பஞ்சாயத்தில் போய் தீர்மானம் வைத்து கொண்டு வா, V.A.O.-விடம் certificate வாங்கிக் கொண்டு வா என பல conditions போடுகிறார்கள். அந்த conditions—எல்லாம் விலக்கி, அவர்களுக்கு அரசினுடைய பல்வேறுவிதமான நிவாரணங்கள் எல்லாம் உடனடியாக கிடைப்பதற்கு, வருவாய்த் துறையின்கீழ் வழங்கப்படுவதற்கு அந்த conditons-எல்லாம் relax செய்து, பாதிப்படைந்த மக்களுக்கு உடனடியாக அந்த நிவாரணங்கள் கிடைப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இன்றைக்கு 10 ஆண்டு காலம், 15 ஆண்டு காலம் பல இடங்களிலே வீடுகள் கட்டி அவர்கள் குடிசை அமைத்து வாழ்ந்து வருகிறார்கள். அதை அரசு அதிகாரிகள், வருவாய்த் துறை நண்பர்கள், ஏரி புறம்போக்கு, குட்டைப் புறம்போக்கு என்று ஏதாவது ஒரு கணக்குக் காட்டி, அவர்களுக்குப் பட்டா கொடுகக மறுக்கின்றார்கள். அப்படி 10 ஆண்டு காலம் நிரந்தரமாக வாழ்கின்ற இடங்களில் தொடர்ந்து அவர்கள் இருப்பதற்கு வசதியாக அவர்களுக்குப் பட்டா வழங்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். கிராமங்களிலே தீ விபத்து ஏற்படும்போது பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு நம்முடைய அரசு வெறும் 2,000 ரூபாயும், ஒரு வேட்டி சேலையும், 10 கிலோ அரிசியும் தருகிறார்கள். 2,000 ரூபாயை வைத்துக்கொண்டு அந்த ஏழை விவசாயி எப்படி தன்

வீட்டை, ஆதிதிராவிட, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள், கிராமப்புறங்களில் வாழ்கின்ற அந்த மக்கள் எப்படி தங்கள் வீட்டை— புனரமைத்துக் கொள்ள முடியும் என்பதை இந்த அரசு சிந்தித்து, கேட்காமலேயே பல்வேறு நலத் திட்ட உதவிகளையெல்லாம் அள்ளி வழங்குகின்ற நம்முடைய முத்தமிழ் அறிஞர் கலைஞருடைய அரசு, அந்தத் தொகையை, உடனடியாக அவர்கள் தங்களுடைய வீட்டை சீரமைத்துக் கொள்வதற்காக ரூ.10,000 ஆக உயர்த்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் வேண்டுகோள் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் வன்னியர் சமூகத்திற்குச் சொந்தமான ஆயிரம் காணி ஆளவந்தார் அறக்கட்டளை என்று தமிழகத்திலே பல இடங்கள் இருந்து வருகின்றன. அந்த ஆயிரம் காணி ஆளவந்தார் அறக் கட்டளையை சில தனி நபர்கள் கூறு போட்டு கொள்ளையடித்து தங்களுடைய உல்லாச பங்களாவாக இன்றைக்கு E.C.R. பகுதியிலே வளைத்து போட்டு கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு சமூக அடித்தட்டிலே இருக்கின்ற பிற்படுத்தப்பட்ட மக்களுடைய கல்வி வளர்ச்சிக்காக இது பயன்பட வேண்டுமென்று அந்த தலைவர்கள் உயில் எழுதி வைத்த அந்தச் சொத்து, தனி நபர்களுடைய கொள்ளைக் கூடாரமாக மாறியிருப்பதை வருவாய்த் துறை அதிகாரிகள் மூலமாக நம்முடைய அரசு அதை விசாரித்து தகுந்த நடவடிக்கை எடுத்து, அந்த சமூக மக்களுடைய கல்வி வளர்ச்சி மேம்பாட்டிற்கு பயன்படுத்துவதற்கான ஒரு நடவடிக்கையை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், செங்கல்வராயன் அறக்கட்டளை என்பது கல்வி வளர்ச்சிக்கு உருவாக்கப்பட்ட செங்கல்வராய நாயக்கரால் உருவாக்கப்பட்ட, அந்த கல்வி அறக்கட்டளையினுடைய சொத்துகளை, சென்னை மாநகரில் இருக்கின்ற கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துகளை தனி நபர்கள் கையகப்படுத்தி இன்றைக்கு அவர்கள் மாட மாளிகைகளையும் Five Star Hotel-களையும் கட்டி அனுபவித்து வருகிறார்கள். அதையெல்லாம் இந்த அரசு பார்த்து தகுந்த நடவடிக்கை எடுத்து அந்தச் சமூக மக்களுடைய கல்வி பொருளாதார மேம்பாட்டிற்கு உதவுகின்ற வகையில் அதைக் கையகப்படுத்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை ஊழியர்களுக்கு ஓர் அரசாணை



இருக்கிறது. 1,000 ரூபாய் வரை அவர்கள் பொருள்கள் வாங்குவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆயிரம் ரூபாயும் ரூ.100, ரூ. 100 ஆக மாதாமாதம் பிடித்துக் கொள்ள வேண்டுமென்று இருக்கிறது. இன்றைக்கு சைக்கிள் கடை வைத்திருப்பவர்கள் வீட்டில்கூட 10,000 ரூபாய்க்கான Colour T.V. இருக்கிறது. 15,000 ரூபாய்க்கான விலை உயர்ந்த Bed இருக்கிறது. Fridge இருக்கிறது, Washing machine இருக்கிறது. ஆனால், அரசு ஊழியர்களாகப் பணிபுரிகின்ற அந்த வருவாய்த் துறை ஊழியர்கள் 1,000 ரூபாய்க்கு மேல் வாங்கக்கூடாது, அதுவும் 100 ரூபாய் பிடித்தம் செய்யப்படும் என்று அரசாணை இருக்கிறது. அதைத் தளர்த்தி 10,000 ரூபாய் வரை பொருள்களை அவர்கள் வாங்கிக்கொள்ளலாம், அதற்கு, மேல் அதிகாரிகளுடைய அனுமதி தேவையில்லை என்கிற நிலையை இந்த அரசு ஏற்படுத்தித்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12–35

அதேபோல், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் தமிழாய்ந்த ஒரு துணைத் தலைவர் அவர்கள்தான். கர்நாடக சிறையில் பல ஆண்டு காலம் ஏன், எதற்கு என்று கேள்வி கேட்காமலே, என்ன குற்றம் நாம் செய்தோம், எந்தக் குற்றத்தின் அடிப்படையிலே நாம் சிறையில் இருக்கிறோம், எதற்காக கணவன், மனைவி, பிள்ளை குட்டிகளை விட்டுவிட்டு இன்றைக்கு கன்னி முதல் வயதானவர் வரையில் கண் கலங்கிக் கொண்டு சிறையிலே வாடுகின்றோம், என்று தெரியாமல் இருக்கிறார்கள். வீரப்பன் என்பவன் கைது செய்யப்பட வேண்டும் என்பதற்காக அதிரடிப்படை, கர்நாடக அரசின், தமிழக அரசின் கூட்டு அதிரடிப்படைகள் யாரையாவது பிடித்து உள்ளே போடவேண்டும், அரசுக்குக் கணக்குக் காட்ட வேண்டும் என்ற அடிப்படையிலே செய்து பல அப்பாவிகள்—தமிழ்நாட்டின் தமிழர்கள் இன்றைக்கும் கர்நாடக சிறையில் வாடிக்கொண்டிருக்கிறார்கள். அந்த அப்பாவித் தமிழர்களை விடுதலை செய்வதற்கு தமிழாய்ந்த தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு சரியான நடவடிக்கை எடுத்து, சரியான அரசு வழக்கறிஞர்களை நியமித்து, தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல், வருவாய்த் துறை என்பது மிக முக்கியமான துறை. சென்னை போன்ற நகரங்களிலே இருக்கின்ற பல்வேறு பகுதிகளில் வருவாய்த் துறைக்குச் சொந்தமான பல ஏக்கர் நிலங்கள் இன்றைக்கு தனி நபர்களால் பொய்யான போலி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு

கொள்ளையடிக்கப்பட்டு, அவர்கள் மாடமாளிகைகளைக் கட்டி வருகின்றார்கள். அவற்றையெல்லாம் இந்த அரசு கையகப்படுத்துவதற்கு சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல், எங்கள் மேட்டூர் சட்டப் பேரவையினுடைய உறுப்பினர் அருமை அண்ணன் ஜி.கே. மணி அவர்களுடைய தொகுதியில் இதுவரையிலும் அங்கு நீதிமன்றம் கட்டப்படுவதற்கான எந்தவித முயற்சியையும் இந்த அரசு எடுக்கவில்லை என்ற குறிப்பைத் தந்திருக்கிறார். அந்த முயற்சியை இந்த அரசு எடுக்க வேண்டும். அதேபோல், அம்பேத்கர் சட்டக் கல்லூரியில் பணியாற்றிவரும் சுமார் 20—க்கும் மேற்பட்ட விரிவுரையாளர்கள், ஆசிரியர்களுக்கு நீண்ட காலமாக பணி உயர்வு வழங்கப்படாமல் இருக்கிறது. அதை வழங்குவதற்கும் இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சட்டக் கல்லூரிகளில் கணினி அறை இன்றைக்கு மூடப்பட்டிருப்பதாக தகவல் வருகிறது. அதைத் திறப்பதற்கும் இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நீதிமன்றத்தினுடைய தீர்ப்புகள் "காலம் கடந்த நீதி, மறுக்கப்பட்ட நீதிக்கு சமம்" என்று கூறுவார்கள். அதேபோல எங்களுடைய ஓமலூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் அவருடைய பகுதியிலே நீதிமன்ற வளாகத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து, உத்தரவு வராமல் அந்தக் கட்டடம் உருவாக்கப்படுவதற்கு காத்திருக்கிறது என்று கூறியிருக்கின்றார்கள். அதையும் இந்த அரசு செய்துதர வேண்டும். அதேபோல எங்களுடைய எடப்பாடி சட்டமன்ற உறுப்பினர்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எங்கிருந்து எங்கே போகிறீர்கள்? பண்ருட்டியிலிருந்து ஓமலூர், மேட்டூர் என்று போகிறீர்களே?

**திரு. தி. வேல்முருகன்:** இன்றைக்கு எடப்பாடி தனித் தாலுகாவாக இருக்கிறது. நீதிமன்றமும் கருவூலமும் எங்கள் பகுதிக்கு அமைத்துத் தரவேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். ஆக இந்தக் கோரிக்கைகளை எல்லாம் தமிழக அரசு நிறைவேற்றித்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தமாக நான் கேட்க விரும்புவது, இந்த முக்கியமான 5 கோரிக்கைகளிலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக நான் பதிவு செய்திருக்கிற இந்தக்



கருத்துகளை மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களும், துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எல்லோரும் கனிவோடு பரிசீலித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையிலே நல்ல ஒரு பதிலை எனக்குத் தருவார் என்று நான் எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்.

கடந்த ஐந்தாண்டு காலங்களில் வைத்த கோரிக்கைகள் எதுவும் நடைபெறவில்லை. நீங்களாவது இந்தக் கோரிக்கைகளை கனிவோடு பரிசீலித்து, முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, அந்த சிறைக் கைதிகளுடைய ஆவலை, அவர்களுடைய எண்ணங்களை பூர்த்தி செய்கின்ற வகையில் நம்முடைய அரசு 8 ஆண்டுகள் முடித்தவர்களை, 8 ஆண்டுகள் சிறைத் தண்டனை கழித்தவர்களை, அவர்கள் பரோலில் வந்த விடுப்பையும் கணக்கில் எடுத்துக்கொண்டு விடுதலை செய்ய வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்தது, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜாண் ஜோசப். (குறுக்கீடு) திரு. விசுவநாதன்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேல்முருகன் பேசுகின்றபோது, சென்ற எங்களது அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலே அரசு டாஸ்மாக் கடைகளை, மதுபானக் கடைகளைப் பூட்ட வேண்டுமென்று போராட்டம் நடத்தினோம் என்று சொன்னார். அதேபோல இப்போதும் அரசு டாஸ்மாக் கடைகளை, மதுபானக் கடைகளை நடத்திக் கொண்டுதான் இருக்கிறது. இப்போதும் அந்தப் போராட்டத்தை, பூட்டு போடுகின்ற போராட்டத்தை . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேல்முருகன் பேசியது, அப்படி போராட்டம் நடத்தினோம். போராட்டம் நடத்தியதற்காக கைது செய்யப்பட்டு, பல்வேறு வழக்குகள் போடப்பட்டு, கோர்ட்டுக்கு அலைந்து கொண்டிருக்கிறார்கள், அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்றுதான் ஒரு கோரிக்கையை

வைத்தாரே தவிர, வேறு ஒன்றும் அவர் சொல்லவில்லை. இதிலே நீங்கள் clarification சொல்வதற்கே ஒன்றும் இல்லையே? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜாண் ஜோசப். (குறுக்கீடு) அமைச்சர் சொன்ன பிறகு வேண்டாம். வேல்முருகன், அமைச்சர் சொல்லிவிட்டார்.

*பிற்பகல் 12–40*

***திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்திற்கு 3.3 கோடி ரூபாய் செலவில் மலர் ஆராய்ச்சி மையம் தந்தமைக்கும், மத்திய அரசின் உதவியுடன், குளச்சலில் மீன்பிடித் துறைமுகம் மற்றும் குளச்சல் வர்த்தகத் துறைமுகம் அமைக்க உள்ளமைக்கும் இந்த அரசுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், எங்கள் மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் சுரேஷ் ராசன் அவர்களுக்கும் முதற்கண் அந்த மாவட்டத்து மக்கள் சார்பாக நன்றியினை உரித்தாக்கிக்கொள்கின்றேன்.

நிலமற்றோருக்கு நிலம் வழங்குவது, ஒரு புனிதமான திட்டம். அதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஏற்கெனவே பாராட்டி, வரவேற்றிருக்கிறது; இப்போதும் அதையே செய்கிறது. நிலம் மனிதனின் அடிப்படைத் தேவைகளில் மிக முக்கியமானது. 20 முதல் 60 ஆண்டுகளுக்கு முன்பே, நிலமற்றவர்கள், நலிந்த பிரிவினர், ஏழை எளியோர் அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களில் புகுந்து, அற்ப, சொற்ப நிலத்தைக் கையகப்படுத்தி, வீடுகட்டி, விவசாயம் செய்து அனுபவித்து வருகின்றனர். தலித், ஆதிதிராவிடர், பழங்குடியினர் உள்ளிட்ட தமிழகத்தின் இலட்சோபலட்ச மக்களுக்கு இந்த நிலம் இன்றைக்கு ஜீவனோபாயமாக மாறியுள்ளது. இவர்களின் கைவசம் உள்ள இந்நிலம், அணைப் புறம்போக்கு, வனம் புறம்போக்கு, மலைப் புறம்போக்கு, நத்தம் புறம்போக்கு, நீர்வழிப் புறம்போக்கு, மேய்க்கால், மந்தைவெளி, மயானம் என பல்வேறு செல்லப் பெயர்களில் அழைக்கப்பட்டு வருகிறது.

குமரி மாவட்டத்தில் சிற்றாறு–I, நியூ ஆம்பாடி, சக்கரபாணி, செண்பகத்தரிசு, அரசநாடு, ஆலஞ்சோலை, நேற்பாரூர், கலிங்கராஜபுரம், கற்றுவா, கைதக்கல், வலியஏலா, மருதம்பாறை, ஆறுகாணி, பத்துகாணி, நிரப்பு, அணைமுகம், குளப்பாறை, துவரச்சன்விளை, ஐந்துள்ளி,





கழுவன்திட்டை, கஞ்சிக்குழி, ஒட்டலிவிளை, குளச்சவிளாகம், பொன்மனை, பேச்சிப்பாறை போன்ற இடங்களில் உள்ள வெவ்வேறு வகையான புறம்போக்கு நிலங்களில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வசித்து வருகின்றன. இவர்களில் அறுதிப்பெரும்பான்மையினர் பரம ஏழைகளும் வறியவர்களும் ஆவர்.

*"என்னைக் கண்டு நீ வாட,*
*உன்னைக் கண்டு நான் வாட,*
*கண்ணீரும் கதை சொல்லும் தீபாவளி.*
*ஊரெங்கும் மணக்கும்,*
*ஆனந்தம் நமக்கு,*
*காணாத தூரமடா"*

என்று பட்டுக்கோட்டையார் பாடுவார்.

தீபாவளிகூட கண்ணீர் கதையாகி, ஆனந்தம் காணாத தூரமாகி, வாழ்ந்துகொண்டிருக்கும் இந்த ஏழைகளை, பரம ஏழைகளை கைவச பூமியிலிருந்து வெளியேற்றினால், அவர்கள் நிலைகுலைந்து போவார்கள்.

50, 60 ஆண்டுகளாக இப்பூமி அரசுக்குத் தேவைப்படவில்லை; திரும்ப எடுக்கவும் இல்லை. இனியும் மக்களை வெளியேற்றிவிட்டு அந்த பூமியைத் திரும்ப எடுக்க வேண்டிய தேவை அரசுக்கு இருக்காது என்றே நாங்கள் கருதுகிறோம். எனவே, இத்தகைய நிலங்களை கைவச உரிமைதாரர்களுக்கே பட்டா போட்டு, முழு உரிமையும் கொண்ட பட்டா போட்டு வழங்க வேண்டும் என்று பணிவோடு வேண்டுகிறேன். பட்டா கிடைத்தால், தாங்கள் பிறந்த பயனை அடைந்ததாகக் கருதி தமிழகத்தின் இலட்சோபலட்ச மக்கள் ஆனந்தத்தால், மண், விண் எனத் துள்ளிக் குதிப்பர். பட்டா கிடைப்பதை ஜீவன் முக்தியாக அவர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த ஜீவன் முக்தி, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களால் மட்டுமே சாத்தியம் என்று அவர்கள் நம்பிக்கொண்டிருக்கிறார்கள்.

அத்தகைய நம்பிக்கையை 2006–2007 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை அவர்களுக்கு ஊட்டியுள்ளது. இந்த நிதிநிலை அறிக்கையை சிலபேர், மத்தாப்பு என்றும், வாண வேடிக்கை என்றும், அறியாமையின் வடிவம் என்றும், புதைகுழி என்றும் வர்ணிக்கலாம். இந்த வர்ணனைகள்

எல்லாம் வரலாற்றின் புதைகுழியில் மூழ்கடிக்கப்படும் என்பது நிச்சயம். (மேசையைத் தட்டும் ஒலி)

'மிரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்பதைப் போல, பட்ஜெட்டின் அறிவிப்புகளைக் கண்டு அவர்கள் மிரண்டுபோய் உள்ளனர். எத்தனையோ சிரமசாத்தியக் காரியங்களைச் செய்த, செய்துகொண்டிருக்கும், மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) அசாதாரணத் திறமையைப் பயன்படுத்தி, வரலாற்றுச் சிறப்புமிக்க இம்மாமன்றம் மூலமாக இத்தகைய பட்டா விஷயத்தில் ஒரு நல்ல தீர்வைக் காண பணிவாய் வேண்டுகிறேன்.

பிற்பகல் 12—45

மேலும், நூற்றுக்கணக்கான ஏக்கர் அரசுக்குச் சொந்தமான பூமியை சில தோட்ட உரிமையாளர்கள், சில பெரிய நிறுவனங்கள், சில கோயில்கள் அபகரித்து, ஆக்கிரமித்து வைத்துள்ளன. அந்த நிலத்தை அரசு மீட்க வேண்டும்.

அதுமட்டுமின்றி, நில் உச்ச வரம்புச் சட்டத்தில் உள்ள ஓட்டை உடைசல்களைத் திருத்தி கறார் தன்மையுடன் அமல்படுத்த வேண்டும். இங்ஙனம் செய்வதன் மூலம், அரசின் புதிய நில விநியோகத் திட்டத்திற்கு இலட்சக்கணக்கான ஏக்கர் பூமி சேரும். நில உச்சவரம்புச் சட்டம் மேற்கு வங்கத்தில் எங்ஙனம் அமல்படுத்தப்படுகிறது என்பதை அறிய, தமிழகத்திலிருந்து குழு செல்வதை மனப்பூர்வமாக வரவேற்கிறோம்.

செப்டம்பர் 17 முதல் நில விநியோகம் துவங்குவதை வரவேற்கிறோம். பயனாளிகளின் பட்டியலை வருவாய்த் துறை அலுவலகங்களில் வெளியிட வேண்டுகிறோம். சிறுதாவூர் நில மோசடி குறித்து விசாரிக்க கமிஷன் போட்டதை வரவேற்கும் அதே நேரத்தில், சாயல்குடிக்கும் இது தேவை என்று வலியுறுத்துகிறோம்.

கடந்த ஆட்சிக் காலத்தில் மனு நீதி நாட்கள் குறை கேட்கும் நாட்களாகவே இருந்தன. அவற்றை குறை தீர்க்கும் நாட்களாக மாற்ற வேண்டும். பொய்த்துப் போன நீர் நிலைகளுக்குட்பட்ட நிலத்திற்கு தண்ணீர் வரி இரத்து செய்ய வேண்டும்.

முதியோர், விதவை, நலிவுற்றோர், ஊனமுற்றோர் உதவித் தொகைகளைப் பெறுவதற்கான விதிகளைத் தளர்த்த வேண்டும்.



ஆண் மகவு இருந்தால், உதவித் தொகை இல்லை என்ற அணுகுமுறையை கடந்த ஆட்சி கடைப்பிடித்தது. ஆண் மகவு இருப்பதை ஒரு குற்றமாக பார்க்கும் பழைய அணுகுமுறையை இந்த அரசு கைவிட வேண்டுமென்று மிக்க பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அந்த ஆண் மகவின் ஆதரவு பெற்றோருக்குக் கிடைக்கிறதா என்பதை யதார்த்தமாகப் பார்க்க வேண்டுமென்று பணிவாய் வேண்டுகிறேன.

ஊனமுற்றோருக்கு மூன்று சக்கர சைக்கிள் வழங்க வேண்டும். வருவாய்த் துறையின் காலி இடங்களை நிரப்ப வேண்டும். மலைவாழ் மக்கள், ஆதிதிராவிடர்களுக்கு சாதிச் சான்றிதழ்கள் வழங்குவதற்கான கடும் நிபந்தனைகளைத் தளர்த்த வேண்டும். சான்றிதழ்கள் சுலபமாகக் கிடைக்கச் செய்ய வேண்டும்.

கடந்த ஆட்சியின் இறுதிக் கட்டத்தில் களியல் கிராமம், மேற்பாரூர் என்ற இடத்தில் ஒருவருக்குச் சொந்தமாக 55 சென்ட் நிலத்தையும், மேக்காடு கிராமம், ஒட்டலிவிளை என்ற ஊரில் 3 அரிசன மக்களுக்குச் சொந்தமான தலா 30 சென்ட் நிலத்தையும் பறித்து, வேறு நபர்களுக்கு பட்டா வழங்கியுள்ளதை இரத்து செய்ய வேண்டும்.

பெரம்பூர் தொகுதியில் 1964 ஆம் ஆண்டு தாயகம் திரும்பிய பர்மா தமிழர்களை குடியமர்த்திய பக்தவத்சலம் காலனி, சாஸ்திரி நகர் வாழும் பர்மா தமிழக மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும். 'Justice delayed is justice denied' என்கிறது ஓர் ஆங்கிலப் பழமொழி. பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி விரைவாகக் கிடைக்கும் வகையில் நீதிமன்றச் செயல்பாட்டில் மாற்றம் வேண்டும். நீதிமன்றக் காலியிடங்களை நிரப்ப வேண்டும்.

இலவச சட்ட உதவி ஏழை எளியோரைச் சென்றடையும் இலக்கை எட்ட வேண்டும். குமரி மாவட்டம், குழித்துறையில் 1901—ல் நீதிமன்றம் துவக்கப்பட்டது. வாடகைக் கட்டடங்கள் உட்பட உள்ள அறைகளில் 7 நீதிமன்றங்கள் அங்கு செயல்படுகின்றன. ஒரு நூற்றாண்டைக் கடந்த இந்த நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடங்கள் கட்ட ரூபாய் 3 கோடியே 9 இலட்சத்திற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அந்தக் கோப்புகள் சென்னை உயர்நீதிமன்றக் கட்டடப் பிரிவில் நிலுவையில் உள்ளன. இந்த நிதியை ஒதுக்கித் தருமாறு பணிவாய் வேண்டுகிறேன்.

தருமபுரி மாவட்டத்திற்கென்று தனி மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றம் அமைக்க வேண்டுகிறேன். திருவள்ளூர் மாவட்டத்திற்கு செஷன்ஸ் நீதிமன்றம் அமைப்பதாக கடந்த ஆட்சிக் காலத்தில் அறிவித்தும், அமலாக்கப்படவில்லை. அதை இந்த அரசு அமல்படுத்த வேண்டும்.

சட்டக் கல்லூரிகளில் 2004 ஆம் ஆண்டு 5 வருட சட்டப் பிரிவில் சேர்க்கை பெற்று, தற்போது 3 ஆம் வருடம் பயிலும் மாணவர்களுக்கு இடமாற்றம் பொருந்தும் வகையில் உத்தரவை மாற்றி அமைக்குமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். சிறைத் துறையில் இருக்கும் காலியிடங்களை நிரப்புதல்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் முடித்துவிடுங்கள். முடித்துவிடுங்கள்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** சிறையில் இருக்கும் H.I.V. பாதித்த நோயாளிகளுக்கு உரிய சிகிச்சை வழங்குவது, ஜெயில் அறையில் மின் வசதி ஏற்படுத்துவது, தரமான உணவு வழங்குவது, அறைகளின் அளவிற்கேற்ற எண்ணிக்கையில் கைதிகளை அடைப்பது, நல்ல சுகாதாரம் பேணுவது போன்றவற்றை உறுதிப்படுத்த வேண்டும்.

கேரளா, ஆந்திரம் போன்ற மாநிலங்களில் 8 ஆண்டு தண்டனை அனுபவித்த ஆயுள் கைதிகளுக்கு, அவர்களின் குற்றத்தின் தன்மைக்கேற்ப, பொது மன்னிப்பு வழங்குவதைப்போல இங்கேயும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12—50

இயற்கைச்சீற்ற நிதி உதவி ரூபாய் 2,000/- என்று இருப்பதை நியாயமான வகையில் உயர்த்த வேண்டும். நாகை தொகுதிக்குட்பட்ட வேட்டைக்காரனிருப்பு, விழுந்தன்மாவடி போன்ற பகுதிகள் தற்போது 40 கிலோ மீட்டர் தூரம் உள்ள கீழ்வேளூர் வட்டத்துடன் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜாண் ஜோசப், சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** இது, பொதுமக்கள் சென்றுவர சிரமமாக உள்ளது. எனவே, பொதுமக்கள் நலன் கருதி அருகில் உள்ள நாகப்பட்டினம் வட்டத்துடன் மேற்கண்ட பகுதிகளை இணைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். தருமபுரி மாவட்டம் அரூரை மையமாகக் கொண்டு அரூர், பாப்பிரெட்டிப்பட்டி வருவாய் வட்டங்களை உள்ளடக்கி ...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம்.



**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** அரூரில் ஒரு RDO அலுவலகம் அமைக்க வேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றிகூறி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம். ஒரு 7 நிமிடம்தான் தருவேன். குறுக்கீடுகள் இல்லாமல் உங்கள் பேச்சு இருக்கவேண்டும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காலத்தின் அருமை கருதி விரைவாக முடிக்கிறேன். குறுக்கீடுகளை நான் செய்யமாட்டேன், யாரும் செய்யாமல் நீங்கள் பார்த்துக்கொள்ளவேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நமது வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கொள்கை விளக்கக் குறிப்புகளிலே பல்வேறு சிறப்புச் செய்திகளை அறிவித்திருக்கிறார்கள்.

குறிப்பாக மாநிலப் பொது எல்லை என்பதன் பெயராலே ஒரு செய்தி குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1956 ஆம் ஆண்டு மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்டபொழுது அதற்கான நமது எல்லைகளும் வரையறுக்கப்பட்டிருக்கிறது. இது பற்றிய கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதிலே நான் குறிப்பாகச் சொல்ல விரும்புவது இந்த எல்லைகள் வரையறை என்பதிலே சில பிரச்சினைகள் அவ்வப்பொழுது எழுந்துகொண்டேயிருக்கின்றன. அதிலே குறிப்பாக ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி பகுதி. கர்நாடக மாநிலத்தின் சார்பில் நமது பகுதியிலே நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிற, காலங்காலமாக அனுபவித்துக் கொண்டிருக்கிற அந்த ஒகேனக்கல் நீர்வீழ்ச்சிப் பகுதியை கர்நாடக அரசுக்குச் சொந்தம் என்று அவர்கள் உரிமை கொண்டாடுவதற்கான முயற்சி எடுத்தார்கள். அதைப்பற்றி இந்தச் சட்டமன்றத்திலே நான் பேசுகிறபொழுது மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள்கூட அப்படி அதை அனுபவிக்கவில்லை என்று மறுத்தார்கள். ஆனால், அவர்கள் ஆர்ஜிதம் செய்வதற்கும், அதை அளவீடு செய்வதற்குமான முயற்சிகளை எடுத்து, காரியங்களிலே அவர்கள் ஈடுபடுகிறபொழுது திரும்ப இந்த அவையிலே எழுப்பப்பட்டு அது ஒரு பிரச்சினையாக மாறியதற்குப் பின்னாலே தடை செய்யப்பட்டது. ஆனால்,

இப்பொழுது அது என்ன நிலையிலே இருக்கிறது என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல நமது குற்றாலம் பகுதியிலேயும் அப்படி கேரள மாநிலத்திற்கும் நமக்கும் உள்ள அந்தப் பிரச்சினை இருக்கிறது. அங்கேயும் அப்படிப்பட்ட ஆக்கிரமிப்புகள் இருப்பதாகத் தகவல் வந்துகொண்டிருக்கிறது. அதையும் சரிசெய்வதற்கான முயற்சி எடுக்க வேண்டும். இதை நான் சொல்லுவதற்குக் காரணம் ஒரு மாநிலத்திற்கும், இன்னொரு மாநிலத்திற்கும் எல்லை வரையறை என்று சொல்லுகிறபொழுது இப்படி சில ஆக்கிரமிப்புகளும், அத்துமீறல்களும் நடைபெறுவதற்கான காரணங்கள் அவ்வப்பொழுது அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தொடங்கி நமக்குத் தெரியாமலே நடைபெற்றுவிடுகிறது. அதன் காரணத்தினாலே நம்முடைய மாநில உரிமைகள் பாதிக்கப்படுவது, அது ஒரு பெரிய பிரச்சினையாக, சர்ச்சையாக எழுவதற்குரிய வாய்ப்புகள் இருக்கிற காரணத்தினாலே, இதிலே நம்முடைய அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோலத்தான் பாலாற்றில் அணை கட்டுகிற பிரச்சினையும் வந்திருக்கிறது. இப்படி இந்தப் பிரச்சினைகளையெல்லாம் கவனத்திலே கொண்டு நம்முடைய மாநில எல்லையை நிர்ணயம் செய்வதற்கான முயற்சிகள் எடுக்கிறபொழுது அதிலே தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

காலத்தின் அருமை கருதி சில செய்திகளைச் சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். சாதிச் சான்றிதழ்களைப் பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த சாதிச் சான்றிதழ்கள் வழங்குவது 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு படித்து முடித்துச் செல்லுகிற மாணவன் கையிலே வழங்கப்படும் என்ற அறிவிப்பு மீண்டும் நடைமுறைப்படுத்தப்படுகிறது என்று இந்த ஆட்சியில் சொல்லப்பட்டிருப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் மனதார வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது ஒரு நல்ல முயற்சி. இதற்காக அவர்கள் அலையாய் அலைந்து கொண்டிருக்கிற காலம் போய் அவர்கள் படிப்பை முடித்துச் செல்லுகிறபொழுதே கையில் கிடைக்கிறது என்பது ஒரு மகிழ்ச்சியான செய்தி. அதோடு சேர்த்து சாதிச் சான்றிதழ் என்று சொல்லுகிறபொழுது, பல்வேறு வகையாக இருக்கக்கூடியவர்களுக்கு வழங்குவதிலே பிரச்சினை இருக்கிறது. ஆகவே, சாதிகளை வரையறுப்பதிலேயே பெரிய பிரச்சினை



இருக்கிறது. இது மாநில அரசாங்கம் செய்யமுடியாது என்று ஒரு வரியிலே பதில் சொல்லப்படுகிறது. இது காலங்காலமாக சட்டமன்றத்தில் சொல்லப்படுகிற செய்தி. காரணம், மத்திய அரசு தான் இதிலே பட்டியலிட்டு, வகைப்படுத்தி, அதை அறிவிப்பதற்கான முயற்சிகள் எடுக்கிறது என்று சொன்னாலும்கூட, சாதிப் பட்டியலை வரையறை செய்வதற்கான முயற்சிகளை நம்முடைய மாநில அரசு எது தேவைப்படுகிறது என்பதைப் பட்டியலிட்டு மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தி அதைப் பெறச் செய்வதற்குரிய முயற்சிகளைத் தயவுசெய்து மேற்கொள்ளவேண்டும். இது கடந்த காலங்களிலே பல முறை எடுத்துச் சொல்லப்பட்டு அது நடைபெற முடியாமல் போய்விட்டது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

குறிப்பாக, குரும்பன்ஸ் என்ற இனம் தருமபுரி மாவட்டத்திலே மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. அவர்களை எந்தப் பட்டியலில் வைப்பது என்பது தெரியாத நிலையில் இருக்கிறது. அவர்கள் B.C.–யா, S.C.–யா அல்லது S.T.–யா என்று சொல்லமுடியவில்லை. குறிப்பாகச் சொல்லவேண்டுமானால் அவர்களைப் பழங்குடியின மக்கள் பட்டியலிலே வைக்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு அந்த வாய்ப்புகள் இல்லாமல் அவர்கள் B.C. என்ற பட்டியலிலே அல்லது M.B.C. என்ற பட்டியலிலே வைக்கப்படுகிற காரணத்தினாலே சலுகைகள் பெறமுடியாத அவஸ்தைக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். இதேபோல நம்முடைய மாநிலத்திலே பல பகுதிகளிலே இருக்கிறார்கள். பெரும்பாலான பகுதிகளிலே வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய பூம் பூம் மாட்டுக்காரர்கள் — பெருமாள் மாட்டுக்காரர்கள் என்று பல இடங்களிலே சொல்வார்கள் — அவர்களுக்கு இந்தப் பட்டியலிலே என்ன சாதி என்று வரையறுத்து, அவர்களை S.T. பட்டியலிலே சேர்ப்பதற்குரிய வாய்ப்பே இல்லாமல் போய்விட்டது. எங்களது பகுதியிலே, எனது தொகுதியிலேயே அபபடி இருக்கிறபோது, M.B.C. என்று அவர்களுக்குச் சான்று வழங்கப்படுகிறது. ஒருகட்டத்திலே B.C. என்று அவர்களுக்குச் சான்று வழங்கப்பட்டிருக்கிறது. இந்தச் சான்றை வைத்துக்கொண்டு அவர்களாலே எந்தக் காரியத்திலும் ஈடுபட முடியவில்லை.

*பிற்பகல் 12–55*

அதேபோல இன்னும் காட்டுநாயக்கர்கள் இருக்கிறார்கள். அவர்களும் சான்று பெறுவதற்கு வாய்ப்பில்லாமல் அவஸ்தைப்பட்டுக்

கொண்டிருக்கிறார்கள். 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு முடித்த பின்னர், உயர் கல்வி பெறுவதற்கு இந்தச் சான்று இல்லாமல் அவர்கள் கல்வியைத் தொடர முடியாத இக்கட்டான நிலைக்கு ஆளாகிவிடுகிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட நிலை, நம்முடைய தமிழகத்திலே ஏராளமாக இருக்கிறது. மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தி, இதைப் போக்குவதற்குரிய முயற்சியை, இந்தப் பட்டியலை ஒழுங்குபடுத்தி, அவர்களையெல்லாம் S.T. பட்டியலிலேயும், தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலிலேயும், இணைக்க வேண்டிய அவசியம் இருக்கிறவர்களை இணைப்பதற்குரிய முயற்சியை நமது அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டுமனை நில ஒப்படைப்பு பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே குறிப்பாக, நீர்வழிப் புறம்போக்கு, ஏரி, குளம், குட்டை, வாய்க்கால், மந்தைவெளி, மேய்க்கால், மயானம் ஆகிய புறம்போக்கு நிலங்களிலே ஆக்கிரமிப்புகள் செய்ய அனுமதிப்பது இல்லை. இது பொதுவான நிலையிலிருந்து பார்த்தால் சரிதான். ஆனால், இதே நிலங்களிலே — இப்போது மந்தைவெளி புறம்போக்கு, மேய்க்கால் புறம்போக்கு என்று இருக்கிறது. ஆனால், அது பட்டியலிலே இருக்கிறதே தவிர, அநேகமாக, பெரும்பாலான கிராமங்களில் அந்த மேய்க்கால் புறம்போக்கு என்பதே இல்லை. காரணம் 50 ஆண்டுக் காலமாக, 60 ஆண்டுக் காலமாக, அதிலே குடியிருந்து வருகிறார்கள்; வீடு கட்டியிருக்கிறார்கள்; வசித்துக் கொண்டிருக்கிறார்கள். அநேகமாக மேய்க்கால் புறம்போக்கு என்று சொல்கிற பகுதி, அந்தக் கிராமத்தினுடைய ஒரு சிறிய நகரமாக வளர்ச்சியடைந்த நிலையில், அது மையப் பகுதியாக மாறிவிட்டது. ஆகவே, அதைத் திரும்பவும், மேய்க்கால் புறம்போக்கு என்று நம்முடைய அடங்கலிலே வைத்துக் கொண்டிருக்கலாமே தவிர அது எதற்கும் பிரயோசனப்படாது. அதில் குடியிருக்கிறவர்கள், சாதாரணப் பகுதி மக்கள்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த உரிமையில்லாமலே அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அதையெல்லாம் வகைப்படுத்தி, அவர்களுக்கு பட்டா கொடுத்துவிடுவது என்பதுதான் பொருத்தமானதாக இருக்கும். அதைச் செய்வதற்கான முயற்சியை இந்த அரசு புதிய முறையிலே, ஒரு புதிய கோணத்திலே சிந்தித்து, அதற்கான ஆய்வுகளை மேற்கொண்டு, அதை வழங்குவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நீர்நிலைப் புறம்போக்குகள் என்று சொல்கிறபோது, நீர்நிலைகளைப் பாதிக்குமானால் அவர்களுக்கு அளிக்க வேண்டிய



அவசியம் இல்லை. அதேநேரத்திலே, நீர்நிலைகளைப் பாதிக்காத பகுதிகளிலே வாழ்ந்து கொண்டிருக்கிறவர்களுக்கு, அது பொதுப் பணித் துறை இடம் என்ற காரணத்தைக்காட்டி அவர்களுக்கு மறுக்கப்படுகிறது; பட்டா வழங்கப்படவில்லை. ஆகவே, அவர்கள் சலுகை பெறுவது மறுக்கப்படுகிறது. சாதாரண தலித் பகுதி மக்கள், ஏழையெளிய மக்கள்தான் அதிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற காரணத்தினாலே இந்தப் பட்டா வழங்குகிற முயற்சிகளில் அரசு ஈடுபட வேண்டும். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் காலங்காலமாக இருக்கிறது. இதுவா, அவர்களா, இவர்களா என்பதெல்லாம் இல்லை அது. தொடர்ந்து அப்படியே ஒரு Revenue இலாகாவின் மூலமாக வெள்ளைக்காரன் போட்ட சட்டப்படியே இன்றைய வரைக்கும் நாம் அதை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறோமே தவிர, அதிலே மாறுதல் காண்பதற்கான ஒரு முயற்சி எடுக்க முடியாமல் இருக்கிறது. அதையெல்லாம் மாற்றி, தலைப்பை மாற்றி, அவர்களுக்குப் பட்டா வழங்கச் செய்வதற்கான முயற்சிகள் எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, குத்தகைதாரர் சட்டத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. அதனுடைய, சட்டத்தினுடைய பெயரே, 1955 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம் என்றுதான் இருக்கிறது. அதிலே சொல்லப்படுகிற முதல் வாக்கியம் என்னவென்றால், நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருப்பது என்னவென்றால், இச்சட்டம் குத்தகைதாரர்களின் குத்தகை பாக்கி நிலுவை தவிர வேறு காரணங்களுக்காக நில வெளியேற்றம் செய்வது தடை செய்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே இருக்கிறது. ஆனால், குத்தகைக்காக நில வெளியேற்றம் செய்வதைத் தவிர, வேறு காரணங்களுக்காக நில வெளியேற்றம் செய்வது தடை செய்யப்படுகிறது. அப்படியென்றால் — குத்தகை சாகுபடி செய்கிறவர்கள் குத்தகைக்காகத்தான் நில வெளியேற்றமே செய்கிறார்கள். அதைத்தவிர வேறு காரணங்களுக்காக வெளியேற்ற வேண்டிய அவசியங்கள் என்பது அங்கொன்றும், இங்கொன்றுமாக ஏதாவது இருக்கலாமே தவிர, வேறு காரணங்கள் என்பதே இல்லை. ஆகவே, குத்தகைதாரர்கள் குத்தகை அளக்கவில்லை என்ற காரணத்தினால் நில வெளியேற்றம் செய்வதற்காகவே அது சட்டமாகப் பயன்படுத்தப்படுகிறது. ஆகவே, இதை மாற்ற வேண்டும்.

அதிலும் குறிப்பாக Revenue Court, என்பது உருவாக்கப்பட்டு நம்முடைய மாநிலத்தில் செயல்பட்டுக் கொண்டேயிருக்கிறது. முந்தைய

[திரு. வை. சிவபுண்ணியம்] [2006 ஆகஸ்ட் 8

ஆட்சியிலே நான் அதைப்பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன். இந்த Revenue Court என்பது விவசாயிகளுக்கு விரோதமான Court ஆகவே, அதைக் கட்டாயம் மூட வேண்டும் என்பது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய அழுத்தமான கருத்து. இது இருந்தால் விவசாயி வாழ முடியாது.

இன்னொன்றையும் சொல்கிறேன். வறட்சி, வெள்ளம், இந்தக் காரணங்களாலே பாதிக்கப்படுகிறபோது, நீங்கள் வரி வாய்தாவைத் தள்ளுபடி செய்கிறீர்கள். அவர்களுக்காக நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதேநேரத்தில் குத்தகை சாகுபடியாக பயன்படுத்திக் கொண்டிருக்கக்கூடிய விவசாயிகளுக்கும் குத்தகை தள்ளுபடி செய்ய வேண்டுமா, இல்லையா? அப்படி கடந்த 5 ஆண்டு காலங்களில், வறட்சி ஏற்பட்ட காலங்களிலே, வரியைத் தள்ளுபடி செய்தார்கள். குத்தகையைத் தள்ளுபடி செய்ய மறுத்தார்கள். அதனுடைய விளைவு நில வெளியேற்றம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டேயிருக்கிறது. ஆகவே, இந்த ஆட்சியிலே அதைப் பற்றி பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். குத்தகை வாங்குவதை ஒத்திவைப்பது என்பதே விவசாயிகள்மீது சுமையை ஏற்றுகிற காரணத்தினாலே குத்தகையை இரத்து செய்து, விவசாயிகளைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். இது கோயில், மடம், தர்ம ஸ்தாபன நிலங்களுக்கும் பொருந்துகின்ற வகையில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-00*

குறிப்பாக, இரண்டு, மூன்று கோரிக்கைகள் என்ற அடிப்படையில், தகுதிநிலை கிராமப் பணியாளர்கள். இவர்கள் கிட்டத்தட்ட 18 ஆயிரம் பேர்கள் பணி புரிந்து வருகிறார்கள். இவர்கள் V.A.O.-க்களுக்கு உதவியாளர்களாக இருக்கிறார்கள். அநேகமாக பெரும்பாலான பணிகளை இவர்களே செய்வதற்குரிய அந்த அனுபவத்தைப் பெற்றிருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் 10 ஆண்டுகளுக்குமேலே பணியிலே இருக்கக்கூடியவர்கள் நிரம்ப இருக்கிறார்கள். இவர்களிலே பட்டம பெற்றவர்களும், பத்தாம் வகுப்புக்குமேல் படித்தவர்களுமே கிட்டத்தட்ட இரண்டாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் இருப்பதாகச் செய்தி வருகிறது. ஆகவே, கிராம நிர்வாக அலுவலர் காலிப் பணியிடங்களே கிட்டத்தட்ட 2,575 இடங்கள் காலிப் பணியிடங்கள் இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. இதை நிரப்புவதற்கான முயற்சி என்ற அடிப்படையில் இவர்களைப் பணி உயர்வு செய்ய



2006 ஆகஸ்ட் 8] [திரு. வை. சிவபுண்ணியம்]

வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அது நியாயமாகப்படுகிறது. அவர்களுக்குப் பணி உயர்வு வழங்க வேண்டும்.

அதேபோல, அலுவலக உதவியாளர், பதிவறை எழுத்தர் போன்ற காலிப் பணியிடங்களிலே இவர்களை நிரப்பலாம். இவர்களுக்கு நிரந்தர அரசுப் பணியாளர்கள் பெறும் அனைத்துப் பயன்களும் தகுதியென அறிவித்திருந்தும், கால முறை ஊதியம், தேர்வு நிலை ஊதியம், இவர்களுக்கு வழங்கப்படவில்லை. இதை வழங்குவதற்கான முயற்சி எடுக்க வேண்டும். அதேபோல, பழைய பட்டாமணியார், கணக்குப்பிள்ளை என்று சொல்லப்படுகிறவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அரசாணையில் சொன்ன அந்த ஓய்வூதியம் அவர்களுக்குக் கிடைக்கவில்லையென்று சொல்கிறார்கள். வயதான நிலையிலே, மிகப் பாதித்த நிலையிலே இருக்கிற அந்த ஓய்வு பெற்றவர்களுக்கு 1,250 ரூபாய் என்று அறிவிக்கப்பட்டிருக்கிற அந்த ஓய்வூதியம் அவர்களுக்குக் கிடைக்கச் செய்வதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஆழிப் பேரலைபற்றி பேசப்பட்டது. விவாதம் வேறு விதமாகச் செல்கிறது. ஆனால், அரசின் சார்பிலும் சரி, சென்ற ஆட்சியில் சொல்லப்பட்ட கணக்கின் அடிப்படையிலே வந்த பணத்திற்கும், செலவு செய்த பணத்திற்கும், மீதம் இருக்கிற பணத்திற்கும் வித்தியாசம் இருக்கிறது. இதை யாரும் மறுக்க முடியாது. இது அதிகாரபூர்வமாக, எழுத்துபூர்வமாக சொல்லப்பட்டிருக்கிற செய்தி. ஆகவே, இந்த ஆழிப் பேரலையிலே கிட்டத்தட்ட பெரும் பகுதியான பணம் செலவழிக்கப்படவில்லை என்பதுதான் சென்ற ஆட்சியிலே நடைபெற்ற உண்மை. அது இந்த ஆட்சியிலே, செலவழிக்கப்படாமல் இருக்கிறது என்பதை உணர்ந்திருக்கிற காரணத்தினாலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உலக வங்கியினுடைய தேசிய தலைவர்களைச் சந்தித்துப் பேசுகிறபோது, அதைப்பற்றிச் சொல்லிவிட்டு, திரும்ப இந்தப் பணம் விரைவாக, இந்த ஆண்டிலே ஆயிரம் கோடி ரூபாய் செலவழிக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார். ஆகவே, ஆழிப் பேரலையினுடைய பாதிப்பை உணர்ந்து அதைச் செலவு செய்வதற்காக முயற்சி எடுத்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்திலே என்னுடைய பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயத் தொழிலாளர்களுக்கான நல வாரியம் அமைக்கப்பட்டிருப்பது என்பது எங்களுடைய நீண்ட காலக் கோரிக்கை. அந்தக் கோரிக்கையை ஏற்று நம்முடைய முதலமைச்சர்

[திரு. வை. சிவபுண்ணியம்] [2006 ஆகஸ்ட் 8

அவர்கள் விவசாயத் தொழிலாளர்களுக்கான நல வாரியத்தை அறிவித்திருக்கிறார்கள். அதற்கான சலுகைத் திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள், முடியுங்கள். (குறுக்கீடு) சீக்கிரம் முடியுங்கள். ஒரே ஒரு வார்த்தையிலே முடியுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, இந்த விவசாயத் தொழிலாளர்களுக்கான நல வாரியம் அமைத்து சலுகைகளை அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், இந்த அரசையும் பாராட்டுகிற வகையில், அடுத்த மாதம் 11 ஆம் தேதி திருவாரூரிலே இலட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளர்களைத் திரட்டி, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பங்கேற்கும் மிகப் பிரமாண்டமான விழா அங்கே நடைபெற இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த விழாவிலே அவர்களுக்கு நன்றி தெரிவிக்க இருக்கிறோம். (மணியடிக்கப்பெற்றது)

அதேபோல, கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு அருகிலே இருக்கிற ஓசூரிலே அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலமாக தொழில்கள் தொடங்குவதற்காக சில இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அங்கிருந்து ஒரு கோரிக்கை மனுவுடன் தோழர்கள் சொன்ன செய்தி என்னவென்றால், அந்தப் பகுதியாக இருக்கிற தேன்கனிக்கோட்டை, கௌமங்கலம் பகுதிகளில் சுமார் 25 ஏக்கர், 30 ஏக்கர் நிலங்களை கர்நாடக மாநிலத்திலே இருக்கக்கூடிய ஒரு இண்டர்நேஷனல் கம்பெனிக்காக சென்ற ஆட்சியிலே பத்தாயிரம் ரூபாய் மட்டும் அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டு, அவர்களுக்கு அந்த நிலம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தி வருகிறது. ஆகவே, தொழில் தொடங்குவதற்காக ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்றால், அவர்கள் சொன்னது தரிசு நிலங்களை அப்படிப்பட்ட காரியங்களுக்கு ஈடுபடுத்துவேன் என்று சொன்னார்கள். அவர்கள் சொல்கிற கோரிக்கை, அந்தப் பகுதிகளிலே மிக வளமையான, செழுமையான பகுதியாக இருக்கிறது. 400 போர் வெல்லுக்கு மேலே அங்கே பயன்பட்டுக்கொண்டு விவசாயம் செழிப்பாக இருக்கிற பகுதிகளிலே இப்படிப்பட்ட காரியத்திற்கு அந்த நிலத்தை வழங்குவது என்பதை அந்த விவசாயிகளும், அங்கே வாழ்கிற மக்களும் எதிர்க்கிறார்கள். ஆகவே, அதை இரத்து செய்வதற்கான முயற்சியையும், அதைப்பற்றி என்ன செய்யலாம் என்பதைப்பற்றியும் இந்த அரசு சிந்தித்து முடிவெடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



2006 ஆகஸ்ட் 8] [திரு. வை. சிவபுண்ணியம்]

சொன்னார்கள். 10 ஆண்டுகள் சிறையிலே சட்டத் துறையிலே இருந்தவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை நாலும் திரும்ப வலியுறுத்துகிறேன். அதேபோல, கறம்பக்குடியை வட்டத் தலைநகரமாக ஆக்க வேண்டுமென்பது எங்களுடைய ஆலங்குடி சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கை. அதை ஏற்று நிறைவேற்ற வேண்டும். சிவகங்கையிலே ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் வேண்டுமென்று குணசேகரன் அவர்கள் கேட்டிருக்கிறார். அதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டு முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீர. இளவரசன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் கு. செல்வம்.

***திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களே, தமிழகத்திலே நீதிமன்றங்களிலே தமிழ் இல்லை என்ற ஒரு குறை இருக்கிறது. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் மேற்கு வங்கத்திலே, உத்தரப் பிரதேசத்திலே, இராஜஸ்தானிலே, எப்படி அவர்கள் தாய்மொழியைக் காப்பாற்றுகிறார்கள், தாய்மொழியை உயர் நீதிமன்றங்களிலே வாதாட, அலுவல் முறை நடைபெற சட்டம் இயற்றி இருக்கிறார்கள் என்பதைப் பார்த்து, அதேபோன்று தமிழகத்திலே உயர் நீதிமன்றத்திலும், மற்ற நீதிமன்றங்களிலும் தமிழில் வாதம் செய்ய வேண்டும். அரசியல் சாசனப் பிரிவு 348 (2)—ன்கீழ், அந்தந்த மாநில தாய் மொழிகளிலே அவர்கள் வாதிடலாம், அலுவல்களை நடத்தலாம் என்று 1963—ல் பாராளுமன்றத்திலே சட்டம் இயற்றியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, 26—1—1965-லிருந்து சட்டப் பேரவையிலே தீர்மானம் இயற்றி, ஆளுநர் ஒப்புதல் பெற்று, அந்தந்த மொழிகளிலே அலுவல்களை நடத்தலாம் என்று ஒரு தீர்ப்பு இருக்கிறது. அந்த அடிப்படையிலே நமது அரசும், கலைஞர் அவர்களும் தமிழிலே உயர் நீதிமன்றத்திலே வாதாட வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்படவேண்டும்.

பிற்பகல் 1—05

சிறைத் துறையிலே இளைஞர்களை மிகவும் கொடும் குற்றவாளிகளுடன் இணைத்து சிறைகளிலே அடைக்கிறார்கள். இதனால், நம்முடைய தமிழ்ச் சமூகத்தைச் சீர்தூக்கிப் பார்ப்போமேயானால், ஒரு சிறையிலே 18 வயது முதல் 21 வயதுள்ள இளைஞர்களையும், நெடுங்காலமாகச் சிறையில் இருப்பவர்களையும்

அங்கே ஒன்றாகச் சிறையில் அடைப்பதனால், வெளியில் வரும் இளைஞர்கள், தன்னுடைய பாதையை மாற்றிக்கொண்டு, சமூகத்திற்கு எதிராக திரும்புகிறார்கள். இப்படிப்பட்ட ஓர் அவல நிலையை நாம் போக்க வேண்டுமென்றால், புதுக்கோட்டையிலே Bristal பள்ளிக்கூடம் என்று ஆங்கிலேயர் காலத்தில் இயக்கப்பட்டது. அந்தப் பள்ளிக்கூடத்திலே, சிறார்களை அங்கே சேர்க்க வேண்டும். அவர்கள் திருந்தி வாழ தமிழக அரசு ஏற்பாடு செய்யவேண்டும். அப்படி தமிழகத்திலுள்ள அனைத்துச் சிறைச்சாலைகளிலும் இருக்கின்ற இளைஞர்களை, புதுக்கோட்டையில் இருக்கின்ற Bristal பள்ளிக்கூடத்தில் சேர்த்தால், நெல்லையில் இருப்பவர்களும், குமரியில் இருப்பவர்களும், பார்ப்பதற்கு வசதியில்லாமல் இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வம் அவர்கள் தெரிவித்தார்கள். Bristal இல்லை, Borstal என்று திருத்திக் கொள்ளவேண்டும். 18 வயதிலிருந்து 21 வயது வரைக்கும் உள்ள இளம் கைதிகளை அங்கே வைத்திருக்கிறோம். அவர்கள் 21 வயது வரை அங்கேதான் இருக்கிறார்கள்.

**திரு. கு. செல்வம்:** புதுக்கோட்டையில் மட்டும் அந்தப் பள்ளிக்கூடம் இருப்பதாகத் தெரிய வருகிறது. அதை நாம் இன்னும் கோவை, திருச்சி, மதுரை போன்ற தலைநகரங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டும்.

அதேபோன்று, சிறைச்சாலைகளிலே அடைபட்டிருக்கும் சிறைவாசிகள், அவர்களுக்கு இரத்தப் பரிசோதனை செய்யாததால், காச நோய், மற்றும் H.I.V. Positive—க்கு (எய்ட்ஸ்) ஆளாகிறார்கள். அப்படி பல நோயாளிகள் சிறைச்சாலைகளிலே அனைத்து சிறைவாசிகளுடன் பழகும்பொழுது, ஓர் அச்ச உணர்வு இருப்பதாகத் தெரிய வருகிறது. உடனடியாக சிறைத் துறை அதில் கவனம் செலுத்த வேண்டும்.

அதேபோன்று, முதல் வகுப்பு, சாதாரண வகுப்பு என்று சிறைச்சாலைகளிலே இருக்கிறது. முதல் வகுப்பிலே யாரெல்லாம் அனுபவிக்கிறார்கள் என்று ஒரு பட்டியல் எடுத்தால், ரூ.700 கோடி அளவிற்கு நாட்டையே கொள்ளை அடித்தவர், அந்தச் சிறைச்சாலையிலே முதல் வகுப்பை அனுபவிக்கிறார். எந்தப் பழியும்,



தமிழர்கள் எல்லாம் அங்கே சாதாரண பாவமும் செய்யாத இளைஞர்கள், தமிழர்கள் எல்லாம் அங்கே சாதாரண உணவை உண்டு கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2004 ஆம் ஆண்டு ஆறு Jailor-களை இந்த அரசு நியமித்திருக்கிறது. அவர்களுக்கு எந்தப் பணியும் தெரியவில்லை என்று ஒரு புகார் எழுந்தபோது, அங்கே Assistant Jailor-களாக இருப்பவர்களுக்கு கடந்த 15 ஆண்டு காலமாக எந்த ஒரு பணி முன்னேற்றமும், பணி உயர்வும் அளிக்கப்படவில்லை. 1985 முதல் 25 Assistant Jailor-கள் பதவி உயர்வு பெறாமல் இருக்கிறார்கள்.

தமிழகத்திலே, சிறைச்சாலைகளிலே உணவு வழங்கும் முறையை நாம் பார்த்தால், மொத்தம் 460 கிராம் உணவு ஒரு நாளைக்கு வழங்கப்படுகிறது. காலையிலே 90 கிராம் உணவும், மதியத்திலே 200 கிராம் உணவும், இரவிலே 170 கிராம் உணவும் உட்கொள்கிறார்கள். ஆக, வேறு மாநிலத்திலே, அண்டை மாநிலமான ஆந்திராவிலே பார்த்தால், ஒரு நாளைக்கு 750 கிராம் உணவு வழங்கப்படுவதாகத் தெரிய வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதில் தலையிட்டு இந்த உணவு முறையை மாற்றம் செய்யவேண்டும்.

அதேபோன்று, காய்கறிகள் வாங்குவதில் Tender விடப்படுவதாக அறியப்படுகிறது. Tender விடப்படுவதால், அந்த ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் மிகவும் குறைந்த விலைக்கான காய்கறிகளை, சிறைக்கு அனுப்பி வைப்பதாகக் கேள்விப்படுகிறோம்.

அதேபோன்று, பக்கத்திலுள்ள கேரள மாநிலத்திலே, வாரத்திற்கு ஒரு முறை மீன் குழம்பு சாப்பாடும் போடுவதாக அறிய வருகிறது. நம்முடைய அமைச்சர் அவர்கள் அதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று சொல்லவேண்டும். சிறைக் காவலர்கள் ஊதியத்தையும், தமிழ்நாடு காவல் துறை ஊதியத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால், ஏறக்குறைய பன்மடங்கு குறைவாகப் பெறுகிறார்கள். அதிலும் நம்முடைய அரசு கவனம் செலுத்த வேண்டும். சென்னை, பாளையங்கோட்டை, கோவையைத் தவிர, எந்தச் சிறைச்சாலைகளிலும் Superintendent என்ற பதவி இல்லாமல் இருப்பதாகத் தெரிய வருகிறது. உயர் நீதிமன்றத்திலே நீதிபதிகள் நியமனத்தில் உடனடியாக சமூக நீதிக் கொள்கையைப் பின்பற்றி, இட ஒதுக்கீட்டு அடிப்படையிலே நியமனம் செய்யவேண்டும். சட்ட உதவி மையம் செயலற்றுக் கிடக்கிறது. அந்த சட்ட உதவி மையத்தை மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் செயல்படுத்தவேண்டும்.

பிற்பகல் 1–10

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** சட்ட உதவி மையம் அல்ல, சட்டக் கமிஷன்.

**திரு. கு. செல்வம்:** மாநில மனித உரிமை ஆணையத்திற்கு எந்த சட்ட அதிகாரமும் இல்லாமல் இருக்கிறது. அந்த ஆணையத்திற்குச் சட்ட அதிகாரத்தை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். சிறைக்குள்ளே சாதிப் பாகுபாடு இருப்பதாகத் தெரிய வருகிறது. ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரை ஒரு Cell-லில் அடைப்பதும், மற்றொரு சமூகத்தினரை வேறொரு Cell-லில் அடைத்தும் பாகுபாடு பார்க்கிறார்கள். இது களையப்படவேண்டும். குறிப்பாக, ஒரு சமூகத்தைச் சார்ந்தவரைத் தொடர்ந்து சிறைச்சாலையிலே அடித்துக் கொடுமைப்படுத்தி வருவதாக நாம் அறிகிறோம்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களே, தமிழகத்தில் உள்ள சிறைச்சாலைகளில், குறிப்பாக, தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் எத்தனை சதவிகிதம் பேர் தொடர்ந்து சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள், எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்ற Statistics - புள்ளிவிவரத்தை இந்த அவைக்கு அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட திட்டக்குடியிலே, கடந்த 15 ஆண்டுகளாக வாடகை இடத்தில் நீதிமன்றம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. பொது மக்களும், வழக்கறிஞர்களும், நீதிமன்றம் இனிமேல் வாடகை இடத்தில் இயங்கக்கூடாது என்று பணம் வசூல் செய்து, அரசிடம் ஒப்படைத்தார்கள். இன்று வரை, கடந்த 4, 5 வருடங்களாக, அந்தப் பணம் எங்கு சென்றது; அதற்கான நடவடிக்கை எடுத்தார்களா? திட்டக்குடியிலே ஏன் இதுவரை சொந்தமாக அரசு நீதிமன்றக் கட்டடம் கட்டவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் தெரியப்படுத்தவேண்டும்.

அதேபோன்று, வெள்ளைக்காரன் காலத்தில், திட்டக்குடியிலே ஒரு Sub-jail இருந்தது. அது, காலப்போக்கிலே மாற்றப்பட்டுவிட்டது. இப்போது சேலம் border-லேயிருந்து யாரையாவது அங்கே கைது செய்ய வேண்டுமென்றால், விருத்தாசலம் Sub-jail-க்குக் கொண்டுபோகக்கூடிய ஓர் அவல நிலை ஏற்படுகிறது. இதையும் நம்முடைய அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இட ஒதுக்கீட்டிலே வருவாய்த் துறையிலே எந்தவிதமான ஒரு முன்னேற்றமும் இல்லை; 1997–லேயிருந்து குறிப்புகள் இருக்கின்றன.



குறிப்பாக, காஞ்சிபுரம் மாவட்டத்திலே, துணை வட்டாட்சியர் பட்டியலிலே, இதுவரை எந்தத் தாழ்த்தப்பட்ட மக்களும் சேர்க்கப்படவில்லையென்று ஒரு குறை இருக்கின்றது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நீக்கவேண்டும்.

அதேபோன்று, கிராமப்புறங்களிலேயிருந்து வரும் பொது மக்கள், வருமானச் சான்றிதழ், சாதிச் சான்றிதழைப் பெற வேண்டுமென்றால், கையூட்டுப் பெறாமல் சான்றிதழ்கள் பெறவேண்டும் என்ற நிலையை நீங்கள் உருவாக்க வேண்டும். எதற்கெடுத்தாலும் 'நிர்வாகத்திலே ஆள் இல்லை; இந்த இடங்களை அரசு பூர்த்தி செய்யவில்லை; ஆகையால், ஒரேயொரு அலுவலர் எத்தனை வேலைகளைப் பார்ப்பது' என்று வருவாய்த் துறையிலே சொல்லிக் கொண்டு வருகிறார்கள். இந்த நிலையைப் போக்கி, காலியான இடங்களில் சமூக நீதி அடிப்படையிலே வேலைவாய்ப்பைக் கொடுத்து, இவர்களுக்கு முன்னுரிமை அளிக்குமாறும், ஏழையெளிய மக்கள் உடனுக்குடன் வருவாய்த் துறையிலே தங்களுடைய குறைகளைப் போக்கும்வண்ணமாகவும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கூறி முடிக்கிறேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தணிகை மாநகரின் மேற்நோக்கில், ஆலங்காட்டான் ஆடும் தாமிர சபையில், குடதலை ஆற்றின் குக்கிராமம் குப்பங்கண்டிகையில், எமை ஈன்று புறம் தந்த தாய் சின்னம்மாவிற்கும், அருமைதான் தேக்க பெருமை கல்வி தந்த தந்தையார் சொ.க. கோவிந்தசாமிக்கும், எம் வளர்பொழுதில் மகிழ்வூட்டி எமை வளர்த்த உறைவிடமாம் எமது ஊருக்கும் வணக்கம்.

சட்டமன்றம்; அதிகார ஜாம்பவான்களின் இடம் எனும் நிலை வீழ்த்தி, சாதாரண சாமானியனும், சட்டமியற்றும் அவையின் உறுப்பினர் எனக் காட்டி, சமத்துவச் சபையாக மாற்றிட்ட சரித்திர நாயகி புரட்சித் தலைவி அம்மாவை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எனும் மக்கள் இயக்கத்தை, மாசுபடாமல் காத்து, தமிழ் மக்களுக்குத் தனையீன்று, தமிழக நலம் காத்து வரும் தன்னலமற்ற தியாகச் சுடரே, மாண்புமிகு அம்மாவே!

வடக்கெல்லை மூலை முடுக்கில், சாதாரண விவசாய நடுத்தரக் குடும்பத்தில் பிறந்த எம்மை, என் இதயம் காத்து, இயக்கத்தின

திருத்தணி சட்டமன்ற வேட்பாளராக அறிவித்து, மக்களிடம் அறிமுகப்படுத்தி, தொகுதியிலே பயணம் செய்து, வாக்கு சேகரித்து, வெற்றியை ஈன்றெடுத்து, என்னைச் சட்டப் பேரவை உறுப்பினராக்கி அழகு பார்க்கும் இதய தெய்வமே! அடிமட்டத் தொண்டனும் கழகத்தைக் கட்டிக் காக்கும் பொறுப்புடையவன் என்பதைக் கருத்திலே காட்டி, காஞ்சிபுரம் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளராக என்னை நியமித்து, கழகத் தொண்டனிடம் அடையாளம் காட்டியவரே! 'வெள்ளைக்கு இல்லை கள்ளச் சிந்தை'. தூய உள்ளம் கொண்டவர்களிடம் கபட எண்ணம் இருப்பதில்லை. அதுபோல, தமிழக மக்களின் தூய உள்ளங்களில் என்றைக்கும் முதல்வராய் வாழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவே! (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–15

எல்லா சமய ஆலயங்களிலும் அன்னதானத் திட்டமாய், மாணவர்களின் கல்வித் துணையாய், மாரி அல்லாது காரியம் இல்லை என்பதால் வான் மழைக்கு சேமிப்புத் தந்த சேகரிப்புத் திட்டமாய், மனை உறையும் மகளிர் வினையாற்ற விரைந்தே நீ தந்த திட்டத்தால் சுய உதவிக் குழுக்களாய் சுடர் பரப்பி மகளிர் வாழ்க்கையின் மறுமலர்ச்சியாய், சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் என்பதால், ஏர் உழவருக்கும் பாதுகாப்புத் திட்டம் தந்திட்ட நவயுக பெண் பாரதியே, தலித் மக்களுக்கு தனித் தொகுதி என்றில்லாமல் பொதுத் தொகுதியிலே நிற்க வைத்து வெற்றி பெறச் செய்ய வைத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவே, உம்மை வணங்கி உம் பொற்பாதங்களிலே என்னுடைய நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன்.

திருத்தணி தொகுதி மக்களின் குரலை இந்த அவையிலே ஒலிக்கச் செய்ய என்னை வெற்றி பெற வைத்து அனுப்பி வைத்த திருத்தணி தொகுதி வாக்காளப்பெருமக்களுக்கும், எனது வெற்றிக்கு அயராது பாடுபட்ட ஜனநாயக மக்கள் கூட்டணியினருக்கும், கழகத் தோழர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் கணினி வசதிகள், கீழ்மட்ட அளவிலும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் கிராம அளவு முதல் மாவட்ட அளவு வரை உள்ள அனைத்து நில நிருவாக நடைமுறைகளையும் கணினிமூலம் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டு, பெரம்பலூர் மாவட்டத்தில் ஒரு முன்னோடி திட்டமாக மேற்கொள்ள



திட்டமிட்டு, அம்மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களிலும், மூன்று சார் பதிவாளர் அலுவலகங்களிலும் கணினிகள் பொருத்தப்பட்டு, கணினிமூலம் தகவல் பரிமாற்றம் நடைபெற்று வருகிறது. இதனை அனைத்து மாவட்டங்களிலும் தொடர வேண்டும். இதற்காக கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்படவில்லை. கணினி தொடுதிரை, தகவல் மேடைகள் ஒரு வட்டத்தின் நில அளவை வெளிப்படை விவர மேடைகள் ஆகும். மாண்புமிகு அம்மாவின் ஆட்சியில் 127 வட்டாட்சியர் அலுவலகங்களில் வைக்கப்பட்டு மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். மீதமுள்ள 79 வட்டாட்சியர் அலுவலகங்களிலும் வைக்கப்பட வேண்டும். அனைத்துத் துறை அலுவலர்களுக்கும் நில நிர்வாகச் சட்டம் மற்றும் குடிமைப் பயிற்சி அளிக்கும் பணிக்கால பயிற்சியிலே கட்டாயமாக்கப்பட வேண்டும்.

சாதிச் சான்று, இருப்பிடச் சான்று ஆகியவற்றை கிராம நிர்வாக அலுவலரே சான்றளித்தால் போதுமானது என்ற நிலை உருவாக்கப்பட வேண்டும். ஆண்டின் பசலியில் நடத்தப்படும் வருவாய் தீர்வாயம் ஆண்டுக்கு இருமுறை நடத்தப்பட வேண்டும். இதனால் நில நிர்வாகம் மேம்படும். வட்டாட்சியர்மூலம் வழங்கப்படும் வாரிசு சான்று பெறுவதற்கு ஆறு மாதம் கூட ஆகின்ற அவல நிலையை மாற்றி விண்ணப்பம் செய்த 15 நாட்களுக்குள் வட்டாட்சியரோ அல்லது துணை வட்டாட்சியரோ நேரடியாக ஆய்வு செய்து வழங்கிட வேண்டும்.

சொத்துக்கள் வாங்கி சார் பதிவாளர் அலுவலகத்திலே பதிவு செய்கின்றபோது நில உடைமைகளை மாற்றுவதற்கும் அந்த நில உடைமைகள் பட்டாவுடன் கிடைப்பதற்கும் ஆவன செய்ய வேண்டும். கணவனால் கைவிடப்பட்டோருக்கான சான்றும், ஆதரவற்ற முதியோருக்கான உதவித் தொகையும் உடனடியாக ஆய்வு செய்து முதியோருக்கு வாரிசு இருந்தாலும் அவர்களால் முதியோருக்கு உதவி இல்லை என்னும்பட்சத்தில் உடனடியாக உதவித் தொகை வழங்கி உத்தரவிட இந்த அரசு முன்வர வேண்டும்.

திருவாலங்காடு மற்றும் மணவாள நகர் சார் பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அரசு முன்வர வேண்டும். கிராம நிர்வாக அலுவலர்களுக்கு உதவியாக போதுமான கிராம உதவியாளர்களை தேர்வு செய்து நியமனம் செய்திட வேண்டும்.

26–12–2004 அன்று காலை 6.28 மணிக்கு சுனாமி எனும் ஆழிப்பேரலையின் சீற்றத்தில் சிதைந்து, உருக்குலைந்த தமிழகக்

கடற்கரை கிராமங்களை ஆழிப் பேரலையின் வேகத்தை மிஞ்சும்வகையில் செயல்பட்டு உரிய நடவடிக்கையின்மூலம் சுமார் மூன்று இலட்சத்து ஒன்பதாயிரம் மக்களின் ஆற்றொணாத் துயரத்தை நீக்கியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா. ஆழிப் பேரலை அடையாளம் காட்டும் இச்சூழ்நிலையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கை பற்றி அரசின் கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்படவில்லை. எனவே, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியிலே நில அதிர்வுகளைக் கண்டறிந்து இயற்கைச் சீற்றத்திலிருந்து மக்களைக் காக்கும் கருவிகளை மாநில அரசு கடற்கரைக் கிராமங்களில் நிறுவும் என்று சொல்லி ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதை இந்த அரசு உடனடியாகச் செய்வதற்கு ஆவன செய்ய வேண்டும்.

பேரிடர் மேலாண்மை விழிப்பு குறித்து பள்ளி, கல்லூரி மாணவர்கள் வரை அவர்கள் பயன்பெறுகின்றவகையிலே, அறிந்துகொள்ளுகின்ற வகையிலே கண்காட்சிகள், கருத்தரங்குகள் நடத்தப்பட வேண்டும்.

உசூர் சிரஸ்தார், தஸ்தாவேஜ், ஜமாபந்தி, தபேதார், டவாலி, பசலி போன்ற பல மொகலாயச் சொற்கள் வருவாய்த் துறையிலே இன்றைக்கும் புழக்கத்தில் அதிகமாக உள்ளது. இவைகளைத் தமிழிலே உள்ள சொற்களை நடைமுறைப்படுத்திட முனைப்புக் காட்ட வேண்டும்.

ஏப்ரல் முதல் கல்லூரி, பள்ளிகள் திறக்கின்ற காலம் வரை மாணவர்களின் நலனை முன்னிட்டு சாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் அவர்களுக்குக் காலதாமதமின்றி கிடைத்திட அக்காலங்களிலே வட்டாட்சியர் அலுவலகங்களிலே கூடுதலாக அதிகாரிகளை நியமனம் செய்ய வேண்டும் என்றும் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களிலே ஏழையெளியோர் பயன்பெறுகின்றவகையிலே தொகுப்பு வீடுகள் கட்டப்படும் நிலை உள்ளது. நகர்ப்புறங்களிலே இல்லை. எனவே, திருத்தணி போன்ற நகர்ப்புறங்களிலே நகர்ப்புற ஏழை எளிய மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு குடிசை மாற்று வாரியத்தின்மூலம் அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டித்தர இந்த அரசு முன் வர வேண்டும்.

*பிற்பகல் 1—20*

கிராம நிர்வாக அலுவலர் பதவிக்கு நியமனம் செய்ய 2,500 காலியிடங்கள் இருக்கின்றன. இதை உடனடியாக இந்த அரசு பூர்த்தி



செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். திருத்தணி தொகுதி, மிகவும் பின்தங்கிய தொகுதி. இப்பகுதி முன்னேற்றத்திற்கும், படித்த வேலையில்லாத இளைஞர்களின் நலனைக் கருத்தில் கொண்டும், வேலைவாய்ப்பு பெருகிட தொழிற்சாலைகள் அமைத்துத்தர அரசு முன்வர வேண்டும்.

திருத்தணி நகர் மக்களின் குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண பாலாற்றில் திருப்பாற்கடல் என்னும் இடத்திலிருந்து அரக்கோணம் வழியாக திருத்தணிக்குக் குடிநீர் கொண்டுவர அம்மா அவர்கள் ஆட்சியிலே, திட்ட மதிப்பீடு செய்யப்பட்டு, ஆய்வில் உள்ளது. இத்திட்டத்தை விரைந்து முடித்து, திருத்தணி நகரின் குடிநீர்ப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்திட வேண்டும்.

திருத்தணி நகரத்திலே அறுபடை வீடுகளில் ஒன்றான திருமுருகப் பெருமான் ஆலயம் உள்ளது. பல்வேறு ஊர்களிலிருந்து பக்தர்களும், சுற்றுலா வருபவர்களும் வருவதால், சுற்றுலாத் தலத்திற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்துதர இந்த அரசு முன்வர வேண்டும். திருத்தணி நகரிலே பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்ப போதுமான அளவு கழிவுநீர் செல்வதற்கும், வடிவதற்கும் வசதி இல்லை. எனவே, பாதாள சாக்கடைத் திட்டம் ஒன்றைக் கொண்டு வந்து, சுகாதாரச் சீர்கேட்டைப் போக்க வேண்டும். திருத்தணிக்கு வெளியூரிலிருந்து வரும் பேருந்துகள் அனைத்தும் வெளிப்புற வழியாகச் செல்ல புறவழிச்சாலை ஒன்றை அமைத்துத்தர வேண்டும். உள்ளூர் பேருந்துகள் நிற்பதற்கென்று தனியாக ஒரு பேருந்து நிலையமும், வெளியூர் பேருந்துகள் நிற்பதற்கென்று தனியாக ஒரு பேருந்து நிலையமும் அமைத்திட வேண்டும்.

கடம்பத்தூர் ஒன்றியத்தில், அதன் மையப்பகுதியாக இருக்கும் பேரம்பாக்கத்தில், அரசு கலைக் கல்லூரி ஒன்றை அமைத்திட வேண்டும். திருத்தணி நகர மக்களின் நீண்டநாள் கோரிக்கையும், வழக்கறிஞர்களின் கோரிக்கையுமான சார்பு நீதிமன்றம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பு, ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியிலே வெளியிடப்பட்டது. அதை உடனடியாக நிறைவேற்றுவதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டும்.

திருத்தணி அரசு மருத்துவமனைக்குத் தினந்தோறும் 300—க்கும் மேற்பட்ட வெளிநோயாளிகள் வந்து செல்கின்றனர். திருத்தணி—திருப்பதி பை—பாஸ் சாலையில் அடிக்கடி விபத்து ஏற்பட்டு, மனித உயிர்கள் மடிகின்றன. எனவே, திருத்தணி அரசு மருத்துவமனையில்

விபத்துக்கென்று ஒரு பிரிவையும், அவசர தீவிர சிகிச்சைப் பிரிவு ஒன்றையும் உருவாக்கி, வட்ட மருத்துவமனையாக உள்ளதை மாவட்ட அளவிலான மருத்துவமனையாக உயர்த்துவதற்கும், அடிப்படை வசதிகளுக்கும் ஆவன செய்திட வேண்டும். (மணியடிக்கப்பெற்றது.) இரண்டு நிமிடங்களிலே பேசி முடித்துவிடுகிறேன். இதுதான் முதல் பேச்சு, கன்னிப் பேச்சு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எழுதி வைத்துப் படிக்கிறீர்கள். அதை அமைச்சரிடம் கொடுத்தால், செய்துவிடப் போகிறார். இது எதற்கு?

**திரு. கோ. அரி:** திருத்தணி நகரத்தில் மட்டுமல்லாது, திருத்தணி தொகுதியிலே, நீர்நிலைப் புறம்போக்கு, மேய்க்கால் புறம்போக்கு, குட்டைப் புறம்போக்கு, மந்தைவெளிப் புறம்போக்கு போன்ற இடங்களிலே நிலையான கட்டமைப்பு கொண்ட வீடுகள் கட்டிக்கொண்டு வாழ்கின்றவர்களுக்கு, அரசு விதிகளைத் தளர்த்தி, அவர்கள் வாழ்கின்ற இடங்களிலே வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசு முன்வர வேண்டும். திருத்தணிப் பகுதியிலே அரசு மருத்துவக் கல்லூரி ஒன்றையும், அரசு பொறியியல் கல்லூரி ஒன்றையும், அரசு சட்டக் கல்லூரி ஒன்றையும் அமைத்திட இந்த அரசு முன்வர வேண்டும். திருத்தணி தொகுதியில் நிறைய கிராமங்களுக்குப் பேருந்து வசதி இல்லை. பேருந்து வசதி இல்லாத கிராமங்களுக்கு உடனடியாக அரசுப் பேருந்துகளை விடுவதற்கு அரசு ஆவன செய்யவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரிடம் கொடுத்துவிட்டால் நேரம் மிச்சமாகும்.

**திரு. கோ. அரி:** ஒன்றே ஒன்று. திருவாலங்காடு ஒன்றியம், குப்பங்கண்டிகை கிராமத்திற்கும், கடம்பத்தூர் ஒன்றியம், மடத்துக்குப்பம் கிராமத்திற்கும் இடையே உள்ள கொசஸ்தலை ஆற்றில், அப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான தரைப்பாலம் அமைத்து, அப்பகுதி மக்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு முன்வர வேண்டும். சித்தாபுரம் ஊரில் கொசஸ்தலை ஆற்றில் தரைப்பாலம் அமைத்துத்தர வேண்டும். கிராமப்புறங்களிலும், நகரங்களிலும் சிறு மின்விசை மோட்டார் பம்புகள்மூலம் சின்டெக்ஸ் தொட்டி வைத்து, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் குடிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்பட்டது. அந்த நல்ல திட்டம் மீண்டும் குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் செயல்படுத்தப்பட வேண்டும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



இறுதியாக ஒன்றே ஒன்றை மட்டும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*"உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்*
*உள்ளத்து ளெல்லாம் உளன்"*

என்னும் தமிழ்மறைக்கேற்ப, உள்ளத்தில் உண்மை வைத்து, தூய்மையை அதில் தேக்கி, வாய்மையில் வாகை சூடும் புரட்சித் தலைவியே. கிராமங்கள் அடங்கிய தொகுதியா? இது வேண்டாம் என அலறும் அரசியல்வாதிகளின் மத்தியில், நிமிர்ந்த நன்னடையாய், நேர்கொண்ட பார்வையாய், கிராமத்துப் பூபாளமாய், ஏழையெளியவர்களின் உளங்கவர்ந்த கிராமத்தின் முதுகெலும்பே, புரட்சித்தலைவி அம்மாவே! நகரத்தில் நாங்களே எனும் நரகல்வரியினைக் கூர்பிளந்து, நகரமும் நமது கோட்டை என்று தோள் உயர்த்தி, ஏகடியத்தை மடியச் செய்தவரே, நாளைய தமிழகத்தின் புதுவாழ்வே, பொன்னின் குடம் உடைந்தால் பொன்னாகும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். உறுப்பினர். உட்காருங்கள். உட்காருங்கள்.

**திரு. கோ. அரி:** கடைசியாக, பாவேந்தரின் பாடலுடன் என் உரையை நிறைவு செய்கிறேன்.

*"சிங்கக் குகையில் நரிகட்கு இடம் தந்தோம்*
*செந்தமிழ் நாட்டின் உரிமை இழந்தோம். ...*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1–25

***மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்பொழுது, பொதுவானவர்கள் போட்டியிடுகின்ற தொகுதியில் தாழ்த்தப்பட்டவரை நிறுத்திவைத்து வெற்றிபெறச் செய்தார் அவர்களுடைய தலைவி என்று சொன்னார். 1996 ஆம் ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் கோவை மேற்கு தொகுதியில் அண்ணன் சி.டி. தண்டபாணி அவர்களை நிறுத்தி வெற்றிபெறச் செய்தார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** ஒப்பற்றத் தலைவர் கலைஞர் அவர்கள், 1984 ஆம் ஆண்டு ஆலந்தூர் தொகுதியிலே தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஆபிரகாம் அவர்களுக்கு இடம் தந்து, வெற்றிபெறச் செய்த பெருமை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு உண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய் மற்றும் நீதி நிருவாகம், சிறைத் துறை மற்றும் ஏனைய மானியக் கோரிகைகள்மீது 8 உறுப்பினர்கள் இங்கே தங்களுடைய கருத்துகளைத் தெரிவித்து உரையாற்றியிருக்கின்றார்கள்.

மாண்புமிகு. பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய உயிரினும் மேலான தலைவர், தமிழினத் தலைவர், டாக்டர் கலைஞர் அவர்கள், சாதாரண விவசாயக் குடியிலே பிறந்த என்னையும், ஐந்து முறை சட்டமன்றத்திலே போட்டியிடுவதற்கு வாய்ப்பளித்து, இரண்டு முறை அமைச்சராக்கி, ஒருமுறை சட்டமன்ற உறுப்பினராக்கி, ஊராட்சி ஒன்றியத்தினுடைய பெருந்தலைவராக்கி, என்னை அரசியலிலே வளர்த்து, அரசியலில் திறம்படச் செயல்படுகின்ற வகையிலே என்னை உருவாக்கிய, எங்களுடைய உயிரினும் மேலான தலைவர் கலைஞர் அவர்களை நோக்கி வணங்கி என்னுடைய உரையை நான் ஆரம்பிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அவையிலே எங்களுடைய இயக்கத்தினுடைய இனமான பேராசிரியர் அவர்களை வணங்கியும், எங்களுக்கெல்லாம், எங்களுடைய எதிர்கால நம்பிக்கை நட்சத்திரம், எங்களைப் போன்றவர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்கின்ற, எங்களது உள்ளாட்சித் துறையினுடைய அமைச்சர் அண்ணன் தளபதி அவர்களையும் வணங்கி என்னுடைய உரையைத் துவங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்ச் சமுதாயத்தை உருவாக்கிட அல்லும், பகலும் உழைத்திடும், 83 வயது இளைஞர் எங்களது தானைத் தலைவர் முதல்வர் கலைஞர் அவர்களே, சொன்னதைச் செய்பவரும், அதுபோல் சொல்லாததையும் செய்துவரும், தமிழ்நாட்டு மக்களுக்கு மட்டுமின்றி, உலகத் தமிழர் எல்லாம் தலை நிமிர்ந்து நடந்திட ஓயாது உழைப்பவர் நமது உத்தம



தலைவர் முதல்வர் கலைஞர் அவர்கள். அறிவுப் பெட்டகமாம், ஆற்றலின் திருவுருவமாம், அண்ணாவின் தம்பியாம், பகுத்தறிவு பகலவனாம், தந்தைப் பெரியாரின் போர் முரசாம், முத்தமிழ் அறிஞர் நமது தானைத் தலைவர் அவர்கள் வீற்றிருக்கும் திசை நோக்கி என்னுடைய முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெருமைக்குரிய துறைகளான வருவாய் மற்றும் சட்டத் துறை ஆகிய துறைகளை வழங்கி இதிலே சிறப்பாகப் பணியாற்றுகின்ற வாய்ப்பினை நல்கிய, எங்களுடைய முதல்வர் அவர்களுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தாங்கள் வாழும்போது வாழ்வதையே பெரும்பேறாக நினைக்கின்ற எனக்கு, தங்களின் அமைச்சரவையில் இரண்டாம் முறையாக என்னை இணைத்திட்ட எங்களின் இதயத் துடிப்பே, உங்களுக்கு என் சார்பிலும், எனது மாவட்ட மக்களின் சார்பிலும், நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்து, என்னுடைய உரையைத் துவங்குகின்றேன்.

என்னை மூன்றாவது முறையாக, மீண்டும் சட்டமன்றத்திற்கு தேர்வுசெய்த ஆத்தூர் சட்டப்பேரவைத் தொகுதி மக்களுக்கும், என்னுடைய வெற்றிக்காக அரும்பாடுபட்ட கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை. இந்த அவையின்வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எண்ணற்றோர் பிறப்பதும், இறப்பதும் இயற்கை நிகழ்ச்சியே என்றாலும், எல்லோரையும் இவ்வுலகம் நினைத்துப் போற்றுவது இல்லை.

"உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன்"

என்று இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. அரி அவர்கள் சொன்னார்கள். அந்த அய்யன் திருவள்ளுவனின் வாய்மொழிப்படி மனத்தினால் பொய்யே நினைக்காமல் நடப்பவன் உலகத்தவர் மனத்திலெல்லாம் நிலைத்திருப்பான். இந்த வாக்கை மெய்ப்பிக்கும் வகையில், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையிலே சொன்னதைச் செய்யும் ஆற்றல் மிக்க அரசு, முத்தமிழ் அறிஞர் கலைஞரின் அரசு என்பதை இந்த இடத்திலே நன்றியோடு நான் குறிப்பிட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** வருவாய்த் துறையை பொறுத்தளவில் மக்கள் நலம் பேணுவதிலே, மிக முக்கியமான துறை. குறிப்பாக, இந்தத் துறை, மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், கோட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள், கிராம வருவாய்த் துறை அலுவலர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், உதவியாளர்கள், இப்படி படிப்படியாக, பணியாளர்களைப் பெற்று, இந்த மாநிலத்தினுடைய அரசை வழி நடத்திச் செல்வதிலே ஒரு தாய்த் துறையாக, வருவாய்த் துறை திகழ்கிறது.

மற்ற துறைகளுடைய வளர்ச்சிக்கு, இதனுடைய பங்கு மிக முக்கியமான ஒன்று என்பதை, இந்த அவையிலே இருக்கின்ற அத்தனை உறுப்பினர்களும் நன்றாக அறிவார்கள். அதிலும் குறிப்பாகச் சொலலவேண்டுமென்றால், வருவாய்த் துறை, ஏனைய துறைகளுக்கு எல்லாம், எப்படி விவசாயிகளை இந்த நாட்டினுடைய முதுகெலும்பு என்று சொல்லுகின்றார்களோ, அதைப்போல ஏனைய துறைகளுடைய முதுகெலும்பாக இந்தத் துறை விளங்குகிறது என்பதிலே எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. மக்களுக்காக அரசின் பணிகள் சேவைகள் சென்றடைய இந்தத் துறை முன் நிற்கின்றது.

குறிப்பாக நாடாளுமன்ற, சட்டமன்ற தேர்தல், வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல், குறிப்பாக வறட்சி, வெள்ளம், புயல், ஆழிப்பேரலை, தீ விபத்து நிவாரணம் ஆகிய முக்கியமான பணிகளை இயற்கைச் சீற்றங்கள் நாட்டிலே ஏற்படுகின்ற நிலையிலே, உடனே அந்த இடத்திற்குச் சென்று அந்தப் பணிகளை மேற்கொள்ளுகின்ற முக்கியமான பங்கு வகிக்கின்ற துறை வருவாய்த் துறை என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்தத் துறையினுடைய முக்கிய பணிகள் எங்கே இடர்ப்பாடுகள் ஏற்பட்டாலும், அந்த இடர்ப்பாடுகளைக் களைவதற்கு உடனே அங்கு சென்று நிவாரணம் வழங்கி, உண்ண உணவு, பாதிக்கப்பட்டவர்கள் இருப்பதற்கு இடம் ஆகியவற்றை உடனே வழங்குகின்ற துறையாக, போர்க்கால அடிப்படையிலே நிறைவேற்றுகின்ற துறையாக இந்தத் துறை விளங்குகின்றது.



இன்றைக்கு இந்தத் துறையின்வாயிலாக இங்கே பேசிய நம்முடைய உறுப்பினர்கள் பல்வேறு கருத்துகளைத் தெரிவித்தார்கள். பல சாதனைகளை பல காலகட்டங்களிலே, நம்முடைய முதல்வர் அவர்கள் புரிந்திருக்கின்றார்கள். எப்படி மனு நீதி சோழன், தாய்ப் பசு தன்னுடைய கன்றை இழந்த நேரத்திலே, நீதி கேட்ட நேரத்திலே நீதி வழங்கினானோ, அதைப்போல தலைவர் கலைஞர் அவர்கள் வருவாய்த் துறையிலே மனு நீதித் திட்டத்தை 1969 ஆம் ஆண்டு முன்பு கொண்டு வந்தவர், நம்முடைய முதல்வர், கலைஞர் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்திலே பெருமிதத்தோடு சொல்லிக்கொள்கின்றேன்.

இந்த மனு நீதித் திட்டம், மிக முக்கியமான திட்டம். மக்களிடம் நேரிலே சென்று, அங்கே மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், கோட்டாட்சியர்கள், இன்னும்பிற துறைகளுடைய அலுவலர்கள் எல்லாம் சென்று கோரிக்கைகளைப் பெற்று, அந்த இடத்திலே தீர்வு காண்கிற முறைதான் இந்த மனு நீதித் திட்டத்தினுடைய முக்கியமான நோக்கம்.

அதேபோல இந்தத் துறையிலே தொடர்ந்து மக்களுடைய குறைகளைத் தீர்க்கின்ற வகையிலே ஒவ்வொரு திங்கள் அன்றும் அந்தத் திட்டங்களை நிறைவேற்றுகின்ற பணியை, தொடர்ந்து இந்தத் துறை சிறப்பாக நிறைவேற்றி வருகின்றது. குறிப்பாக, இங்கே பேசிய உறுப்பினர்கள் சொன்னார்கள். ஜாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் இந்தச் சான்றிதழ்களைப் பெறுவதற்கு மிகுந்த கஷ்டம் இருக்கிறது என்பதை வேதனையோடு தெரிவித்தார்கள். நம்முடைய சிவபுண்ணியம் அவர்கள் சொல்கிறபோதுகூட, இந்தத் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படுவது வரவேற்கத்தக்கது என்று சொன்னார்கள்.

இந்தத் திட்டம் தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்திலே கடந்த 1996-2001 ஆம் ஆண்டிலே ஆட்சியிலே இருந்தபோதுதான், மாணவர்கள் படுகின்ற அவதியைப் பார்த்து 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு, படிக்கின்ற மாணவர்கள் பள்ளியிலேயிருந்து வெளியே வருகின்ற நேரத்திலே அவர்கள் இந்தச் சான்றிதழ்களை எல்லாம் உடனே பெறுவதற்கு ஏற்றவகையிலே அந்தத் திட்டத்தை உருவாக்கியவர் தலைவர் கலைஞர் என்பதை நான இந்த நேரத்திலே மீண்டும் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே பல்வேறு நிலைகளிலே, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே, குறிப்பாக சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, மீனவர்களுக்கு கடலோர கிராமங்களிலே வாழுகின்ற 13 மாவட்டங்களைச் சேர்ந்த மக்களுக்கு கடந்த ஆட்சி காலத்திலே மத்திய அரசால் வழங்கப்பட்ட நிதி, உலக வங்கியால் வழங்கப்பட்ட நிதிகள் ஏறத்தாழ 4 ஆயிரம் கோடிக்கு அதிகமாக வழங்கப்பட்ட நிதியிலே, அரசின் சார்பாக வீடுகள் கட்டித் தரப்படவில்லை என்ற அந்த நிலை ஏற்பட்டு, அதை உடனே களைவதற்காக, அந்த நிதி ஆதாரங்கள் முழுமையாகச் செலவழிக்கப்படவில்லை என்பதை இந்த மாமன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் இங்கே எடுத்துரைத்தார்கள். அந்த நிதி உடனே மக்களுக்குச் சென்றடைவதற்காக, 13 மாவட்ட ஆட்சித் தலைவர்களையும் அழைத்து, இந்த வீடுகள் கட்டித் தருகின்ற திட்டத்தை உடனே 70 ஆயிரம் பேர்களுக்கு 9 மாத காலத்திலே அரசின்மூலமாக வீடுகள் கட்டித் தரவேண்டுமென்று முடிவு செய்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–35

அதிலும் குறிப்பாக, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதிலே இங்கேகூட நம்முடைய எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் அதில் இருக்கின்ற இடர்ப்பாடுகளைச் சொன்னார்கள், இந்த அவையிலே பதில் கூறுகின்ற நேரத்திலே, நாங்கள் பூர்வாங்கப் பணிகள், நிலம் எடுக்கின்ற பணியை முடித்தோம். ஆனால், வீடுகள் கட்டுகின்ற பணியை ஆரம்பிப்பதற்கு எங்கள் அரசு இல்லை என்பதை இங்கே தெரிவித்தார்கள். தலைவர் கலைஞர் அவர்கள் இன்றைக்கு இந்தத் திட்டம் முழுமையாக, விரைவாகச் செயல்படுவதற்கு என்னென்ன இடர்ப்பாடுகள் இருக்கின்றன என்பதை கூட்டத்திலே 3 மணி நேரம் ஆய்வு செய்து, வீடுகள் கட்டுவதற்கும், அதே சமயத்திலே நகராட்சிகள்மூலமாகப் பெறவேண்டிய அந்த அனுமதியை, வழங்குவதில் இருக்கக்கூடிய இடர்ப்பாடுகளை நீக்குவதற்கும், சுற்றுப்புறச் சூழல் துறையின்மூலமாகப் பெறவேண்டிய அந்த அனுமதியை உடனே பெறுவதற்கும், மத்திய அரசின்மூலமாகப் பெறவேண்டிய அந்த அனுமதியை, சுற்றுப்புறச் சூழல் துறை மூலமாகப் பெறவேண்டிய அனுமதியைப் பெறுவதற்கும் முடிவு செய்து, அதே சமயத்திலே, மாணவர்களுக்கு ஏற்கெனவே கடந்த கால அரசிலே அறிவிக்கப்பட்டதைப்போல, தொடர்ந்து இன்னும் ஓராண்டு காலத்திற்கு அவர்களுக்கு கல்விக்கான உதவித் தொகையும்



வழங்குவதற்கு உத்தரவிட்டவர் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, 1,000 கோடி ரூபாய் இந்த ஆண்டிலே உடனே செலவழிக்கப்பட வேண்டும் என்று உத்தரவிட்டு, அந்தப் பணிகள் முடுக்கிவிடப்பட்டு நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றது.

நம்முடைய உள்ளாட்சித் துறையினுடைய அமைச்சர் அவர்கள்— இந்தக் கூட்டம் ஆரம்பித்து இந்த ஒரு மாத காலத்திற்குள்ளாகவே, உடனே நகராட்சி நிர்வாகத்தின்மூலமாக வழங்க வேண்டிய அத்தனை ஆணைகளையும் முழுமையாக, இன்றைக்கு வீடுகள் கட்டுவதற்கு எந்தவிதமான தடையும் இல்லாமல் ஆணை வழங்கி இருக்கின்றது உள்ளாட்சித் துறை என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதேபோல, சுற்றுப்புறச் சூழலிலும் 103 இனங்களிலே அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. மத்திய அரசிலே இருந்து பெறக்கூடிய அனுமதியையும் பெறுவதற்காக இன்றைக்குக் கடிதங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. ஆக, 1,000 கோடி ரூபாய் இந்தத் திட்டத்திலே உடனே செலவழிக்கப்பட வேண்டும் என்கிற முடிவை தொடர்ந்து செயல்படுத்துவதிலே வருவாய்த் துறை முன்னேற்றப் பாதையிலே சென்று கொண்டிருக்கிறது.

இங்கேகூட, கழகத் தேர்தல் அறிக்கையிலும் சரி, நிதிநிலை அறிக்கையிலும் சரி, பல்வேறு வாக்குறுதிகள்— இன்றைக்கு சொன்ன வாக்குறுதிகள் அத்தனையுமே நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அதிலேகூட குறிப்பாக, நிலமற்ற ஏழைகளுக்கு அரசு புறம்போக்கு நிலங்களிலே 2 ஏக்கர் நிலத்தைப் பண்படுத்தி வழங்கப்படும் என்றும், சிறு, குறு விவசாயிகள், அவர்கள் வைத்திருக்கின்ற நிலங்களைப் பண்படுத்தி அவர்களுக்கே மீண்டும் வழங்கப்படும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதே அவையிலே அறிவித்தார்கள். அந்த அடிப்படையிலே இன்றைக்கு அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு தலைவர் கலைஞர் அவர்கள், அவர்களுடைய முயற்சியின் காரணமாக, குறிப்பாக, இந்தத் திட்டம் மேற்கு வங்கத்திலே எப்படிச் செயல்படுகிறது என்பதைப் பார்த்து, அந்தத் திட்டத்திலே இருக்கின்ற அம்சங்களில் நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய முக்கியமான பங்கினை நீங்கள் ஆய்வு செய்து வரவேண்டுமென்று உடனே உத்தரவிட்டு, அந்தத் திட்டத்தை வருகின்ற செப்டம்பர் திங்கள் 17 ஆம் நாள் தமிழகத்திலே துவங்கி வைக்கின்ற பணியையும் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு தலைவர் கலைஞர் அவர்கள் துவங்கி (மேசையைத் தட்டும் ஒலி) தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

மூன்றை இந்த அவைக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன். சொல்வது எல்லோர்க்கும் சுலபமாகும். ஆனால், சொன்னபடி நடப்பவர்கள் மிகவும் சொற்பம். எல்லையின்றி நீதிகளை எழுதுவார்கள். ஆனால், எழுதியது பிறருக்கே, தமக்கென்று எண்ணார் உள்ள உலகில் நாம் அறிந்த தலைவர் நம்முன் சொன்னதுபோல் செயல்பட முயன்றார் தலைவர் கலைஞர் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அந்த வகையிலேதான் இந்த 2 ஏக்கர் நிலத்தை ஏழை எளிய மக்களுக்கு வழங்க வேண்டுமென்ற தலைவர் கலைஞர் அவர்கள், அவர் இன்றைக்கு நேற்று அல்ல, ஆரம்பகாலம்தொட்டு, இந்த அவையிலே வந்த காலத்திலிருந்து, அவருடைய மனதிலே எழுகின்ற எண்ணங்கள், ஏழை எளிய மக்களுக்கு நிலத்தைக் கொடுக்க வேண்டும் என்பதிலே அவருக்கு குன்றாத ஆர்வம், உதவி செய்யவேண்டும் என்ற ஆர்வம்தான்.

பிற்பகல் 1—40

1971 ஆம் ஆண்டு இரண்டாவது முறையாக – நான் ஏற்கெனவே இந்த அவையிலே பதிவு செய்ததைப்போல நில உச்சவரம்புச் சட்டம், உங்களுக்குத் தெரியும். 30 தர ஏக்கர் இருந்ததை, இந்தியத் திருநாட்டிலே 30 standard ஏக்கரை 15 தர ஏக்கராகக் குறைத்து புரட்சி செய்தவர் தலைவர் கலைஞர் என்பதை இந்த நேரத்திலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்மூலமாக அரசுக்குக் கிடைதத நிலம் ஏறத்தாழ 1 இலட்சத்து 80 ஆயிரம் ஏக்கர் நிலம். அதிலே குறிப்பாக 1 இலட்சத்து 23 ஆயிரம் பேருக்கு, பிற்படுத்தப்பட்ட மக்கள், ஏனைய மக்களுக்கு வழங்கிவிட்டு, 63 ஆயிரம் தாழ்த்தப்பட்ட மககளுக்கும் இலவசமாக நிலம் வழங்கியவர் தலைவர் கலைஞர் என்பதை நான் ஏற்கெனவே இதே அவையிலே பதிவு செய்திருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆக, இது இன்று அல்ல, நேற்று அல்ல, தொடர்ந்து – இங்கே பேசினார்கள்; எப்படி அந்த நிலம் வழங்க முடியும் என்று பல்வேறு வினாக் கணைகளையெல்லாம் தொடுத்தார்கள். இது ஒரு தொலைநோக்குத் திட்டம். இது அறிவித்த உடனே நிறைவேற்றக்கூடிய திட்டம் அல்ல. கடையிலே வாங்கி பொருளை உடனே கொடுத்து விடும் T.V. மாதிரி இருந்தால் உடனே கொடுத்துவிடலாம். இந்த வருடம் இல்லை என்றால், அடுத்த வருடம்கூட கொடுத்துவிடலாம். இது ஒரு தொலைநோக்குத் திட்டம்: இந்த நாட்டிலே ஏழை எளிய



மக்களுக்காக நிலங்களை வழங்க வேண்டும் என்பது தலைவர் கலைஞருடைய இலட்சியம், அவருடைய இலட்சியம், அவருடைய கொள்கை இதிலே அடங்கி இருக்கின்றது. அதைத்தான் அவர்கள் தெளிவாக இந்த அவையிலே சொன்னபோது, கை அகலம் நிலம் இருந்தாலும் அதை ஏழை ஒருவருக்குத்தான் கொடுப்பேனேதவிர, பெரிய பணக்காரர்களுக்கு இந்த அரசு வழங்காது என்பதைத் தெளிவாக கட்டிக்காட்டினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அந்த வகையிலே, இன்றைக்கு நிலம் கொடுக்கின்ற திட்டத்தை நாங்கள் தெளிவாக செய்ய இருக்கின்றோம். சொன்னதைச் செய்வோம், செய்வதைத்தான் சொல்வோம் என்ற தாரக மந்திரத்தை சொந்தமாக்கிக்கொண்ட திராவிட முன்னேற்றக் கழகம், இந்த 2 ஏக்கர் தரிசு நிலம் வழங்கும் திட்டத்தை படிப்படியாக செயல்படுத்தும் என்பதை இந்தப் பேரவைக்கு மீண்டும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகின்றேன். குறிப்பாக இன்றைக்கு சில மேற்கோள்களை நான் சொல்லவேண்டும் என்று எண்ணுகின்றேன்.

நம்முடைய தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்திலே, நிலமற்ற ஏழைகளுக்கு குடியிருக்கின்ற வீட்டுமனைப் பட்டாக்கள் 1996 ஆம் ஆண்டிலிருந்து 2001 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்ட பட்டாக்கள் 9 இலட்சத்து 50 ஆயிரத்து 449. ஆனால், கடந்த 2001 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரை அ.தி.மு.க. ஆட்சியிலே வழங்கிய பட்டாக்கள் வெறும் 4 இலட்சத்து 60 ஆயிரத்து 625 பட்டாக்கள்தான் வழங்கப்பட்டிருக்கின்றன. இரண்டு மடங்கு வழங்கி இருக்கின்றோம் கழக ஆட்சிக் காலத்திலே.

அதேபோல, குறிப்பாக நிலம் இல்லாத ஏழைகளுக்கு நிலங்களை வழங்குகின்ற திட்டத்திலேகூட கடந்த அ.தி.மு.க. ஆட்சியிலே 2001 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரை நிலம் ஒப்படைப்பு செய்தது 29 ஆயிரத்து 74 ஏக்கர் நிலம். ஆனால், 1996—லிருந்து 2001 ஆம் ஆண்டு வரை தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்திலே நிலம் ஒப்படைப்பு செய்த நிலங்கள் 39 ஆயிரத்து 432 ஏக்கர் நிலம் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். ஆக, ஏழைகளுக்கு நிலம் வழங்குவதிலே, வீட்டுமனை வழங்குவதிலே, விவசாயத்திற்கு நிலம் வழங்குவதிலே இந்த ஆட்சி எந்த அளவிற்கு ஏழை எளிய மக்களுக்காக உருவாக்கப்பட்டிருக்கின்ற ஆட்சி என்பதை இது நிரூபிக்கின்றது.

குறிப்பாக, கடந்த கால ஆட்சிக் காலத்திலே முதியோருக்கு ஓய்வூதியம் தருகின்ற திட்டங்கள், இன்னும் பிற திட்டங்கள், சமூகப்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி கே. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ. கண்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஞா. செந்தமிழன்.

**திரு. ஞா. செந்தமிழன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞா. செந்தமிழன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். வைத்திலிங்கம், இருக்கையில் இல்லை.

திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆர். சின்னசாமி, இருக்கையில் இல்லை.



திரு. ஆர். சின்னசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. கோவிந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. தமிழரசு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. டில்லி பாபு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை.

திரு. என்.ஆர். ரங்கராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** இல்லை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. குணசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ரா. லீமா றோஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. பொன்னுதுரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. செ. தாமோதரன்.

**திரு. செ. தாமோதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. தாமோதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. இராமசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. இராஜேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. பலராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞா. ஜாண் ஜோசப் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. சுப்ரமணியன்.



**திரு. ந. சுப்ரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. சுப்ரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.கே. பாரதிமோகன்.

**திரு. ஆர்.கே. பாரதிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.கே. பாரதிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பி. பத்மாவதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. காவேரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. தங்கமணி

**திரு. பி. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். சாமி, இருக்கையில் இல்லை.

திரு. ஆர். சாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சொ. கருப்பசாமி, இருக்கையில் இல்லை.

திரு. சொ. கருப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி மு. சந்திரா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.டி. கணேசன், இருக்கையில் இல்லை.

திரு. ஆர்.டி. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். ஜெயபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இரா. துரைக்கண்ணு.

**திரு. இரா. துரைக்கண்ணு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. துரைக்கண்ணு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.எம். பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. மகேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. செந்தில் பாலாஜி, இருக்கையில் இல்லை.

திரு. வே. செந்தில் பாலாஜி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.



"**வருவாய்த் துறை** பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் **வருவாய்க் கணக்கில்** ரூ.1,737,20,16,000/–, மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.2,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

### (உ) கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல்முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. த.அ. மேகநாதன், இருக்கையில் இல்லை.

திரு. த.அ. மேகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக கருதப்படுகிறது. திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.க. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப பெறப்படுகிறது. திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி.க. ராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பெ. கமலாம்பாள் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதபபடுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அருள் அன்பரசு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை.

திரு. என்.ஆர். ரங்கராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. விடியல் எஸ். சேகர், இருக்கையில் இல்லை.

திரு. விடியல் எஸ். சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. து. செல்வராஜ்.

**திரு. து. செல்வராஜ்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. து. செல்வராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. உலகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. சந்திரகாசி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. மாரிமுத்து அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஜி. லதா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. இராமகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். இராசசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மா. தண்டபாணி

**திரு. மா. தண்டபாணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. தண்டபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி கே. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. அரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. பலராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ரா. லீமா றோஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. வேல்துரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** இல்லை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. காவேரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி பி. பத்மாவதி

**திருமதி பி. பத்மாவதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பி. பத்மாவதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இரா. துரைக்கண்ணு.

**திரு. இரா. துரைக்கண்ணு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. துரைக்கண்ணு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். ஜெயபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. மகேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. இராமசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. செந்தில் பாலாஜி, இருக்கையில் இல்லை.

திரு. வே. செந்தில் பாலாஜி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி செல்வி இராமஜெயம்.

**திருமதி செல்வி இராமஜெயம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி செல்வி இராமஜெயம் அவாகளுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. நெடுஞ்செழியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இல. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. பொன்னுதுரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கணபதி, இருக்கையில் இல்லை.

திரு. ந. கணபதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆர்.டி. கணேசன், இருக்கையில் இல்லை.

திரு. ஆர். டி. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஞா. ஜாண் ஜோசப்.



**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞா. ஜாண் ஜோசப் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி மு. சந்திரா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சொ. கருப்பசாமி, இருக்கையில் இல்லை.

திரு. சொ. கருப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஞா. செந்தமிழன்.

**திரு. ஞா. செந்தமிழன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞா. செந்தமிழன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ. கண்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு – மானியக் கோரிக்கை எண் 51—ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.346,32,49,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (9—8—2006) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-14 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

13. 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (சிவில்). (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

37. மானியக் கோரிக்கை எண் 3 – உள் துறை – நீதி நிருவாகம் பற்றிய கொள்கை விளக்க குறிப்பு, 2006-2007. (தமிழ், ஆங்கிலம்)

38. மானியக் கோரிக்கை எண் 24 – உள் துறை – சிறைகள் பற்றிய கொள்கை விளக்க குறிப்பு, 2006-2007. (தமிழ், ஆங்கிலம்)

39. மானியக் கோரிக்கை எண் 33 – சட்டத் துறை பற்றிய கொள்கை விளக்க குறிப்பு, 2006-2007. (தமிழ், ஆங்கிலம்)

40. மானியக் கோரிக்கை எண் 41 – வருவாய்த் துறை மற்றும் மானியக் கோரிக்கை எண் 51- இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய கொள்கை விளக்க குறிப்பு, 2006-2007. (தமிழ், ஆங்கிலம்)

41. 2004-2005 ஆம் ஆண்டிற்கான "கணக்குகள் குறித்த ஒரு மேலோட்டப் பார்வை" என்கிற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்).

++++



## இணைப்பு I

(385 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## மானியக் கோரிக்கை எண் 3–நீதி நிருவாகம்

## கொள்கை விளக்கக் குறிப்பு 2006-2007

**முன்னுரை:**

நமது அரசமைப்புச் சட்டத்தின் முதன்மையான நோக்கம் அனைத்து குடிமக்களுக்கும் விரைவான நீதி கிடைக்கப் பெற வேண்டும் என்பதேயாகும். மக்கள் நல அரசின் முதற்கவனம் நாட்டு மக்களின் நலனைக் குறித்ததாகவே இருக்கும். நீதி நிருவாகம் மாநில அரசின் முக்கியப் பணிகளில் ஒன்றாக தொன்றுதொட்டு கருதப்பட்டு வருகிறது. நீதித் துறை சுதந்திரமாகச் செயல்பட பேணுவதில் இந்த அரசு உறுதிபூண்டு அதற்கிணங்க உகந்த சூழலை ஏற்படுத்திக் கொடுக்கிறது. மேலும், பொது மக்களுக்கு விரைவான நீதி கிடைப்பதை எளிதாக்குவதற்காக, அதற்குத் தேவையான கட்டட வசதி, மனித ஆற்றல் மற்றும் பிற உள்கட்டமைப்பு வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்பதில் இந்த அரசு எப்பொழுதும் உறுதியாக உள்ளது.

**2. நீதிமன்றங்களின் படிநிலை அமைப்பு**

புதுதில்லியிலுள்ள உச்ச நீதிமன்றம் நமது நாட்டின் உச்சநிலை நீதிமன்றமாகும். அது மாநிலங்களிலுள்ள அனைத்து உயர் நீதிமன்றங்களையும் தன் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுள்ளது. மாநில நீதித் துறையின் படிநிலை அமைப்பு வருமாறு:—

[2006 ஆகஸ்ட் 8

| உயர் நீதிமன்றம், சென்னை<br>உயர் நீதிமன்றக் கிளை, மதுரை | |
|---|---|
| **உரிமையியல் நீதிமன்றங்கள்** | |
| சென்னை மாநகர் | வெளியூர் |
| மாநகர உரிமையியல் நீதிமன்றம்<br>சிறு வழக்குகள் நீதிமன்றங்கள் | மாவட்ட நீதிமன்றங்கள்<br>சார்பு நீதிமன்றங்கள்<br>மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள்<br>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள் |
| **குற்றவியல் நீதிமன்றங்கள்** | |
| சென்னை மாநகர் | வெளியூர் |
| பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | அமர்வு நீதிமன்றங்கள்<br>தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்<br>குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் |

இத்துடன் பல்வேறு சட்டங்களின்கீழ் பின்வரும் நீதிமன்றங்கள்/ அலுவலகங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன:-

1. நொடித்தவர் சொத்தாட்சியர், உயர் நீதிமன்றம், சென்னை
2. அரசு சொத்து தலைமைப் பொறுப்பாட்சியர், சென்னை
3. சென்னை, (சென்னையில் 3) மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, கடலூர், சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் உள்ள தொழிலாளர் நல நீதிமன்றங்கள்
4. தொழில் நடுவர் நீதிமன்றம், சென்னை
5. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம் ஆகிய இடங்களில் உள்ள குடும்ப நீதிமன்றங்கள்



2006 ஆகஸ்ட் 8]

6. சென்னை, மதுரை ஆகிய இடங்களில் உள்ள பொருளாதாரக் குற்றங்களை விசாரிப்பதற்கான தனி நீதிமன்றங்கள்
7. குடிமையியல் பாதுகாப்பிற்கான தனி நீதிமன்றங்கள்
8. 'தடா' சட்டத்தின்கீழ் தனி நீதிமன்றங்கள்
9. இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளையும், போதை மருந்துகள் மற்றும் மன மயக்கப் பொருட்கள் (NDPS) சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளையும் விசாரிப்பதற்கான தனி நீதிமன்றங்கள்
10. சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களிலுள்ள மத்திய குற்றப் புலனாய்வுத் துறை வழக்குகளை விசாரிப்பதற்கென்று அமைக்கப்பட்ட தனி நீதிமன்றங்கள்
11. சென்னை மற்றும் கோயம்புத்தூரிலுள்ள குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரிப்பதற்கான தனி நீதிமன்றங்கள்
12. மதுரையில் உள்ள சாதிக் கலவரங்கள் குறித்த வழக்குகளை விசாரிப்பதற்கான தனி நீதிமன்றம்
13. சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம் மற்றும் பெரம்பலூரில் மகளிர் நீதிமன்றங்கள் (Mahila Courts)
14. விரைவு நீதிமன்றங்கள் (எண்ணிக்கை 49)

### 3. நீதிமன்றங்களின் எண்ணிக்கை விவரங்கள்

தமிழ்நாட்டில் தற்போதுள்ள நீதிமன்றங்களின் எண்ணிக்கை பற்றிய விவரம் இணைப்பு I-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

### 4. நிதி ஒதுக்கீடு

அடிப்படைக் கட்டமைப்பு வசதி மற்றும் அலுவல் செயல்பாட்டில் குறிப்பிடத்தக்க அளவில் நீதித் துறை வளர்ச்சியையும் மேம்பாட்டையும் அடைந்துள்ளது. நிதி நெருக்கடி இருந்த போதிலும், நீதித் துறை தங்குதடையின்றி சுமுகமாகச் செயல்படுவதற்காக கட்டடங்கள், பணியாளர்கள் மற்றும் ஏனைய அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைப் பொறுத்தவரையில் அரசு எண்ணிறந்த வசதிகளைச் செய்து கொடுத்துள்ளது.

### 5. செலவின வகைப்பாடு

உயர் நீதிமன்றம் மற்றும் மதுரையிலுள்ள உயர் நீதிமன்றக் கிளை குறித்த செலவு "சாட்டிய செலவினம்" என்றும் நீதி நிருவாகம் தொடர்பான பிற செலவினங்கள் "அனுமதிக்கப்பட்டவை" என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

### 6. உயர் நீதிமன்றம், சென்னை

மாநிலத்தில் உச்சநிலை நீதிமன்றமாக உயர் நீதிமன்றம் அமையப் பெற்றுள்ளது. உயர் நீதிமன்றத்திற்காக ஒப்புதல் வழங்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை 49. தற்போது உயர் நீதிமன்றம் (சென்னையிலுள்ள முதன்மை நடுவர் ஆயம் மற்றும் மதுரைக் கிளை நடுவர் ஆயம்) 43 நீதிபதிகளுடன் இயங்கி வருகிறது.

உயர் நீதிமன்றம், நீதிப்பேராணை மற்றும் உரிமையியல் விவகார அசல் வழக்கு விசாரணை அதிகாரங்களைப் பெற்றுள்ளது. உரிமையியல் மற்றும் குற்றவியல் விவகார வழக்குகளின் மேல் முறையீட்டு விசாரணை அதிகாரமும் உயர் நீதிமன்றத்திற்கு உண்டு. உரிமையியல் விவகார அசல் வழக்குகளைப் பொறுத்தவரை சென்னை மாநகரத்துக்குள் எழும் ரூ.10,00,000/–க்கும் அதிகமான மதிப்புள்ள வழக்குகளை உயர் நீதிமன்றம் விசாரிக்கிறது. நீதிபதிகளுக்கிடையிலான பணி மாண்புமிகு தலைமை நீதிபதி அவர்களால் பிரித்தளிக்கப்படுகின்றது. மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியான பாண்டிச்சேரி நீதிமன்றங்கள் தொடர்பாகவும் அதிகார வரம்பைக் கொண்டுள்ளது. பாண்டிச்சேரி தொடர்பான பணிகளைக் கவனிக்கும் அதிகாரிகள் குறித்த செலவு முதற்கண் தமிழ்நாடு அரசால் செய்யப்பட்டு, பின்னர் அச்செலவுத் தொகை பாண்டிச்சேரி அரசிடமிருந்து திரும்பப் பெறப்படுகிறது.

தலைமைப் பதிவாளர் உயர் நீதிமன்றத்தின் நிருவாகத் தலைவராக விளங்குகிறார். அவருக்கு இணையாக பதிவாளர் (கண்காணிப்பு), பதிவாளர் (நீதி), பதிவாளர் (நிருவாகம்) மற்றும் பதிவாளர் (மேலாண்மை) ஆகியோர் உள்ளனர். மேற்காணும் பதிவாளர்களுக்கு உதவ மாஸ்டர் (Master), துணைப் பதிவாளர்கள், உதவிப் பதிவாளர்கள், முதன்மைக் கணக்கு அலுவலர் மற்றும் சார் உதவிப் பதிவாளர்களும் உள்ளனர்.

நீதி வழங்குவதுடன் மாநிலத்திலுள்ள அனைத்து சார்நிலை நீதிமன்றங்களின் முழு நிருவாகப் பொறுப்பையும் சென்னை உயர் நீதிமன்றம் மேற்கொள்கிறது.





### 7. மதுரையில் சென்னை உயர் நீதிமன்றக் கிளை

6-7-2004 நாளிட்ட ஜி.எஸ்.ஆர். எண் 446 (இ)—ல் மேதகு இந்திய குடியரசுத் தலைவர் அவர்களால் "சென்னை உயர் நீதிமன்ற (மதுரையில் நிலையான ஒரு நடுவர் ஆயம் அமைத்தல்) ஆணை 2004"-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கையின்படி, சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளையானது 24–7–2004 அன்று திறக்கப்பட்டு இயங்கி வருகிறது. இதன் அதிகார எல்லையானது கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, மதுரை, திண்டுக்கல், இராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியதாகும். சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளையானது தற்பொழுது 11 நீதிபதிகளைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

அசல் வழக்குகள் அதிகார வரம்பினைத் தவிர்த்து ஏனைய விவகார வழக்குகளில், சென்னை உயர் நீதிமன்றத்திற்கு உள்ள அதிகாரங்களைப் போன்றே, சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளையின் அதிகார வரம்பு அமைந்துள்ளது.

### 8. தமிழ்நாட்டிலுள்ள உரிமையியல் நீதிமன்றங்களின் நிருவாக அமைப்பு

#### (1) சென்னைப் பெருநகர்

#### (அ) மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை

ஒரு மகளிர் நீதிமன்ற நீதிபதி உட்பட 12 மாவட்ட நீதிபதிகள், 18 உரிமையியல் நீதிபதிகள் (முதுநிலை) மற்றும் உரிமையியல் நீதிபதி (இளநிலை) பதவித் தரத்தில் நிருவாகப் பொறுப்பு வகிக்கும் பதிவாளர் ஒருவர் உட்பட ஆக 31 நீதிபதிகள் சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில் பணிபுரிகின்றனர். மாநகர உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு சென்னை மாநகர் எல்லை முழுமைக்கும் விரிவடைந்துள்ளது.

தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் சட்டம், 1873 மற்றும் சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் சட்டம், 1892 திருத்தம் செய்யப்பட்டு (திருத்தச் சட்டம் 1/2004) உதவி நீதிபதி மற்றும் சென்னை மாநகர முதன்மை நீதிபதி ஆகியோரின் பணம் சார்ந்த அதிகார வரம்பு கீழ்க்கண்டவாறு உயர்த்தப்பட்டுள்ளது:—

[2006 ஆகஸ்ட் 8

### மாநகர உரிமையியல் நீதிமன்றம்

| உதவி நீதிபதி | முதன்மை நீதிபதி |
|---|---|
| ரூபாய் 5,00,000 (ரூபாய் ஐந்து இலட்சங்கள்) வரையில் | ரூபாய் 5,00,000—க்கு (ரூபாய் ஐந்து இலட்சங்களுக்கு) மேற்பட்டு ரூபாய் 10,00,000—க்கு (ரூபாய் பத்து இலட்சங்களுக்கு) மிகாமல் |

ரூ.10,00,000—ற்கு மேற்பட்ட மதிப்புள்ள வழக்குகள் சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட வேண்டும். மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை செஷன்ஸ் பிரிவுக்கு அமர்வு நீதிமன்றமாகவும் செயல்பட்டு வருகிறது. ஊழல் தடுப்புச் சட்டம் 1988 சட்டத்தின்கீழ் ஊழல் போன்ற வழக்குகளை விசாரிப்பதற்கென்று கூடுதல் மாநகர உரிமையியல் நீதிமன்றம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது.

1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு முதலீட்டாளர்கள் (நிதி நிறுவனங்களில்) பாதுகாப்புச் சட்டம் தொடர்பான வழக்குகளை விசாரிக்க சென்னையில் ஒரு சிறப்பு நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது.

2006-2007 ஆம் ஆண்டில் மாநகர உரிமையியல் நீதிமன்றத்தைப் பொறுத்தவரையில் ரூ.6,84,86,000 மொத்த செலவு ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

### (ஆ) சிறு வழக்குகள் நீதிமன்றம், சென்னை

இந்நீதிமன்றத்திற்கு மாவட்ட நீதிபதி பதவித் தரத்திலுள்ள தலைமை நீதிபதி தலைமை வகிக்கிறார். மேலும், உரிமையியல் நீதிபதி (முதுநிலை) பதவித் தரத்தில் எட்டு நீதிபதிகளும், உரிமையியல் நீதிபதி (இளநிலை) பதவித் தரத்தில் எட்டு நீதிபதிகளும் உள்ளனர். நிருவாகப் பொறுப்பிற்கென உரிமையியல் நீதிபதி (இளநிலை) பதவித் தரத்தில் தனியே ஒரு பதிவாளரும் உள்ளார். இவர் குறிப்பிட்ட சில ஆணைகளை நிறைவேற்றல், மனுக்களை முடிவு செய்தல் போன்ற சில நீதி நிருவாகப் பணிகளையும் கவனிக்கிறார். தலைமை நீதிபதியும், இதர நீதிபதிகளும் 1882 ஆம் ஆண்டு மாகாணச் சிறு வழக்கு நீதிமன்றங்கள் சட்டத்தின்கீழ் வரும் சிறு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரங்களைச் செலுத்துவர்.

V மற்றும் VI ஆகிய நீதிபதிகள், மோட்டார் வாகனச் சட்டத்தின்கீழ் உள்ள வழக்குகளை விசாரிப்பதற்கான நடுவர் நீதிமன்றங்களாகச்



2006 ஆகஸ்ட் 8]

செயல்படுகின்றனர். தலைமை நீதிபதி மற்றும் II, III, IV ஆகிய நீதிபதிகள் மோட்டார் வாகனச் சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தையும் பெற்றுள்ளனர். X முதல் XVI வரையிலுள்ள நீதிபதிகள் சென்னை நகரத்திற்கான வாடகைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளாகச் செயல்படுகின்றனர். தலைமை நீதிபதியும் II முதல் IV, VII மற்றும் VIII ஆகிய நீதிபதிகளும் வாடகைக் கட்டுப்பாடு குறித்த மேல்முறையீடுகளை விசாரிக்க அதிகாரம் பெற்றுள்ளனர். 2006-2007 ஆம் ஆண்டில் சிறு வழக்குகள் நீதிமன்றத்திற்கான செலவினம் ரூபாய் 2,77,95,000/ – என மதிப்பிடப்பட்டுள்ளது.

### (2) வெளியூர்

### (அ) மாவட்ட நீதிமன்றங்கள்

மாநிலத்தில் 26 மாவட்ட நீதிமன்றங்கள் உள்ளன. திருவள்ளூர் மாவட்டம் திருவள்ளூரில் தனியாக ஒரு மாவட்ட அமர்வு நீதிமன்றம் தோற்றுவிக்க ஆணையிடப்பட்டுள்ளது. மாவட்ட நீதிபதிகள் அவரவர் பகுதிகளுக்கான குற்றவியல் அமர்வு நீதிமன்ற நீதிபதிகளும் ஆவார். தொழிலாளர் மாநில காப்புறுதிச் சட்டம், எஸ்டேட் ஒழிப்புச் சட்டம் மற்றும் மோட்டார் வாகனச் சட்டம் போன்ற சில குறிப்பிட்ட தனிச் சட்டங்களின்கீழ் தனித் தீர்ப்பாயங்களாகவும் அவரவர்கள் பணியாற்றுகின்றனர்.

தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் சட்டம், 1873 மற்றும் மாநகர உரிமையில் நீதிமன்றங்கள் சட்டம், 1892 (சட்டம் 1/2004) மூலம் திருத்தம் செய்யப்பட்டு மாவட்டங்களிலுள்ள உரிமையியல் நீதிமன்றங்களின் பண விவகார அதிகார வரம்பில் மாற்றம் செய்யப்பட்டு, மாவட்ட முன்சீப் நீதிமன்றங்களின் பண விவகார வழக்குகளில் அதிகார வரம்பு உயர்த்தப்பட்டுள்ளது. பண விவகாரங்களில் சார்நிலை நீதிமன்றங்களின் அதிகார வரம்பு கீழ்வருமாறு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது:—

| மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் | சார்நிலை நீதிமன்றம் | மாவட்ட நீதிமன்றம் |
|---|---|---|
| ரூபாய் 30,000—ல் (ரூபாய் முப்பது ஆயிரம்) இருந்து ரூபாய் 1,00,000 (ரூபாய் ஒரு இலட்சம்)—க்கு உயர்த்தப்பட்டுள்ளது. | ரூ.1,00,000—க்கு (ரூபாய் ஒரு இலட்சம்) மேல் ரூபாய் 5,00,000 (ரூபாய் ஐந்து இலட்சம்)—க்கு மிகாமல் | ரூபாய் 5,00,000 (ரூபாய் ஐந்து இலட்சம்) மேல் உச்சவரம்பின்றி |

[2006 ஆகஸ்ட் 8

அவர்கள், மாவட்டத்தில் உரிமையியல் மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் பெற்றுள்ளனர். மாவட்ட நீதிபதிகள் அவரவர்கள் மாவட்டத்திலுள்ள சார்நிலை நீதிமன்றங்களை ஆய்வு செய்கின்றனர்.

### (ஆ) சார் நீதிபதி நீதிமன்றங்கள் (உரிமையியல் நீதிபதி – முதுநிலைப் பிரிவு)

சார் நீதிபதிகள் தற்போது உரிமையியல் நீதிபதிகள் (முதுநிலை பிரிவு) என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். உரிமையியல் செயல்பாடு ஆணை வழக்குகளில் இந்நீதிபதிகளின் பண விவகார அதிகார வரம்பானது ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டும் ரூபாய் 5 இலட்சத்திற்கு உட்பட்டதும் ஆகும். உரிமையியல் நீதிமன்றச் சட்டத்தில் அவர்களின் சட்ட ஆட்சி எல்லையானது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அவரவர் அதிகார வரம்பிற்கு உட்பட்ட பகுதியில் இருக்கும் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற நடுவர்களின் முடிவிற்கெதிராக ரூபாய் 1,00,000 மதிப்புக்குட்பட்டுத் தொடரப்படும் மேல்முறையீடுகளுக்கான மேல்முறையீட்டு அதிகாரத்தையும் உரிமையியல் நீதிபதிகள் (முதுநிலை பிரிவு) பெற்றுள்ளனர். உரிமையியல் நீதிபதிகள் (முதுநிலை பிரிவு) உதவி குற்றவியல் அமர்வு நீதிபதிகளாகவும் செயல்படுகின்றனர். மேலும், மோட்டார் விபத்து உரிமைக் கோரிக்கைகளின் தீர்ப்பாயங்களாகவும் சார்நிலை நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. இம்மாநிலத்தில் 108 சார்நிலை நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

### (இ) மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் (உரிமையியல் நீதிபதி – இளநிலை பிரிவு)

மாவட்ட உரிமையியல் நீதிபதி பதவிகள் தற்போது உரிமையியல் நீதிபதி (இளநிலைப் பிரிவு) பதவிகளாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு ரூ.1,00,000 வரையிலான மதிப்புடைய சொத்து வழக்குகளை விசாரித்து வருகின்றனர். மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் ஒவ்வொன்றும் அவற்றிற்கென்று அதிகார வரம்பைப் பெற்றுள்ளன. அவை ரூ.20,000 வரையிலான சிறு வழக்குகளை விசாரித்து வருகின்றன. மாவட்ட உரிமையியல் நடுவர்கள், தங்கள் வரம்புக்கு உட்பட்ட பகுதிகளுக்கு வாடகை கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும் செயலாற்றுகின்றனர். இம்மாநிலத்தில் 160 மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன.



2006 ஆகஸ்ட் 8]

### (ஈ) மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்

இம்மாநிலத்தின் ஒரு சில பகுதிகளில் உள்ள வழக்காடும் பொதுமக்கள் தங்கள் உரிமையியல் தொடர்பான குறைகளைத் தீர்த்துக்கொள்வதில் மிகுந்த இடர்பாடுகளை சந்தித்து வருகின்றனர். அவர்கள் வசிக்கும் பகுதியில் உரிமையியல் நீதிமன்றங்கள் இல்லாத காரணத்தால் அதற்காக அவர்கள் வெளியே உள்ள நீதிமன்றங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது. எனவே, அவர்களுடைய இடர்பாடுகளைக் களையும்பொருட்டு மாவட்ட குற்றவியல் (ம) நடுவர் நீதிமன்றங்கள் உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை தீர்த்து வைக்கின்றன. அத்தகைய நீதிமன்றங்கள் மொத்தம் 65 உள்ளன. அனைத்து உரிமையியல் நீதிமன்றங்களும் மூன்று வகையான பணியாளரமைப்புகளை, அதாவது, வழக்கமான பணியாளரமைப்பு, நகல் எடுக்கும் பணியாளரமைப்பு மற்றும் செயல்முறை பணியாளரமைப்பு ஆகிய மூன்று பணியாளர் அமைப்புகளை தன்னகத்தே கொண்டுள்ளது.

வெளியூரிலுள்ள மாவட்ட நீதிமன்றங்கள், சார்நிலை நீதிமன்றங்கள், மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் தொடர்பாக 2006-2007 ஆம் ஆண்டிற்கு செலவு ரூபாய் 92,78,27,000 என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

### (உ) தொழிலாளர் நல நீதிமன்றங்கள்

சென்னையில் மூன்று, மற்றும் மதுரை, கோயம்புத்தூர், வேலூர், சேலம், திருச்சிராப்பள்ளி, கடலூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் ஒவ்வொன்றுமாக மொத்தம் பத்து தொழிலாளர் நல நீதிமன்றங்கள் இம்மாநிலத்தில் இயங்கி வருகின்றன. மாநிலத்தில் அனைத்து பகுதிகள்மீதும் அதிகார வரம்பு கொண்ட தொழில் நடுவர் மன்றம் ஒன்றும் சென்னையில் இயங்கி வருகிறது.

தொழிலாளர் நல நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நடுவர் நீதிமன்றம் ஆகியவற்றிற்கு தலைமை தாங்குபவர்கள் மாவட்ட நீதிபதிகள் பதவித் தரத்தில் செயல்படுவர். அரசு அனுப்பி வைக்கும் தொழிலாளர் குறித்த தகராறுகளையும், பாதிக்கப்பட்ட பொதுமக்கள் தாக்கல் செய்யும் உரிமை கோரிக்கை மனுக்களையும் தொழிலாளர் நல நீதிமன்றங்கள் விசாரிக்கின்றன.

[2006 ஆகஸ்ட் 8

தொழிலாளர் நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நடுவர் மன்றம் ஆகியவற்றின் நடுவர்கள் தங்கள் அதிகார வரம்புக்குட்பட்ட பகுதிகளுக்கு சுற்றுப்பயணம் சென்று, முகாம் நீதிமன்றம் நடத்தித் தொழிலாளர் வழக்குகள் மற்றும் உரிமை கோரிக்கை மனுக்கள்மீது விசாரித்துத் தீர்ப்பு வழங்குகின்றனர்.

சென்னையிலுள்ள தொழிலாளர் நல நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நடுவர் நீதிமன்றம் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் 2006–2007 ஆம் ஆண்டு ரூபாய் 2,21,33,000/– செலவு ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**9. குற்றவியல் நீதிமன்றங்களின் அமைப்பு முறை**

**(1) சென்னை மாநகர்**

சென்னை மாநகரில், தலைமைப் பெருநகர குற்றவியல் நீதிமன்றம் மற்றும் கூடுதல் தலைமை குற்றவியல் நீதிமன்றம் உட்பட மொத்தம் 24 பெருநகர குற்றவியல் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இவர்களில் தலைமைப் பெருநகர குற்றவியல் நீதிபதி, கூடுதல் தலைமை பெருநகர குற்றவியல் நீதிபதி மற்றும் இரண்டாவது, மூன்றாவது, நான்காவது, பத்தாவது மற்றும் பதினொன்றாவது பெருநகர குற்றவியல் நீதிபதிகள் உரிமையியல் நீதிபதி (முதுநிலை) பதவி நிலையைச் சார்ந்தவர்கள் ஆவர். ஏனைய அனைத்து பெருநகர குற்றவியல் நீதிபதிகளும் உரிமையியல் நீதிபதி (இளநிலை) பதவி நிலையைச் சார்ந்தவர்கள் ஆவர். பெருநகர குற்றவியல் நீதிபதிகள் சென்னை நகரில் அவரவர் அதிகார வரம்புக்குட்பட்ட காவல் நிலைய வழக்குகள் குறித்து விசாரிக்கும் அதிகாரம் பெற்றவராவர்.

2006-2007 ஆம் ஆண்டில் மாநகரிலுள்ள பெருநகர குற்றவியல் நீதிமன்றங்களைப் பொறுத்த மட்டில் ரூபாய் 4,36,96,000 செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

**(2) வெளியூர்**

**(அ) தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்**

தற்போது மாநிலத்தில் 25 நீதித் துறை தலைமை நீதிபதிகள் உள்ளனர். சிலவகை வழக்குகளில் உதவி குற்றவியல் நீதிபதிக்குரிய அதிகாரங்கள் தலைமைக் குற்றவியல் நீதிபதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. மேற்படி நீதித் துறை தலைமை நீதிபதிகள் அவரவர் மாவட்டத்திலுள்ள குற்றவியல் நீதிமன்றங்களை ஆய்வு செய்வர்.



2006 ஆகஸ்ட் 8]

**(ஆ) நீதித் துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**

ஏறக்குறைய அனைத்து வட்டங்களிலும் நீதித் துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இம்மாநிலத்தில் 181 நீதித் துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் உள்ளன. மாவட்டங்களில் உள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களைப் பொறுத்தவரையில் 2006-2007-ஆம் ஆண்டிற்கான செலவு ரூபாய் 39,02,36,000 ஆகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

**10. தமிழ்நாட்டில் செயல்படும் தனி நீதிமன்றங்கள்**

**(1) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்படும் வன்கொடுமைகள் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் தனி நீதிமன்றங்கள்:**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைகள் தடுப்புச்சட்டம் 1989 மற்றும் குடியுரிமை பாதுகாப்புச் சட்டம் ஆகியவற்றின்கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிப்பதற்கென கீழ்க்கண்ட மாவட்டங்களில் நான்கு கூடுதல் அமர்வு நீதிமன்றங்கள் செயல்படுகின்றன:

| வரிசை | நீதிமன்றத்தின் பெயர் எண் | நீதிமன்றத்தின் அதிகார வரம்பு |
|---|---|---|
| 1. | IV கூடுதல் அமர்வு நீதிமன்றம், மதுரை | மதுரை<br>திண்டுக்கல்<br>தேனி<br>இராமநாதபுரம்<br>சிவகங்கை<br>விருதுநகர் |
| 2. | II கூடுதல் அமர்வு நீதிமன்றம், தஞ்சாவூர் | தஞ்சாவூர்<br>நாகப்பட்டினம்<br>திருவாரூர் |
| 3. | III கூடுதல் அமர்வு நீதிமன்றம், திருநெல்வேலி | திருநெல்வேலி<br>தூத்துக்குடி<br>கன்னியாகுமரி |
| 4. | II கூடுதல் அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி<br>புதுக்கோட்டை. |

[2006 ஆகஸ்ட் 8

எஞ்சிய மாவட்டங்களைப் பொறுத்தமட்டில், தொடர்புடைய முதன்மை அமர்வு நீதிமன்றம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்புச்) சட்டத்தின்கீழ் வரும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களை விசாரிக்கும். 2006–2007 ஆம் ஆண்டில் குடிமையியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளை விசாரிப்பதற்கான தனி நீதிமன்றங்களைப் பொறுத்தவரையில் ரூபாய் 68,41,000 செலவிடப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

### (2) பொருளாதாரக் குற்றங்களை விசாரணை செய்வதற்கான தனி நீதிமன்றங்கள்

பொருளாதாரக் குற்றங்களை விசாரணை செய்ய சென்னையில் இரண்டு தனி நீதிமன்றங்களும் அதாவது கூடுதல் தலைமைப் பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் (பொருளாதாரக் குற்றப்பிரிவு–I மற்றும் பொருளாதாரக் குற்றப் பிரிவு–II) மற்றும் மதுரையில் ஒரு நீதிமன்றமும் ஆக மூன்று தனி நீதிமன்றங்கள் உள்ளன. கூடுதல் தலைமை பெருநகர குற்றவியல் நடுவர் பொருளாதாரக் குற்றப்பிரிவு–I மற்றும் பொருளாதாரக் குற்றப்பிரிவு–II மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் உள்ளனர். மதுரையிலுள்ள தலைமைக் குற்றவியல் நடுவர், உரிமையியல் நீதிபதி (முதுநிலைத் தரம்) பதவித் தரத்தில் உள்ளார். 2006-2007 ஆம் ஆண்டிற்கு இந்நீதிமன்றங்களுக்கு ஆகும் செலவு ரூபாய் 52,46,000 ஆகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

### (3) குடும்ப நல நீதிமன்றங்கள்

சென்னையில் மூன்றும், மதுரை, கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய இடங்களில் தலா ஒன்றுமாக ஆறு குடும்ப நீதிமன்றங்கள் உள்ளன. குடும்ப நீதிமன்றங்கள் குறித்த செலவு 2006-2007 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 1,72,14,000 என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

### (4) மத்திய குற்றப் புலனாய்வுத் துறை வழக்குகளை விசாரிப்பதற்கான தனி நீதிமன்றங்கள்

இம்மாநிலத்தில், மத்தியக் குற்றப் புலனாய்வுத் துறையின் வழக்குகளை விசாரிப்பதற்காகவென்றே சென்னையில் இரண்டும், மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒன்றுமாக 4 தனி நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. மத்தியக் குற்றப் புலனாய்வுத் துறையின் வழக்குகளை விசாரணை செய்வதற்கான



2006 ஆகஸ்ட் 8]

தனி நீதிமன்றங்களுக்காகும் செலவு 2006–2007 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 93,14,000 என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

### (5) போதை மருந்துகள் மற்றும் மயக்கப் பொருட்கள் சட்டம் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரணை செய்வதற்கான தனி நீதிமன்றம்

போதைப் பொருட்கள் மற்றும் மயக்கப் பொருட்கள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விசாரணை செய்வதற்கென்று சென்னையில் கூடுதல் தனி நீதிமன்றம் ஒன்று இயங்கி வருகிறது. இந்நீதிமன்றத்திற்கு 2006–2007 ஆம் ஆண்டுக்கான செலவு ரூபாய் 18,21,000 என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

### (6) 1908 ஆம் ஆண்டு குற்றவியல் திருத்தச் சட்டத்தின்கீழ் நடுவர் மன்றம்

1908 ஆம் ஆண்டு இந்திய குற்றவியல் திருத்தச் சட்டத்தின்கீழ் செயல்படும் நடுவர் நீதிமன்றத்தைப் பொறுத்தவரையில், 2006–2007 ஆம் ஆண்டுக்கான செலவு ரூபாய் 7,17,000 என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

### (7) சந்தனக்கட்டை கடத்தல் தொடர்பான குற்றங்களுக்கான தனி நீதிமன்றங்கள்

சந்தனக்கட்டை கடத்தல் தொடர்பான குற்றங்களை விசாரிக்க குற்றவியல் நடுவர் பதவித் தரத்தில் வேலூர் மாவட்டம் திருப்பத்தூரில் ஒரு தனி நீதிமன்றமும், சேலம் மாவட்டம் சேலத்தில் ஒரு தனி நீதிமன்றமும் செயல்படுகின்றது. சேலத்தில் இயங்கி வந்த தனி நீதிமன்றம் தற்பொழுது குற்றவியல் நடுவர் நீதிமன்றம் VI ஆக மாற்றப்பட்டுள்ளது.

### (8) இரயில்வே நீதிமன்றங்கள்

இந்திய இரயில்வே சட்டத்தின்கீழ், பயணச்சீட்டு இல்லாமல் பயணம் செய்தல் முதலிய குற்றங்களை விசாரணை செய்வதற்காக எழும்பூர் இரயில் நிலையம் மற்றும் மத்திய இரயில் நிலையம் ஆகியவற்றில் உள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் அல்லாமல், வேலூர், கடலூர், கோயம்புத்தூர், சேலம், மதுரை, தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் இரயில்வே குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் உள்ளன. இரயில்வே குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களுக்கு ஆகும் செலவை நீதித் துறை ஏற்கிறது. இந்நீதிமன்றங்கள் வசூலிக்கும் அபராதத் தொகை மாநில அரசின் நீதித் துறையின் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

[2006 ஆகஸ்ட் 8

**(9) நடமாடும் நீதிமன்றங்கள்**

போக்குவரத்து தொடர்பான குற்றங்களை விசாரிக்க நான்கு நடமாடும் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. சென்னையில் இரண்டும், கோயம்புத்தூரில் ஒன்றும் மதுரையில் ஒன்றுமாக மொத்தம் நான்கு நடமாடும் நீதிமன்றங்கள் செயல்படுகின்றன.

**(10) 1987 ஆம் ஆண்டு "தடா" சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட தனி (Designated) நீதிமன்றங்கள்**

இச்சட்டத்தின்கீழ் சென்னையில் இரண்டு தனி நீதிமன்றங்களையும் திருநெல்வேலி, மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் தலா ஒரு தனி நீதிமன்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

**(11) இன்றியமையாப் பொருட்கள் சட்டம் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரணை செய்வதற்கான தனி நீதிமன்றங்கள்**

இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின்கீழ் வருகின்ற வழக்குகளை விசாரணை செய்வதற்காக மாவட்ட அமர்வு நீதிபதி பதவித் தரத்தில் உள்ள நீதிபதி, சென்னை, மதுரை, கோயம்புத்தூர், புதுக்கோட்டை, சேலம், தஞ்சாவூர் ஆகிய ஒவ்வொரு இடத்திலும் ஒரு தனி நீதிமன்றம் வீதம் மொத்தம் ஆறு தனி நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**(12) குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரணை செய்வதற்கான கூடுதல் அமர்வு நீதிமன்றங்கள்**

குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரணை செய்வதற்காக, இரண்டு கூடுதல் அமர்வு நீதிமன்றங்கள் சென்னை மற்றும் கோயம்புத்தூரில் இயங்கி வருகின்றன.

சென்னையில் குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரிப்பதற்காக சென்னை (பூவிருந்தவல்லியில்) இயங்கும் தனி நீதிமன்றம் தற்போது பயங்கரவாதத் தடுப்பு நடவடிக்கைகள் சட்டம், 2002 (மத்திய சட்டம் 15/2002) கீழ் தொடரப்படும் வழக்குகளை விசாரிக்கின்றது.

**(13) தென் மாவட்ட இனக் கலவரம் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்வதற்காக மதுரையில் உள்ள அமர்வு நீதிமன்றம்**

தென்மாவட்ட இனக் கலவரம் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்வதற்காக, மதுரையில் அமர்வு நீதிமன்றம் ஒன்று இயங்கி வருகிறது.



2006 ஆகஸ்ட் 8]

**(14) மகளிர் நீதிமன்றம்**

பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்கள் குறித்த வழக்குகளை விசாரிப்பதற்காக மட்டுமே சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம் மற்றும் பெரம்பலூர் ஆகிய இடங்களில் தலா ஒன்று வீதம் ஏழு மகளிர் நீதிமன்றங்கள் மாநிலத்தில் இயங்கி வருகின்றன.

**(15) மனித உரிமைகள் நீதிமன்றம்**

மனித உரிமைகள் மீறப்படுவதால் எழும் வழக்குகளை விரைவில் விசாரணை செய்வதற்காக, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு அமர்வு நீதிமன்றத்தை மனித உரிமைகள் நீதிமன்றமாக மாநில அரசு குறிப்பிடவும், மனித உரிமைகள் நீதிமன்றங்களுக்கு தனி அரசு வழக்கு நடத்துநர்களை (குற்றவியல்) நியமிக்கவும், 1993 ஆம் ஆண்டு மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் (மத்தியச் சட்டம் 10/1994) வகை செய்கிறது.

மேற்சொன்ன விதிகளுக்கிணங்க, சென்னை உயர் நீதிமன்றத்தின் இசைவுடன், இம்மாநிலத்திலுள்ள அனைத்து தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள், சென்னையிலுள்ள இரண்டாவது கூடுதல் அமர்வு நீதிமன்றம் மற்றும் உதகமண்டலம் அமர்வு நீதிமன்றம் ஆகிய நீதிமன்றங்களை மனித உரிமைகள் நீதிமன்றங்களாக அரசு குறிப்பிட்டு 29-1-1996 முதல் அவ்வாறே செயல்படுகிறது. மாவட்ட நீதிமன்றங்களின் அரசு வழக்கு நடத்துநர்கள் (குற்றவியல்), மனித உரிமைகள் நீதிமன்றத்தில் தனி அரசு வழக்கு நடத்துநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இருப்பினும், சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய அறிவுரையின் அடிப்படையில், மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட வழக்குகள் குறித்து விசாரணை நடத்துவதற்கென்றே மனித உரிமைகள் நீதிமன்றத்தில் தனி அரசு வழக்கு நடத்துநர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

**(16) தமிழ்நாடு முதலீட்டாளர்கள் பாதுகாப்புச் சட்டம் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்வதற்கான தனி நீதிமன்றம்**

1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு முதலீட்டாளர்கள் (நிதி நிறுவனங்களில்) பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளை விசாரணை செய்வதற்கென்றே தனி நீதிமன்றம் ஒன்று சென்னையில் இயங்கி வருகிறது.

[2006 ஆகஸ்ட் 8

**(17) வெள்ளை ரவி மற்றும் சேரா மீதான வழக்குகளை விசாரணை செய்வதற்கென்றே ஒரு கூடுதல் அமர்வு நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது.**

**(18) விரைவு நீதிமன்றங்கள்**

பதினொன்றாவது நிதிக் குழுமத்தின் பரிந்துரையின்படி நீதிமன்றங்களில் வழக்குகளின் தேக்கநிலையை குறைக்கும்பொருட்டு, குறிப்பாக மாவட்ட அமர்வு நீதிமன்றங்கள் மற்றும் சார்பு நீதிமன்றங்களில் தேங்கியுள்ள குற்ற வழக்குகளில் விரைவாக தீர்வு காண்பதற்கு ஏதுவாக மாநிலத்தில் 49 விரைவு நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. அரசாணை (2டி) எண் 444, உள் (நீதிமன்றங்கள்–IA) நாள் 24-7-2006-ல் 49 விரைவு நீதிமன்றங்களை நீட்டிப்புச் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இந்நீதிமன்றங்களுக்கு 2006-2007 ஆண்டிற்கு உத்தேசச் செலவு ரூ.5,29,57,000 ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த விரைவு நீதிமன்றங்களுக்காக மைய அரசு 2005-2006 ஆம் ஆண்டில் ரூ.3,13,70,000 (ரூபாய் மூன்று கோடியே பதின்மூன்று இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) வழங்கியுள்ளது.

**11. சென்னை அரசு தலைமை சொத்தாட்சியர் – பொறுப்பு சொத்தாட்சியர்:**

சென்னையில் உள்ள அரசுத் தலைமை சொத்தாட்சியர் – பொறுப்பு சொத்தாட்சியர் மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் உள்ள ஓர் அதிகாரியாவார். அவருக்கு உதவியாகத் துணைத் தலைமை சொத்தாட்சியர்—பொறுப்பு சொத்தாட்சியர் உள்ளார். உரிய வயதடையாதவர்கள் மற்றும் அறக்கட்டளைகளின் சொத்துக்களுக்கும் மற்றும் காலஞ்சென்றவர்களின் சொத்துக்களுக்கும் இவ்விரு அதிகாரிகளும் பொறுப்பு வகிக்கின்றனர். இவர்கள், அரசுத் தலைமை சொத்தாட்சியர் சட்டம் மற்றும் பொறுப்பு சொத்தாட்சியர் சட்டம் ஆகியவற்றின் விதிமுறைகளின்படி அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பல்வகைப் பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறைவேற்றி வருகின்றார்கள். 2006–2007 ஆம் ஆண்டிற்கான தலைமை சொத்தாட்சியர் மற்றும் பொறுப்பு சொத்தாட்சியர் அலுவலகத்தின் உத்தேசச் செலவு ரூ.54,45,000 ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.



2006 ஆகஸ்ட் 8]

**12. தமிழில் வெளிவரும் சட்ட இதழ்**

"தீர்ப்புத் திரட்டு" என்னும் பெயரில் தமிழில் வெளிவரும் இருமாத சட்ட இதழின் 2006–2007 ஆம் ஆண்டிற்கான உத்தேசச் செலவு ரூ.26,21,000 என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த இதழின் படி ஒன்று ரூ.32 என்னும் விலையில் வழக்கறிஞர்கள் மற்றும் பொது மக்களுக்கு வழங்கப்படுகிறது.

**13. நீதித் துறை பயிற்சிக் கழகம்**

மாவட்ட நீதிபதிகள் (District Judges) சார்நிலை நீதிபதிகள் (Sub–Judges) மாவட்ட உரிமையியல் நீதிபதிகள் (District Munsif) மற்றும் குற்றவியல் நீதிபதிகள் போன்ற நீதித் துறை அதிகாரிகளுக்கும் மற்றும் நீதித் துறை பணியாளர்களுக்கும் பயிற்சி அளிப்பதற்காக நீதித் துறை பயிற்சிக் கழகம் செயல்பட்டு வருகிறது. 2006-2007 ஆம் ஆண்டிற்கான உத்தேசச் செலவு ரூ.42,97,000 ஆகும்.

**14. சார்நிலை நீதிமன்றங்களை பரவலாக்குதல்**

ஒரே இடத்தில் அதிக எண்ணிக்கையிலான அதிகார வரம்பு குவிக்கப்பட்டிருப்பதைத் தவிர்ப்பதற்காகவும், வழக்காடும் பொது மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கவும் வெளியூர்களிலுள்ள சார்நிலை நீதிமன்றங்கள் பன்முகப்படுத்தப்பட்டுள்ளன.

வெளியூர்களிலுள்ள உரிமையியல் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு, தற்போது, தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றச் சட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது. அதைப்போன்றே மாநகர உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகார வரம்பினை சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றச் சட்டமும், சிறு வழக்குகள் நீதிமன்றத்தின அதிகார வரம்பினை மாகாண சிறு வழக்குகள் நீதிமன்றச் சட்டமும் வரையறுத்துள்ளன.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வட்டங்களுக்கு, சார்நிலை நீதிமன்றங்களின் அதிகார வரம்பு, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உரிமையியல் நீதிமன்றங்களுக்கு விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. திருவாரூர் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய வருவாய் மாவட்டங்களில் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தின் அதிகார வரம்பு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வருவாய் மாவட்டங்களில் பரந்திருக்கும். குற்றவியல் நீதிமன்றங்களை

பொறுத்தவரையில் அதன் அதிகார வரம்பு குற்றவியல் நடைமுறைச் சட்ட விதித் தொகுப்பின்கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது. குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தின் அதிகார வரம்பானது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காவல் நிலையங்களுக்கு விரிந்திருக்கும்.

எங்கெங்கு புதிதாக நீதிமன்றங்கள் நிறுவப்பட வேண்டும் என்பதை அரசு உயர் நீதிமன்றத்துடன் கலந்தாலோசித்து அங்கெல்லாம் புதிதாக நீதிமன்றங்களைத் தோற்றுவிக்கின்றது.

## 15. 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் பாதுகாப்புச் சட்டத்தினைச் செயல்முறைப்படுத்துதல்

வங்கி சாரா நிதி நிறுவனங்களில் வைப்பீட்டாளர்கள் தங்கள் பணத்தை முதலீடு செய்து இழக்க நேரிடுவதைத் தடுத்து அவர்தம் நலனைப் பாதுகாக்க, நாட்டிலேயே தமிழ்நாடு மாநிலத்தில்தான் முதன் முதலில் ஒரு சிறப்புச் சட்டம் இயற்றப்பட்டது. தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் பாதுகாப்புச் சட்டம் மற்றும் குற்றவியல் திருத்த அவசரச் சட்டத்தினால் எழக்கூடிய வழக்குகளை காவல் துறையில் உள்ள பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு-2 விசாரித்து வருகிறது.

| | |
|---|---|
| **தாக்கலான வழக்குகள்** | **158** |
| **தொடர்புடைய மொத்த முதலீட்டாளர்கள்** | **9544** |
| **வசூல் செய்த வைப்புத் தொகை** | **ரூ. 82,03,76,360** |
| **முதலீட்டாளர்களுக்கு திருப்பி அளிக்கப்பட்ட தொகை (2005 வரை தாக்கலான வழக்குகள்)** | **ரூ. 3,90,43,000** |
| **முதலீட்டாளர்களுக்கு திருப்பி அளிக்கப்பட்ட தொகை (2005 ஆம் ஆண்டிற்கு முந்தையது)** | **ரூ.503,56,22,741** |
| **இனம் கண்டறியப்பட்ட சொத்துக்கள் மதிப்பு** | **ரூ.62,05,53,642** |
| **ஜப்தி செய்யப்பட்ட சொத்துக்களின் மதிப்பு** | **ரூ.16,78,00,000** |
| **பொது மக்களிடம் பெறப்பட்ட மனுக்கள்மீது 2005 ஆம் ஆண்டில் திருப்பி அளிக்கப்பட்ட தொகை** | **ரூ. 9,50,00,000** |



முதலீட்டாளர்கள் நலனைக் கருத்தில் கொண்டு அவர்களுடன் கலந்தாய்வு செய்வதற்காக சென்னையில் உள்ள பொருளாதார குற்றப் பிரிவின் தலைமையகத்தில் வாரந்தோறும் சனிக்கிழமைகளில் "முதலீட்டாளர்கள் தினம்" நடத்தப்பட்டு வருகிறது. இதேபோல், பொருளாதாரக் குற்றப் பிரிவு இயங்கி வரும் மாவட்டங்களிலும் 3 மாதங்களுக்கு ஒரு முறை இந்தக் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. இக்கலந்தாய்வுத் திட்டம் 2006 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும். முதலீட்டாளர்களுக்கு அவர்களின் முதலீட்டுப் பணம் திரும்பக் கிடைப்பதற்காக, வழக்கு சம்பந்தப்பட்ட நிதி நிறுவனங்களிடம் இருந்து கடன் பெற்றவர்களைக் கண்டுபிடித்து அவர்கள் பணத்தைத் திரும்பச் செலுத்த புதிய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நிதி நிறுவனங்களின் கையகப்படுத்தப்பட்ட சொத்துக்களை விற்பது தொடர்பாக சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களை அணுகி விற்பனை நடவடிக்கையை விரைவில் முடிக்கத் தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தப் பிரிவில் உள்ள அதிகாரிகளுக்கு ஒரு குறிப்பிட்ட இலக்கை நிர்ணயம் செய்தும், அவர்களின் நடவடிக்கைகளை முறையாக ஆய்வு செய்தும், முதலீட்டாளர்களுக்குப் பணம் விரைவில் கிடைக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 16. கணினிமயமாக்கல்

### (1) உயர் நீதிமன்றத்தைக் கணினிமயமாக்கல்

சென்னை, உயர் நீதிமன்றத்தைக் கணினிமயமாக்கும் பணிக்கென புதுதில்லியில் இயங்கும் தேசிய தகவல் மையத்திற்கு ரூ.3.48 கோடி நிதியை மைய அரசின் தகவல் தொழில் நுட்பவியல் துறை வழங்கியுள்ளது. மேற்குறிப்பிட்ட இத்தொகையில், சென்னை, உயர் நீதிமன்றத்திற்கு 250 கணினிகளையும் அதன் துணைப் பாகங்களையும் தேசிய தகவல் மையம் வாங்கித் தந்துள்ளது. இக்கணினிகளை நிறுவும் பணி சென்னை, உயர் நீதிமன்றத்தில் தற்பொழுது நடைபெற்று வருகிறது. மேலும், மேற்குறிப்பிட்ட ரூ.3.48 கோடி நிதியில் ஒவ்வொரு நீதிமன்ற அறையிலும் இலக்கமுறை திரைக்காட்சி அமைப்புகளையும் (Digital Display Systems) சென்னை, உயர் நீதிமன்றம் மற்றும் மதுரைக் கிளையில் முக்கியமான இடங்களில் கூட்டுத் திரைக்காட்சி அமைப்புகளையும் (Composite Display Systems) அமைப்பதற்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தேசித்துள்ளது. மேற்கூறிய மத்திய அரசின் நிதியிலிருந்து சென்னை, உயர் நீதிமன்றத்தில் முக்கியமான இடங்களில்

[2006 ஆகஸ்ட் 8

கணினி முனையங்களையும் (தொடுதிரைகள்) [e-kiosks (Touch Screens)] வாங்கிப் பயன்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

சென்னை, உயர் நீதிமன்றத்தின் மாண்புமிகு நீதிபதிகளின் இல்ல அலுவலகங்களில் 49 கணினிகள் அதற்கான துணைப் பாகங்கள் மற்றும் அதற்கான அறைகலன்கள் நிறுவுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. நீதிபதிகளின் இல்லக் கணினிகளுக்கு பி.எஸ்.என்.எல். அகலக்கற்றை இணைப்பு (BSNL Broad Band connection) வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**(2) சென்னை மாநகர நீதிமன்றங்களை கணினிமயமாக்குதல்**

மைய அரசு நிதி உதவித் திட்டத்தின்கீழ் ரூபாய் 2,19,00,000 (ரூபாய் இரண்டு கோடியே பத்தொன்பது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் மைய அரசின் நிதி ஒப்பளிப்புடன் சென்னையிலுள்ள சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள், சிறு வழக்குகள் நீதிமன்றங்கள் மற்றும் பெருநகர குற்றவியல் நீதிமன்றங்கள் ஆகிய அனைத்து நீதிமன்றங்களும் கணினிமயமாக்கப்பட்டு அவற்றுக்கு இணையதள வசதி செய்யப்பட்டுள்ளது.

**(3) சென்னை உயர் நீதிமன்றத்தில் தகவல் மையம் தோற்றுவித்தல்**

சென்னை உயர் நீதிமன்றம், முதன்மை அமர்வு நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்குகளின் அவ்வப்போதைய நிலையை, வழக்காடும் பொதுமக்களும், வழக்குரைஞர்களும் அறிந்து கொள்ள வகை செய்யும்பொருட்டு 23-4-2006 அன்று தகவல் மையம் ஒன்று சென்னை உயர் நீதிமன்றத்தில், உச்ச நீதிமன்ற மாண்புமிகு நீதிபதிகள் திருவாளர்கள் கே.ஜி.பாலகிருஷ்ணன் மற்றும் ஏ.ஆர். இலக்குமணன் ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது. அந்நாளில் சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழுவின் இணையதள முகவரிகளும் வெளியிடப்பட்டன.

**17. தமிழ்நாடு மாநிலச் சட்டப் பணிகள் ஆணைக்குழு**

சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்குத் தேவைப்படும் சட்ட உதவிகளை இலவசமாக அளிக்க சட்டப்பணிகள் ஆணைக்குழு சட்டம், 1987 (சட்டம் 59/1994–ல் திருத்தப்பட்டபடி) இயற்றப்பட்டது. மேற்சொன்ன அலுவல்களை ஆற்றுவதற்காக இச்சட்டம், மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு, மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,



2006 ஆகஸ்ட் 8]

வட்டச் சட்டப்பணிகள் குழுக்கள் மற்றும் உயர் நீதிமன்ற சட்டப்பணிகள் குழு ஆகியவை அமைக்கப்பெற்று, அவை சிறந்த முறையில் இயங்கி வருகின்றன.

**(அ) மக்கள் நீதிமன்றம் (Lok Adalat)**

மாநில, மாவட்ட, வட்ட மற்றும் உயர் நீதிமன்ற சட்டப் பணிகள் ஆணைக் குழுக்கள் மக்கள் நீதிமன்றங்களை ஏற்படுத்த அதிகாரம் பெற்றுள்ளன.

கீழ்க்காணும் இனங்களில், மக்கள் தகராறு ஏற்பட்ட இருபிரிவினருக்கிடையே இணக்கத் தீர்வு அல்லது உடன்பாடு செய்து வைக்கும் அதிகாரத்தை மக்கள் நீதிமன்றங்கள் பெற்றுள்ளன:–

(1) யாதொரு நீதிமன்றத்திலும் நிலுவையாக உள்ள யாதொரு வழக்கு அல்லது

(2) எந்தப் பகுதிக்கான மக்கள் நீதிமன்றம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதோ அந்தப்பகுதியின், யாதொரு நீதிமன்றத்தின் அதிகார வாம்பிற்குள் வந்து ஆணைக்கென நீதிமன்றத்தின் முன் கொண்டு செல்லப்படாத யாதொரு பிற பிரச்சினைகள்.

இந்த மக்கள் நீதிமன்றத்தின் தீர்ப்பு இறுதியானது. இத்தீர்ப்பினை எதிர்த்து எந்த நீதிமன்றத்திலும் மேல்முறையீடு செய்ய முடியாது. 31–3–2006 ஆம் நாள் வரை நடத்தப்பட்ட மக்கள் நீதிமன்றங்களின் மொத்த எண்ணிக்கை 28,465 ஆகும். 31–3–2006 ஆம் நாள் வரை தீர்வு காணப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை 2,81,554 ஆகும். இவற்றில் 1,14,551 வழக்குகள் விபத்துக்கள் சம்பந்தப்பட்டவை ஆகும். மொத்தம் ரூ.1,190 கோடி இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது. 1,67,003 இதர வழக்குகள் தீர்க்கப்பட்டுள்ளன. ஊரக பகுதிகளில் கால முறைப்படி சட்ட உதவி – சட்ட அறிவு விளக்க முகாம்கள் நடத்தப்படுகின்றன. இந்த மாநிலச் சட்டப் பணிக்குழு சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் ஒரு புதிய கட்டடத்தில் தற்பொழுது இயங்கி வருகிறது.

**(ஆ) மத்திய சிறைகளில் சட்ட உதவி மையம் மற்றும் சிறை நீதிமன்றம்**

சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர், கடலூர், சேலம், திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மத்திய சிறைகளிலும் வேலூரிலுள்ள மகளிருக்கான சிறப்புச் சிறையிலும் சட்ட உதவி மையமும் மற்றும் சிறை நீதிமன்றமும் இயங்க ஆரம்பித்துள்ளன.

சிறை நீதிமன்றம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் தற்போது நடந்து வருகிறது.

## 18. அரசு வழக்காடும் துறை, உயர் நீதிமன்றம், சென்னை

சென்னை உயர் நீதிமன்றத்தில் உள்ள வழக்குரைஞர் அலுவலகங்களை ஒருங்கிணைத்து அரசு வழக்காடும் துறை ஒன்றினை அரசு ஆணை (நிலை) எண் 1466, உள் (நீதிமன்றங்கள்-4) துறை, நாள் 6-10-1997—ல் ஆணையிட்டவாறு ஏற்படுத்தப்பட்டது. மாநில அரசு தலைமை வழக்குரைஞரின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் இத்துறையில் கூடுதல் மாநில தலைமை அரசு வழக்குரைஞர்-I, கூடுதல் மாநில தலைமை அரசு வழக்குரைஞர்—II, கூடுதல் மாநில தலைமை அரசு வழக்குரைஞர்—III, குற்றவியல் வழக்குரைஞர், மாநில அரசு உரிமையியல் வழக்குரைஞர் (Government Pleader), சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளையின் சிறப்பு மாநில அரசு உரிமையியல் வழக்குரைஞர் ஆகியோரின் அலுவலகங்கள் அடங்கும். இந்த அரசு வழக்காடும் துறையானது மாநில அரசின் உள் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகின்றது.

## 19. குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம்

குற்ற வழக்கு தொடர்வு இயக்குநராக தற்பொழுது கூடுதல் காவல் துறை இயக்குநர் பதவித் தரத்தில் உள்ள இந்திய காவல் பணி அலுவலர் ஒருவர் நியமிக்கப்படுகிறார். குற்ற வழக்குகள் தொடர்வு இணை இயக்குநர், குற்ற வழக்குகள் தொடர்வு துணை இயக்குநர்கள், குற்ற வழக்குகள் தொடர்வு உதவி இயக்குநர்கள், தலைமை நீதித் துறை குற்றவியல் நீதிமன்றங்கள் ஆகியவற்றில் அரசு சார்பாக வழக்குகளை நடத்தும் கூடுதல் குற்றவியல் வழக்குரைஞர்கள் மற்றும் நிலை-I (ம) நிலை-II—லுள்ள அரசு குற்றவியல் உதவி வழக்குரைஞர்கள் ஆகியோரின் நிருவாகப் பணிகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரியாக குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநர் உள்ளார்.

குற்றவியல் வழக்குகளைத் திறம்பட நடத்தி நிர்வகிப்பதுடன், மாநிலம் முழுவதிலுமுள்ள பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள், குற்றவியல் நீதிமன்றங்கள் மற்றும் தலைமை நீதித் துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் சட்ட அலுவலர்கள் மற்றும் குற்றவியல் வழக்குரைஞர்கள் ஆகியோரின் பணிகளைக் கண்காணிப்பதே குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககத்தின் தலையாய நோக்கமாகும்.





## 20. புதிய முயற்சிகள்

### (அ) வெளியிடப்பட்ட ஆணைகள்

அரசின் புதிய முயற்சியாக கீழ்க்கண்ட ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன:

(1) அரசாணை நிலை எண் 617, உள் (நீதிமன்றங்கள்-3) துறை, நாள் 13-7-2006-ல் திருநெல்வேலியிலுள்ள 2-வது கூடுதல் சார்பு நீதிமன்றத்தை மாற்றி வள்ளியூரில் சார்பு நீதிமன்றம் ஏற்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது.

(2) அரசாணை நிலை எண் 656, உள் (நீதிமன்றங்கள்-3) துறை, நாள் 24-7-2006-ல் உயர் நீதிமன்ற வளாகத்தை விரிவாக்கம் செய்து அங்கு அனைத்து நீதிமன்றங்களையும் நடத்த, மாநில விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான புல எண் 11712/1 (பகுதி)-ல் உள்ள 1.25 ஏக்கர் நிலம் மற்றும் கட்டடத்தையும் வாங்க ஆணையிடப்பட்டுள்ளது.

(3) அரசாணை நிலை எண் 666, உள் (நீதிமன்றங்கள்-3) துறை, நாள் 25-7-2006-ல் திருவண்ணாமலையிலுள்ள கூடுதல் சார்பு நீதிமன்றத்தை மாற்றி செங்கத்தில் சார்பு நீதிமன்றம் அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது.

(4) சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளைக்குத் தேவையான 350 பணி இடங்களுக்கான ஒப்புதல் வழங்கப்படும்.

(5) உயர் நீதிமன்றத்தில் உள்ள அரசு வழக்கறிஞர்களுக்காக தனியாக ஒரு கட்டடம் ரூ.2.03 கோடி மதிப்பீட்டில் உயர் நீதிமன்ற வளாகத்திலேயே கட்ட ஆணையிடப்பட்டுள்ளது.

(6) அரசாணை (2டி) எண் 398, உள் (நீதிமன்றங்கள்-1A) துறை, நாள் 4-7-2006-ல் தமிழ்நாடு நீதித் துறை பயிற்சி கழகத்திற்கு ரூ.16 இலட்சம் செலவில் 30 கணினிகள் வாங்குவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.

(7) அரசாணை நிலை எண் 689, உள் (நீதிமன்றங்கள்-1A) துறை, நாள் 2—8-2006-ல் உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்கு 49 சட்ட எழுத்தர் பதவிகள் தலா ரூ.5,000 மாதாந்திர மதிப்பூதியத்தில் தோற்றுவிக்க ஆணையிடப்பட்டுள்ளது.

[2006 ஆகஸ்ட் 8

## (ஆ) 2006–2007 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டங்கள்

2006-2007 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தில் கீழ்க்கண்ட திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது:—

| வ.எண் | திட்டத்தின் பெயர் | தொடர் செலவு | தொடரா செலவு | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1 | அறைகலன் சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிமன்ற அறைகளில் நீதிமன்ற அலுவலர்கள் மற்றும் நேர்முக உதவியாளர்களின் பயன்பாட்டிற்காக மேடை அமைத்தல் | 0.00 | 11.79 | 11.79 |
| 2 | கூடலூர், மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற உபயோகத்திற்கென அறைகலன் வாங்குதல் | 0.00 | 2.95 | 2.95 |
| 3 | விழுப்புரம் மாவட்டம், குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் I மற்றும் II பயன்பாட்டிற்காக அறைகலன்கள் வாங்குதல் | 0.00 | 2.46 | 2.46 |
| 4 | ஈரோடு மாவட்டம், காங்கேயத்தில் உரிமையியல் நீதிபதி மற்றும் குற்றவியல் நடுவர்களுக்கு குடியிருப்பு கட்டுதல் | 0.00 | 18.65 | 18.65 |
| 5 | வேலூர், குடியாத்தம் சார்பு நீதிபதி மற்றும் மாவட்ட உரிமையியல் நீதிபதிகளுக்கு குடியிருப்பு கட்டுதல் | 0.00 | 19.00 | 19.00 |
| 6 | சேலம் மாவட்டம் இராசிபுரம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்துக்கு சுற்றுச் சுவர் அமைத்தல் | 0.00 | 1.16 | 1.16 |
| 7 | சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள முதன்மைக் கட்டடங்கள் மற்றும் இணைப்புக் கட்டடங்களில் உள்ள மாண்புமிகு நீதிபதிகளின் அறைகளுக்கு குளிர் சாதன வசதியை செம்மைப்படுத்துதல் | 0.00 | 20.00 | 20.00 |
| 8 | குற்ற வழக்கு தொடர்வு இயக்ககம் குற்ற வழக்கு தொடர்வு துறையில் உள்ள 11 துணை இயக்குநர்களுக்கு மற்றும் 15 உதவி இயக்குநர்களுக்கு 26 டாட் மேட்ரிக்ஸ் பிரிண்டர்கள் வழங்குதல் | 0.00 | 3.15 | 3.15 |
| | மொத்தம் | 0.00 | 79.16 | 79.16 |



2006 ஆகஸ்ட் 8]

### 21. முடிவுரை

நீதித் துறை சுதந்திரமாகச் செயல்படுவதற்கு மட்டுமின்றி அதன நிருவாகம் மற்றும் ஏனைய தொடர்புடைய செயலாக்கத்திற்குத் தேவையான உடனடி ஆதரவையும் உதவியையும் இந்த அரசு ஏற்படுத்திக் கொடுக்கும். விரைந்து நீதி வழங்குவது சிறந்த ஆளுகையின் ஒரு இன்றியமையாத தனிச்சிறப்பு ஆகும். இந்த உயரிய குறிக்கோளை இனிவரும் காலங்களிலும் எய்த அரசு உறுதி பூண்டுள்ளது.

# இணைப்பு – I

## (அ) சென்னை மாநகரில் செயல்பட்டு வரும் நீதிமன்றங்கள்/ தீர்ப்பாயங்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள்

| வரிசை எண் | நீதிமன்றங்கள்/தீர்ப்பாயத்தின் பெயர் | மாவட்ட நீதிமன்றங்கள் | விரைவு நீதிமன்றங்கள் | தலைமைப் பெருநகர குற்றவியல் நீதிமன்றம் உரிமையியல் நீதிபதி (முதுநிலை) | பிற உரிமையியல் நீதிபதி (முதுநிலை) | உரிமையியல் நீதிபதிகள் (இளநிலை) |
|---|---|---|---|---|---|---|
| 1 | மாநகர உரிமையியல் நீதிமன்றம் | 11 | 5 | – | 18 | 1 |
| 2 | சிறுவழக்குகள் நீதிமன்றம் | 1 | | | 8 | 8 |
| 3 | பெருநகர தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் | 2 | | 1 | 6 | 17 |
| 4 | தொழிலாளர் நீதிமன்றங்கள் | 3 | - | - | - | |
| 5 | தொழில் தீர்ப்பாயம் | 1 | | | | |
| 6 | இன்றியமையாப் பொருள்கள் சட்டத்தின்கீழ் தனி நீதிமன்றம் | 1 | - | - | | |
| 7 | விற்பனை வரி மேல் முறையீட்டு தீர்ப்பாயம் | 1 | -- | | 1 | |
| 8 | அரசுப் போக்குவரத்து மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் | 1 | - | | | |
| 9 | தலைமை சொத்தாட்சியர் பொறுப்பு சொத்தாட்சியர் | 1 | | | | |
| 10 | துணை சொத்தாட்சியர் - பொறுப்பு சொத்தாட்சியர் | | | | | 1 |
| 11 | NDPS சட்டத்தின்கீழ் கூடுதல் தனி நீதிமன்றம் | 1 | | | | |
| 12 | 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு முதலீட்டாளர்கள் (நிதி நிறுவனங்களில்) பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தனி நீதிமன்றம் | 1 | | | | |
| 13 | குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரிப்பதற்கான அமர்வு நீதிமன்றம் | 1 | | | | |
| 14 | குடும்ப நல நீதிமன்றங்கள் | 3 | | | | |
| 15 | வெள்ளை ரவி மற்றும் சேரா வுக்கு எதிரான வழக்குகளை விசாரிக்கும் கூடுதல் அமர்வு நீதிமன்றம் | 1 | | | | |
| 16 | தலைவர், சென்னை மாநகராட்சி வரிவிதிப்பு மேல் முறையீட்டு தீர்ப்பாயம் | 1 | | | | |
| 17 | மகளிர் நீதிமன்றம் | 1 | | | | |
| | **மொத்தம்** | **31** | **5** | **1** | **33** | **27** |

**மொத்த நீதிமன்றங்கள் — 97**

2006 ஆகஸ்ட் 8]

**(ஆ) தமிழ்நாட்டில் மாவட்டங்களில் இயங்கிவரும் நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள்**

| வரிசை எண் | மாவட்டங்கள் | மாவட்ட நீதிபதி நிலை | | | | | | | | | | உரிமையியல் நீதிபதி (முதுநிலைப் பிரிவு) | | | உரிமையியல் நீதிபதி (இளநிலைப் பிரிவு) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மாவட்ட நீதிபதிகள் | குடியுரிமை பாதுகாப்புச் சட்ட தனி நீதிமன்றங்கள் | குண்டு வெடிப்பு வழக்கு நீதிமன்றங்கள் | இனக்கலவர வழக்கு நீதிமன்றங்கள் | தொழிலாளர் நீதிமன்றங்கள் | இன்றியமையாப் பொருட்கள் சட்ட வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றங்கள் | மத்திய புலனாய்வுத் துறை வழக்குகள் விசாரிக்கும் நீதிமன்றங்கள் | குடும்ப நீதிமன்றங்கள் | மகளிர் நீதிமன்றம் | விரைவு நீதிமன்றங்கள் | தலைமைக் குற்றவியல் நீதிமன்றங்கள் | சார்பு நீதிமன்றங்கள் | மாநகராட்சி வரிவிதிப்பு மேல்முறையீட்டு ஆணையம் | மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் | குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) | (16) | (17) | (18) |
| 1. | செங்கல்பட்டு | 1 | – | – | – | – | – | – | – | – | 5 | 1 | 7 | – | 11 | 14 | 4 |
| 2. | கோயம்புத்தூர் | 2 | – | 1 | – | 1 | 1 | 1 | 1 | 1 | 5 | 1 | 7 | 2 | 7 | 14 | 4 |
| 3. | கடலூர் | 1 | – | – | – | 1 | – | – | – | – | 3 | 1 | 7 | – | 8 | 8 | 4 |
| 4. | தர்மபுரி | 2 | – | – | – | – | – | – | – | – | 1 | 2 | 4 | – | 3 | 5 | 6 |
| 5. | திண்டுக்கல் | 1 | – | – | – | – | – | – | – | – | 1 | 1 | 3 | – | 5 | 5 | 3 |
| 6. | ஈரோடு | 2 | – | – | – | – | – | – | – | – | 4 | 1 | 8 | – | 10 | 9 | 2 |
| 7. | கன்னியாகுமரி | 1 | – | – | – | – | – | – | – | – | – | 1 | 5 | – | 9 | 7 | 1 |
| 8. | கரூர் | 1 | – | – | – | – | – | – | – | – | – | 1 | 2 | – | 3 | 4 | – |
| 9. | மதுரை | 2 | 1 | – | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 3 | 1 | 6 | 2 | 5 | 10 | 1 |

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 10. | நாகப்பட்டினம் | 1 | – | – | – | – | – | – | – | – | – | 1 | 5 | – | 7 | 9 | 1 |
| 11. | நாமக்கல் | 1 | – | – | – | – | – | – | – | – | 1 | 1 | 1 | – | 4 | 4 | 1 |
| 12. | நீலகிரி | 1 | – | – | – | – | – | – | – | – | – | – | 1 | – | 1 | 1 | 3 |
| 13. | பெரம்பலூர் | 1 | – | – | – | – | – | – | – | 1 | 1 | 1 | 1 | – | 4 | 3 | – |
| 14. | புதுக்கோட்டை | 1 | – | – | – | – | 1 | – | – | – | 1 | 1 | 1 | – | 3 | 3 | 2 |
| 15. | இராமநாதபுரம் | 1 | – | – | – | – | – | – | – | – | 1 | 1 | 2 | – | 2 | 3 | 4 |
| 16. | சேலம் | 2 | – | – | – | 1 | 1 | – | 1 | 1 | 2 | 1 | 5 | 1 | 6 | 12 | 1 |
| 17. | சிவகங்கை | 1 | – | – | – | – | – | – | – | – | – | 1 | 2 | – | 4 | 3 | 4 |
| 18. | தஞ்சாவூர் | 1 | 1 | – | – | – | 1 | – | – | – | 2 | 1 | 6 | – | 7 | 6 | 3 |
| 19. | தேனி | 1 | – | – | – | – | – | – | – | – | 1 | 1 | 2 | – | 3 | 3 | 2 |
| 20. | தூத்துக்குடி | 1 | – | – | – | – | – | – | – | – | 2 | 1 | 2 | – | 6 | 6 | 2 |
| 21. | திருச்சிராப்பள்ளி | 1 | 1 | – | – | 1 | – | – | – | 1 | 2 | 1 | 4 | 1 | 7 | 9 | 1 |
| 22. | திருநெல்வேலி | 2 | 1 | – | – | 1 | – | – | – | 1 | 2 | 1 | 7 | 1 | 12 | 9 | 4 |
| 23. | திருவண்ணாமலை | 1 | – | – | – | – | – | – | – | – | – | 1 | 4 | – | 7 | 5 | 3 |
| 24. | வேலூர் | 1 | – | – | – | 1 | – | – | – | – | 3 | 1 | 4 | – | 8 | 14 | 4 |
| 25. | விழுப்புரம் | 1 | – | – | – | – | – | – | – | – | 3 | 1 | 7 | – | 15 | 9 | 2 |
| 26. | விருதுநகர் | 1 | – | – | – | – | – | – | – | – | 1 | 1 | 4 | – | 3 | 6 | 3 |
| | மொத்தம் | 32 | 4 | 1 | 1 | 7 | 5 | 2 | 3 | 6 | 44 | 26 | 107 | 7 | 160 | 181 | 65 |
| | மாவட்ட நீதிபதி நிலை – 61 | | | | | | | | | | விநீம 44 | உரிமையியல் நீதிபதி (முதுநிலைப் பிரிவு) 140 | | | உரிமையியல் நீதிபதி (இளநிலைப் பிரிவு) 406 | | |
| | மொத்த நீதிமன்றங்களின் எண்ணிக்கை – 651 | | | | | | | | | | | | | | | | |



# இணைப்பு–II

(385 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 24–உள் துறை– சிறைச்சாலைகள்

## கொள்கை விளக்கக் குறிப்பு 2006–2007

## தமிழ்நாடு சிறைத் துறை

### I. முன்னுரை

சிறைச்சாலைகள் மாநிலத்தின் குற்றவியல் நீதிமுறைத் திட்டத்தின் ஒருங்கிணைந்த மற்றும் முக்கியமான ஓர் அங்கமாகும். அரசின் முற்போக்கு மற்றும் சீர்திருத்த தண்டனைக் கொள்கைகளின்படி, சிறைவாசிகளை சிறையினுள் அடைத்து வைப்பது மட்டுமல்லாமல் அவர்களை கட்டுப்படுத்தி, சீர்திருத்தி, மறுவாழ்வளித்து விடுதலைக்குப்பின் அவர்களை சமுதாயத்தில் இணைப்பதே சிறைத் துறையின் முதன்மைப் பணியாகும். இதனைக் கருத்தில் கொண்டு சிறைவாசிகள் விடுதலைக்குப்பின் நாகரிகமான வாழ்க்கையை நடத்த ஏதுவாக தனி மனிதத் தேவை, சமூகக் கடமை மற்றும் குடும்பப் பொறுப்புகளில் உதவி செய்யவும், சிறைகளில் பல்வேறு வாழ்க்கைத் தொழில் கல்வி, யோகாசனம் மற்றும் தியான வகுப்புகள் நடத்தப்படுகின்றன. சிறைகளை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் சிறைச்சாலைகளின் கட்டமைப்பு வசதிகள், பாதுகாப்புத் தேவைகள் மற்றும் சிறைவாசிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த அரசு கணிசமான அளவிற்கு முதலீடு செய்துள்ளது.

### II. நிறுவன அமைப்பு முறை

#### 1. நிறுவனங்கள்

சிறை நிருவாகத்தின்கீழ், 8 மத்திய சிறைகள், 2 பெண்கள் தனிச் சிறைகள், 103 ஆண்கள் கிளைச் சிறைகள், 10 பெண்கள் கிளைச் சிறைகள், 4 ஆண்கள் தனிக் கிளைச் சிறைகள், 3 பெண்கள் தனிக் கிளைச் சிறைகள், திறந்தவெளிச் சிறை ஒன்று, பண்ணைச் சிறை ஒன்று மற்றும் இளம் குற்றவாளிகளுக்கான பள்ளி ஒன்று உட்பட மொத்தம் 133 சிறைகள் உள்ளன. இத்துறை இந்திய காவல் பணியைச் சேர்ந்த கூடுதல் காவல் துறை இயக்குநர் நிலையில் உள்ள ஒரு முதுநிலை அலுவலரின் தலைமையில் இயங்குகிறது. இவருக்கு உதவியாக தலைமை

அலுவலகத்தில் சிறைத் துறைத் துணைத் தலைவர் (தலைமையிடம்) ஒருவரும் மற்றும் சென்னை, கோவை, திருச்சி, மதுரை ஆகிய நான்கு சரகங்களில் சரக சிறைத் துறைத் துணைத் தலைவர்களும் உள்ளனர். சிறை கண்காணிப்பாளர்களின் கட்டுப்பாட்டின்கீழ் மத்திய சிறைகளின் நிருவாகம் மற்றும் அதன் அதிகார வரம்பிற்குட்பட்ட கிளைச் சிறைகள் இயங்குகின்றன. சிறைத் துறையில் உள்ள அதிகாரிகள் மற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை 4,861 ஆகும். அனைத்து சிறைகளிலும் 18,152 சிறைவாசிகளை அடைக்கத்தக்க இடவசதி உள்ளது.

## 2. பெண்கள் சிறை

பெண் சிறைவாசிகளை அடைப்பதற்காக இரண்டு தனிச் சிறைகள் திருச்சி மற்றும் வேலூரிலும், மேலும் 10 கிளைச் சிறைகளும், 3 தனிக் கிளைச் சிறைகளும் உள்ளன. இச்சிறைகள் முற்றிலும் பெண் பணியாளர்களால் நிர்வகிக்கப்படுகின்றன.

## 3. திறந்தவெளிச் சிறை

திறந்தவெளிச் சிறை ஒன்று கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள சிங்காநல்லூரில் 100 சிறைவாசிகளுக்கான இடவசதியுடன் செயல்பட்டு வருகிறது. இச்சிறையில் நவீன வேளாண்மை முறைகளில் சிறைவாசிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. 10 சிறைவாசிகளுக்கான இடவசதியுடன் கூடிய பண்ணைச் சிறை ஒன்று சேலத்தில் செயல்பட்டு வருகிறது.

## 4. பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை

இப்பள்ளியில் 16–21 வயதைச் சார்ந்த இளங்குற்றவாளிகள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் சீர்திருத்த முறையில் நடத்தப்படுவதுடன், விடுதலைக்குப் பின்னர் அவர்களின் வாழ்க்கைக்கு உதவியாக இருக்கும் வகையில் கல்வி மற்றும் தொழிற்பயிற்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

## 5. நன்னடத்தைப் பிரிவு

நன்னடத்தைப் பிரிவு, தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளரின் தலைமையின்கீழ் 12 மண்டல நன்னடத்தை அலுவலர்களையும், 96 நன்னடத்தை அலுவலர்களையும் கொண்டதாகும். நன்னடத்தை அலுவலர்கள், நன்னடத்தையின்கீழ் விடுதலை செய்யப்படும் குற்றவாளிகளைக் கண்காணிப்பதுடன் அவர்களின் மறுவாழ்விற்கும் உதவிபுரிகின்றனர். மேலும் முதன்முதலாக குற்றம் செய்யும் குற்றவாளிகளுக்கு தண்டனை அளித்து சிறைக்கு அனுப்புவதற்குப்



பதிலாக சில நிபந்தனைகளின் அடிப்படையில் அவர்களை விடுவிக்கும் பணியில் அவர்கள் பெரிதும் ஈடுபடுகின்றனர்.

காவல் நிலைய அடைப்பு அறைகளில் மனித உரிமைமீறல் ஏதும் இல்லை என்பதை உறுதி செய்வதற்காக அவற்றைப் பார்வையிட நன்னடத்தை அலுவலர்களுக்கு அரசு ஆணையிட்டுள்ளது.

## III. சிறை நிருவாகத்தை நவீனப்படுத்துதல்

சிறைச்சாலைகளில் சிறைவாசிகளுக்கான வசதிகள் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக மத்திய அரசின் நிதியுதவி மற்றும் மாநில அரசின் இணை மானியம் ஆகியவற்றைக் கொண்டு சிறைகளை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ், பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. தகவல் தொடர்பு, சிறைவாசிகளைக் கண்காணிக்கத் தக்க வகையில், பதிவு செய்யும் வசதி கொண்ட வரையறுக்கப்பட்ட பகுதியில் மட்டும் பயன்படுத்தத்தக்க தொலைக்காட்சிப் பெட்டிகள் (Closed Circuit Televisions) செல்லிடத்துப்பேசியை செயலிழக்கச் செய்யும் கருவிகள், வெடிகுண்டு கண்டுபிடிப்புக் கருவிகள், நவீன ஆயுதங்கள், உலோகக் கண்டுபிடிப்புக் கருவிகள், இரவு நேர இரட்டை தொலைநோக்காடிகள் (Night vision Binoculars) போன்ற நவீன சாதனங்கள் வழங்குவதற்கும், கண்காணிப்பு கோபுரங்கள், மின் கம்பி வேலி அமைத்தல் மற்றும் மின் விளக்கு வசதிகள் அமைத்தல் போன்றவற்றிற்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. சிறைப் பணியாளர்கள் மற்றும் சிறைகளின் பாதுகாப்பினைக் கருத்தில் கொண்டு சிறைப் பணியாளர்களுக்கு நவீன முறையில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. மத்திய சிறை, திருச்சி, கோவை மற்றும் சேலம் ஆகிய சிறைகளில் உயர் பாதுகாப்பு வசதிகள் கொண்ட தொகுதிகள் கட்டப்பட்டுள்ளன. இதே போன்று உயர் பாதுகாப்புத் தொகுதிகள் வேலூர் மத்திய சிறைக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

## IV. மனித வள மேம்பாடு

### 1. காவலர்கள் பயிற்சி

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் மூலம் நியமனம் செய்யப்படும் சிறைக் காவலர்களுக்கு வேலூரில் உள்ள காவலர் பயிற்சி மையத்தில் ஆறு மாத காலத்திற்கு உடற்பயிற்சி, ஒழுங்குமுறை, மேலாண்மை மற்றும் சீர்திருத்த முறைகள் குறித்த அடிப்படைப் பயிற்சி அளிக்கப்படுவதுடன் சிறைவாசிகளின் மனித உரிமைகள் குறித்த

பயிற்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. அவர்களுக்கு நவீன ஆயுதங்களைக் கையாளும் முறைகளை கற்பிப்பதுடன் அந்த ஆயுதங்களில் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இதனைத் தவிர முதன்மை தலைமைக் காவலர்கள் மற்றும் முதல் நிலை சிறைக் காவலர்களுக்கு அவ்வப்போது நினைவுகூர் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.

வேலூரில் உள்ள சிறைக் காவலர் பயிற்சி மையம் 111 இரண்டாம் நிலை ஆண் காவலர்களுக்கும் 25 இரண்டாம் நிலை பெண் காவலர்களுக்கும் பயிற்சி அளிக்கும் திறனுடன் செயல்பட்டு வருகிறது. இது தவிர திருச்சி மற்றும் கோவை மத்திய சிறைகளில் தற்காலிக காவலர் பயிற்சி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஆயுதமில்லாமல் சண்டையிடுதல், வெடிகுண்டு கண்டறிதல் மற்றும் அவற்றைச் செயலிழக்கச் செய்தல் போன்ற பல்வேறு பயிற்சிகள் பெறுவதற்காகவும் சிறைக் காவலர்கள் சென்னை காவல் துறை கமாண்டோ பயிற்சிப் பள்ளிக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

## 2. மண்டல நிர்வாக சீர்திருத்த பயிற்சி நிலையம், வேலூர்

இந்த நிலையம் 1979 ஆம் ஆண்டிலிருந்து, ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம், கேரளம் மற்றும் தமிழ்நாடு ஆகிய நான்கு தென் மாநிலங்களைச் சேர்ந்த சிறை அதிகாரிகளுக்கு சிறை மேலாண்மை மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்தம் குறித்து பயிற்சி அளித்து வருகிறது. இந்த நிலையத்தின் செலவினத்தை இதில் பங்குகொள்ளும் நான்கு தென் மாநிலங்களும் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றன.

## 3. தேசிய அளவிலான பயிற்சி

புதுதில்லியில் உள்ள தேசிய குற்றவியல் மற்றும் தடய அறிவியல் நிறுவனம், காவல் துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம், தேசிய மனித உரிமை ஆணையம், தேசிய தடயவியல் நிறுவனம் மற்றும் தேசிய சமூகப் பாதுகாப்பு நிறுவனம் ஆகியவற்றால் நடத்தப்படும் தேசிய அளவிலான மனித உரிமை மற்றும் சிறை மேலாண்மை குறித்த பயிற்சி வகுப்புகளுக்கும் சிறை அதிகாரிகள் அனுப்பப்படுகின்றனர்.

## 4. பணியாளர் தேர்வு

ஆண் மற்றும் பெண் இரண்டாம் நிலைக் காவலர்களைத் தேர்வு செய்யும் முகமையாக தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் உள்ளது. தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் தேர்ந்தெடுத்த பட்டியலிலும் ஆண் இரண்டாம் நிலைக்



காவலர்களுக்கு 530 நபர்களையும் காத்திருப்போர் பட்டியலிலிருந்து 113 நபர்களையும் கூடுதல் சிறைத் துறை இயக்குநருக்கு அனுப்பி உள்ளது. காவல் துறை விசாரணை மற்றும் மருத்துவச் சோதனை போன்றவற்றிற்குப் பிறகு 418 ஆண் இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு பணி நியமன ஆணை ஜூன் 2006-ல் வழங்கப்பட்டது. அவர்கள் 14–6–2006 முதல் பயிற்சி பெற்று வருகின்றனர். இவர்களது பயிற்சி 13–12–2006 அன்று நிறைவு பெறுகிறது.

## V. சிறை ஒழுங்கு முறை

### உயர்பாதுகாப்பு சிறைவாசிகளைப் பராமரித்தல்

அரசின் கொள்கை முடிவிற்கேற்ப, தீவிரவாத சிறைவாசிகளை அடைப்பதற்காக தொடக்கத்தில் கோவை, சேலம் மற்றும் திருச்சியில் உள்ள மத்திய சிறைகளில் உயர் பாதுகாப்புத் தொகுதிகள் அமைக்கப்பட்டன. பின்னர் பெருகிவரும் தீவிரவாத சிறைவாசிகளைக் கையாளவும், அவர்களைப் பிரித்து தனிமைப்படுத்தி வைப்பதற்கும் ஏதுவாக இத்தகைய உயர் பாதுகாப்புத் தொகுதி முறை மற்ற மத்திய சிறைகளுக்கும் விரிவாக்கம் செய்யப்பட்டது. அடிப்படைவாத மற்றும் தீவிரவாத சிறைவாசிகள் தற்பொழுது பல்வேறு சிறைகளில் உள்ள உயர்பாதுகாப்புத் தொகுதிகளில் அடைக்கப்படுகின்றனர். இந்த உயர்பாதுகாப்புத் தொகுதிகளின் உட்புறம் சிறைக் காவலர்களாலும், வெளிப்புறம் தமிழ்நாடு காவல் துறையினராலும் பாதுகாக்கப்படுகின்றன. மேற்கண்ட சிறைவாசிகள் பணியில் உள்ள காவலர்களால் உரிய பரிசோதனைக்கு அன்றாடம் உட்படுத்தப்படுவதுடன் உயர் அதிகாரிகளால் அவ்வப்போது சோதனை செய்யப்படுகின்றனர். சிறை விதிகளுக்குட்பட்டு இச்சிறைவாசிகள், பிற சிறைவாசிகளிடமிருந்து பிரித்து வைக்கப்படுகின்றனர்.

இச்சிறைவாசிகளைக் காண வரும் பார்வையாளர்கள் நேர்காணலுக்கு முன்னரும், பின்னரும் சிறை மற்றும் காவல் துறையினரால் தீவிரமாகச் சோதிக்கப்படுகின்றனர். சிறைகளில் விரும்பத்தகாத நிகழ்வுகள் ஏற்படாமல் தடுக்கவும், சிறைவாசிகள் தப்பித்துவிடாமல் பாதுகாக்கவும், அழிவுச் செயல் தடுத்தல் குறித்த சோதனைகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன. முறையான வெளிச்சத்திற்கான மின்சார விளக்குகள் அமைத்தல், பதிவு செய்யும் வசதி கொண்ட வரையறுக்கப்பட்ட பகுதியில் மட்டும் பயன்படுத்தத்தக்க தொலைக்காட்சி பெட்டிகள் (Closed Circuit Television) வெடிகுண்டு கண்டுபிடிப்புச் சாதனங்கள், சிறை மதிற் சுவர்களில் மின்

[2006 ஆகஸ்ட் 8

கம்பி வேலிகள் அமைத்தல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகள், அனைத்து மத்திய சிறைகளிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அனைத்து சிறைவாசிகளும் மனித உரிமைகளுக்கு மதிப்பளித்து பரிவுடனும் உரிய மதிப்புடனும் நடத்தப்படுகின்றனர்.

## VI. சிறைவாசிகள் நலன்

### 1. உணவு மற்றும் உடை

தமிழ்நாடு சிறை நடைமுறை நூல் பாகம் II அத்தியாயம் 22—ல் வரையறுக்கப்பட்ட அளவின்படி சுகாதாரமான முறையில் தயாரிக்கப்படும் சமச் சீரான உணவு சிறைவாசிகளுக்கு வழங்கப்படுகிறது. நோய்வாய்ப்பட்ட சிறைவாசிகளுக்கு சம்பந்தப்பட்ட மருத்துவ அலுவலரின் பரிந்துரையின் பேரில், மருத்துவ உணவாக பால், ரொட்டி, முட்டை முதலியன வழங்கப்படுகின்றன. ஆரோக்கியமான மற்றும் சுகாதாரமான நிலையை உறுதிப்படுத்த சிறைவாசிகளுக்கு எவர்சில்வர் தட்டு மற்றும் குவளைகள் வழங்கப்பட்டுள்ளதோடு எவர்சில்வர் சமையல் பாத்திரங்களும், உணவினை எடுத்துச் செல்ல தள்ளு வண்டிகளும் சிறைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. சிறைவாசிகளுக்கு வரையறுக்கப்பட்ட அளவின்படி உடைகள் மற்றும் படுக்கைகள் வழங்கப்படுகின்றன.

சிறைவாசிகளுக்கு டெரிகாட்டன் சட்டை, அரைக்கால் சட்டை மற்றும் பெரிய அளவிலான தரைவிரிப்பும் வழங்கப்படுகின்றன. போதுமான உடை இல்லாத விசாரணை சிறைவாசிகளுக்கும் இலவசமாக உடைகள் வழங்கப்படுகின்றன.

### 2. சுகாதாரம் பேணுதல்

சிறைவாசிகளுக்கு போதுமான மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது. சுகாதார முகாம்களும் தொடர்ந்து நடத்தப்படுகின்றன. தொழு நோயால் அவதிப்படும் சிறைவாசிகளுக்கு சிறப்புச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. மனநலங்குன்றிய சிறைவாசிகளுக்கு சென்னை அரசு மனநலக் காப்பகத்தில் அனுமதிக்கப்பட்டு போதுமான சிகிச்சை அளிக்கப்படுகிறது. சுகாதாரம் பேணும் நடவடிக்கையாக சிறைகளில் புகை பிடித்தல் அரசால் தடை செய்யப்பட்டுள்ளது. அனைத்து மத்திய சிறைகளுக்கும் நோயாளர் அவசர ஊர்திகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் மத்திய சிறைகளில் மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்வதற்காக, மருத்துவ பரிசோதனைக் கூடங்கள், இதயத்துடிப்பை அறிய உதவும் சாதனங்கள், (E.C.G.) இரத்தத்தை ஆய்வு செய்யும் தானியங்கிக் கருவிகள், எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய எக்ஸ் – கதிர் படமெடுக்கும் கருவிகள் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன. சிறைவாசிகளின் சுகாதாரத்தைப் பேணுவதற்காக அவர்களுக்கு பற்பொடி மற்றும் குளியல் சோப்பு ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன.



2006 ஆகஸ்ட் 8]

### 3. நேர்காணல் மற்றும் பொழுதுபோக்கு

சிறைவாசிகள் அவர்களது உறவினர்கள் மற்றும் நண்பர்களைக் காண நேர்காணல் வசதிகள் உள்ளன. நேர்காணல் குறித்த விண்ணப்பப் படிவங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இப்படிவத்தினை சிறைத் துறைக்கான தகவல் தளத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம். செய்தித்தாட்களும் பருவ வெளியீடுகளும் சிறைவாசிகளுக்கு அரசு செலவில் வழங்கப்படுகின்றன. கல்வித் தரம் மற்றும் இலக்கிய தரம் வாய்ந்த புத்தகங்கள் சிறை நூலகங்களில் வைக்கப்பட்டுள்ளதுடன், சிறைவாசிகளின் பயன்பாட்டிற்காக மாவட்ட நூலகங்களில் இருந்தும் புத்தகங்கள் பெறப்படுகின்றன. உள்ளரங்கு மற்றும் வெளியரங்கு விளையாட்டுகள் விளையாட வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

### 4. கல்வி

சிறைவாசிகளுக்கு அரசு செலவில் தொலைதூரக் கல்வி பயிலும் வசதி உள்ளது. முதியோர் கல்விக்காக தகுதி வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்ட ஆரம்பப் பள்ளிகள் சிறைகளில் இயங்கி வருகின்றன. இந்திரா காந்தி திறந்தவெளிப் பல்கலைக்கழகம், கீழ்க்கண்ட பாடப்பிரிவுகளை நடத்தி வருகிறது.

1. உணவு மற்றும் ஊட்டச்சத்து சான்றிதழ் படிப்பு
2. இளங்கலை ஆயத்தப் பயிற்சி
3. கணினி பயன்பாட்டுப் பயிற்சியில் சான்றிதழ் படிப்பு
4. தொழில் நிர்வாகத்தில் முதுகலை பட்டப் படிப்பு
5. கணினி பயன்பாட்டில் முதுகலை பட்டப் படிப்பு

மத்திய சிறைகளிலுள்ள சிறைவாசிகளுக்கென்றே மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் பட்டம் மற்றும் பட்டமேற்படிப்பிற்கான பாடப் பிரிவுகளை நடத்தி வருகிறது. நாட்டில் முதன்முறையாக தொடங்கப்பட்டுள்ள இத்திட்டத்தின்கீழ், பாடப் பிரிவுகள் திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தால் வரையறுக்கப்பட்ட பாடத் திட்டங்களின்படி மேற்கொள்ளப்படுகின்றன.

### 5. சிறை நீதிமன்றங்கள் மற்றும் சட்ட உதவி

சிறு வழக்குகளை விரைந்து தீர்வு செய்வதற்காக அனைத்து மத்திய சிறைகள் மற்றும் பெண்கள் தனிச் சிறைகளில் சிறை நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நீதிபதிகள் இச்சிறை நீதிமன்றங்களுக்கு முறைப்பணி மூலம் வருகைபுரிந்து, தங்களது தவறுக்காக வருந்தும் சிறைவாசிகளின் வழக்குகளை முடித்து வைக்கின்றனர்.

சிறைவாசிகளுக்கு இலவச சட்ட உதவி வசதிகள் உள்ளன. அனைத்து மத்திய சிறைகள் மற்றும் பெண்கள் தனிச் சிறைகளில் சென்னையில் உள்ள தமிழ்நாடு மாநில சட்ட உதவி ஆணைக் குழுவால் இலவச சட்ட உதவி தனிப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

### 6. குறை தீர்த்தல்

சிறைவாசிகள் தங்கள் குறைகளைத் தெரிவிக்கும்பொருட்டு, அனைத்து மத்திய சிறைகளிலும் மூடி முத்திரையிடப்பட்ட புகார் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாதமும் முதல் பணி நாளன்று மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, இந்தப் புகார் பெட்டிகளைத் திறந்து புகார்களை உரிய நடவடிக்கைக்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்புகிறார். அமர்வு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நீதிபதி ஆகியோர் மாதம் ஒரு முறை சிறைகளுக்கு திடீர் வருகை புரிந்து சிறைவாசிகளுக்கு வழங்கப்படும் உணவு மற்றும் இதர வசதிகளை சரி பார்ப்பதுடன் அவர்களின் குறைகள் குறித்தும் விசாரணை மேற்கொள்கின்றனர்.

### 7. அலுவல் மற்றும் அலுவல் சாரா பார்வையாளர்கள்

முறையான நிருவாகம் மற்றும் சிறைவாசிகள் முறையாக நடத்தப்படுவதை உறுதி செய்து கொள்வதற்காக, அலுவல் சார்ந்த பார்வையாளர்கள், குறித்த காலத்திற்கொருமுறை சிறைகளுக்கு வருகை புரிகின்றனர். சிறைச்சாலைகளிலுள்ள வசதிகள் மற்றும் சிறைவாசிகளை நடத்தப்படும் விதம் குறித்து ஆய்வு செய்வதற்காக மனித உரிமை ஆணையத்தின் உறுப்பினர்கள், மாண்புமிகு நீதிபதிகள் மற்றும் இதர முக்கிய பிரமுகர்களும் சிறைகளைப் பார்வையிடுகின்றனர்.

பொதுமக்களில், முக்கியமாக சிறை சீர்திருத்தத்தில் ஈடுபாடு உள்ளவர்கள், சிறந்த சமூக சேவை பின்னணி உள்ளவர்கள் ஆகியோர் கூடுதல் சிறைத் துறை இயக்குநரால் அலுவல் சாரா பார்வையாளர்களாக நியமிக்கப்படுகின்றனர். இந்த அலுவல் சாரா பார்வையாளர்கள், சிறைவாசிகளைச் சந்திக்கவும், சிறைச்சாலைகளின் அனைத்துப் பகுதிகளுக்குச் சென்று வரவும் அனுமதிக்கப்படுகின்றனர். இந்த அலுவல் சாரா சிறை பார்வையாளர்களின் பதவிக் காலம் மூன்று ஆண்டுகளாகும்.



### 8. மனித உரிமைகள்

அனைத்து சிறைகளிலும் உள்ள சிறைவாசிகளின் மேம்படுத்தப்பட்ட வாழ்க்கைத் தரத்தை உறுதி செய்து கொள்வதற்காக அடிப்படை வசதிகள் அரசால் செய்து தரப்பட்டுள்ளன. சிறைவாசிகளின் நியாயமான குறைகளை உணர்ந்து அதனைத் தீர்க்கவும் அவர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றவும் ஏதுவாக தகுந்த பண்புகளை வளர்த்துக்கொள்ள சிறை அதிகாரிகள் பக்குவப்படுத்தப்பட்டுள்ளனர்.

தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினர்களும், மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினர்களும், மாண்புமிகு நீதிபதிகளும் தமிழ்நாட்டில் உள்ள சிறைகளுக்கு வருகை புரிந்து சிறைகளின் நிருவாகத்தைப் பாராட்டி உள்ளனர். தேசிய மனித உரிமை ஆணையம் சிறைகளில் பொதுவாக அதிக இட நெருக்கடி குறித்த தனது கவலையை அடிக்கடி தெரிவித்து வருகிறது. இந்தக் குறையை நிவர்த்தி செய்யும் விதமாக மாவட்ட தலைநகரங்களில் மாவட்ட சிறைகளை ஏற்படுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது. திண்டுக்கல், நாகர்கோவில் மற்றும் ஸ்ரீவைகுண்டம் கிளைச் சிறைகளை மாவட்ட சிறைகளாக மாற்றுவதற்கான கட்டுமானப் பணிகள் முடிவு பெற்றுள்ளன. இந்த மூன்று மாவட்ட சிறைகளும் விரைவில் துவக்கப்பட உள்ளன. விருதுநகர் மற்றும் ராமநாதபுரம் கிளைச் சிறைகளை மாவட்ட சிறைகளாக மாற்ற உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, கட்டுமானப் பணிகள் முன்னேற்ற நிலையில் உள்ளன. இதனைத் தவிர நாங்குநேரியில் உள்ள கிளைச் சிறையை தனிக் கிளைச் சிறையாக அரசு அறிவித்துள்ளது. அங்கு அதிக அளவில் சிறைவாசிகளை அனுமதிக்கவும், தனிக் கிளைச் சிறையாக இயங்குவதற்கு ஏதுவாகவும் ரூ.15.00 இலட்சம் செலவில் கட்டமைப்பு மாறுதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## VII. சிறைவாசிகளின் மறுவாழ்வுப் பணிகள்

### 1. அரசு சாரா நிறுவனங்களின் பங்கேற்பு

சிறைவாசிகளின் உடல் நலன் மற்றும் மன நலத்தினை மேம்படுத்த சிறைகளில் யோகாசனம், தியானப் பயிற்சி ஆகியவற்றிற்கு ஏற்பாடு

[2006 ஆகஸ்ட் 8

செய்யப்பட்டுள்ளது. சிறைகளில் யோகாசனம், தியானம், கலந்துரையாடல், ஒழுக்கவியல் குறித்த விரிவுரை, இலவச மருத்துவ சிகிச்சை முகாம், மற்றும தொழிற் கல்வி பயிற்சி அளிக்க தனியார் மற்றும் தன்னார்வுத் தொண்டு நிறுவனங்களுக்கு அரசு அனுமதி வழங்கி உள்ளது.

**2. சிறை தொழிற்சாலைகள் மற்றும் தொழிற் பயிற்சிப் பிரிவுகள்**

சிறைவாசிகளிடையே உழைக்கும் பழக்கத்தை மனதில் ஆழப் பதிய வைப்பதற்காக சிறைகளில் தொழில்கள் மற்றும் தொழிற் பிரிவுகளில் பல்வேறு பயிற்சிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. விடுதலைக்குப் பின் சுய வேலைவாய்ப்பிற்காக செங்கல் தயாரித்தல், குழாய் பொருத்துதல், விளம்பரப் பலகை வரைதல், மின்கம்பி இணைப்பு, நெசவுத் தொழில், புத்தகம் கட்டுதல், தையல் வேலை, கூர்நாடா தயாரித்தல், மெழுகு, பாதணிகள், பினாயில், நாடாக்கள், சோப்பு, கம்பளம், கோப்பு அட்டைகள் முதலியன தயாரித்தல் போன்ற சிறு தொழில்களில் சிறைவாசிகளுக்குப் பயிற்சியளிக்கப்படுகின்றது. பயிற்சியின் முடிவில் மாநில வாழ்க்கை தொழில் கல்வி மற்றும் பயிற்சிக் குழுவினரால் பயிற்சி சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

சிறைத் துறை பணித் துறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. சிறைத் துறை பிற அரசுத் துறைகளுக்குத் தேவைப்படும் பொருட்களை உற்பத்தி செய்து அவற்றை இலவசமாக வழங்குகிறது. சிறைத் தொழிற் பிரிவுகளின் கடந்த நான்கு ஆண்டுகளின் சராசரி உற்பத்தி மதிப்பு ஆண்டொன்றுக்கு ரூபாய் நான்கு கோடி என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இம்மாநிலத்தில் உள்ள அனைத்து மத்தியச் சிறைகள் புதுக்கோட்டையிலுள்ள இளங்குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி, மற்றும் மகளிருக்கான தனிச் சிறைகள் ஆகியவற்றில் சிறைவாசிகள் ஊதியம் ஈட்டும் திட்டம் செயலில் உள்ளது.

இத்திட்டத்தின்கீழ் சிறைவாசிகளுக்கு தினசரி ஊதியம் அனைத்துப் பிடித்தங்களும் செய்த பிறகு தனித் திறன் வாய்ந்தவர்களுக்கு ரூ.18/– வீதமும், ஓரளவு தனித் திறன் பெற்றவர்களுக்கு ரூ.15/– வீதமும், மற்றவர்களுக்கு ரூ.13.50 வீதமும் வழங்கப்படுகிறது.



2006 ஆகஸ்ட் 8]

**VIII. பணியாளர்கள் நலன்**

**1. பதக்கங்கள்**

சிறப்பாகப் பணிபுரியும் சிறைப் பணியாளர்களுக்கு வழங்க கீழ்க்காணும் பதக்கங்கள் அரசால் நிறுவப்பட்டுள்ளன.

**(i) முதலமைச்சரின் பதக்கம்**

**(அ) முதலமைச்சரின் வீரதீரச் செயல்களுக்கான சிறைப்பணி பதக்கம்**

இப்பதக்கம் பெறுவோருக்கு ரூ.100/– மாதாந்திரப் படியாக வழங்கப்படுகிறது.

**(ஆ) நிகரற்ற பணி ஈடுபாட்டிற்கான தமிழ்நாடு முதலமைச்சரின் சிறைப்பணி பதக்கம்**

இச்சேவைக்கு பதக்கமும் ரொக்கப் பரிசும் கீழ்க்கண்டவாறு வழங்கபபடுகிறது:

சிறை அலுவலர் முதல் சிறைக் கண்காணிப்பாளர் வரை ரூ.5,000/–

உதவி சிறை அலுவலர் மற்றும் துணை சிறை அலுவலர் ரூ.3,000/–

காவலர்கள் முதல் முதன்மை தலைமைக் காவலர் வரை ரூ.2,000/–

**(இ) நற்சேவைக்கான தமிழ்நாடு முதலமைச்சரின் சிறைப்பணி பதக்கம்**

இப்பதக்கம் முதல் மற்றும் இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது. இப்பதக்கம் பெறுவோருக்கு கீழ்க்கண்டவாறு மாதாந்திரப்படி வழங்கப்படுகிறது:

முதல் நிலைக் காவலர் – ரூ.50/–

இரண்டாம் நிலைக் காவலர் – ரூ.40/–

**(ii) குடியரசுத் தலைவரின் சீர்திருத்தப் பணி பதக்கம்**

**(அ) வீரதீரச் செயல்களுக்கான பதக்கம்**

இப்பதக்கம் பெறுவோருக்கு ரூ.60/– மாதாந்திரப் படியாக வழங்கப்படுகிறது.

[2006 ஆகஸ்ட் 8

**(ஆ) பாராட்டத் தகுந்த சேவைக்கான பதக்கம்**

பதக்கம் மட்டும் வழங்கப்படுகிறது.

**(இ) நிகரற்ற சேவைக்கான பதக்கம்**

பதக்கம் மட்டும் வழங்கப்படுகிறது.

**2. கருணைத் தொகை வழங்குதல்**

சிறைத் துறைப் பணியாளர்கள் அல்லது அவர்களது குடும்பத்தினருக்குக் குறிப்பிடப்பட்ட சூழ்நிலைகளில் கருணைத் தொகை வழங்கப்படுகிறது. சிறைப் பணியாளர் ஒருவர் பணியில் இருக்கும் போது வீரதீரச் செயல்களில் ஈடுபட்டு இறக்க நேரிட்டால் அவரின் சட்டப்படியான வாரிசுதாரர்களுக்கு, பணியாளர் இறுதியாகப் பெற்ற ஊதியம் அவர் உயிரோடு இருந்தால் பணிமூப்பில் ஓய்வு பெறும் நாள் எதுவோ அதுவரை குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. அதற்குப் பின்னர் தகுதியான குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

**3. குறை தீர்க்கும் நாள்**

சிறைத் துறையின் உயர் அதிகாரிகளால் கீழ்க்கண்டவாறு குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடத்தப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | கூடுதல் சிறைத் துறை இயக்குநர் | மூன்று மாதங்களுக்கு ஒரு முறை |
| 2. | சரக சிறைத் துறைத் துணைத் தலைவர் | மாதம் ஒரு முறை |
| 3. | மத்திய சிறைக் கண்காணிப்பாளர் | வாரம் ஒரு முறை |

சிறைப் பணியாளர்களின் குறைகள் கேட்டறியப்பட்டு அவை விரைவாக தீர்க்கப்படுகின்றன.

**4. மிகை நேரப் பணி ஊதியம்**

சிறைப் பணியாளர்களுக்கு நாளொன்றுக்கு ரூ.100/– வீதம் மிகை நேரப் பணி ஊதியம் வழங்கப்படுகிறது.

**5. உணவுக் கட்டணம் மற்றும் இரவு உணவு**

அவசரக் காலங்கள் மற்றும் பெருமளவில் சிறைவாசிகள் அனுமதிக்கப்படும் காலங்களில் மத்திய சிறைகளில் பாதுகாப்புப்



2006 ஆகஸ்ட் 8]

பணிகளில் அமர்த்தப்படும் பணியாளர்களுக்கு உணவுக் கட்டணங்கள், சென்னை தவிர பிற இடங்களில் இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு ரூ.35/– வீதமும், முதல் நிலைக் காவலர்கள் மற்றும் முதன்மை தலைமைக் காவலர்களுக்கு ரூ.40/– வீதமும், துணைச் சிறை அலுவலர் பதவி வரையில் உள்ள அனைவருக்கும் ரூ.50/– வீதமும், சென்னையில் மட்டும் அனைத்துப் பணியாளர்களுக்கும் ரூ.80/– வீதமும் வழங்கப்படுகிறது. இதனைத் தவிர இரவு நேரத்தில் மத்திய சிறைகளில் பணிபுரியும் காவலர்களுக்கு இரவு உணவு மற்றும் காலை தேநீர் ஆகியவை அரசு செலவில் வழங்கப்படுகின்றன.

**6. சீருடை தையற் கட்டணம்**

சிறைக் காவலர்களுக்கு ஆண்டுதோறும் இரண்டு ஜோடி சீருடைகள் தைப்பதற்காக ரூ.200/– தையற் கட்டணமாக வழங்கப்படுகிறது.

**7. பதவி உயர்வு வாய்ப்புகள்**

இரண்டாம் நிலைக் காவலர்களுக்குப் பதவி உயர்வு வாய்ப்பு அளிப்பதற்கு ஏதுவாக 2006–2007 ஆம் ஆண்டில் 300 இரண்டாம் நிலைக் காவலர்கள் முதல் நிலைக் காவலர்களாக நிலை உயர்த்தப்பட உள்ளனர்.

**IX. வீடியோ கான்பரன்ஸிங்மூலம் சிறைகளையும் நீதிமன்றங்களையும் இணைத்து நீதி வழங்கும் முறை அறிமுகம்**

முன்னோடித் திட்டமாக சிறைகளையும், நீதிமன்றங்களையும் இணைக்கும் வீடியோ கான்பரன்ஸிங் திட்டம் ரூ.861.20 இலட்சம் செலவில் அமல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் விசாரணைச் சிறைவாசிகளின் விசாரணைக் காலத்தை அவர்களை நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்லாமலேயே நீட்டிக்க இயலும். இத்திட்டம் நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லும் போது, சிறைவாசிகள் தப்பிச்செல்வதை தடுப்பதோடல்லாமல், வேறு அசம்பாவிதங்கள் ஏதும் ஏற்படாமலும் தடுக்க வகை செய்கிறது. மேலும், சிறைவாசிகளை நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்றுவர போக்குவரத்து வாகனங்கள் மற்றும் காவல் துறை காவலர்களுக்கு ஆகும் செலவு ஆண்டொன்றிற்கு சுமார் ரூபாய் 10 கோடி இதனால் குறைகிறது. இத்திட்டத்தின்மூலம் இதுவரை 1,71,853 விசாரணைக் கைதிகளின் நீதிமன்றக் காவல் நீட்டிக்கப்பட்டுள்ளது.

## X. புதிய முயற்சிகள்

### 1. தகவல் தொழில்நுட்பம்

அனைத்து மத்திய சிறைகளுக்கும் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. தேசிய தகவல் மையத்தின் உதவியுடன், நம் நாட்டிலேயே முதன்முறையாக "சிறைவாசிகளின் தகவல் அமைப்பு முறை" குறித்த ஒரு மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், தேசிய தகவல் மையம், சிறை பதிவேடுகளை கணினி மயமாக்கும் முறை குறித்த மென்பொருளையும் உருவாக்கி வருகிறது. சிறைவாசிகளுக்கு கணினியில் பயிற்சி அளிக்க ஒவ்வொரு மத்திய சிறை மற்றும் பெண்கள் தனிச் சிறைகளில் கணினி மையம் தொடங்கப்பட்டுள்ளது.

சிறைத் துறையில் வெளிப்படையான நிருவாகத்திற்காகவும், சிறைத் துறையின் செயல்பாடுகளை பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காகவும் தேசிய தகவல் மையத்தினரால் வடிவமைக்கப்பட்ட பின்வரும் தகவல் தளம் சிறைத் துறையால் தொடங்கப்பட்டுள்ளது:

www.tn.nic.in/prisons

www.tn.gov.in/prisons

### 2. தகவல் அறியும் உரிமைச் சட்டம்

இத்துறையில் தகவல் வழங்கும் அலுவலர்கள் மற்றும் தகவல் வழங்கும் உதவி அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். பொதுமக்கள் தங்களுக்கு உபயோகமான தகவல்களை இந்தத் தகவல் வழங்கும் அலுவலர்களிடம் கோரலாம். பொதுமக்களின் உபயோகத்திற்காக இத்துறை பற்றிய தகவல் கையேடு தயாரிப்பது அரசின் ஆய்வில் உள்ளது.

### 3. புலனாய்வு மற்றும் விழிப்புப் பணிப் பிரிவு

சிறைத் துறை குறித்த புலனாய்வு விவரங்களை சேகரிப்பதற்காக ஒரு காவல் துறை ஆய்வாளர், இரண்டு காவல் துறை உதவி ஆய்வாளர்கள், ஒரு தலைமைக் காவலர் மற்றும் ஒரு இரண்டாம் நிலைக் காவலர் ஆகியோர் அடங்கிய புலனாய்வு மற்றும் விழிப்புப் பணிப் பிரிவு ஒன்று இத்துறையில் இயங்கி வருகிறது.



### 4. தொலைநோக்குத் திட்டம்

சிறைகளை ஓரளவு தரத்துடன் நிருவகிக்கும் நோக்கத்தில் இந்திய அரசின் உள் துறை அமைச்சகம், சிறை சீர்திருத்தத்திற்கான தொலைநோக்குத் திட்டம் மற்றும் ஆண்டுத் திட்டத்தினை தயாரித்து உள்ளது. இத்திட்டத்தின்கீழ் மைய அரசு 2002–2007 வரையிலான ஐந்தாண்டுகளுக்கு உத்தேசமாக ரூ.95.34 கோடியை (மாநில அரசின் 25% பங்கீடு உட்பட) கீழ்க்கண்ட நான்கு முக்கியப் பணிகளை செயற்படுத்துவதற்காக ஒதுக்கியுள்ளது.

(அ) புது சிறைச்சாலைகள் கட்டுதல்

(ஆ) தற்போதுள்ள சிறைக் கட்டடங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல்

(இ) சுகாதாரம் மற்றும் குடிநீர் வழங்கல்

(ஈ) சிறைப் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுதல்

புதிய சிறைச்சாலைகள் கட்டுவதற்கான இந்தத் தொலைநோக்குத் திட்டத்தின்கீழ், பெண்களுக்கான தனிச் சிறை ஒன்றினை கடலூரில் கட்டவும், 10 கிளைச் சிறைகளை மாவட்ட சிறைகளாக நிலை உயர்த்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்தொலைநோக்குத் திட்டத்தின் குறிக்கோள் சிறைச்சாலைகளை விரிவுபடுத்துவதன்மூலம் தற்போது சிறைகளில் நிலவும் இட நெரிசல்களைக் களைவதுடன், குடிநீர் விநியோகம், சுகாதாரம் மற்றும் பணியாளர்களுக்கான குடியிருப்பு போன்ற வசதிகளைக் கூடுதலாக ஏற்படுத்தித்தருவதுமாகும். அரசாணை எண் 622, உள் துறை, நாள் 18-5-2004 மற்றும் அரசாணை எண் 914, உள் துறை, நாள் 28-6-2004 ஆகியவற்றில் (ஆண்டு ஒன்றுக்கு) ரூ.1,907 இலட்சம் செலவில் பல்வேறு பணிகளை மேற்கொள்வதற்கு அரசால் நிருவாக மற்றும் நிதி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அரசாணை எண் 511, உள் துறை, நாள் 21-6-2005-ல் சிறைச்சாலைகளை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் சிறை நிருவாகத்தை மேம்படுத்திட பல திட்டங்களை செயல்படுத்துவதற்காக ரூ.994 இலட்சம் 2004–2005 ஆம் ஆண்டுக்கு அனுமதித்துள்ளது. இந்தப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன.

அரசு ஆணை நிலை எண் 184, உள் துறை, நாள் 8–3–2006-ல் சிறைச்சாலைகளை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்த 2005–2006 ஆம் ஆண்டுக்கு ரூ.1,823.10 இலட்சத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டப் பணிகள்

தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி வாரியக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு அவை தற்போது பல்வேறு நிலைகளில் உள்ளன.

2006-2007-ல் கீழ்க்கண்ட திட்டப் பணிகளை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது:

| திட்டத்தின் பெயர் | செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| சிறைக் கட்டடங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் | 263.24 |
| சிறைப் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுதல் | 1,551.00 |
| சுகாதாரம் மற்றும் குடிநீர் வழங்குதல் | 92.06 |
| **மொத்தம்** | **1,906.30** |

**5. புழல் சிறை வளாகம்**

சென்னை மத்திய சிறையில் நிலவும் அளவிற்கதிகமான இட நெரிசல் மற்றும் அதிகரித்து வரும் தேவையினைக் கருத்திற்கொண்டு மிக நவீன வசதிகளுடன்கூடிய புதிய சிறை வளாகத்தினை புழலில் அமைக்க அரசு முடிவு செய்தது. இப்புதிய சிறை வளாகம் 1250 விசாரணை சிறைவாசிகள், 1,250 தண்டனை சிறைவாசிகள் மற்றும் 500 பெண் சிறைவாசிகளை அனுமதிக்கத்தக்க வகையில் அமையும். இப்புதிய சிறை வளாகம் 211.92 ஏக்கர் பரப்பளவில் தூய்மையான மற்றும் ஆரோக்கியமான சுற்றுப்புற சூழ்நிலை கொண்டதாக அமையும். சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களைச் சார்ந்த தண்டனை சிறைவாசிகள் புழல் மத்திய சிறையில் அடைக்கப்படுவார்கள். அரசாணை எண் 957, உள் துறை, நாள் 27–9–2003–ல் இதற்காக அரசு ரூ.77.09 கோடி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளது. இந்தப் பணிகள் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு பணிகள் முடிவடைந்துள்ளன. இச்சிறை கூடிய விரைவில் செயல்படத் தொடங்கும்.





**XL முடிவுரை**

சிறைத் துறையின் சீரிய நிருவாகத்திற்கு அரசு உரிய முக்கியத்துவம் அளித்து வருகிறது. சிறைவாசிகளின் நலன், சிறைப் பணியாளர்களின் நலன், அடிப்படை வசதிகள், சிறைகளின் பாதுகாப்பு, சுகாதார வசதி, மனித உரிமைகளைப் பேணுதல் போன்றவற்றை மேம்படுத்திட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இவை உரிய கவனத்துடன் திட்டமிடப்பட்டு முறையாகச் செயல்படுத்தப்படுகின்றன. தமிழ்நாட்டில் உள்ள சிறைகள் அனைத்தும் சீர்திருத்த நிலையங்களாக அமைய இத்துறை எண்ணத்தாலும் செயலாலும் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருவதுடன், இந்த இலக்கை அடைய அரசிடமிருந்து தேவையான அனைத்து உதவிகளையும் தொடர்ந்து பெறும்.

## இணைப்பு III

(385 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 33–சட்டத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2006–2007

**முன்னுரை**

மக்களாட்சி என்பது, உயர் நிலையிலான அதிகாரம் மக்களிடம் அமைந்திருக்கும் வகையில் மக்களால் ஆளப்படும் அரசு ஆகும். மற்றும் அந்த அதிகாரமானது தடையில்லாததொரு தேர்தல் அமைப்பு முறையின்படி அவர்களால் அல்லது அவர்தம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் நேரடியாகச் செயற்படுத்தப்படுவதாகும். ஆபிரகாம் லிங்கன், மக்களாட்சி என்பது, மக்களால், மக்களுக்காக, மக்களே ஆளும் ஆட்சி என்றார்.

நாடாளுமன்ற மக்களாட்சி அமைப்பின் ஒரு முன் தேவைப்பாடாக இந்திய அரசமைப்பானது அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்வதற்கும் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு உறுதியளிப்பதற்கும் வகை செய்துள்ளது. சட்டமியற்றுதல், நிருவாகம், நீதி பரிபாலனம் ஆகிய மூன்று அங்கங்களில் குறிப்பிட்டதொரு அங்கம் விரும்பத்தகாத அளவுக்கு அதிகாரத்தை எடுத்துக்கொண்டுவிடாமல் இருப்பதற்கும், குறிப்பிட்டதொரு அங்கத்தில் அதிகாரமானது குவிந்துவிடாமல் இருப்பதை உறுதி செய்யும் மிக முக்கியமான நோக்கத்துடனும், அரசமைப்பானது அதிகாரத்தைச் செலுத்தும்போது ஓர் அங்கம் மற்ற அங்கங்களுக்கு இணையாகச் சமன் செய்துகொள்ளும் ஒரு திட்டம் ஒன்றை அறிவுபூர்வமாக அறிமுகப்படுத்தி உள்ளது. நடைமுறைக்கு உகந்த முறையிலான அதிகாரப் பகிர்வானது, நாடாளுமன்ற மக்களாட்சியின் தனிச் சிறப்பு இயல்பாகும் என்பதோடு, அது தன்னிச்சையான நடவடிக்கைகளிலிருந்தும், அடக்கி ஒடுக்கும் எதேச்சதிகார ஆட்சியிலிருந்தும் மக்களைக் காப்பாற்றுவதற்கு முக்கியமான தேவையாகவும் இருக்கிறது. அரசின் சட்டமியற்றுதல், நிர்வாகம் செய்தல், நீதி பரிபாலனம் ஆகிய மூன்று முக்கிய அங்கங்களும் இணக்கமான முறையில் பணியாற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சட்டமன்றமானது, அரசமைப்பு சிறப்புரிமையின் நோக்கெல்லைக்குள் செயலாற்ற வேண்டியுள்ளது. சட்டத்தை நிறைவேற்றுவதற்குரிய சட்டமியற்றுத் தகுதியினை அது பெற்றிருத்தல் வேண்டும். சட்டமானது, அரசமைப்பின் வகைமுறைகளுக்கும், குறிப்பாக அடிப்படை உரிமைகள் தொடர்பான வகைமுறைகளுக்கும் இணங்கிய வகையில் இருத்தல் வேண்டும். சட்டம் என்றாலே வாழும் குடிமக்களுக்குத் தொண்டு செய்வதற்காகவே என்று பொருள்படும். சமுதாயத்தின் இறையாண்மைச் சக்தியானது சட்டம் என்கிற மாபெரும் அங்கத்தின்மூலமாகவே மிளிர்கின்றது. நீதி நிருவாகத்தை அமைத்து அதனைச் செயற்படுத்துவதுதான் சட்டத்தின் பொருட்பாடாகும்.

இந்த அரசின் சட்டத் துறையானது, சமுதாய நலனிற்கான அரசின் கொள்கைகளைச் செயற்படுத்துவதற்காக மேற்சொன்ன கொள்கைகளைக் கவனத்திற்கொண்டு பல்வேறு சட்டங்களை இயற்றுகிறது.

அரசின் கொள்கைகளை நிறைவேற்றுவதற்காகச் சட்டங்கள் தேவைப்படும்போது, சட்டத் துறை, தொடர்புடைய துறையுடன் ஒருங்கிணைந்து அக்கொள்கைகளுக்குச் சட்ட வடிவமளித்து, சட்டமுன்வடிவுகளை உருவாக்குகிறது.

சட்டப் பேரவை சட்ட வரைவிற்கு ஒப்புதல் அளித்த பின்னர், ஆளுநரின், அல்லது குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்றபின் அது சட்டமாகும் வரையில் சட்டத் துறையின் பணி தொடர்கிறது. சட்டப் பேரவை ஒத்திவைக்கப்பட்டு, அமர்வில் இல்லாத காலங்களிலும் அரசமைப்பின் 213 ஆவது உறுப்பின்படி அவசரச் சட்டம் வாயிலாகச் சட்டங்களை அவசரத் தேவைக்கேற்ப உருவாக்குகிறது. சட்டத் துறையின் பணி அவசரச் சட்டத்திற்கான முன்வரைவுகளை அதன் நோக்கத்திற்கேற்ப தயாரித்து அதை பிரகடனப்படுத்தும் வரையில் தொடர்கிறது.

மேலும், சட்டத் துறையின் முக்கிய பணியானது, சட்டமன்றப் பேரவைச் செயலகம் உட்பட, தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகளுக்கும் சட்டப் பிரச்சினை தொடர்பாக ஆலோசனை வழங்குவதாகும்.

இவை தவிர சட்ட விதிகள், அறிவிக்கைகள், ஆணைகள் மற்றும் மாநில அரசு ஒரு தரப்பினராக இருக்கிற ஆவணங்கள் ஆகியவற்றையும் அவற்றின் சட்ட வகைமுறைகள் தொடர்பாகவும் சட்டத் துறை கூர்ந்தாய்வு செய்து அறுதி செய்கிறது.



மாநில அரசுத் தரப்பினராக உள்ள அனைத்து வழக்குகளிலும், உறுதிமொழி ஆவணங்களின் வரைவும், எதிர் உறுதி மொழி ஆவணங்களின் வரைவும், அவற்றிற்கான வரைவு மறுமொழிகளும் சட்டத் துறையால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு அறுதி செய்யப்படுகின்றன.

மேலும், பின்வருவன தொடர்பான நிர்வாகப் பணிகளையும் சட்டத் துறை செய்து வருகிறது:—

(1) சட்டக் கல்வி

(2) சான்றுறுதி அலுவலர்களின் அமர்த்துகையும், நீக்கமும்

(3) மாநிலச் சட்ட ஆணையம்

(4) மாநில ஆட்சி மொழி (சட்டப்) பிரிவு

(5) தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்

**சட்டக் கல்வி**

தமிழ்நாட்டில் சட்டக் கல்வியின் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் சட்டக் கல்வித் துறையானது 1953 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு தொடர்ந்து பணியாற்றி வருகிறது. இத்துறை தோற்றுவிக்கப்பட்ட பிறகு தமிழ்நாட்டில் சட்டக் கல்வியின் தரம் அனைத்து வகைகளிலும் முன்னேற்றம் அடைந்துள்ளதோடு மென்மேலும் முன்னேற்றமடைய இத்துறை தொடர்ந்து செயற்பட்டு வருகிறது.

சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி 1891 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மதுரையில் ஒரு சட்டக் கல்லூரி 1974 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 1979–80 ஆம் கல்வியாண்டில் திருச்சிராப்பள்ளியில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றுமாக இரு அரசு சட்டக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. 1996–97 ஆம் கல்வியாண்டில் திருநெல்வேலியில் ஓர் அரசு சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டது. தற்போது தமிழ்நாட்டில் ஐந்து அரசு சட்டக் கல்லூரிகள் செயற்பட்டு வருகின்றன.

2006–07 ஆம் கல்வியாண்டிலிருந்து, சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு சட்டப் படிப்புகள் ஒவ்வொன்றுக்கும் ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் 80-லிருந்து முறையே 321 மற்றும் 241 இடங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

[2006 ஆகஸ்ட் 8

2006–07 ஆம் கல்வியாண்டில் அரசு சட்டக் கல்லூரிகளில் ஒப்பளிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளன:

| | சட்டக் கல்லூரியின் பெயர் | மொத்தம் ஒப்பளிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, சென்னை 600 104 (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1,402 |
| 2. | அரசு சட்டக் கல்லூரி, மதுரை (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1,428 |
| 3. | அரசு சட்டக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1,430 |
| 4. | அரசு சட்டக் கல்லூரி, கோயம்புத்தூர் (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1,430 |
| 5. | அரசு சட்டக் கல்லூரி, திருநெல்வேலி (இளநிலை சட்டப் படிப்பு மட்டும்) | 1,400 |

அனைத்து அரசு சட்டக் கல்லூரிகளும் சொந்தக் கட்டடங்களில் செயற்பட்டு வருகின்றன. சென்னை, மதுரை ஆகிய அரசு சட்டக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கும், மாணவியர்களுக்கும் என தனித்தனியே விடுதி வசதி செய்து தரப்பட்டுள்ளன. கோயம்புத்தூர் அரசு சட்டக் கல்லூரியில் மாணவர்களுக்கும், திருச்சிராப்பள்ளி அரசு சட்டக் கல்லூரியில் மாணவியர்களுக்கும் விடுதி வசதி செய்து தரப்பட்டுள்ளது. திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரி மாணவிகளுக்கான விடுதிக் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. அது விரைவில் கட்டி முடிக்கப்படும்.

சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியின் ஏழு மாணவர்கள் வியன்னா, ஹாங்காங் ஆகிய இடங்களில் நடைபெற்ற சர்வதேச நீதிமன்ற வழக்கு வாதப் பயிற்சிப் (Moot Court) போட்டிகளில் பங்கேற்பதற்காக, ஒவ்வொருவருக்கும் தலா ரூ.75,000/– வீதம் மொத்தம் ரூ.5.25 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

சட்டக் கல்வி இயக்ககம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. எனவே, ரூ.25.83 இலட்சம் செலவில் சட்டக் கல்வி இயக்ககத்திற்குக் கட்டடம் கட்ட அனுமதிக்கப்படவுள்ளது.

தற்போது கோயம்புத்தூர் அரசு சட்டக் கல்லூரியில் பயின்று வரும் மாணவியர்களுக்கு விடுதி வசதி இல்லை. எனவே, ரூ.124.37 இலட்சம் செலவில் கோயம்புத்தூர் அரசு சட்டக் கல்லூரி மாணவியர்களுக்கு விடுதிக் கட்டடம் கட்ட அனுமதிக்கப்படவுள்ளது.



2006 ஆகஸ்ட் 8]

ரூ.22.37 இலட்சம் செலவில் கோயம்புத்தூர் அரசு சட்டக் கல்லூரி மாணவர்களுக்கான விடுதியில் கூடுதல் கட்டடம் கட்ட அனுமதிக்கப்படவுள்ளது.

## சான்றுறுதி அலுவலர்கள் நியமனம் மற்றும் நீக்கம்

1952 ஆம் ஆண்டு சான்றுறுதி அலுவலர்கள் சட்டத்தின்படி முறையாவணங்களைச் சான்றொப்பமிடும் நோக்கத்திற்காகவும் மற்றும் சான்றுறுதி அலுவலரின் ஏற்பளிக்கப்பட்ட செயல்களுக்காகவும் சான்றுறுதி அலுவலர் அமர்த்தப்படுவர். 1–1–2006 அன்றுள்ளபடி இம்மாநிலத்தில் 1,784 சான்றுறுதி அலுவலர்கள் உள்ளனர்.

## மாநிலச் சட்ட ஆணையம்

மாநிலச் சட்ட ஆணையம் இதுவரையில் பின்வரும் பொருள் குறித்த அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளது:—

(1) ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தின்போது இயற்றப்பட்ட "நீக்கறவு செய்யப்படாத தமிழ்நாடு ஒழுங்குமுறை விதிகள்"

(2) தமிழ்நாடு மாநிலத்திற்குப் பொருந்துகிற மையச் சட்டங்கள்

(3) 1884 ஆம் ஆண்டு தமிழ்நாடு கிராம நீதிமன்றங்கள் சட்டத்தின் பொருள் வழி "கிராமத்தினர்களுக்கு நீதி வழங்குதல்"

(4) 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீடு சட்டம்

(5) 1867 மற்றும் 1891 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது வகைமுறைகள் விளக்கச் சட்டம்

(6) 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் கேலி தடைச் சட்டம்

(7) 1960 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டடங்கள் (குத்தகை மற்றும் வாடகை கட்டுப்பாடுச்) சட்டம்

திருத்தியமைக்கப்பட்ட மாநிலச் சட்ட ஆணையத்தின் தலைவர், முழுநேர உறுப்பினர்கள் மற்றும் பகுதி நேர உறுப்பினர் பதவிக் காலம் 28–1–2002 பிற்பகலுடன் முடிவுற்று, அவர்களது பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டனர். மாநிலச் சட்ட ஆணையம் இன்னும் திருத்தி அமைக்கப்படவில்லை.

## மாநில ஆட்சிமொழி (சட்டப்) பிரிவு

1965 ஆம் ஆண்டு முதன்முதலாக மாநிலச் சட்ட ஆட்சி மொழி ஆணையம், சட்டச் சொற்களை அறுதி செய்து சட்டச் சொல் அகராதி வெளியிடுவதற்காகவும், மையச் சட்டங்களையும், மாநிலச் சட்டங்களையும், அவசரச் சட்டங்களையும் அவற்றின்படி செய்யப்படும் விதிகள் மற்றும் அறிவிக்கைகள் ஆகிய அனைத்தையும் தமிழில் மொழி பெயர்ப்பதற்காகவும், அரசால் அவ்வப்போது ஒப்படைக்கப்படலாகும் பிற பணி எதனையும் மேற்கொள்வதற்காகவும் அமைக்கப்பட்டது.

மாநிலச் சட்ட ஆட்சி மொழி ஆணையம், சட்டத் துறைச் செயலாளரின் ஒட்டுமொத்த மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டின்கீழும், சட்டத் துறை கூடுதல் செயலாளரின் தலைமையிலும் சட்டத் துறையின் ஒரு பிரிவாக 1992 ஆம் ஆண்டு சட்டத் துறையுடன் சேர்க்கப்பட்டது. இது மையச் சட்டங்களையும், மாநிலச் சட்டங்களையும் மொழி பெயர்த்து வருகிறது. மையச் சட்டங்களை மொழி பெயர்த்து புத்தக வடிவில் அச்சிடுவதற்கானச் செலவினை மைய அரசு ஏற்றுக்கொள்ளும். மாநிலச் சட்டங்களை மொழிபெயர்த்து அச்சிடும் செலவினை மாநில அரசு மேற்கொள்கிறது.

## தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்

சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் செயல்படும் ஐந்து அரசு சட்டக் கல்லூரிகளும் மற்றும் சேலத்தில் செயல்படும் ஒரு தனியார் சட்டக் கல்லூரியும் இப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

தரமான சட்டக் கல்வியினை வழங்குவதற்கு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக வளாகத்தில் 2002 ஆம் ஆண்டு சீர்மிகு சட்டப் பள்ளி அமைக்கப்பட்டு, ஐந்தாண்டு பிஏ., பிஎல். ஹானர்ஸ் பட்டப் படிப்பு பயிற்றுவிக்கப்படுகிறது. செங்கற்பட்டில் சட்டப் பல்கலைக்கழகச் சட்டக் கல்லூரியை 2003 ஆம் ஆண்டு அமைத்து அதில் மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு சட்டப் படிப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

2003 ஆம் ஆண்டில்

(1) அரசமைப்புச் சட்டம் மற்றும் சட்ட வழிமுறைகள்

(2) வணிகச் சட்டம்

ஆகிய இரு சட்ட மேற்படிப்புத் துறைகள் உருவாக்கப்பட்டு, சட்ட மேற்படிப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.





2005–2006 ஆம் ஆண்டு முதல்

(1) அறிவுசார் சொத்துரிமைச் சட்டம்

(2) நாட்டிடைச் சட்டம் மற்றும் அதன் அமைப்புகள்

ஆகிய இரு துறைச் சட்ட மேற்படிப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

2006 ஆம் ஆண்டு முதல்

(1) சுற்றுச்சூழல் சட்டம் மற்றும் சட்ட வழிமுறைகள்

(2) குற்றவியல் சட்டம்

ஆகிய இரு துறைச் சட்ட மேற்படிப்புகள் துவக்கப்பட்டுள்ளன.

பொது காப்பீட்டுச் சட்டம் மற்றும் நடைமுறைகள் என்ற பட்டய மேற்படிப்பை 2004 ஆம் ஆண்டிலிருந்து யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனியுடன் இணைந்து சட்டப் பல்கலைக்கழகம் தொலைதூரக் கல்வியாக வெற்றிகரமாக நடத்தி வருகிறது.

பல்கலைக்கழகம் கீழ்க்கண்ட 4 பட்டய மேற்படிப்புகளை உருவாக்கி அவற்றை மாலை நேரக் கல்வியாக வழங்கி வருகிறது:

1. வணிகச் சட்டம்
2. தகவல் தொழிற்நுட்பச் சட்டம்
3. அறிவுசார் சொத்துரிமைச் சட்டம்
4. சுற்றுச்சூழல் சட்டம்

சட்டக் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மட்டும் வழங்கப்பட்ட ஆராய்ச்சிப் படிப்பு வழக்குரைஞர்களுக்கும் மற்றும் நீதிபதிகளுக்கும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

சட்டப் பல்கலைக்கழகம் தொலைதூரக் கல்வியாக பி.ஏ.எல். என்ற பட்டப் படிப்பினைப் பயிற்றுவிக்கத் திட்டங்களை மேற்கொண்டு வருகிறது.

சட்ட மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கவும் உதவி செய்யவும் பணித் தகவல் மற்றும் பணியமர்வு மையங்களை அனைத்துச் சட்டக் கல்லூரிகளிலும் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 2006-2007 ஆம் ஆண்டுகளுக்கான பகுதி – II திட்டப் பணிகளுக்கான விவரப் பட்டியல்

(ரூபாய் இலட்சத்தில்)

| வரிசை எண் | திட்டப் பணிகளின் விவரம் | இறுதி நிலைச் செலவு | | | 2006 2007 ல் செலவு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | தொடர் செலவு | தொடராச் செலவு | மொத்தம் | வருவாய் கணக்கில் செலவு | மூலதனக் கணக்கில் செலவு | கடன் கணக்கில் செலவு | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1 | சட்டக் கல்வி இயக்ககத்திற்கான கட்டடம் கட்டுதல் | 0.00 | 25.83 | 25.83 | 0.00 | 10.33 | 0.00 | 10.33 |
| 2 | கோவை அரசு சட்டக் கல்லூரி மாணவிகளுக்கான விடுதிக் கட்டடம் கட்டுதல் | 0.00 | 124.37 | 124.37 | 0.00 | 49.75 | 0.00 | 49.75 |
| 3 | கோவை அரசு சட்டக் கல்லூரி மாணவர்களுக்கான விடுதியில் கூடுதல் அறைகள் கட்டுதல் | 0.00 | 22.37 | 22.37 | 0.00 | 8.95 | 0.00 | 8.95 |
| 4 | சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி வளாகத்தினுள் பார்வையாளர்களுக்கான கட்டணக் கழிவறைகள் கட்டுதல் | 0.00 | 6.00 | 6.00 | 0.00 | 2.40 | 0.00 | 2.40 |
| 5 | தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக சட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சித் துறைகளுக்கு அறைகலன்கள் மற்றும் தேவையான பொருட்கள் வாங்குதல் | 0.00 | 5.00 | 5.00 | 5.00 | 0.00 | 0.00 | 5.00 |
| 6 | தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக சீர்மிகு சட்டப் பள்ளிக்கு அறைகலன்கள் மற்றும் தேவையான பொருட்கள் வாங்குதல் | 0.00 | 2.00 | 2.00 | 2.00 | 0.00 | 0.00 | 2.00 |
| 7 | செங்கல்பட்டிலுள்ள தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகச் சட்டக் கல்லூரிக்கு அறைகலன்கள் மற்றும் தேவையான பொருட்கள் வாங்குதல் | 0.00 | 3.00 | 3.00 | 3.00 | 0.00 | 0.00 | 3.00 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக சீர்மிகு சட்டப் பள்ளி நூலகத்திற்குத் தேவையான புத்தகங்கள் வாங்குதல் | 0.00 | 2.00 | 2.00 | 2.00 | 0.00 | 0.00 | 2.00 |
| 9 | தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகப் பட்ட மேற்படிப்பு, பட்டய மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சித் துறை நூலகத்திற்குப் புத்தகங்கள் வாங்குதல் | 0.00 | 4.00 | 4.00 | 4.00 | 0.00 | 0.00 | 4.00 |
| 10 | செங்கல்பட்டிலுள்ள தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக சட்டக் கல்லூரி நூலகத்திற்கு புத்தகங்கள் வாங்குதல் | 0.00 | 2.00 | 2.00 | 2.00 | 0.00 | 0.00 | 2.00 |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 11 | தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகப் பட்ட மேற்படிப்புத் துறையின் நூலகம் மற்றும் செங்கல்பட்டிலுள்ள தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிக்கு கணினிகள், கணினித் துணைப் பொருட்கள், அலுவலகத் தளவாடங்கள் வாங்குதல் | 0.00 | 6.00 | 6.00 | 6.00 | 0.00 | 0.00 | 6.00 |
| | மொத்தம் (நிதிநிலைக் குழுவால் ஏற்பளிக்கப்பட்டது) | 0.00 | 202.57 | 202.57 | 24.00 | 71.43 | 0.00 | 95.43 |

# இணைப்பு IV

*(385 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 41–வருவாய்த் துறை மற்றும்

## மானியக் கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007

### அத்தியாயம் – 1

### முன்னுரை

வருவாய்த் துறை அனைத்துத் துறைகளுக்கும் தாய்த் துறையாகக் கருதப்படுகிறது. அரசின் ஏனைய துறைகளின் வளர்ச்சிப் பணிகளின் செயல்பாட்டிற்கு வருவாய்த் துறையின் பங்கு இன்றியமையாததாகும். ஏனைய அரசுத் துறைகளின் நிர்வாக வளர்ச்சிக்கு முதுகெலும்பாக வருவாய்த் துறை விளங்குகிறது. மக்களுக்கான அரசின் பணிகளும், சேவைகளும், குறிப்பிட்ட காலவரையறைக்குள் அவர்களைச் சென்றடைய இத்துறை என்றும் முன் நிற்கிறது. வருவாய்த் துறை தொடர்பான சில சேவைகள் பின் வருமாறு:—

1) முதியோர் உதவித் தொகை ஒப்பளிப்பு.

2) உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை ஒப்பளிப்பு.

3) ஆதரவற்ற விதவைகளுக்கு குடும்ப ஓய்வூதியம் ஒப்பளிப்பு.

4) கணவனால் கைவிடப்பட்ட மனைவியருக்கு குடும்ப ஓய்வூதியம் ஒப்பளிப்பு.

5) உடல் ஊனமுற்றவர்களுக்குக் குடும்ப ஓய்வூதியம் ஒப்பளிப்பு.

6) ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் ஒப்பளிப்பு.

7) விபத்தில் மரணம் அடைந்த பொருளீட்டும் குடும்பத் தலைவரின குடும்பத்திற்கு நிதி உதவி.

[2006 ஆகஸ்ட் 8

8) குடும்பத்தில் வருமானம் ஈட்டி வந்தவர், தேர்ந்தெடுக்கப்பட்ட 41 தொழில்களில் ஈடுபடும்போது இறந்து விட்டால், அவரது குடும்பத்திற்கு நிதி உதவி அளித்தல்.

9) சாதி, இருப்பிடம், வாரிசு, செல்நிலை (சால்வன்சி), பிறப்பு மற்றும் இறப்பு முதலிய சான்றுகள் வழங்கல்.

10) பட்டா மாறுதல்

11) புதிய உட்பிரிவுகள் ஏற்படுத்துதல்.

12) பயிர் நிலங்கள் ஒப்படை.

13) குடிவாரச் சட்டம் அமல்படுத்துதல்.

14) நியாய குத்தகை நிர்ணயம் செய்தல்.

15) வீட்டு மனைப் பட்டா வழங்கல்.

16) நிலச் சீர்திருத்த சட்டத்தின்கீழான விவசாய உபரி நிலங்களை வழங்குதல்.

17) திரையரங்குகளுக்கு ஆட்சேபனையின்மை சான்று வழங்குதல்.

18) அடகு வணிகர் உரிமம் வழங்குதல்.

19) படைக்கலச் சட்டத்தின்கீழ் உரிமங்கள் வழங்குதல்.

20) வெடிபொருள் சட்டத்தின்கீழ் உரிமங்கள் வழங்குதல்.

இவை தவிர, வருவாய்த் துறை, நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றத் தேர்தல்களை நடத்துவதில் பெரும் பங்காற்றுகிறது. தகுதியுடையவர்களை வாக்காளர்களாகப் பதிவு செய்கிறது. வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் மற்றும் நீக்குதல் ஆகிய பணிகளையும் வருவாய்த் துறை செய்கிறது. பொதுமக்களுக்கு வாக்காளர் பட்டியல்களைக் குறைந்த விலைக்கு வழங்குகிறது.

வறட்சி, வெள்ளம், புயல், ஆழிப்பேரலை, தீ விபத்து போன்ற இயற்கை இடர்பாடுகள் ஏற்படும் நேரங்களில் பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்க வருவாய்த் துறை விரைந்து செயலாற்றி வருகிறது. பாதிக்கப்பட்ட மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயரச் செய்து, அவர்களுக்கு உணவு, உறைவிடம் வழங்கி, சேதமடைந்த குடிசைகளைச் சீரமைக்க நிதி உதவி வழங்குதல் ஆகிய பணிகளைச் செய்வதில் வருவாய்த் துறை பெரும் பங்காற்றி வருகிறது.



2006 ஆகஸ்ட் 8]

தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்—விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டத்தின்மூலம் விவசாயிகளுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் பல்வேறு சலுகைகள் வழங்கப்படவுள்ளன. பொது நோக்கங்களுக்காகவும், சமுதாய நலனை முன்னேற்றுவதற்காகவும், கல்வி நிலையங்கள், தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள், தொழில் நிறுவனங்கள் மற்றும் ஏனைய பிற வளர்ச்சிப் பணிகளுக்கான நிறுவனங்களுக்கு, சில நிபந்தனைகளுக்குட்பட்டு அரசு நிலங்கள் நில உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. தொழிலியல் நோக்கங்களுக்காகத் தேவைப்படும் நிலங்களை விரைவாகக் கையகப்படுத்தும் பொருட்டு, அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் தகுந்த அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. இது போன்ற அனைத்து நடவடிக்கைகளிலும் வருவாய்த் துறை முக்கியப் பங்காற்றுகிறது.

இவ்வாறாக, வருவாய்த் துறை, பொதுமக்களுக்கும் சமுதாயம் முழுமைக்கும் மாவட்ட வருவாய் நிர்வாகம் மூலம் பெருமளவில் சேவை புரிந்து வருகிறது. மாவட்ட வருவாய் நிர்வாகம், மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலைமையில் இயங்கி வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உதவியாக மாவட்ட வருவாய் அலுவலர்கள், வருவாய் கோட்டாட்சித் தலைவர்கள், வட்டாட்சியர்கள், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் கிராம உதவியாளர்கள் ஆகியோர் கொண்ட விரிவான ஓர் அமைப்பு உள்ளது. மாநில அளவில் வருவாய்த் துறை கீழ்க்கண்ட நான்கு துறைகளாக இயங்கி வருகின்றன:—

அவை முறையே:—

1) வருவாய் நிர்வாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை

2) நில நிர்வாகத் துறை

3) நில அளவை மற்றும் நில வரித் திட்டத் துறை

4) நிலச் சீர்திருத்தத் துறை

மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு துறையும் அனுபவமிக்க இந்திய ஆட்சிப் பணி அலுவலர் ஒருவரின் தலைமையில் இயங்கி வருகிறது.

[2006 ஆகஸ்ட் 8

## அத்தியாயம் - 2

## வருவாய் நிர்வாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிப்பு

### வருவாய் நிர்வாகம்

மக்கள் நல அரசு என்னும் கோட்பாட்டில் இந்த அரசு ஆழ்ந்த நம்பிக்கை கொண்டுள்ளது. மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், அவற்றை மேம்படுத்தும் சீரிய நோக்கத்தோடும், வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் மக்கள் நலப் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. வருவாய்த் துறை இந்தச் செயலாக்கத் திட்டத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. மாவட்ட வருவாய் நிர்வாகம் மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளின் வழிகாட்டுதல்களின் பேரில் மாவட்ட ஆட்சியர் முதல் கிராமப் பணியாளர்கள் வரை அனைவரின் ஒத்துழைப்புடன் செயல்பட்டு வருகிறது.

### 2.2 மனு நீதித் திட்டம்

மக்கள் குறைகளை நேரில் சென்று தீர்ப்பதற்காக "மனு நீதித் திட்டம்" எனும் திட்டம் இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழ்நாட்டில்தான் 1969 ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்கள் மற்றும் துணை ஆட்சியர்களால் செயல்படுத்தப்படுகிறது. பல்வேறு அரசுத் துறை மற்றும் வங்கி அலுவலர்கள் இதில் முனைப்புடன் பங்கேற்கின்றனர். மாவட்ட நிர்வாகம் கிராமங்களுக்கு நேரடியாக சென்று மக்களைச் சந்தித்து முடிந்தவரை அதே இடத்திலேயே அவர்களுடைய குறைகளைக் களைய முயற்சிப்பதே இந்தத் திட்டத்தின் சிறப்பு அம்சமாகும். மனு நீதித் திட்டம் மாதம் ஒரு முறை இரண்டாவது புதன்கிழமையன்று நடத்தப்படுகிறது. மூன்றாண்டு காலத்திற்குள் எல்லா கிராமங்களிலும் நடத்தப்படும் வண்ணம் இத்திட்டம் சுழற்சி முறையில் செயல்படுத்தப்படுகிறது.

### 2.3 பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள்

மனு நீதித் திட்டத்தைத் தொடர்ந்து 1986 ஆம் ஆண்டு முதல் பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் மாவட்டங்கள்/வருவாய்க் கோட்டங்கள்/வருவாய் வட்ட அலுவலகங்கள் ஆகியவற்றில் ஒவ்வொரு திங்கட்கிழமையும் செயல்படுத்தப்படுகின்றன.



2006 ஆகஸ்ட் 8]

இதனால் பொதுமக்கள் குறைகள் உடனுக்குடன் களைய ஏதுவாகிறது. இதுபோல் மாண்புமிகு அமைச்சர்கள்/நாடாளுமன்ற உறுப்பினர்கள்/சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோரிடமிருந்து பெறப்படும் மனுக்களும் உடனுக்குடன் பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. முதலமைச்சரின் தனிப்பிரிவில் பெறப்படும் மனுக்கள் மூலமும் பொதுமக்கள் குறைகளுக்குத் தீர்வு காண வழி ஏற்படுகிறது.

### 2.4 சான்றுகள் வழங்கும் பணி

வருவாய்த் துறை மூலம் சாதிச் சான்று முதலிய பல்வேறு சான்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன. 1999–2000 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்டு, இலட்சக்கணக்கான மாணவர்கள் பயன்பெற்ற 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு படித்து முடித்துச் செல்லும்போதே மாணவர்களுக்குச் சாதிச் சான்றிதழ்கள், வாழ்விடச் சான்றிதழ்கள், குடும்ப வருமானச் சான்றிதழ்கள் ஆகியன வழங்கும் திட்டம் மீண்டும் நடைமுறைக்கு வருமென்று சட்டமன்றப் பேரவையில் 2006–2007 ஆம ஆண்டு நிதி நிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டதை வருவாய் நிர்வாகம் செவ்வனே செயல்படுத்தும். அதற்கான உரிய அறிவுரைகள் சிறப்பு ஆணையர் (ம) வருவாய் நிர்வாக ஆணையரால் மாவட்ட ஆட்சியர்களுக்கு வழங்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன. வருவாய்த் துறைமூலம் வழங்கப்பட்டு வரும் சில முக்கியமான சான்றுகள் குறித்த விவரங்களாவன:—

#### (i) பிறப்பிட/இருப்பிடச் சான்று

(அ) பிறப்பிடம் என்பது ஒருவர் பிறந்த இடத்தினையும்,

(ஆ) இருப்பிடம் என்பது ஒருவர் தொடர்ந்து வசிக்கும் இடத்தினையும் குறிக்கும்.

இச்சான்றிதழ்கள் கல்வி நிறுவனங்களில் சேரவும், வேலை வாய்ப்பில் முன்னுரிமை பெறவும் உதவுகின்றன. இச்சான்று கோருபவர் இரண்டு ரூபாய்க்கான கட்டண வில்லையுடன் விண்ணப்பிக்க வேண்டும். வறுமைக் கோட்டிற்கு மேலுள்ளவர்கள் ரூபாய் 10/– கட்டணம் செலுத்தி இச்சான்றினைப் பெற வேண்டும்.

**(ii) வருமானச் சான்று**

கல்வி உதவித் தொகை பெறுவதற்கும், பள்ளி, கல்லூரிகளிலும், மாணவர் விடுதிகளில் சேரவும் தேவைப்படும் இச்சான்று வட்டாட்சியரால் வழங்கப்படுகிறது. வறுமைக் கோட்டிற்கு மேலுள்ளவர்கள் ரூபாய் 10/– கட்டணம் செலுத்தி இதனைப் பெற வேண்டும்.

**(iii) நாட்டினச் சான்று**

ஒருவர் இந்த நாட்டைச் சேர்ந்தவர் என்று வட்டாட்சியரால் முறையான விசாரணைக்குப் பின் வழங்கப்படும் இச்சான்று கடவுச் சீட்டு, நுழைவிசைவு (விசா) ஆகியவை பெறுவதற்கு பயன்படும்.

**(iv) வாரிசுச் சான்று**

பொதுவாக ஒரு குடும்பத்தின் தலைவரோ அல்லது அந்தக் குடும்பத்தில் உள்ள உறுப்பினர் எவரேனும் காலமாகிவிட்டால் அவரது பெயரில் உள்ள மின் இணைப்பு, வீட்டு வரி, தொலைபேசி இணைப்பு, பட்டா, வங்கிக் கணக்கு ஆகியவற்றை மாற்றம் செய்யவும், இறந்தவர்களின் வாரிசுதாரர் தகுதி இருப்பின் கருணை அடிப்படையில் பணி நியமனம் பெறவும், குடும்ப ஓய்வூதியம் பெறவும் இறந்தவரின் நேரடி வாரிசுகளுக்கு மனைவி அல்லது கணவர், மகன், மகள், தாய் ஆகியோருக்கு வாரிசுச் சான்று விசாரணைக்குப்பின் வட்டாட்சியரால் வழங்கப்படுகிறது. இறப்புச் சான்றின் அசல் பிரதியுடன், இரண்டு ரூபாய்க்கான கட்டண வில்லையுடன் விண்ணப்பிக்க வேண்டும். இது தொடர்பாக கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் தரும் விசாரணை அறிக்கையின் அடிப்படையில், வாரிசுதாரர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு இச்சான்று வட்டாட்சியரால் வழங்கப்படுகிறது.

**(v) சொத்து மதிப்புச் சான்று**

ஒப்பந்தக்காரராகப் பதிவு செய்யவும் ஏலங்களில் பங்கு பெறவும் தேவைப்படும் இச்சான்று கோருபவர் ரூ.10/–க்கான கட்டண வில்லையுடன் வட்டாட்சியருக்கு விண்ணப்பிக்க வேண்டும். சொத்து மதிப்பு ரூ.50,000/–வரை ரூ.100/–ம் அதற்கு மேல் ஒவ்வொரு ரூ.50,000/–க்கும் ரூ.200/– வீதமும் கட்டணமாகக் கருவூலத்தில் செலுத்தப்பட வேண்டும். உரிய ஆவணங்கள் மற்றும் புலத்தணிக்கையின் அடிப்படையில் வட்டாட்சியரால் இச்சான்று வழங்கப்படுகிறது.





**(vi) பிறப்பு/இறப்புச் சான்று**

வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பிறப்பு இறப்புப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ள விவரங்களின் அடிப்படையில் தலைமையிடத்து துணை வட்டாட்சியரால் இச்சான்று வழங்கப்படுகிறது. இதற்கான கட்டணமாக ரூ.5/– வசூலிக்கப்படுகிறது. நகராட்சிகளில், நகராட்சி ஆணையரின் மூலமும், சிறப்பு ஊராட்சிப் பகுதிகளில் செயல் அலுவலர் மூலமும் இச்சான்று வழங்கப்படுகிறது.

**(vii) ஆதரவற்ற குழந்தை சான்று**

ஆதரவற்ற குழந்தைகள் கருணை இல்லங்களில் சேருவதற்கு வட்டாட்சியரால் இச்சான்று வழங்கப்படுகிறது. விண்ணப்பத்தின் பேரில், குழந்தையின் பெற்றோர்கள் பற்றிய விவரமும், உண்மையில் அந்த குழந்தை ஆதரவற்றவர்தானா அல்லது பாதுகாவலரின் பராமரிப்பில் உள்ளதா என்ற விவரங்கள் குறித்து தீர விசாரித்த பின்னர் இச்சான்று வழங்கப்படுகிறது.

**(viii) ஆதரவற்ற விதவைச் சான்று**

ஆதரவற்ற விதவைகள் அரசு வேலை வாய்ப்பில் முன்னுரிமை பெறுவதற்காக இச்சான்று வழங்கப்படுகிறது. இச்சான்றிதழ் கோட்டாட்சியர்களால் வட்டாட்சியர்களின் அறிக்கையின் பேரிலும், கோரிக்கையின் மெய்த்தன்மை குறித்து அவரது விசாரணை அடிப்படையிலும் வழங்கப்படுகிறது.

**(ix) கலப்புத் திருமணச் சான்று**

இரண்டு மாறுபட்ட இனத்தைச் சார்ந்தவர்கள் (ஒருவர் தாழ்த்தப்பட்ட/பழங்குடியினர் இனமாகவும், மற்றொருவர் வேறு இனத்தைச் சேர்ந்தவராகவும் இருந்து) புரிந்துகொள்ளும் திருமணம் கலப்புத் திருமணம் ஆகும். அரசுப் பணி வாய்ப்பில் முன்னுரிமை பெறவும், இவர்களின் குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்கவும், அரசின் சலுகைகளைப் பெறவும் இச்சான்று வட்டாட்சியரால் வழங்கப்படுகிறது.

**(x) பள்ளிச் சான்று தொலைந்ததற்காக வழங்கப்படும் சான்று**

பள்ளி/கல்லூரிகளில் வழங்கப்படும் அசல் சான்று தொலைந்துவிட்டால், அச்சான்றின் நகலினைப் பெறுவதற்கு சம்பந்தப்பட்ட துறைக்கு விண்ணப்பிக்க, விண்ணப்பதாரருக்கு வட்டாட்சியரால் மேற்படி சான்று தொலைந்தது உண்மை என்று சான்று வழங்கப்படுகிறது. விண்ணப்பதாரர் இச்சான்று தொலைந்தது தொடர்பாக,

காவல் நிலையத்தில் வழங்கப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் பிரதியுடன் இச்சான்று கிடைக்கப் பெறவில்லையென்ற காவல் நிலையத்தின் அறிக்கையுடனும் வட்டாட்சியருக்கு விண்ணப்பிக்க வேண்டும். வட்டாட்சியரால் தக்க விசாரணைக்குப் பின்பு இச்சான்று வழங்கப்படுகிறது.

### (xi) கணவனால் கைவிடப்பட்டவர் சான்று

கணவனால் புறக்கணிக்கப்பட்ட திருமணமான பெண் அவரது கணவரை விட்டுப் பிரிந்து அவரிடமிருந்து எவ்விதத் தொடர்பும் இன்றி தொடர்ந்து ஐந்து ஆண்டிற்கும் மேலாக தனித்து வாழ்ந்து வந்தால், அவர் கணவனால் கைவிடப்பட்டவராக கருதப்படுவார். தற்காலிகமாகப் பிரிந்து வாழ்பவர்கள் இச்சான்று பெறத் தகுதியுடையவர்கள் அல்லர். வட்டாட்சியரால் உரிய விசாரணைக்குப்பின் வழங்கப்படும் இச்சான்று அரசின் சலுகைகளைப் பெற உதவுகிறது.

### 2.5 நிர்வாக அமைப்பு

இந்த மாநிலம் 30 வருவாய் மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு அதில் 73 வருவாய்க் கோட்டங்கள், 206 வட்டங்கள், 1,120 உள்வட்டங்கள் மற்றும் 16,563 கிராமங்கள் அடங்கியதாக அமைந்துள்ளது.

ஒரே எண்ணுடைய சில கிராமங்கள் நிர்வாகக் காரணங்களின் அடிப்படையில் பகுதி 1/பகுதி 2, வடக்கு/தெற்கு, கிழக்கு/மேற்கு என பிரிக்கப்பட்டிருந்த காரணத்தினால் இவற்றை தனித்தனி அலகுகளாகக் கணக்கிட்டு மாநில அளவில் மொத்த கிராமங்களின் எண்ணிக்கை 17,244 என ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டிருந்தது. தற்போது இவற்றை நன்கு பரிசீலித்து கிராமங்களுக்கு வழங்கப்பட்ட எண்ணின் அடிப்படையில் தமிழ்நாட்டிலுள்ள மொத்த கிராமங்களின் எண்ணிக்கை 16,563 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களிடமிருந்து விலகிவிடாமல் அருகில் சென்று மாவட்ட நிர்வாகம் செயல்படவும் அவர்களுடைய குறைகள் மற்றும் தேவைகளுக்கு உதவும் வகையிலும், பின்தங்கிய பகுதிகளை மேம்படுத்தவும், சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகள் மற்றும் இயற்கை இடர்ப்பாடுகள் ஏற்படும் காலங்களில் ஆதரவு அளிக்கவும், மக்கள் நலப் பணிகள் தாமதமின்றி நடைபெறவும், பெரிய மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு சீரமைக்கப்படுகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையில் 25–7–2006 அன்று பல்வேறு தரப்பினரின் கோரிக்கையை ஏற்று,





ஏற்கெனவே கடந்த ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டு தொடர்ந்து வந்த ஆட்சியால் கைவிடப்பட்ட, அரியலூர் மாவட்டம் மீண்டும உருவாக்கப்படும் என்று சட்டமன்றப் பேரவையில் தெரிவித்ததற்கு ஏற்ப இனி தமிழகத்தின் 31–வது மாவட்டமாக அரியலூர் மாவட்டம் ஏற்படுத்தப்படும். இதற்கான தொடர் நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வருவாய்த் துறைக்கு உள்கட்டமைப்பு வசதிகள் உருவாக்குவதில இந்த அரசு மிகுந்த கவனம் கொண்டுள்ளது. வருவாய்த் துறை அலுவலர்களுக்கு வருவாய்த் துறை தொடர்பான பயிற்சி கொடுப்பதிலும் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 2.6 கிராம நிர்வாகம்

தமிழகத்திலுள்ள கிராமங்களின் நிர்வாகப் பணிக்காக 12,506 கிராம நிர்வாக அலுவலர் பணியிடங்கள் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளன. கிராம அளவில் வழங்கப்படும் சேவைகளை மேம்படுத்தும் வகையில 2,500 கிராம நிர்வாக அலுவலர்கள் தேர்ந்தெடுக்கப்படும் பணியை துரிதப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கிராம உதவியாளர்களுக்கும் மற்றும் இறந்துபோன கிராம உதவியாளர்களின் குடும்பத்தார்களுக்கும் ஓய்வூதியம் வழங்குவதற்காக தமிழ்நாடு கிராம உதவியாளர் ஓய்வூதிய விதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதன்படி கீழ்க்காணும் பிரிவுகளின்கீழ் வரும் கிராம உதவியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை வழங்க வகை செய்யப்பட்டுள்ளது:

- வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெறுவோர்
- கிராம உதவியாளர் பணியிடம் ஒழிக்கப்பட்டதனால் பாதிக்கப்படுவோர்
- மருத்துவக் காரணங்களால் தகுதி இழப்போர்
- தண்டனை காரணமாக கட்டாய ஓய்வு செய்யப்படுவோர் மற்றும்
- விதிகளின்படி தன் விருப்ப ஓய்வில் செல்வோர்

### 2.7 நில வரி

நில வரி என்பது நிலத்தின் வகைப்பாடு, மண் வளம் மற்றும் தரம் ஆகியவற்றைப் பொறுத்து நிர்ணயிக்கப்பட்ட அடிப்படைத் தீர்வையாகும். இதனை ஆதாரமாகக் கொண்டு விதிக்கப்படும் தல

வரி, தல மேல் வரி, கூடுதல் தல மேல் வரி மற்றும் தண்ணீர் வரி என்பது இதனுடைய பிற அம்சங்களாகும்.

நிலப் பட்டாதாரர்களிடமிருந்து எந்தவித கடுமையான நடவடிக்கையும் இல்லாமல் நில வரி வசூல் செய்யப்படுகிறது.

1415 ஆம் பசலி (1–7–2005 முதல் 30–6–2006) ஆண்டுக்கான உத்தேச கேட்பு நில வரி ரூ.53.51 கோடியில் 31–5–2006 முடிய ரூ.29.46 கோடி வசூலாகியுள்ளது.

## 2.8 இயற்கை இடர்ப்பாடுகள்

இடர்ப்பாடுகள் இரு வகைப்படும். 1) இயற்கை இடர்ப்பாடுகள் மற்றும் 2) விபத்து மற்றும் மனிதனால் ஏற்படும் இடர்ப்பாடுகள்.

1) புயல், மழை, வெள்ளம், வறட்சி, நில நடுக்கம், நிலச்சரிவு, சுனாமி, போன்றவை இயற்கை இடர்ப்பாடுகளாகும்.
2) தீ விபத்து, குண்டு வெடிப்பு, இரயில் விபத்துகள், படகு கவிழ்தல், தொழிற்சாலைகளில் ஏற்படும் இரசாயனக் கசிவுகள் மற்றும் கடலில் எண்ணெய் கலத்தல் போன்ற அசாதாரண நிகழ்வுகள் விபத்து மற்றும் மனிதனால் ஏற்படுத்தப்படும் இடர்ப்பாடுகளாகும்.

மேற்படி இடர்ப்பாடுகள் நிகழும் காலங்களில் வருவாய்த் துறையினரின் பங்களிப்பு மிகவும் இன்றியமையாததாகும். பருவ காலத்திற்கு முந்தைய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல், வருவாய்த் துறை அலுவலர்களுக்கு பேரிடர் மேலாண்மை தொடர்பாக பயிற்சி வழங்குதல், இயற்கைச் சீற்றங்களைத் தொடர்ந்து 24 மணி நேரமும் கண்காணிக்க கட்டுப்பாட்டு அறைகள் உருவாக்குதல், கடலோர மாவட்டங்களில் இயற்கை இடர்ப்பாடுகள் மற்றும் சட்டம்—ஒழுங்கு தொடர்பான தகவல்களை உடனுக்குடன் பரிமாறிக்கொள்ள மாவட்டத் தலைநகரங்களில் இருவழித் தகவல் தொடர்பு சாதனங்கள் நிறுவுதல், புயல் பாதுகாப்பு மையங்களை உருவாக்குதல் ஆகிய செயல்பாடுகள் வருவாய்த் துறையின் முக்கியப் பங்களிப்பை உள்ளடக்கியதாகும். மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும் நிவாரண உதவிகள் அரசாங்கத்தால் வழங்கப்பட்டு வருகின்றன.

### ஆழிப் பேரலை நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகள்

26–12–2004 அன்று சுனாமி என்ற ஆழிப் பேரலைகள் தமிழகத்தைத் தாக்கின. இந்தத் தாக்குதல் இதுவரை கண்டிராத ஒரு



பேரிடராகும். இதனால் இலட்சக்கணக்கான மீனவர்களின் வாழ்வாதாரங்கள் அழிந்ததுடன் கடற்கரையோர கிராமங்களிலுள்ள ஆயிரக்கணக்கானவர்கள் உயிரிழந்தனர்

இந்த ஆழிப் பேரலையினால் 13 கடலோர மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி கடற்கரைப் பகுதியின் நெடுகிலும் அமைந்துள்ள கிராமங்களிலும், நகரங்களிலும் வாழுகின்ற மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். இவற்றில் நாகப்பட்டினம், கன்னியாகுமரி மற்றும் கடலூர் மாவட்டங்களிலுள்ள கடலோரப் பகுதிகள் மிக பலத்த சேதங்களைச் சந்தித்தன. சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டக் கடலோரப் பகுதிகள் பலத்த சேதங்களையும் சந்தித்தன. இந்த திடீர் தாக்குதலினால் கடலோரப் பகுதிகளில் வாழும் மீனவர்கள் பெரும் எண்ணிக்கையில் உயிரிழந்தனர். இப்பேரழிவால் இலட்சக்கணக்கான மக்கள் வீடு மற்றும் உடைமைகளை இழந்தனர். இந்த ஆழிப் பேரலைகளால் கடலோரக் கிராமங்களில் வாழ்ந்து வந்த பெரும்பாலான மீனவர்களின் படகுகள் மற்றும் மீன்பிடி வலைகள் கடுமையான சேதத்திற்குள்ளாயின.

### ஆழிப் பேரலையின் பாதிப்புகள்

ஆழிப் பேரலைத் தாக்குதலால் 13 மாவட்டங்களில் 238 கிராமங்களில் உள்ள 418 குடியிருப்புகள் பாதிக்கப்பட்டன. மேலும், 7,995 மனித உயிரிழப்புகளும், 16,082 கால்நடை உயிரிழப்புகளும் ஏற்பட்டன. 4,010 நபர்கள் மிக பலத்த காயமடைந்தனர். சுமார் 1.5 இலட்சம் வீடுகள் சேதமடைந்தன. 4.9 இலட்சம் மக்கள் தங்கள் இருப்பிடத்திலிருந்து காலி செய்யப்பட்டனர். 29,162 கட்டுமரங்கள், 4,632 வல்லங்கள், 2,657 மின்விசைப் படகுகள் மற்றும் 39,355 மீன்பிடி வலைகள் பாதிக்கப்பட்டன. இந்த சுனாமி ஆழிப் பேரலைகளின் கடுமையான திடீர்த் தாக்குதலின் காரணமாக மிகவும் அதிகமாகப் பாதிக்கப்பட்டது மீனவ சமுதாயமே ஆகும். அவர்களது வீடுகள், உடைமைகள், அவர்கள் வாழ்க்கைக்கு ஆதாரமான படகுகள், மீன்பிடி வலைகள் மற்றும் மீன்பிடிச் சாதனங்கள் ஆகியவை சிலகண நேரத்தில் பலத்த சேதத்திற்கு உள்ளாயின. மேலும், பலர் தங்கள் படகுகள் மற்றும் மீன்பிடி வலைகளை முழுமையாக இழந்து விட்டனர்.

### அரசு மேற்கொண்ட நிவாரண நடவடிக்கைகள்

இப்பேரழிவால் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு, வீடுகளையும் மற்றும் உடைமைகளையும் இழந்தவர்களுக்கு, உடனடியாக நிவாரணம்

வழங்கும் பணியை அரசு மேற்கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமாக உணவு, உறைவிடம் மற்றும் மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டன.

### ராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டம்

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்காக மத்திய அரசின் ராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டத்தின்மூலமாக உடனடி நிவாரணம், விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர் வழங்கு திட்டம், சம்பூர்ண கிராமின் ரோஜ்கர் யோஜனா கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம், மீனவர்களுக்கான மானியத் தொகை, வங்கிகளிடமிருந்து கடனுதவி, மீன்பிடித் துறைமுகங்களைப் பழுதுபார்ப்பதற்கான மானியம் மற்றும் ஆழிப் பேரலையால் தாக்கப்பட்ட குடும்பங்களின் வீடுகளைக் கட்டும் பணிக்காக ரூ.2347.19 கோடி அனுமதிக்கப்பட்டு, தமிழக அரசால் ரூ.820.31 கோடி விடுவிக்கப்பட்டு, மே 2006 வரை ரூ.731.37 கோடி செலவிடப்பட்டுள்ளது. இந்த விவரங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன:—

| வ. எண் | இனங்கள் | அனுமதிக்கப்பட்ட தொகை | விடுவிக்கப் பட்ட தொகை | செலவிடப் பட்ட தொகை |
|---|---|---|---|---|
| | | (ரூ. கோடியில்) | | |
| 1 | உடனடி நிவாரணம் (CRF/NCCF) | 617.20 | 617.20 | 472.64 |
| 2 | விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர் வழங்கும் திட்டம் (ARWSP) | 8.50 | 8.50 | 4.57 (31–5–06 வரை) |
| 3 | சம்பூர்ண கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் (SGRY) | 54.00<br>54.000 மெட்ரிக் டன் அரிசி | 52.76<br>52.760 மெட்ரிக் டன் அரிசி | 52.76 |
| 4 | மீனவர்களுக்கான மானியத் தொகை (CRF/NCCF) | 356.54 + 84.54 (*) | 131.91 | 150.47 |
| 5 | வங்கிகளிடமிருந்து கடனுதவி | 566.47 | 62.39(**) | – |
| 6 | மீன்பிடித் துறைமுகங்களில் பழுது பார்க்கும் பணிகள் (CRF/NCCF) | 9.94 | 9.94 | 11.26 |
| 7 | வீடுகள் கட்டும் பணிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை | 650.00 (***) | – | 39.67 |
| | மொத்தம் | 2347.19 | 820.31 | 731.37 |



(*) கூடுதல் மானியம்

(**) இத்தொகை வங்கிகளால் பயனாளிகளுக்கு நேரடியாக வழங்கப்படுகிறது.

(***) வீடுகள் கட்டும் பணியைப் பொறுத்தவரை திட்டச் செலவினம் எவ்வளவு இருக்க வேண்டுமென்ற வரைமுறையைத் திட்டக் குழு பிப்ரவரி 2006–ல் முடிவு செய்து இத்தொகையையும் தமிழக அரசு கூடுதலாகச் செலவிடலாம் என்று 4–5–2006 அன்று தெரிவித்துள்ளது. இதுவரை செலவிடப்பட்டுள்ள தொகை, நில எடுப்புப் பணிக்காக செலவிடப்பட்டதாகும்.

நிதியுதவி முழுவதையும் பயன்படுத்தக் கருதி பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

### உலக வங்கி—அவசர சுனாமி மறுசீரமைப்புத் திட்டம் (Emergency Tsunami Reconstruction Project)

உலக வங்கி கீழ்க்கண்ட பணிகளுக்காக 1852.74 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. (அரசாணை எண் 384, வருவாய் (என்சி—4(1) துறை, நாள் 1–7–2005):

- தற்காலிகக் குடியிருப்புகளை மேம்படுத்துவது, நிரந்தர வீடுகளைக் கட்டும்போது தங்குவதற்கான குடியிருப்புகள், புதிய வீடுகள் கட்டுதல் மற்றும் குடிநீர், தெரு விளக்குகள், சாலை வசதிகள் போன்ற அடிப்படை வசதிகள் செய்தல் ஆகியவற்றிற்கு ரூ.1551.39 கோடி.

- வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடை பராமரிப்பு ஆகியவற்றில் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு உதவி செய்தல், கால்நடை பராமரிப்பு அடிப்படை வசதிகள் மேம்படுத்துதல், மீன்வளத் துறை, துறைமுகங்கள் மற்றும் படகு நிறுத்தும் இடங்கள் ஆகியவற்றைப் பழுதுபார்த்தல் ஆகிய பணிகளுக்காக ரூ.122.202 கோடி.

- மருத்துவமனைகள், துணை மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், பள்ளிகள், புயல் பாதுகாப்பு மையங்கள், நினைவகங்கள் ஆகியவற்றைப் பழுது பார்ப்பதற்கும், மேம்பாடு செய்வதற்கும், மேலும் நதிகளின் கரைகள் மற்றும் வடிகால்களைச் செப்பனிடுதல் மற்றும் கரையோரக் காடுகள், சதுப்பு நிலக் காடுகள் ஆகியவை அமைப்பதற்கு ரூ.85.410 கோடி.

- மேற்கண்ட பணிகளை மேற்கொள்வதற்காக பல்வேறு விதமான ஆய்வுகள், தொழில்நுட்ப ஆராய்ச்சிகள், கலந்தாய்வு ஆகியவை மற்றும் அனைத்து தரப்பினருக்கும் பயிற்சிகள் ஆகியவற்றிற்கு ரூ.41.172 கோடி.

- மேற்கண்ட பணிகளை செவ்வனே நிறைவேற்றக் கூடுதலாக அலுவலர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள், அலுவலகச் செலவுகள் ஆகியவற்றுக்கு ரூ.52.56 கோடி.

உலக வங்கித் திட்டத்திற்கான ஒப்பந்தம் தமிழக அரசு, மைய அரசு மற்றும் உலக வங்கியிடையே மே 12, 2005 தேதியன்று கையெழுத்தாகியது. இத்திட்டத்தின் செயல்பாடு 9–8–2005 முதல் இருக்கும் என உலக வங்கி தெரிவித்துள்ளது. இத்திட்டத்திற்கான காலம் ஏப்ரல், 2008 வரை ஆகும். இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிதிக்கு வட்டி ஏதும் இல்லை. சேவைக் கட்டணமாக 0.75 விழுக்காடு உலக வங்கிக்கு தமிழக அரசு செலுத்த வேண்டும். இத்திட்டத்தின்கீழ் பெறப்பட்ட தொகை 2015 ஆம் ஆண்டு முதல் 2040 ஆம் ஆண்டுக்குள் திரும்பச் செலுத்தப்படும்.

இதுவரை இத்திட்டத்தின்கீழ் தமிழக அரசால் ரூ.234.582 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல், 2006 முடிய ரூ.46.046 கோடி செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பல்வேறு துறையினரால் செலவிடப்பட்டுள்ள தொகையிலிருந்து ரூ.7.248 கோடியைத் திரும்ப பெறும் பொருட்டு உலக வங்கியிடம் கோரப்பட்டுள்ளது.



**ஆசிய வளர்ச்சி வங்கி–சுனாமி அவசர உதவித் திட்டம் (Tsunami Emergency Assistance Project)**

ஆசிய வளர்ச்சி வங்கிக்கான ஒப்பந்தம் மே 12, 2005 தேதியன்று கையெழுத்தாகியது. ஆசிய வளர்ச்சி வங்கியின்கீழ் பின்வரும் திட்டங்களுக்காக ரூ.629.63 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (அரசாணை எண் 379, வருவாய் (என்சி 4–1) துறை, நாள் 27–6–05)

- பாதிக்கப்பட்ட ஏழை குடும்பங்களுக்கு வாழ்வாதாரங்களை ஏற்படுத்திக் கொடுக்க ரூ.218.96 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

- பாலங்கள் அமைப்பதற்கு ரூ.39.86 கோடியும், நாகப்பட்டினம், கடலூர் துறைமுகங்கள் மற்றும் கடலோர மாவட்டங்களில் 12 மீன்பிடித் துறைமுகங்களைக் கட்டுவதற்கு ரூ.77.53 கோடியும் வழங்கப்பட்டுள்ளன.

- குடிநீர் மற்றும் வடிகால் வசதிகளுக்கு ரூ.100 கோடியும், நகராட்சிப் பகுதிகளில் உள்ள கட்டமைப்பு வசதிகளைப் பழுதுபார்ப்பதற்கு ரூ.35 கோடியும், கிராமப் பகுதிகளில் அடிப்படை வசதிகளுக்கு ரூ.143.45 கோடியும், ஆய்வுகள், ஆராய்ச்சிகள் மற்றும் அலுவலகம் சார்ந்த செலவுகளுக்காக ரூ.14.06 கோடியும் ஆக மொத்தம் ரூ.629.63 கோடி இத்திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆசிய வளர்ச்சி வங்கித் திட்ட ஒதுக்கீட்டின் வாயிலாக 90,000 குடும்பங்களில் உள்ள உறுப்பினர்களுக்கு வாழ்வாதாரப் பயிற்சி அளிக்கவும், புதிய வாழ்வாதார நிறுவனங்களை அமைப்பதற்கும் நிதி உதவி அளிக்கப்படும். தயாரித்த பொருட்களை விற்பனை செய்வதற்கு உதவி செய்யப்படும். 3,90,000 பயனாளிகளுக்கு பொருள் காப்புறுதி செய்யப்படும்.

ஆசிய வளர்ச்சி வங்கியின் மொத்தக் கடன் தொகை ரூ.629 கோடியில் ரூ.296 கோடி வட்டியுடனும், மீதமுள்ள ரூ.334 கோடி எந்தவித வட்டியும் இன்றி வழங்கப்படுகிறது. இக்கடன் தொகையை 2013 ஆம் ஆண்டிலிருந்து 2037 ஆம் ஆண்டிற்குள் தமிழக அரசு திரும்பச் செலுத்த வேண்டும்.

இதுவரை இத்திட்டத்தின்கீழ் தமிழக அரசால் ரூ.573.707 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் 2006 முடிய ரூ.22.051 கோடி செலவிடப்பட்டுள்ளது. மேலும், அரசால் ஏற்கெனவே செலவிடப்பட்ட தொகை ரூ.6.900 கோடியை திரும்பப் பெறும்பொருட்டு ஆசிய வளர்ச்சி

வங்கியிடம் கோரப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்ட காலம் ஏப்ரல் 2008 வரை ஆகும்.

## பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி நிறுவனம் (International Federation for Agricultural Development) மூலம் பெறப்பட்ட உதவித் தொகை

பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிறுவனம் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதார முன்னேற்றத் திட்டங்களுக்காக ரூ.131 கோடி நிதி உதவி அளித்துள்ளது. இத்திட்டம் காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், திருவள்ளூர், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் ஊரக வளர்ச்சித் துறையினர்மூலம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் பெறப்படும் தொகைக்கும் சேவைக் கட்டணமாக ஆண்டுக்கு 0.75 விழுக்காடு மட்டுமே இருக்கும். இத்திட்டம் எட்டு ஆண்டுகளில் செயல்படுத்தப்படும்.

## நிரந்தர வீடுகள் கட்டும் பணி

சுனாமி தாக்குதலுக்குப் பிறகு சுனாமியால் வீடுகளை இழந்த குடும்பங்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 1,18,000 என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களால் தெரிவிக்கப்பட்டது. மேற்கண்ட குடும்பங்களுக்கு தங்களது வீடுகளைச் சரி செய்துகொள்ள தற்காலிகமாக தலா ரூ.2000/– உள்ளிட்ட நிவாரணத் தொகுப்பு உதவி தமிழக அரசால் வழங்கப்பட்டது.

கடலோரப் பகுதிகளில் நேரடியாகப் பாதிக்கப்படாமல் இருந்தாலும், மாற்று இடங்களுக்கு சென்றிட பல குடும்பங்கள் விருப்பம் தெரிவித்ததன் அடிப்படையில், 1,30,000 குடும்பங்களுக்கு வீடுகள் கட்டப்பட வேண்டும் என்று அரசு முடிவு செய்து உலக வங்கி போன்ற நிறுவனங்களுக்கும் தெரிவிக்கப்பட்டது.

பல தொண்டு நிறுவனங்கள் நிரந்தர வீடுகள் கட்டும் பணியில் தங்களையும் ஈடுபடுத்திட வேண்டுமென்று கோரிக்கை விடுத்ததன் விளைவாக, அந்நிறுவனங்கள் கட்டடம் கட்டுவதற்கான தொழில்நுட்ப விதிமுறைகள், மாதிரிப் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) ஆகியவற்றை உள்ளடக்கிய அரசுக் கொள்கை இறுதி செய்யப்பட்டது.



### கட்டடப் பணிகளின் தற்போதைய நிலை (31-7-2006)

| | | |
|---|---|---|
| **பாதிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை** | | **54,460** |
| அரசு சாரா நிறுவனங்களால் கட்ட ஏற்கப்பட்டுள்ள வீடுகள் | 32,400 | |
| தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் கட்டப்படவுள்ள வீடுகள் | 22,060 | |
| **கட்டி முடிக்கப்பட்ட வீடுகள்** | | **10,750** |
| அரசு சாரா நிறுவனங்கள் | 7,264 | |
| தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் | 3,486 | |
| **தற்போது கட்டப்பட்டு வரும் வீடுகள்** | | **18,078** |
| அரசு சாரா நிறுவனங்கள் | 15,513 | |
| தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் | 2,565 | |
| **கட்டப்படவுள்ள வீடுகள்** | | **25,632** |
| அரசு சாரா நிறுவனங்கள் | 9,623 | |
| தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் | 16,009 | |

2006 டிசம்பர் இறுதிக்குள்ளாக மீதமுள்ள வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்படும். மேலும், 6,800 வீடுகள் பழுதுபார்க்கும் பணிக்காக எடுத்துக்கொள்ளப்பட்டு, அவற்றில் 4,986 வீடுகள் பழுதுபார்த்து முடிக்கப்படவுள்ளன. இவை தவிர, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின்மூலமாகக் கீழ்க்கண்ட இடங்களில் வீடுகள் கட்டப்படவுள்ளன:

| | | |
|---|---|---|
| • தென் சென்னை | — | 7,320 |
| • திருவொற்றியூர் | — | 1,842 |
| • ஒக்கியம்—துரைப்பாக்கம் | — | 5,454 |
| **மொத்தம்** | — | **14,616** |

இக்குடியிருப்புகளின் கட்டுமானப் பணி தொடங்கப்பட்டு, மார்ச் திங்கள் 2008 ஆம் ஆண்டுக்குள்ளாக முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

22–06–2006 அன்று உலக வங்கியின் தேசிய இயக்குநர் மற்றும் அதிகாரிகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்தனர். அச்சமயம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடல் உயர் அலை மட்டத்திற்கு ஒரு கிலோ மீட்டருக்குள் பாதிப்புக்குள்ளாகக்கூடிய பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு நிரந்தர வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்திற்கும் ஒப்புதலளிக்க வேண்டும் என வலியுறுத்தினார்கள்.

## மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சியர்களுடன் நடத்திய ஆழிப் பேரலை நிவாரணப் பணிகள் குறித்த ஆய்வு

***ஆழிப் பேரலை நிவாரணப் பணிகள் தொடர்பாக, முதல் முறையாகப் பாதிக்கப்பட்ட 13 கடலோர மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கூட்டி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமைச் செலயகத்தில் ஆய்வு மேற்கொண்டார்.*** ஆழிப் பேரலை நிவாரணம் மற்றும் மேறகொள்ளப்பட வேண்டிய மறுவாழ்வுப் பணிகள் குறித்து 21–6–2006 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டு பின்வரும் முடிவுகளை அறிவித்தார்கள்:–

- நிரந்தர வீடுகள் கட்டும் பணி விரைவுபடுத்தப்பட வேண்டும்.
- வீடுகள் கட்டித் தருவது சம்பந்தமாக நகர் ஊரமைப்பு சுனாமி மனைப் பிரிவுகள் உள்ள வீட்டு மனைப் பிரிவுகளில் நகராட்சி கட்டட விதிகள் மற்றும் ஊராட்சி கட்டட விதிகளுக்கு மனைப்பிரிவின் தன்மையைப் பொறுத்து தேவைப்படும் விதிகளுக்கும், சென்டேஜ் கட்டணம் செலுத்துவதினின்றும் பொதுவான விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் செய்ய முடியாத பணிகளை அரசு அளவிலேயே விரைவில் மேற்கொண்டு செய்து முடிக்க முடிவு செய்யப்பட்டது.
- புதிதாக வீடுகள் கட்டுவதற்குத் தேவைப்படும் நிலத்தை வாங்குவதில் காலதாமதம் ஏற்பட்டு வருவதால், சுனாமியால் பாதிப்புக்குள்ளான பகுதிகளில் தேவைப்படும் நிலங்களை விரைவாக எடுத்துக்கொள்ளும் வகையில் தனிச் சட்டம் இயற்றுவது குறித்து முடிவெடுக்கப்பட்டது.
- சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள மாணவர்களுக்கான கல்விக் கட்டணம், அதற்கான சலுகை





இரண்டாண்டுகளாக வழங்கப்பட்டதைப் போல் இந்த ஆண்டும் (2006–07) வழங்க முடிவெடுக்கப்பட்டது.

- கடந்த ஒன்றரை ஆண்டுகளில் செலவிடப்பட்ட தொகை போதுமானதல்ல என்று கருத்துரைக்கப்பட்டு, நிவாரணப் பணிகளுக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கான வீடுகள் கட்டப்படுவதற்கும் இந்த நிதியாண்டில் அடுத்து வரும் ஒன்பது மாதங்களில் மேலும் ரூ.1,000/– கோடி (ரூபாய் ஆயிரம் கோடி) செலவிடுவது என்று முடிவெடுக்கப்பட்டது.

மேற்படி கூட்ட முடிவிற்கிணங்க பின்வரும் நடவடிக்கைகள் துறையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன:–

- சுனாமி நிவாரணப் பணிகளுக்காக ஆகஸ்டு திங்கள் வரை ஏறத்தாழ ரூ.170 கோடி செலவுக்கு ஒப்புதலளிக்கப்படவுள்ளன. இதில் மீன் வளர்ச்சித் துறையின் மூலம் மீனவர்களுக்குக் கூடுதலாக மீன் வலை, கையடக்க மின்கல விளக்கு (Rechargeable lantern), சைக்கிள், உயிர் காக்கும் மிதவைச் சாதனம் மற்றும் குளிர்சாதனப் பெட்டி அளிக்க மைய அரசின் ஒப்புதலை எதிர்நோக்கி சுமார் ரூ.141 கோடியும் மேலும் உலக வங்கித் திட்டம் மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவிகளுடன் நிறைவேற்றப்படவுள்ள திட்டங்களுக்கு சுமார் ரூ. 29.019 கோடி செலவும் அடங்கும்.
- சுனாமி பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்ட/பாதிக்கப்படாத, ஆனால் கடலிலிருந்து 200 மீட்டருக்குள் வசித்து வரும் மீனவக் குடும்பங்கள்/ மற்றவர்களின் எண்ணிக்கையைக் கணக்கிலெடுத்து அவர்களுக்கு கடலிலிருந்து 500 மீட்டருக்கு அப்பால் வீடுகள் கட்டிக் கொடுக்கத் தேவைப்படும் தொகையைக் கணக்கிட்டு தெரிவிக்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். 200 முதல் 500 மீட்டருக்குள் உள்ள முழுவதும் பழுதடைந்த வீட்டு உரிமையாளர்கள் அதே இடத்தில் அல்லது 500 மீட்டருக்கு அப்பால் புதிய வீடுகள் பெறலாம். 500 மீட்டருக்கு அப்பால் பழுது அடைந்து இருந்தால் புதிய வீடுகள் அதே இடத்திலோ அல்லது புதிய இடத்திலோ வழங்கப்படும். இது தொடர்பான

செயற்குறிப்புகள் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து பெறப்பட்டவுடன் மத்திய திட்டக் குழு மற்றும் உலக வங்கியிடமிருந்து தேவையான அனுமதி பெற்று தேவையான வீடுகள் கட்ட விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**தேசிய புயல் அபாயம் தணித்தல் திட்டம் (National Cyclone Risk Mitigation Project)**

மத்திய அரசின் உள் துறை உலக வங்கி உதவியுடன் நாட்டில் உள்ள அனைத்து கடலோர மாநிலங்களிலும் மழை மற்றும் புயல் அபாயத்தினை தணித்திட தேசிய புயல் அபாயம் தணித்தல் திட்டம் என்ற திட்டத்தினை அமல்படுத்தவுள்ளது. புயலுக்கு அவ்வப்போது இலக்காகும் மாநிலங்களை இரு பிரிவுகளாகப் பிரித்துள்ளது. பிரிவு–1 என்பது புயலுக்கு அதிகமாக இலக்காகும் மாநிலங்களாகும். பிரிவு–2 என்பது புயலுக்குக் குறைவாக இலக்காகும் மாநிலங்களாகும். இத்திட்டத்தினைச் செயல்படுத்திட பிரிவு–1–ன்கீழ் வரும் மாநிலங்களுக்கு ரூ.176 கோடி நிதி ஒதுக்கீடும், பிரிவு–2–ன்கீழ் வரும் மாநிலங்களுக்கு ரூ.26 கோடி நிதி ஒதுக்கீடும் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு, பிரிவு–2–ல் வகைப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் தமிழ்நாட்டில் கடந்த 100 ஆண்டுகளில் தாக்கிய புயல் சின்னங்களைக் கருத்தில் கொண்டும் மேலும் தமிழ்நாடு அடிக்கடி புயலுக்கு இலக்காவதை கருத்தில் கொண்டும் மத்திய அரசின் உள் துறை தமிழ்நாட்டினை பிரிவு–1–ல் வகைப்படுத்த பரிந்துரை செய்ததன் அடிப்படையில் தமிழ்நாட்டை தற்போது பிரிவு–1–ல் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை தமிழ்நாட்டில் செயல்படுத்தத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மத்திய அரசு மற்றும் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட அமைப்பின் ஆதரவுடனான பேரிடர் இன்னல் மேலாண்மைத் திட்டம்**

பல்முனை இன்னல்களுக்கு உள்ளாகும் தன்மை கொண்ட பகுதிகளில் மக்கள் எதிர்கொள்ளும் இயற்கை இடர்ப்பாடுகளைக் குறைக்கும் நோக்குடன் மத்திய அரசும், ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட அமைப்பும் "பேரிடர் இன்னல் மேலாண்மைத் திட்டம்" என்ற திட்டத்தை பல்வேறு மாநிலங்களில் செயல்படுத்தி வருகின்றன. இத்திட்டம் தமிழ்நாட்டில் திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர், நாகப்பட்டினம், கன்னியாகுமரி மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பல்வேறு இன்னல்களுக்குட்படும் இம்மாவட்டங்களின் இயற்கை இன்னல்களை முடிந்தவரை குறைப்பது



இத்திட்டத்தின் நோக்கமாகும். விழிப்புணர்வு, கல்விப் பயிற்சி, பேரிடர் மேலாண்மை, ஆயத்த நிலை மற்றும் இன்னல்களிடமிருந்து மீளுதல் ஆகியவற்றில் மாநிலம், மாவட்டம், சமுதாயம் ஆகிய நிலைகளில் சமுதாயத்தின் திறன் வளர்த்தல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கம் ஆகும். இத்திட்டம் முழுமைக்கும் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட அமைப்பு நிதி வழங்குகிறது. மொத்த நிதி அளிப்பு ரூ.6.71 கோடியாகும் (14,75,022 அமெரிக்க டாலர்கள்). இத்திட்ட காலம் டிசம்பர் 2007 மாதத்திற்குள் முடிக்கப்படும்.

இத்திட்டத்தின்கீழ் பல்வேறு அரசு ஊழியர்கள், ஊராட்சி அமைப்பு உறுப்பினர்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகளின் உறுப்பினர்கள் ஆகியோர் கூர் உணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களது எண்ணிக்கை சுமார் 25,000 ஆகும். மேலும் சுமார் 12,000 கிராம தன்னார்வத் தொண்டர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. ஊரக மற்றும் கிராம அளவில் 4,553 பேரிடர் மேலாண்மைத் திட்டங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன. வட்டார அளவில் 47 வட்டாரங்களிலும், 6 மாவட்டங்களில் மாவட்ட அளவிலும் பேரிடர் மேலாண்மைத் திட்டங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன.

**2.9 தமிழ்நாடு குடும்ப துயர் துடைப்புத் திட்டம்**

இத்திட்டம் அரசாணை எண் 470, ((மு.அ.பொ.நி.நி.) நிதித் துறை நாள் 23–5–1989–ன்படி தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் ஆண்டு வருமானம் ரூ.5,000/–க்குட்பட்டு பொருளீட்டும் குடும்பத் தலைவரை இழந்து தவிக்கும் குடும்பத்திற்கு ரூ.2,000/– நிவாரணத் தொகை வருவாய்த் துறைமூலம் முதலில் வழங்கப்பட்டு வந்தது. அரசாணை எண் 726, வருவாய்த் துறை, நாள் 5–8–1996–ல் ஆண்டு வருமானம் ரூ.7,200/– வரை பெறும் குடும்பங்கள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறலாம் என ஆணையிடப்பட்டது. இந்த உதவித் தொகை படிப்படியாக உயர்த்தப்பட்டு, தற்போது அரசாணை எண் 11, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 22–1–1999–ன்படி 1–8–1998 முதல் ரூ.10,000/– நிவாரணத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

**2.10 விபத்து நிவாரணத் திட்டம்**

அரசாணை எண் 471, நிதித் (மு.அ.பொ.நி.நி.) துறை, நாள் 23–5–1989–ன்படி தமிழ்நாட்டில் கிராமக் கைவினைஞர்கள் உட்பட 44

வகையான தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் பணி நேரத்தில் இருக்கும்போது ஏற்படும் விபத்தினால் இறக்க நேரிட்டாலோ அல்லது காயம் ஏற்பட்டாலோ அல்லது அங்கங்களை இழக்க நேரிட்டாலோ அவர்களது குடும்பங்களுக்கும், காயமடைந்த அல்லது அங்கங்களை இழக்க நேரிட்ட தொழிலாளர்களுக்கும் வருவாய்த் துறைமூலம் நிவாரணத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

**விபத்தினால் ஏற்படும் மரணம்**

இத்திட்டம் தொடங்கப்பட்டபோது, பணியில் இருக்கும்போது விபத்தினால் இறந்த அல்லது முழுமையாகச் செயல் இழந்த தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு ரூ.10,000/- நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் ஏற்படும் நிதிச் சுமையை ஆரம்பத்தில் மாநில அரசே முழுமையாக ஏற்றுக்கொண்டது. 2-10-1995 முதல் இந்த நிவாரணத் தொகையை மாநில அரசும், மத்திய அரசும் ஏற்றுக்கொண்டன. பின்பு இறந்த தொழிலாளர்களின் குடும்பத்திற்கு வழங்கப்பட்ட நிவாரணத் தொகை 28-8-1996 முதல் ரூ.15,000/- ஆக உயர்த்தப்பட்டது.

**விபத்தினால் ஏற்படும் காயங்கள்**

அரசாணை 471, நிதித் (மு.அ.பொ.நி.நி.) துறை, நாள் 23-5-1989-ன்படி 44 வகையான தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு பணியின்போது விபத்தினால் ஏற்படும் காயங்களுக்கு ரூ.5,000/- முதல் ரூ.10,000/- வரை நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டது. தற்போது அரசாணை எண் 570, வருவாய்த் துறை, நாள் 27-10-1999-ன்படி விபத்தினால் காயம் அடையும் அல்லது அங்கங்களை இழக்க நேரிடும் 44 வகையான தொழில் செய்யும் தொழிலாளர்களுக்கு காயத்தின் தன்மைக்கு ஏற்பவும், இழக்க நேரிட்ட அங்கங்களின் தன்மையைப் பொருத்தும் ரூ.7,500/- முதல் ரூ.15,000/- வரை நிவாரணத் தொகை சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் 2002-2003 ஆம் ஆண்டு முதல் இத்திட்டமானது மைய அரசின் கூடுதல் உதவித் தொகை திட்டமாக மாநில அரசின் திட்டத்தின்கீழ் மாற்றம் செய்யப்பட்டது.





**2.11 இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம்**

ஏழை நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்கிடவும், அவர்கள் உற்பத்தி செய்யும் வேட்டி சேலைகளை நலிந்த குடும்பங்களுக்கு தமிழர் திருநாளாம் பொங்கலை முன்னிட்டு இலவசமாக வழங்கிடும் திட்டம் நடைமுறைபடுத்தப்படும் என்று 2006-2007 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. வருவாய்த் துறையினர் இந்த வினியோகப் பணியினைச் செயல்படுத்துவதற்கு மிக்க அனுபவம் பெற்றவர்கள். மேற்படி பணியைக் கடந்த காலங்களிலும் சிறப்பாகச் செயல்படுத்தி உள்ளனர்.

# அத்தியாயம் - 3

## நில நிர்வாகம்

அரசின் வெவ்வேறு துறைகள் வசம் உள்ள நிலங்கள் உட்பட அனைத்து வகையான அரசு நிலங்களும் வருவாய்த் துறையால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. நில வரித் திட்டத்தின்போது நிலங்கள் அவற்றின் பயன்பாட்டிற்கேற்ப நத்தம், தீர்வை ஏற்பட்ட புஞ்சை தரிசு, தீர்வை ஏற்பட்ட நஞ்சை தரிசு, தீர்வை ஏற்படாத புஞ்சை தரிசு, நீர்வழி புறம்போக்குகளான குட்டை, குளம், ஓடை, ஆறு, மேய்க்கால் புறம்போக்கு, மந்தைவெளி புறம்போக்கு, தோப்பு, பாதை, வண்டிப்பாதை, கல்லாங்குத்து, கோயில் புறம்போக்கு மற்றும் மயானப் புறம்போக்கு என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளன.

வருவாய்த் துறையின் முக்கியப் பணிகளான வீட்டுமனை ஒப்படை மற்றும் விவசாய நில ஒப்படை, அரசு நிலங்களைக் குத்தகைக்கு விடுதல், நில மாற்றம், நில உரிமை மாற்றம், நில எடுப்பு, பல்வேறு எஸ்டேட்ஸ்/இனாம் ஒழிப்புச் சட்டங்கள், பதிவு மாற்றம், பல்வேறு பாசனச் சட்டங்கள்/திட்டங்கள், திரைப்படச் சட்டங்கள் முதலியன நில நிர்வாகத் துறையால் கவனிக்கப்பட்டு வருகின்றன. அரசு நிலங்கள் ஒப்படை, நிலமாற்றம், நில உரிமை மாற்றம் மற்றும் குத்தகை முறைகளில் தனியாருக்கும், அரசின் பல்வேறு துறைகளுக்கும், அரசு சார்ந்த நிறுவனங்களுக்கும் வழங்கப்படுகின்றன.

### 3.2 நில ஒப்படை

அரசு நிலங்கள், வீட்டு மனைகள் வழங்கவும், வேளாண்மைப் பணிகளுக்கும் ஒப்படை செய்யப்படுகின்றன.

### வீட்டுமனை நில ஒப்படை

சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்களின் முன்னேற்றத்திற்கு அடிப்படைத் தேவையான வசிப்பதற்கு இடம் வழங்குவது இவ்வரசின் நிலையான கொள்கையாகும். கிராமப்புறங்களைப் பொறுத்தவரையில், நிலமற்ற ஏழைக் குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.16,000/—க்கும் குறைவாக உள்ளவர்களுக்கும், நகர்புறங்களைப் பொறுத்தவரையில், குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.24,000/—க்கும் குறைவாக உள்ளவர்களுக்கும் இலவச வீட்டு மனைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மகளிருக்கும் பொறுப்பளிப்பதைக் கருத்தில்கொண்டு, குடும்பத் தலைவி அதாவது மனைவி அல்லது குடும்பத்தில் உள்ள பெண் உறுப்பினர்களின் பெயரில் மட்டுமே வீட்டு மனைகள்



வழங்கப்படுகின்றன. தற்போது, கிராமங்களில் மூன்று சென்ட் அளவிலும், நகராட்சி எல்லைக்குள் ஒன்றரை சென்ட் அளவிலும் மற்றும் மாநகராட்சி எல்லைக்குள் ஒரு சென்ட் என்ற அளவிலும் வீட்டு மனைக்காக நிலம் ஒப்படை செய்யப்படுகிறது.

ஏற்கெனவே நடைமுறையில் இருந்த நிபந்தனைகளின்படி, ஒப்படை பெற்றவர், கூட்டுறவுச் சங்கங்கள் தவிர, இதர நிதி நிறுவனங்களில் வீட்டு மனைப் பட்டாவை அடமானம் செய்ய அனுமதி இல்லை. தற்பொழுது இந்த நிபந்தனையை மாற்றி, இந்திரா ஆவாஸ் யோஜனா மற்றும் பிரதமரின் கிராமோதய யோஜனா ஆகிய கிராமப்புற வீடு கட்டும் திட்டங்களின்கீழ் அரசால் ஒப்படை செய்யப்பட்ட நிலத்தில் வீடுகள் கட்டிக்கொள்வதற்காக கடன் உதவி மானிய திட்டத்தின்கீழ் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன் பெறும் பொருட்டு, ஒப்படை செய்யப்பட்ட வீட்டு மனைப் பட்டாக்களை அடமானம் செய்வதற்கு ஒப்படைதாரர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வீட்டுமனை ஒப்படை செய்வதில் பின்வரும் முன்னுரிமை பின்பற்றப்படுகிறது:—

(அ) எல்லைப்புற பாதுகாப்புப் படை மற்றும் இராணுவப் படை உட்பட முப்படையில் பணியில் இருந்தபோது உயிரிழந்தவர்கள் அல்லது செயலிழந்தவர்களின் குடும்பங்கள்

(ஆ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்

(இ) விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள்

(ஈ) முன்னாள் இராணுவத்தினர்

(உ) நிலமற்ற ஏழைகள்

ஒப்படை செய்வதன் பயன் ஏழை மக்களுக்கு விரைவில் சென்றடையும் வகையில், வருவாய்த் துறை அதிகாரிகளுக்கு பின்வரும் நிதி அதிகார வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது:—

| அலுவலர்கள் | நிதி வரம்பு |
|---|---|
| 1. வட்டாட்சியர் | ரூ.10,000/– |
| 2. கோட்டாட்சியர் | ரூ.20,000/– |
| 3. மாவட்ட வருவாய் அலுவலர் | ரூ.50,000/– |
| 4. மாவட்ட ஆட்சித் தலைவர் | ரூ.2,00,000/– |
| 5. நில நிர்வாக ஆணையர் | ரூ.2,50,000/– |
| 6. அரசு | ரூ.2,50,000/—க்கு மேல் |

### விவசாய நிலம் ஒப்படை

கிராமங்களில் வாழும் மக்கள், சொந்த நிலங்கள் இல்லாத காரணத்தினால், பெரும்பாலும் தங்கள் வாழ்க்கைக்கு விவசாயத்தையும், அதைச் சார்ந்த வேலைகளையும் நம்பி வாழ்ந்து வருவதால், நிலமற்ற ஏழைகளுக்கு நிலங்களை வழங்கி, விவசாயத்தையும் அதனைச் சார்ந்த வேலைகளையும் தொழிலாக மேற்கொள்வது மற்றும் நிலத்தை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்வது ஆகிய இரு குறிக்கோள்களை அடைவதற்கு அரசு உதவி வருகின்றது. விவசாய நில ஒப்படை, வருவாய் நிலை ஆணை எண் 15–ன்கீழ் செய்யப்படுகிறது. உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் கருத்தில் எடுத்துக்கொள்ளாமல், குடும்பத்தின் ஆண்டு வருமானம் கிராமப்புறத்தில் ரூ.16,000/–க்கும், நகர்புறத்தில் ரூ.24,000/–க்கும் குறைவாக இருப்பவர்களுக்கு இலவசமாக நிலம் ஒப்படை செய்யப்படுகிறது. வீட்டுமனை ஒப்படை செய்வதற்குப் பின்பற்றப்படும் அதே முன்னுரிமை விவசாய நில ஒப்படைக்கும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக இதர மாவட்டங்களில் ஒருவருக்கு ஒப்படை செய்யப்படும் நிலத்தின் பரப்பளவு, அவர் ஏற்கெனவே வைத்திருக்கும் நிலப்பரப்பும், ஒப்படைப் பரப்பும் சேர்த்து 3 ஏக்கர் புன்செய் அல்லது ஒன்றரை ஏக்கர் நன்செய் என்ற வரம்புக்கு உட்பட்டு ஒப்படை செய்யப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலங்களின் பரப்பு மிகவும் குறைவாக இருப்பதாலும், நிலங்களின் மதிப்பு/விலை அதிகமாக இருப்பதாலும், அம்மாவட்டத்தில், இந்தப் பரப்பளவு ஓர் ஏக்கர் புன்செய் அல்லது 0.50 ஏக்கர் நன்செய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒப்படை நிபந்தனைகளின்படி, ஒப்படை பெற்ற நிலத்தில் ஒப்படை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் ஒப்படை பெற்றவர் விவசாயம் செய்ய பயன்படுத்த வேண்டும். ஒப்படை பெற்ற நிலத்தை பிறருக்கு விற்பனை செய்யக்கூடாது. ஒப்படை பெற்ற நிலத்தில் குறைந்தது 10 மரக் கன்றுகளை நட வேண்டும். ஒப்படை நிபந்தனைகள் மீறப்படுமேயானால், இழப்பீடு எதுவும் வழங்கப்படாமல் நிலம் அரசால் மீளப் பெறப்படும்.

சமுதாயத்தின் பொதுத் தேவைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். நீர்வழிப் புறம்போக்குகளான ஏரி, குளம், குட்டை, வாய்க்கால் போன்றவற்றையும், மந்தைவெளி, மேய்க்கால் மற்றும் மயானம் ஆகிய புறம்போக்குகளையும் ஒப்படை செய்வதற்கு அரசு தடை விதித்துள்ளது. இயற்கைச் சூழல் சமன்பாட்டினைப்



பாதுகாப்பதற்கும், மண் அரிப்பைத் தடுப்பதற்காகவும், மாநிலத்தில் உள்ள அனைத்து மலைப் பிரதேசங்களிலும் விவசாயத்திற்கென நில ஒப்படை செய்வதற்கு அரசு தடை விதித்துள்ளது. பெரிய நகரங்களைச் சுற்றிலும் அரசின் பல்வேறு துறைகளின் பிற்கால வளர்ச்சித் திட்டங்களுக்கு நிலங்கள் தேவைப்படுவதால், சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் மற்றும் மாநகராட்சி எல்லைக்குள்ளும் நில ஒப்படை செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வீட்டுமனை ஒப்படை செய்வதற்கு வழங்கப்பட்டுள்ளது போலவே, விவசாய நிலம் ஒப்படை செய்வதற்கும் வருவாய்த் துறை அதிகாரிகளுக்கு நிதி அதிகார வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு தலா 2 ஏக்கர் வீதம் தரிசு நிலம் வழங்கும் திட்டம்

2001–2002 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், தமிழகத்தில் மொத்தம் 50 இலட்சம் ஏக்கர் (20 இலட்சம் ஹெக்டேர்) தரிசு நிலங்கள் உள்ளன என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதனையொட்டி இந்தத் தரிசு நிலங்களைச் சீர் செய்து நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு தலா 2 ஏக்கர் வீதம் அரசு அளிக்கும் என 2006–2007 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 1–8–2006 அன்று சட்டப் பேரவையில் இரண்டு ஏக்கர் தரிசு நிலத் திட்டம் தொடர்பாகப் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

தமிழகத்தில் உள்ள தரிசு நிலங்களைப் பண்படுத்தி, நிலமற்ற ஏழை, எளிய விவசாயக் குடும்பங்களுக்கு இரண்டு ஏக்கர் வீதம் அளிப்பது என்று ஆளுநர் உரையிலும், நிதிநிலை அறிக்கையிலும், அறிவிக்கப்பட்டதற்கிணங்க, தற்போது தமிழகத்திலே உள்ள தரிசு நிலங்கள் எவ்வளவு என்பது குறித்து கணக்கெடுக்கும் பணி கடந்த ஒரு மாத காலமாக தமிழக அரசின் வருவாய்த் துறைமூலமாக மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் வட்டாட்சியர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் ஒத்துழைப்புடன் நடைபெற்று, முதற்கட்ட புள்ளி விவரங்கள் தற்போது அரசுக்கு வந்துள்ளன.

ஆக்கிரமிப்பு இல்லாத ஒப்படை செய்யக்கூடிய அரசு புறம்போக்கு தரிசு நிலம் ஒரு இலட்சத்து 95 ஆயிரம் ஏக்கர்.

சிறு, குறு விவசாயிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள அரசு புறம்போக்கு தரிசு நிலம் 67 ஆயிரம் ஏக்கர். 98 ஆயிரம் ஏழை விவசாயிகள் இந்த நிலத்தினை ஆக்கிரமிப்பு செய்துள்ளனர்.

சிறு, குறு விவசாயிகளுக்குச் சொந்தமான பட்டா தரிசு நிலம் ஏழு இலட்சம் ஏக்கர். இது 4 இலட்சத்து 25 ஆயிரம் ஏழை விவசாயிகளுக்குச் சொந்தமானதாகும்.

1. ஆக்கிரமிப்பு இல்லாத அரசுக்குச் சொந்தமான ஒரு இலட்சத்து 95 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலத்தினை மேம்படுத்தி, நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குத் தலா இரண்டு ஏக்கர் வீதம் பிரித்து வழங்க நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுவிட்டன.

2. சிறு, குறு விவசாயிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள அரசுப் புறம்போக்கு தரிசு நிலமான 67 ஆயிரம் ஏக்கரைப் பண்படுத்தி, அதனை ஆக்கிரமித்துள்ள 98 ஆயிரம் விவசாயிகளுக்கே மீண்டும் வழங்கப்பட இருக்கிறது.

3. சிறு, குறு விவசாயிகளுக்குச் சொந்தமான ஏழு இலட்சம் ஏக்கர் தரிசு பட்டா நிலத்தைப் பொறுத்தவரையில் அவர்களாகவே விரும்பிக் கேட்டுக்கொண்டால் அந்த நிலத்தினை விவசாயம் செய்யத்தக்க நிலமாகப் பண்படுத்தி அவர்களுக்கே திருப்பி வழங்கப்படும்.

எனவே, இந்த வகையில் முதற்கட்டமாக தமிழகத்திலே உள்ள சுமார் ஐந்து இலட்சம் ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு தரிசு நிலம் மேம்படுத்தி இந்த அரசினால் வழங்கப்படும். அதற்கான தொடக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 3.3 நிலக் குத்தகை

வருவாய் நிலையாணை எண் 24(ஏ)—ன்கீழ் அரசு நிலங்கள், குறிப்பிட்ட கால வரையறைக்கு உட்பட்டு, தனி நபர்கள், தனியார் அமைப்புகள், நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. ஆண்டுக் குத்தகைத் தொகை, நில மதிப்பினை அடிப்படையாகக்கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது.



ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள நிலங்களுக்கு பின்வருமாறு குத்தகை நிர்ணயம் செய்யப்படுகிறது:—

| நோக்கம் | ஆண்டு குத்தகை வீதம் | தல வரி | தல மேல் வரி | மொத்தம் |
|---|---|---|---|---|
| வணிக நோக்கம் | 2 சதவீதம் | 2 சதவீதம் | 10 சதவீதம் | 14 சதவீதம் |
| வணிகமல்லாத நோக்கம் | 1 சதவீதம் | 1 சதவீதம் | 5 சதவீதம் | 7 சதவீதம் |

மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் உள்ள அரசு நிலங்களைக் குத்தகைக்கு வழங்கும்போது, வணிக நோக்கமற்ற நேர்வில், நில மதிப்பில் 7 சதவீதம் (கூடுதல் மேல் வரி உட்பட) தொகை ஆண்டுக் குத்தகையாகவும், வணிக நோக்கமாயின் நில மதிப்பில் 14 சதவீதம் (கூடுதல் மேல் வரி உட்பட) ஆண்டுக் குத்தகையாகவும் நிர்ணயம் செய்யப்பட்டு தற்போது வசூல் செய்யப்பட்டு வருகிறது.

### 3.4 நில மாற்றம்

அரசுப் புறம்போக்கு நிலங்கள், மைய அரசுத் துறைகளுக்கு, வருவாய் நிலையாணை எண் 23—ன்கீழ் சந்தை மதிப்பினை வசூலித்த பின்னர் நில மாற்றம் செய்யப்படுகின்றன. சென்னையில், துரித இரயில் போக்குவரத்து முதல் கட்டத் திட்டத்திற்கான நிலங்கள் இரயில்வே துறைக்கு நிலக் கிரயம் ஏதும் வசூலிக்கப்படாமல் நிலமாற்றம் செய்யப்பட்டுள்ளன. திருமயிலை—வேளச்சேரி வரையிலான இரண்டாம் கட்ட துரித இரயில் போக்குவரத்துத் திட்டத்திற்குத் தேவைப்படும் புறம்போக்கு நிலங்கள் குத்தகை அடிப்படையில் இரயில்வே துறைக்கு வழங்கப்பட்டு, ஆண்டு ஒன்றுக்கு ரூ.1000/— குத்தகைத் தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மாநில அரசுத் துறைகளுக்கு, வருவாய் நிலை ஆணை எண் 23(அ)—ன்கீழ், பள்ளிக் கட்டடங்கள், மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் போன்ற வணிக நோக்கமல்லாத பயன்பாட்டிற்காக நிலக் கிரயம் வசூலிக்கப்படாமல் நில மாற்றம் செய்யப்படுகிறது. வணிக நோக்கங்களுக்காக நிலங்கள் கோரப்படும்பொழுது, நில மாற்றம் செய்வதற்கு முன்பாக, நில மதிப்பு வசூலிக்கப்படுகிறது.

போக்குவரத்து, சுகாதாரம், கல்வி மற்றும் காவல் துறை போன்ற அரசுத் துறைகளின் பயன்பாட்டிற்கான ஆட்சேபனையற்ற, குறைந்தபட்ச அளவு அரசுப் புறம்போக்கு நிலங்களை நில மாற்றம்

செய்ய மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.
நில மாற்றம் எந்நோக்கத்திற்காகச் செய்யப்பட்டதோ, அவற்றிற்காக
நிலங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படாத நிலையில், அத்தகைய
நிலங்கள் மீளப் பெறப்பட்டு, தேவைப்படும் பிற துறைகளுக்கு ஒதுக்கீடு
செய்யப்படுகின்றன.

## 3.5 நில உரிமை மாற்றம்

பொது நோக்கங்களுக்காகவும், சமுதாய நலனை
முன்னேற்றுவதற்காகவும், வருவாய் நிலையாணை எண் 24–ன்கீழ் அரசுப்
புறம்போக்கு நிலங்கள், அரசு சார்பு நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள்,
பல்கலைக்கழகங்கள், தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் மற்றும் தொழில்
நிறுவனங்களுக்கு சில நிபந்தனைகளுக்குட்பட்டு, உரிமை மாற்றம்
செய்யப்படுகின்றன. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு,
குடிசைவாழ் மக்களுக்குக் குடியிருப்புகள் கட்டுவதற்காக நிலக்
கிரயமின்றியும், இதர திட்டங்களுக்கு மனை ஒன்றுக்கு பெயரளவு
நிலக்கிரயமாக ரூ.1,000/– வசூலித்த பின்னர், அரசு நிலங்கள் உரிமை
மாற்றம் செய்யப்படுகின்றன. தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வாரியத்திற்கும்
மற்றும் அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்பு கட்டுவதற்கு, தமிழ்நாடு
வீட்டு வசதி வாரியத்திற்கும் இலவசமாக நிலங்கள் உரிமை மாற்றம்
செய்யப்படுகின்றன. இதர பொதுத்துறை நிறுவனங்களுக்கும் மற்றும் இதர
காரியங்களுக்கும், சந்தை மதிப்பு அல்லது அதற்கு மேல் நிலக் கிரயம்
வசூலிக்கப்பட்டு, நிலம் உரிமை மாற்றம் செய்யப்படுகின்றது. அரசுப்
போக்குவரத்துக் கழகங்களுக்குப் பேருந்து முனையம் மற்றும் பயணியர்
பேருந்து நிறுத்துமிடங்கள் அமைக்கத் தேவைப்படும் நிலத்தின் சந்தை
மதிப்பில் 50 சதவீதம் நிலக் கிரயம் வசூலித்த பின்னர் உரிமை மாற்றம்
செய்யப்படுகிறது. உரிமை மாற்றம் நிபந்தனைகள் மீறப்படின் எந்தவிதமான
இழப்பீட்டுத் தொகையும் வழங்காமல் நிலங்கள் அரசால் மீளப்
பெறப்படுகின்றன.

## 3.6 ஆக்கிரமணங்களை அகற்றுதல்

அரசு வசம் ஏற்கெனவே உள்ள நிலங்களைத் தகுதி வாய்ந்த
ஏழைகளுக்கு ஒப்படை செய்வதற்கும், இதர வளர்ச்சித் திட்டங்கள் மற்றும்
பொது நோக்கங்களுக்கு வழங்குவதற்கும் வழி செய்யும் வகையில் அரசு
நிலங்களில் மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்புகள் தடுக்கப்பட வேண்டும்
என்பது அரசின் கொள்கையாகும்.



குறிப்பாக குறிக்கப்படாத அரசு
பொது நோக்கங்களுக்கு என ஆட்சேபகரமற்றவை எனக்
நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்கள், தன்மைக்கேற்ப,
கருதப்படுகின்றன. அத்தகைய ஆக்கிரமிப்புகள் வரன்முறைப்படுத்தப்படுவதற்கு
முன்னுரிமை அடிப்படையில், நீர்ப்பிடிப்பு, நீர்வழிப் புறம்போக்குகள்,
தகுதியுடையவை ஆகின்றன. கோயில் நிலங்கள், களம் போன்றவற்றில்
மேய்க்கால் நிலங்கள், மிகவும் ஆட்சேபனைக்குரியவை எனக்
உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட வேண்டும். தமிழ்நாடு ஆக்கிரமணச்
கருதப்படுவதால், அவை முன் அறிவிப்பின்பேரில் முறையற்ற
சட்டம், 1905–ன்படி, அகற்ற வருவாய்த் துறை, பொதுப் பணித் துறை,
ஆக்கிரமிப்புகளை நகராட்சி மற்றும் மாநகராட்சித் துறை
நெடுஞ்சாலைத் துறை, அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.
அலுவலர்களுக்கு

அரசு நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்களை ஒரு குறிப்பிட்ட
காலவரைக்குள் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக, மாவட்ட
ஆட்சியரைத் தலைவராகவும், மாவட்ட வருவாய் அலுவலரை
உறுப்பினர்–செயலராகவும் மற்றும் மாநகராட்சி ஆணையர்,
தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர்
(அ) அவரது சார்பாளர், மாவட்ட அளவிலான காவல் துறை அதிகாரி,
வனத் துறையின் மாவட்ட வன அலுவலர், பொதுப் பணித் துறையின்
மாவட்ட அளவிலான நீர்வள ஆதார செயற்பொறியாளர், நெடுஞ்சாலைத்
துறையின் கோட்டப் பொறியாளர், ஊரக வளர்ச்சித் துறையின் உதவி
இயக்குநர், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் மற்றும் நகராட்சி நிர்வாகத்
துறையின் மண்டல இயக்குநர் ஆகியோரை உறுப்பினர்களாகவும்
கொண்டு மாவட்ட அளவில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட அளவிலான இக்குழு, மாதம் ஒரு முறை கூடி
ஆக்கிரமணங்களை அகற்றுவது குறித்த செயல் திட்டத்தை வகுக்கும்.
இக்குழுவின் செயல்பாடுகள் மாநில அளவில், நில நிர்வாக ஆணையர்
அவர்களால் ஆய்வு செய்யப்படுகிறது.

சென்னை உயர் நீதிமன்றம் நீதிப் பேராணை எண்கள் 15673/2002
முதல் 15686/2002 வரையிலான 6–6–2002 நாளிட்ட தீர்ப்பில் நீர்நிலைப்
புறம்போக்குகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணியினை
கண்காணிப்பதற்கும், மாவட்டங்களில் செயல்படும் கண்காணிப்புக்
குழுவின் பணிகளை ஆய்வு செய்யும் நில நிர்வாக ஆணையரின்
ஆய்வறிக்கையை மூன்று மாதங்களுக்கொரு முறை கூர்ந்தாய்வு
செய்வதற்கும், அரசுப் புறம்போக்கு நிலங்களில் 20 ஆண்டுகளுக்கு மேலாக

உள்ள நிலையான கட்டடங்கள்மூலம் செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவது குறித்து முடிவு எடுப்பதற்கும் மற்றும் மாவட்டக் கண்காணிப்புக் குழுவில் ஆக்கிரமிப்புகளை அகற்றுவது குறித்து ஒருமனதாக முடிவெடுக்க இயலாத இனங்களை முடிவிற்கு வைக்கப்படும் இனங்களில் விவாதித்து ஒரு முடிவெடுப்பதற்காகவும் மாநில அளவில், தலைமைச் செயலாளர், அலுவல் சார்பு உறுப்பினர்களையும் (அரசுச் செயலாளர்கள்) சட்டமன்ற உறுப்பினர்களையும் மாநகராட்சிகளிலிருந்தும், நகராட்சிகளிலிருந்தும் அலுவல் சார்பற்ற உறுப்பினர்களைக் கொண்ட ஓர் உயர்மட்டக் குழுவினை அமைக்கலாமென ஒரு கொள்கை முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அந்த உத்தரவுப்படி மாநில அளவில் புதிதாக அமையவிருக்கும் உயர்மட்டக் குழு மாண்புமிகு அமைச்சர் (வருவாய் மற்றும் சட்டம்) அவர்களைத் தலைவராகக்கொண்டு, பின்வருமாறு மாநில அளவில் உள்ள ஆட்சேபனைக்குட்பட்ட ஆக்கிரமணங்களை அகற்றுவது குறித்து கண்காணிக்கும்:—

| | | |
|---|---|---|
| 1. | அமைச்சர் (வருவாய் மற்றும் சட்டம்) | தலைவர் |
| 2. | தலைமைச் செயலாளர் | உறுப்பினர் |
| 3. | செயலாளர், வருவாய்த் துறை | உறுப்பினர் |
| 4. | செயலாளர், சுற்றுப்புறச்சூழல் (ம) வனத் துறை | உறுப்பினர் |
| 5. | செயலாளர், ஊரக வளர்ச்சித் துறை | உறுப்பினர் |
| 6. | செயலாளர், நகராட்சி நிர்வாக துறை | உறுப்பினர் |
| 7. | செயலாளர், உள் துறை | உறுப்பினர் |
| 8. | செயலாளர், பொதுப் பணித் துறை | உறுப்பினர் |
| 9. | செயலாளர், நெடுஞ்சாலைத் துறை | உறுப்பினர் |
| 10. | நில நிர்வாக ஆணையர் | உறுப்பினர் |

**அலுவல் சார்பற்ற உறுப்பினர்கள்**

| | |
|---|---|
| சட்டமன்ற உறுப்பினர்கள் | 2 உறுப்பினர்கள் |
| 6 மாநகராட்சிகளிலிருந்து | 5 உறுப்பினர்கள் |
| மொத்த நகராட்சிகளில் | ஏதாவது இரண்டு நகராட்சிகளிலிருந்து தலா ஓர் உறுப்பினர் வீதம் 2 உறுப்பினர்கள் |



## 3.7 சென்னை உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதியரசர் திரு. கே.பி. சிவசுப்பிரமணியம் அவர்கள் தலைமையிலான விசாரணைக் குழு

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கற்பட்டு வட்டம், சிறுதாவூர் கிராமத்தில் ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்பட்ட நிலத்தை பிற இனத்தவர்கள அபகரித்துள்ளது குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இதுகுறித்து விசாரணை செய்வதற்காக, சென்னை உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதியரசர் திரு. கே.பி. சிவசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான அரசு ஆணை (நிலை) எண் 742, பொதுத் துறை, நாள் 27–7–2006–ல் பிறப்பிக்கப்பட்டது. இந்த விசாரணைக் குழு இரண்டு மாத காலத்திற்குள் இந்த இனத்தில் அறிக்கையை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## 3.8 மரப் பட்டா திட்டம்

"2சி பட்டா" என அழைக்கப்படும் மரப் பட்டா வழங்கும் திட்டம், மாநிலத்தில் பல்லாண்டுகளாகச் செயல்பாட்டில் உள்ளது. இத்திட்டத்தின்கீழ், அரசுப் புறம்போக்கு நிலங்களில் உள்ள மரங்களின் இலைகள், கனிகள் மற்றும் இதர பயன்படும் பொருட்களின் பலன்களை மட்டும் அனுபவிக்கும் உரிமை அருகில் உள்ள நில உரிமையாளருக்கோ அல்லது அம்மரங்களைப் பராமரிக்கக்கூடிய பிறருக்கோ வழங்கப்பட்டு வருகிறது. .ஆயினும், அரசு நிலங்கள் மற்றும் அவற்றில் நிற்கும் மரங்களின் மீதான உரிமை அரசிடமே தொடர்ந்து இருக்கும். மரப் பட்டா வழங்குவதில், நலிந்த பிரிவினைச் சார்ந்த பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

புதிய சமூக மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் வறுமைக்கோட்டிற்குக்கீழுள்ள ஊரக நிலமற்ற ஏழைப் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கி இத்திட்டத்தின்மூலம் பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. அரசு மற்றும் ஊராட்சிக்கு மரம் வளர்ப்பதற்கு ஒப்படைக்கப்பட்ட நிலங்களில் இரண்டு ஆண்டு காலத்திற்குள் அவர்கள் மரங்களை நடுதல் வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அவர்களுக்கு மரம் நடுவதற்காக உரிமம் வழங்கப்படுகிறது. உரிமம் வழங்கப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்குப்பின், மரம் நடப்பட்டுள்ளது சரிபார்க்கப்பட்டு, இவ்வுரிமைதாரர்களுக்கு மரப் பட்டா வழங்கப்படுகிறது.

## 3.9 நில எடுப்பு

[2006 ஆகஸ்ட் 8

1894 ஆம் ஆண்டு நில எடுப்புச் சட்டத்தின் (மையச் சட்டம் 1/1894) கீழ், மைய மற்றும் மாநில அரசுகளால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களுக்காக நிலங்கள் கையகப்படுத்தப்படுகின்றன. நில எடுப்புச் சட்டத்தின் சாதாரணப் பிரிவின்கீழ் நிலத்தைக் கையகப்படுத்தும் செயல்முறைகளை முழுமையாக முடிப்பதற்கு மூன்று ஆண்டு காலம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால், அவசரப் பிரிவு 17(1)-ன்கீழ் 180 நாட்களிலும், அவசரப் பிரிவு 17(2)—ன்கீழ் உடனடியாகவும் நிலங்களைக் கையகப்படுத்த இயலும். நில எடுப்பு நடவடிக்கைகளை விரைவாக முடிக்கக் காலவரையறைகளை நிர்ணயித்து, திட்ட மதிப்பீடு மற்றும் மறு ஆய்வு உத்தி முறைப் படிவம் (PERT CHART) அறிமுகப்படுத்தப்பட்டது.

### வரைவு தீர்வத்திற்கான நிதி அதிகார வரம்பு

நில எடுப்பு வரைவு தீர்வத்தினைப் பிரகடனம் செய்வதற்கான நிதி அதிகார வரம்பு கீழ்க்கண்டவாறு உள்ளது:—

| வ. எண் | அலுவலர்கள் | தற்போதுள்ள நிதி வரம்பு |
|---|---|---|
| 1 | வட்டாட்சியர் | ரூ.2,50,000/ வரை (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) |
| 2 | கோட்டாட்சியர்கள் / துணை ஆட்சியர் நிலையில் உள்ள அலுவலர்கள் | ரூ.2,50,000/-க்கு (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மேல் ரூ.7,50,000/-(ரூபாய் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) வரை |
| 3 | மாவட்ட ஆட்சியர் / கூடுதல் மாவட்ட ஆட்சியர் / மாவட்ட வருவாய் அலுவலர் | ரூ.7,50,000/-க்கு (ரூபாய் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மேல் ரூ.20,00,000/- (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) வரை |
| 4 | நில நிர்வாக ஆணையர் | ரூ.20,00,000/-க்கு (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) மேல் |



### மாவட்ட மற்றும் மாநில அளவிலான பேச்சுவார்த்தை குழுக்கள்

தனியார் பேச்சுவார்த்தைமூலம் நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு (i) சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரின் தலைமையின்கீழ் மாவட்ட அளவிலான பேச்சுவார்த்தைக் குழு மற்றும் (ii) நில நிர்வாக ஆணையரின் தலைமையின்கீழ் மாநில அளவிலான பேச்சுவார்த்தைக் குழு என இரண்டு குழுக்கள் உள்ளன. நில எடுப்புச் சட்டத்தின்படி நிலங்களைக் கையகப்படுத்துவதற்குப் பதிலாக, தனியார் பேச்சுவார்த்தைமூலம் ரூபாய் இருபது இலட்சம் வரை மதிப்புள்ள நிலங்களை நில உடைமைதாரர்களிடமிருந்து கையகப்படுத்துவதற்கு மாவட்ட அளவிலான குழுவிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ரூபாய் இருபது இலட்சம் தொகைக்கு மேல் மதிப்புள்ள நிலங்களை வாங்குவதற்கு மாநிலக் குழுவிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட மற்றும் மாநிலக் குழுக்களுக்கு நிலத்தின் சந்தை மதிப்பு அல்லது வழிகாட்டி மதிப்பு இவற்றில் எது குறைவோ அதில் 150 சதவீதம் விலையை ஒப்புக்கொள்ளப்பட்ட விலையாக ஏற்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. விலை மதிப்பு 150 விழுக்காட்டிற்கு மேற்படின் அரசின் ஒப்புதலுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட வேண்டும்.

### தொழில் துறை நோக்கங்களுக்காக நிலங்கள் கையகப்படுத்தல் சட்டம், 1997 (தமிழ்நாடு சட்டம் 10/1999)

தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் நிலங்களை விரைவாகக் கையகப்படுத்தும் பொருட்டு, தொழில் துறை நோக்கங்களுக்காக நிலங்களை கையகப்படுத்தும் சட்டம், 1997 (தமிழ்நாடு சட்டம் 10/1999) இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டமும் மற்றும் இச்சட்டத்திற்கான விதிகளும் 21—9—2001 முதல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

### தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறைச் சட்டம், 2001 (தமிழ்நாடு சட்டம் 34/2002)

நெடுஞ்சாலைத் துறைக்குத் தேவைப்படும் நிலங்களை விரைவாகக் கையகப்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறைச் சட்டம், 2001 (தமிழ்நாடு சட்டம் 34/2002) இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டமும் மற்றும் இச்சட்டத்திற்கான விதிகளும் 1—12—2002 முதல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

[2006 ஆகஸ்ட் 8

# அத்தியாயம் – 4

## நில அளவை மற்றும் நிலவரித் திட்டம்

### நில அளவை, நிலப் பதிவுருக்கள் மற்றும் பராமரிப்பு

இத்துறை ஆரம்ப நில அளவை, மறு நில அளவை மற்றும் துணை நில அளவைகளை தேவைக்கேற்ப கிராமங்கள் மற்றும் நகரங்களில் மேற்கொள்கிறது. நில வரைபடங்களைத் தயாரிப்பதும், அவற்றை பேணிக் காப்பதும் இத்துறையின் பொறுப்பாகும்.

### நத்தம் நில அளவை

இத்திட்டத்தின்கீழ் நில அளவைப் பணி செய்யப்பட்ட விவரங்கள்:—

(கிராம நத்தம் மற்றும் விவசாயத்திற்கு அல்லாமல் பிற உபயோகத்திற்காகப் பயன்படுத்தப்படும் விவசாய நிலங்கள்)

| மொத்த வட்டங்கள் | நத்தம் நில அளவைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது | நத்தம் நிலஅளவை முடிவுற்றது | நத்தம் நிலஅளவைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டியது |
|---|---|---|---|
| 206 | 198 | 4473 ச.கி.மீ. | 8 வட்டங்கள் * |

* எஞ்சியுள்ள 8 வட்டங்களில் நத்தம் நில அளவைத் திட்டப் பணி மேற்கொள்ளுதல் சம்பந்தமாக நில அளவை மற்றும் நில வரித் திட்டத் துறையால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

### நகர நில அளவை

இத்திட்டத்தின்கீழ் நில அளவை செய்யப்பட்ட விவரங்கள்:—

| வ. எண். | நகர நில அளவை பணி விவரம் | நகராட்சி | மாநகராட்சி |
|---|---|---|---|
| 1. | மொத்த நகரங்கள் | 152 | 6 |
| 2. | பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டவை | 85 | 6 |
| 3. | பணி முடிக்கப்பட்டவை | 82 | 5 |
| 4. | பணி முன்னேற்றத்தில் உள்ளவை | 3* | 1* |
| 5. | பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டியவை | 67 | |



2006 ஆகஸ்ட் 8]

1,772 சதுர கிலோ மீட்டருக்கான நில அளவைப் பணிகள் முடிவுற்றுள்ளது.

* ஜி.பி.எஸ். மற்றும் டோட்டல் ஸ்டேஷன் போன்ற நவீன நில அளவைக் கருவிகளைப் பயன்படுத்தி, மாநகரம் மற்றும் நகரங்களில் நில அளவைப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### நில பதிவுருக்களை கணினிமயமாக்கல்

இத்திட்டத்தின்கீழ், 201 வட்டங்களுக்குரிய கிராமப்புற நிரந்தர நில ஆவணங்களான 'அ' பதிவேடு மற்றும் சிட்டா ஆகியவை கணினியில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

நில ஆவணங்களை கைப்பிரதியாக வழங்குவதை அரசு தடை செய்துள்ளது. எனவே, கிராமப்புற பகுதிகளுக்கான நில அளவை ஆவண நகல்கள் கணினிமூலம் மட்டுமே பொது மக்களுக்கு வழங்கப்படுகின்றன. இதுவரை 58.85 இலட்சம் நில ஆவண நகல்கள் கணினிமூலமாக பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அடங்கல் விவரங்களை தனியார் நிறுவனங்கள்மூலம் கணினியில் பதிவுகள் செய்வதற்கு 'எல்காட்' நிறுவனத்தின்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு, பணி நடந்தேறி வருகிறது. அடங்கல் பதிவுகள் கணினிமயமாக்கப்பட்டதும் ஜமாபந்தி நடவடிக்கைகளும் கணினிமூலமே மேற்கொள்ளப்படும்.

### கணினி தொடுதிரை தகவல் மேடை–(Touch Screen Computer Kiosk)

நில ஆவண விவரங்களை பொதுமக்கள் வெளிப்படையாகவும், எளிதாகவும் அறிந்துகொள்ள ஏதுவாக, இதுவரை 127 வட்டாட்சியர் அலுவலகங்களில் கணினி தொடுதிரை தகவல் மேடைகள் நிறுவப்பட்டுள்ளன. எஞ்சிய 79 வட்டாட்சியர் அலுவலகங்களில் கணினி தொடுதிரை தகவல் மேடைகள் நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### புலப் படச் சுவடிகளை கணினிமயமாக்குதல்

தேசிய தகவல் மையம், புலப் படச் சுவடிகளை கணினிமயமாக்குவதற்குரிய **'கொலாப்லேண்ட்'** எனும் மென்பொருளை தயாரித்துள்ளது. இதனைக் கொண்டு புலப் படச் சுவடிகளை கணினிமயமாக்கும் முன்னோடித் திட்டம் பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2006 ஆகஸ்ட் 8

இந்தப் பணிக்கு மத்திய அரசு ரூ.800.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு வழங்கியுள்ளது. எஞ்சியுள்ள மாவட்டங்களில் புலப் படச் சுவடிகளை கணினிமயமாக்கும் பணி கட்டம் கட்டமாக விரைவில் தொடங்கப்படவுள்ளது.

### டிஜிட்டல் ஒப்புதல் அடிப்படையிலான கட்டமைப்பு (PKI) மற்றும் தகவல் களஞ்சியம் அமைத்தல்

நில ஆவண விவரங்கள் முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளதால், அவற்றின் பாதுகாப்பையும், அவற்றைக் கையாளுவதில் பொறுப்பினையும் உயர்த்தும் வகையில், வட்ட அலுவலகங்களிலுள்ள நில ஆவண விவரங்களை, மத்திய தகவல் சேமிப்பு களஞ்சியத்திற்குக் கொண்டு செல்லவும், வட்ட அலுவலகங்களில் உள்ள பணியாளர்கள் மத்திய தகவல் களஞ்சியத்தை இணையதளம் மூலம் தொடர்பு கொண்டு உபயோகிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், PKI–ஐ அடிப்படையாகக் கொண்டு தொடர்பு கொள்ளவும், மாற்றங்களை நிர்வகித்தலும் நடைமுறைக்குக் கொண்டு வரப்படவுள்ளது. இதன்மூலம் பல மடங்கு நில ஆவணங்களை எளிதாக கையாள முடிவதுடன் அவற்றை கையாள்வோருக்கான பொறுப்பினை நிர்ணயம் செய்யவும் இயலும். டிஜிட்டல் ஒப்புதல் அடிப்படையிலான இந்தக் கட்டமைப்பின் (PKI) மூலம் நிலஅளவை நகல்களை ஒப்புதல் செய்ய வேண்டிய நிலை (கையினால் ஒப்பமிட்டு அலுவலக முத்திரை பதித்தல்) தவிர்க்கப்படுவதுடன் ஆவணங்களின் பாதுகாப்பும் உறுதி செய்யப்படுகிறது. மேலும், இதனால் இணையதளத்தின்மூலம் நில ஆவணங்களைப் பெற வழிவகை செய்யப்படுகிறது.

இந்தத் திட்டத்தினை செயல்படுத்த நிதி ஒதுக்கீடு வழங்கக் கேட்டு, மத்திய அரசுக்குப் பிரேரணை அனுப்பப்பட்டு, நிதி ஒதுக்கீடு எதிர்நோக்கப்படுகிறது.

### பெரம்பலூர் முன்னோடித் திட்டம்

அரியலூர் மற்றும் பெரம்பலூர் வட்டங்களில் ஒரே வளாகத்தில் அமையப் பெற்றுள்ள வட்டாட்சியர் அலுவலகமும், சார் பதிவாளர் அலுவலகமும் கணினிமூலம் இணைக்கப்பட்டுள்ளன. கிராம அளவிலான இணைப்பினை ஏற்படுத்துவதற்குரிய மென்பொருளை தேசிய தகவல் மையம் தயாரித்துள்ளது. இதனைக் கொண்டு கிராம அளவில் டயல் அப் இணைப்பை ஏற்படுத்த பரிட்சார்த்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.



2006 ஆகஸ்ட் 8]

### வருவாய் நிர்வாகத்தினை வலுப்படுத்துதல் மற்றும் நிலப் பதிவுருக்களை மேம்படுத்தும் திட்டம்

*(மத்திய மற்றும் மாநில அரசுகளால் 50:50 எனும் விகிதாசாரத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டவை)*

### கிராம வரைபடங்களை ஸ்கேன் செய்தல்

அனைத்து மாவட்டங்களின் கிராம வரைபடங்கள் ஸ்கேன் செய்து முடிக்கப்பட்டுள்ளன. மாநில ஆவண காப்பகத்தில் உள்ள நில அளவை மற்றும் நிலவரித் திட்ட ஆவணங்களை ஸ்கேன் செய்யும் பணி விரைவில் தொடங்கப்படவுள்ளது.

### நவீன தொழில்நுட்ப கருவிகளைக் கொண்டு நில அளவை மேற்கொள்ளுதல்

பூகோள நிலைப்புள்ளிகளுடன் கூடிய துல்லியமான நில ஆவணங்களைத் தயாரிக்க நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தும் பொருட்டு, இத்துறையில் நவீன நில அளவைக் கருவிகளான ஜி.பி.எஸ். மற்றும் டோட்டல் ஸ்டேஷன் ஆகியவற்றைக் கொண்டு டிஜிட்டல் முறையில் நில அளவை மேற்கொள்ளப்படுகிறது. முதற்கட்டமாக, இந்நில அளவை ஒரு கிராமத்தில் (கோனாதி கிராமம்—செங்கல்பட்டு வட்டம்) முன்னோடித் திட்டமாக மேற்கொள்ளப்பட்டு, வெற்றிகரமாக முடிக்கப்பட்டது. இத்திட்டத்தை மத்திய அரசு அங்கீகரித்து, மாநிலம் முழுவதும் நவீன நில அளவைக் கருவிகள்மூலம் மறு நில அளவை மேற்கொள்ள, 50:50 என்ற விகிதாசாரத்தில் முதல் தவணையாக ரூ.400.00 இலட்சம் நிதி வழங்கியுள்ளது. மறு நில அளவைப் பணி கட்டம் கட்டமாக விரைவில் தொடங்கப்பட உள்ளது.

### நில அளவைப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் (சி–ஸ்டார்)

இத்துறையில் நவீன தொழில்நுட்ப யுக்திகளும், நவீன தொழில்நுட்பக் கருவிகளும் அறிமுகப்படுத்தப்படுவதால், பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் பொருட்டு, அண்ணா பல்கலைக்கழகத்தின் ஒத்துழைப்புடன் உயர் தொழில்நுட்பத்துடன்கூடிய பயிற்சி நிலையம் சென்னையில் அமைக்கப்பட்டுள்ளது.

### மாநில பொது எல்லை கூட்டாய்வு

1. 1956 ஆம் ஆண்டு மொழிவாரி மாநிலங்கள் புனரமைக்கப்பட்டதன் தொடர்ச்சியாக, தமிழ்நாட்டிற்கும், பின்வரும் அண்டை மாநிலங்களுக்கும் இடையே புதிதாக எல்லை நிர்ணயம் செய்யப்பட்டது கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(i) தமிழ்நாடு—கேரளா (ii) தமிழ்நாடு—கர்நாடகா

(iii) தமிழ்நாடு—பாண்டிச்சேரி

2. தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேசத்திற்கு இடையிலான மாநில பொது எல்லைக் கூட்டாய்வு மேற்கொள்வது குறித்து ஆந்திரப் பிரதேச அரசின் ஆணை எதிர்பார்க்கப்படுகிறது.

## 4.2 நில வரித் திட்டம்

சுதந்திரம் அடைந்த பின்னர், அரசு பெருமளவில் வேளாண்மைச் சீர்திருத்தத்தினை அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன் பல்வேறு நிலவரித் திட்ட சட்டங்களை இயற்றி அரசுக்கும் ரயத்துக்களுக்கும் இடையே இருந்த இடைத்தரகர்களை நீக்கி அந்த எஸ்டேட்டுகளில் ரயத்துவாரி நில வரித் திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. அனைத்து நிலவரித் திட்ட சட்டங்களின்கீழ் ரயத்துவாரி நில வரித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட வேண்டிய கிராமங்களில், தமிழ்நாடு சட்டம், 26/1963, 30/1963, 24/1969 ஆகியவற்றின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு, நீதிமன்ற வழக்குகளுக்குட்பட்ட கிராமங்களைத் தவிர, இதர கிராமங்களில் நிலவரித் திட்டம் முடிக்கப்பட்டுவிட்டது.

தமிழ்நாடு சட்டம், 26/1963 மற்றும் 30/1963 ஆகியவற்றின்கீழ் பணி நிலுவையிலுள்ள 16 கிராமங்களில், 3 கிராமங்களில் நில வரித் திட்டப் பணிகளும், 2 கிராமங்களில் நில அளவைப் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாடு சட்டம் 24/1969—ன்கீழ் அரசால் எடுத்துக்கொள்ளப்பட்ட 324.10 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள ஜென்மம் நிலங்களில் 146.18 சதுர கிலோ மீட்டர் பரப்பு நிலங்களுக்கு நில வரித் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. சில ஜென்மிகள் மற்றும் நிலக் குத்தகைதாரர்கள் புது தில்லி உச்ச நீதிமன்றத்தின்முன் உரிமையியல் மேல்முறையீடுகள் தாக்கல் செய்தனர். அவர்களில் சிலர் மேல்முறையீட்டு மனுக்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டதனால், அவர்களது மனுக்களைத் தள்ளுபடி செய்தும், அவர்களது கோரிக்கைகள் குறித்து மேற்படி சட்டத்தின் பிரிவு 9 அல்லது 17—ல் தக்க ஆணை பிறப்பிக்கும்படியும் உச்ச நீதிமன்றம் அரசுக்கு உத்தரவிட்டது. மேலும் சில உரிமையியல் மேல்முறையீடுகள் மற்றும் ஒரு நீதிப் பேராணை மனு தொடர்பான வழக்குகளை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 9—வது இணைப்பில் சேர்க்கப்பட்டதன் செலலித்தக்க தன்மையினைப் பரிசீலிக்க 9 நீதிபதிகள் அடங்கிய நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தது. மேலும்,



நிலாம்பூர், கோவிலகம் என்ற ஜென்மியால் தாக்கல் செய்யப்பட்ட மற்றொரு நீதிப் பேராணை மனு எண் 408/2003—ல் உச்ச நீதிமன்றத்தின்முன் நிலுவையிலுள்ளது. நிலுவையிலுள்ள நில வரித் திட்டப் பணிகளை செயல்படுத்த மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் ஒரு நில வரித் திட்ட அலுவலர் உதகமண்டலத்தில் நியமிக்கப்பட்டுள்ளார்.

அரசாணை எண் 1971, வருவாய்த் துறை, நாள் 14—10—1988—ன்படி, நத்தம் நில வரித் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 10 வட்டங்களில் மட்டும் இப்பணி நிலுவையிலுள்ளது.

அரசாணை எண் 113, வருவாய்த் துறை, நாள் 2—2—1995 மற்றும் அரசு கடித எண் 67864/எஸ்.எஸ். II(1)/ 98—21 & 22, நாள் 5—2—2004 ஆகியவற்றின்படி 67 மலைக் கிராமங்களில் வருவாய்ப் பின் தொடர் பணி தொடங்கப்பட்டு, 58 கிராமங்களில் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 9 கிராமங்களில் பணி நடைபெற்று வருகிறது.

வக்ஃபு சொத்துக்களை கணக்கெடுக்கும் பணி நடைபெற்று வருகிறது.

[2006 ஆகஸ்ட் 8

# அத்தியாயம் – 5
# நிலச் சீர்திருத்தம்

வேளாண்மை நில உடைமைகளில் ஏற்றத்தாழ்வுகளைப் போக்கிட நில உடைமைக்கு ஓர் உச்சவரம்பு நிர்ணயித்து, உச்சவரம்பிற்கு மேல் உபரியாக உள்ள நிலங்களை நிலமற்ற ஏழைகளுக்கு வழங்கும் நோக்கத்திற்காக 1961 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 58/61) இயற்றப்பட்டது.

ஆரம்பத்தில் ஐந்து உறுப்பினர்கள் கொண்ட குடும்பத்திற்கு 30 தர ஏக்கரும் (Standard Acres) ஒவ்வொரு கூடுதல் நபருக்கும் கூடுதலாக ஐந்து தர ஏக்கரும், ஆனால் ஒரு குடும்பத்திற்கு மொத்தம் 60 தர ஏக்கர் என உச்சவரம்பாக நிர்ணயிக்கப்பட்டது. மேலும் குடும்பத்தின் பெண் உறுப்பினர்களுக்கு 10 தர ஏக்கர் சீதன நிலம் உச்சவரம்பு அளிக்கப்பட்டது. எனவே, அதிக நபர்கள் பயனடைய கூடுதல் உபரி நிலம் பெறும் நோக்கத்துடன் 1970 ஆம் ஆண்டு, நிலச் சீர்திருத்தச் சட்டம் 58/61—க்கு ஓர் சட்டத் திருத்தம் 15—2—1970 முதல் கொண்டு வரப்பெற்றது (தமிழ்நாடு சட்டம் 17/70). இதன்படி 5 நபர்கள் கொண்ட ஒரு குடும்பம் வைத்திருக்கக்கூடிய நில உச்சவரம்பு 30 தர ஏக்கரிலிருந்து 15 தர ஏக்கராக குறைக்கப்பட்டது.

மேலும், முதன்மைச் சட்டத்தில் (58/61) ஒரு குடும்பத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட ஒட்டுமொத்த உச்சவரம்பான 60 தர ஏக்கர் அளவை, தமிழ்நாடு சட்டம் 20/72—ன்மூலம் 40 தர ஏக்கராக குறைத்து, பின்னர் இதனையும் 30 தர ஏக்கராக தமிழ்நாடு சட்டம் 39/72—ன்மூலம் குறைக்கப்பட்டது. இந்தச் சட்டம் 1—3—1972 முதல் நடைமுறைக்கு வந்தது. இந்தச் சட்டம் பல்வேறு மாறுதல்களுக்கு உட்பட்டு, முன்னர் அளிக்கப்பட்ட உச்சவரம்பு பரப்பு மற்றும் விதிவிலக்குகள் முறைப்படுத்தப்பட்டு, இன்றைய தேதியில் பின்வருமாறு உச்சவரம்பு அமலில் உள்ளது:—



2006 ஆகஸ்ட் 8]

| | | |
|---|---|---|
| 1. | ஐந்து நபர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு | 15 தர ஏக்கர் |
| | i) ஒவ்வொரு கூடுதல் உறுப்பினருக்கு | 5 தர ஏக்கர் |
| | ii) மொத்த உச்சவரம்பு | 30 தர ஏக்கர் |
| 2. | 1–3–1972–ல் இருந்த தர்மஸ்தாபன நம்பகங்களுக்கு (Charitable Trust) | 5 தர ஏக்கர் |
| 3. | 1–3–1972–க்கு பிறகு எந்த நம்பகமும் விவசாய நிலங்கள் பெறுவதற்கு தடை செய்யப்பட்டுள்ளது | – |

1961 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டம் மற்றும் திருத்தப்பட்ட சட்டத்தின்கீழ் அரசு கையகப்படுத்தும் மிகை நிலங்கள், 1965 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (மிகை நில விநியோகம்) விதிகளின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் தகுதியுடைய நிலமற்ற ஏழைகளுக்கு அதிகபட்சம் 3 ஏக்கர் புன்செய் அல்லது 1.50 ஏக்கர் நன்செய் என்ற அளவில் ஒப்படை செய்யப்படுகிறது.

மிகை நிலமென அறிவிப்பு செய்யப்பட்ட மொத்த பரப்பின் விவரம், அதில் ஒப்படை செய்யப்பட்டது, பயனாளிகளின் எண்ணிக்கை ஆதிதிராவிடர்/பழங்குடி வகுப்பினைச் சார்ந்த பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் நிலச் சீர்திருத்தச் சட்டம் தோற்றுவிக்கப்பட்ட நாளிலிருந்து 30—6—2006 வரையில் நீதிமன்ற வழக்குகளுக்கு உட்பட்ட நிலப்பரப்பு மற்றும் ஒப்படை வழங்கப்படவுள்ள மீதமுள்ள நிலப்பரப்பு ஆகிய விவரங்கள் பின்வருமாறு:—

மிகை நிலமென அறிவிக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு, ஒப்படை செய்யப்பட்ட நிலப்பரப்பு மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை குறித்த விவரப் பட்டியல்

| ஆண்டு | உபரியாக அறிவிக்கப்பட்ட நிலம் | ஒப்படை செய்யப்பட்ட நிலம் | பயனடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| | | (ஏக்கரில்) | |
| 1961 – 1970 | 19,028 | 14,074 | 7,978 |
| 1971 – 1980 | 1,08,132 | 70,730 | 51,244 |

[2006 ஆகஸ்ட் 8

| | | | |
|---|---|---|---|
| 1981 – 1990 | 50,834 | 59,647 | 53,494 |
| 1991 – 1996 | 15,093 | 34,953 | 21,297 |
| 1997 – 2000 | 6,552 | 8,824 | 7,098 |
| 2000 – 2001 | 604 | 1,635 | 1,236 |
| 2001 – 2002 | 677 | 1,612 | 1,336 |
| 2002 – 2003 | 1,432 | 1,887 | 1,548 |
| 2003 – 2004 | 2,144 | 1,768 | 1,442 |
| 2004 – 2005 | 861 | 1,524 | 1,047 |
| 2005 – 2006 | 1,489 | 1,580 | 1,066 |
| மொத்தம் | 2,06,846 | (*)1,98,234 | 1,48,786 |

(*) 1965 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (மிகை நில விநியோகம்) விதிகளின் விதி 13–இன்கீழ் பொது நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலமும் (10,185 ஏக்கர்) அடங்கியது.

**உபரிநிலம் ஒப்படைப் பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கையை குறிக்கும் விவரப் பட்டியல்**

| பயனடைந்தோர் (இனவாரியாக) | நபர்கள் | ஒப்படை செய்யப்பட்ட பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|
| ஆதிதிராவிடர் | 65,803 | 70,571 |
| பழங்குடியினர் | 236 | 320 |
| மற்றவர்கள் | 82,747 | 1,17,158 |
| மொத்தம் | 1,48,786 | 1,88,049 |



2006 ஆகஸ்ட் 8]

ஒப்படை வழங்கப்பட வேண்டிய மீதமுள்ள நிலங்கள் மற்றும் நீதிமன்ற வழக்குகளுக்குட்பட்ட நிலப் பரப்புகளைக் காண்பிக்கும் விவரப் பட்டியல்:—

| வ. எண் | விவரங்கள் | பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1. | மிகை நிலமாக அறிவிக்கப்பட்ட நிலப் பரப்பு | 2,06,860 |
| 2. | நிலமற்ற ஏழைகளுக்கு ஒப்படை செய்யப்பட்ட நிலப் பரப்பு | 1,88,071 |
| 3. | 1965 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (மிகை நில விநியோகம்) விதிகளின் விதி 13–இன்கீழ் பொது நலனுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலப் பரப்பு | 10,185 |
| 4. | நிலுவை | 8,604 |
| 5. | உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றம், நில ஆணையர், நிலத் தீர்ப்பாயம் மற்றும் சார் நீதிமன்றங்கள் ஆகியவை பிறப்பித்துள்ள தடையாணைக்குட்பட்ட பரப்பு | 8,594 |
| 6. | ஒப்படை செய்யப்பட வேண்டிய பரப்பு | 10 |

2005–2006 ஆம் நிதியாண்டில் 1,500 ஏக்கர் மிகை நிலங்கள் தகுதியுள்ள நபர்களுக்கு ஒப்படை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதில் 31–3–2006 வரை 1,066 நபர்களுக்கு 1,580 ஏக்கர் மிகை நிலங்கள் ஒப்படை செய்யப்பட்டுள்ளன. இதில் 268 ஆதி திராவிட பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட 420 ஏக்கர் நிலமும் அடங்கும்.

## 5.2 குடிவாரச் சட்டங்கள்

### 1955 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 25/55)

இச்சட்டம், குத்தகைதாரர்களின் குத்தகை பாக்கி நிலுவை தவிர வேறு காரணங்களுக்காக அவர்கள் குத்தகை சாகுபடி செய்யும் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவதைத் தடை செய்து பாதுகாப்பு அளிக்கிறது. வறட்சி மற்றும் வெள்ளம் போன்ற இயற்கை சீற்றங்களினால் குத்தகைதாரர்கள் பாதிக்கப்படும்பொழுது, குத்தகை பாக்கித் தொகையை வசூலிப்பதைத் தள்ளி வைத்து, தனிச் சட்டத்தின்மூலம் அவர்களுக்கு அவ்வப்பொழுது நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

### 1956 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய குத்தகை செலுத்துதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 24/56)

இச்சட்டம் தற்போது ஆண்டொன்றிற்கு மொத்த விளைச்சலில் 25 விழுக்காடு மட்டும் நிலச் சொந்தக்காரருக்கோ அல்லது நம்பகங்களுக்கோ (Trusts) பயிரிடும் குத்தகைதாரர்களால் செலுத்தப்பட வேண்டிய குத்தகைத் தொகையை நிர்ணயிக்க வகை செய்கிறது. குத்தகையை பணமாகவோ, விளை பொருளாகவோ செலுத்தலாம். ஆனால், நில உரிமையாளர்கள் செலுத்த வேண்டிய நில வரி தவிர, பயிரிடுவதற்கான மற்ற செலவுகள் முழுவதையும் குத்தகைதாரர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

1961 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பொது நம்பகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிர்வாகம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம 57/61)

இச்சட்டத்தில் நம்பகங்கள் (Trusts) தங்களுடைய சொந்த சாகுபடிக்கு அதிகபட்சமாக 20 தர ஏக்கர் நிலம் மட்டும் வைத்துக்கொள்ளவும், அதற்கு மேலுள்ள நிலத்தை கட்டாயமாக பிறருக்கு குத்தகைக்கு விடவும் வகை செயயப்பட்டுள்ளது.

### 1969 ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண்மை தொழிலாளர்கள் நியாய ஊதியங்கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 19/69)

இச்சட்டத்தில் நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் விவசாயத் தொழிலாளர்களுக்கு பல்வேறுபட்ட விவசாயப் பணிகளுக்காக நியாய ஊதியம் நாள் ஒன்றுக்கு 6 மணி நேர வேலைக்கு ரூ.54/– முதல் ரூ.100/– வரை ஆண் தொழிலாளர்களுக்கும், 5 மணி நேர வேலைக்கு ரூ.45/– பெண் தொழிலாளர்களுக்கும் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

### 1969 ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் (குத்தகை உரிமைகள் ஆவணம்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/69)

இச்சட்டத்தில் பயிரிடும் குத்தகைதாரர்கள் தங்கள் உரிமைகளைப் பாதுகாக்க தங்களைக் குத்தகைதாரர்களாக பதிவு செய்துகொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. வருவாய் வட்டாட்சியர்கள் இச்சட்டத்தின்கீழ் பதிவு அலுவலர்களாக செயல்படுவர். அவர்களுக்கு உதவிபுரிய அலுவல் சார்பற்றவர்களைக் கொண்ட ஆலோசனைக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. 30–6–2006 நிலவரப்படி, 2,59,306 நபர்கள் குத்தகைதாரர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.



### 1971 ஆம் ஆண்டைய தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை வழங்குதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 40/71) திருத்தியவாறு

இச்சட்டத்தில் 19–6–1971 அன்று சொந்த வீட்டுமனை இல்லாத, ஆனால், பிறர் நிலங்களில் குடியிருப்பு அமைத்து அனுபவித்து வருபவர்களுக்குக் குடியிருப்பு உரிமை வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. 1976 ஆம் ஆண்டைய தமிழ்நாடு கிராமப்புற கைவினைஞர்கள் (குடியிருப்பு அனுபோக உரிமை வழங்குதல்) சட்டத்தின் (சட்டம் 38/76)படி 1–7–1975–ல் குடியிருப்புகளை அனுபோகத்தில் வைத்துள்ள சொந்த வீட்டுமனை இல்லாத கிராமப்புற கைவினைஞர்களும் மேற்கண்ட பலன்களைப் பெற வகை செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட இரு சட்டங்களின்கீழும் 1–4–1990 வரை நீட்டிக்க சட்டம் 39/90–இன்கீழ் வகை செய்யப்பட்டுள்ளது. 30–6–2006 வரையில் உடைமை உரிமை வழங்கப் பெற்ற குடியிருப்பு அனுபோகதாரர்களின் மொத்த எண்ணிக்கை விவரங்கள் பின்வருமாறு:—

### 30–06–2006 ஆம் நாள் வரையில் நில உடைமை உரிமை வழங்கப் பெற்ற குடியிருப்பு அனுபோகதாரர்களின் மொத்த எண்ணிக்கை குறித்த விவரப் பட்டியல்:–

| வரிசை எண் | இனம் | நபர்களின் எண்ணிக்கை | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | சட்டம் 40/71 | சட்டம் 38/76 | சட்டம் 39/90 | |
| 1. | ஆதிதிராவிடர் | 1,00,127 | 62 | 1,038 | 1,01,227 |
| 2. | பழங்குடியினர் | 2,317 | 17 | 412 | 2,746 |
| 3. | ஏனையோர் | 80,017 | 363 | 288 | 80,668 |
| | மொத்தம் | 1,82,461 | 442 | 1,738 | 1,84,641 |

### 5.3 நிலத் தீர்ப்பாயங்கள்

- சார்பு நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள நிலச் சீர்திருத்த வழக்குகளை முடிவு செய்வதற்காக 1980 ஆம் ஆண்டில் மாவட்ட வருவாய் அலுவலரின் தலைமையில் நிலத் தீர்ப்பாயங்கள் ஏற்படுத்தப்பட்டன. தற்போது மாநிலம் முழுவதற்குமாக ஒரு நிலத் தீர்ப்பாயம் மட்டும் சென்னையில் இயங்கி வருகிறது.

தற்போது மாநிலம் முழுவதும் கடலூர், மயிலாடுதுறை, திருவாரூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் 6 வருவாய் நீதிமன்றங்கள் தனித் துணை ஆட்சியர்களின்கீழ் செயல்பட்டு வருகின்றன. வருவாய் நீதிமன்றத் தனித் துணை ஆட்சியர்கள் 1969 ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் (குத்தகை உரிமை ஆவணச்) சட்டத்தின்கீழான வட்டாட்சியர்களின் ஆணைக்கு எதிராக தொடரப்படும் வழக்கு மனுக்களை விசாரணை செய்யும் பணியில் மேல்முறையீட்டு அதிகாரிகளாகச் செயல்படுகின்றனர். மேலும், மேலே குறிப்பிட்டுள்ள பல்வேறு குடிவாரச் சட்டங்களையும் அவர்கள் கவனித்து வருகின்றனர்.

## 5.4 தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியம்

அரசு ஆணை எண் 600, வருவாய்த் துறை, நாள் 27–11–2000–ன்படி விவசாயத் தொழில்ாளர்கள் மற்றும் ஏழை விவசாயிகள் ஆகியோரின் நலனுக்காகத் தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியம் அமைக்கப்பட்டது. மேலும், தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டம் 2001 என்ற திட்டத்தினை அறிவித்து, இத்திட்டம் தமிழ்நாடு அரசிதழ் எண் 109, நாள் 9–2–2001–ல் பிரசுரம் செய்யப்பட்டது. இந்தத் திட்டத்தின்கீழ் 7,32,130 நபர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து பங்களிப்புத் தொகையாக ரூ.7,32,13,000/– பெறப்பட்டது. மேலும், ரூ.68.75 இலட்சம், வேலை வழங்குவோரின் (Employers) பங்களிப்புத் தொகையாக பெறப்பட்டது. (அதாவது சர்க்கரை ஆலைகளிடமிருந்து). மேலும், ரூ.30.98 இலட்சம், உறுப்பினர்கள் புதுப்பித்தல் தொகையாக பெறப்பட்டது.

பின்னர், தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் என்ற ஒரு புதிய திட்டத்தினை முந்தைய அரசு அறிவித்தது. மேலும், விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தினை ரத்து செய்து அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டம் 2001–ஐயும் ரத்து செய்தது. இந்த அரசு, இந்த நல வாரியத்தை மீண்டும் ஏற்படுத்தி, தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டம் மேலும் செம்மைப்படுத்தப்பட்டு, சிறப்பாக செயல்படுத்தப்பட முடிவு செய்து, இதற்கான சட்டத்தை இயற்ற





நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. மேற்படி திட்டத்தின்படி, அதில் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு பின்வருமாறு உதவிகள் வழங்கப்படும்:—

| வ எண் | நிவாரணம் அல்லது உதவி | தொகை ரூபாயில் | | | |
|---|---|---|---|---|---|
| 1. | விபத்து நிவாரணம் | | | | |
| | அ) விபத்தினால் மரணம் | 1,00,000 | | | |
| | ஆ) இரண்டு கைகள் இழப்பு | 1,00,000 | | | |
| | இ) இரண்டு கால்கள் இழப்பு | 1,00,000 | | | |
| | ஈ) ஒரு கை மற்றும் ஒரு கால் இழப்பு | 1,00,000 | | | |
| | உ) இரண்டு கண்களிலும் முற்றிலும் பார்வை இழப்பு | 1,00,000 | | | |
| | ஊ) ஒரு கை அல்லது ஒரு கால் இழப்பு | 50,000 | | | |
| | எ) மேலே கண்ட இனங்களில் குறிப்பிடப்படாத வேறு கடுமையான காயம் ஏற்பட்டு உடல் உறுப்பு இழப்பு | 20,000 | | | |
| 2. | இயற்கை மரணம் | 10,000 | | | |
| 3. | ஈமச் சடங்கிற்கான உதவித் தொகை | 2,500 | | | |
| 4. | உறுப்பினரின் மகன் அல்லது மகள் கல்வி உதவித்தொகை | விடுதியில் தங்காதோர் | | விடுதியில் தங்கி படிப்பவர் | |
| | | மாணவர் | மாணவியர் | மாணவர் | மாணவியர் |
| | அ) பத்தாம் வகுப்பு தேர்ச்சி | 1,250 | 1,500 | ... | ... |
| | ஆ) பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி | 1,750 | 2,000 | ... | ... |
| | இ) தொழிற் பயிற்சி (I.T.I.) மற்றும் பல்தொழில் நுட்ப பயிற்சி (Polytechnic) (ஆண்டு ஒன்றிற்கு) | 1,250 | 1,750 | 1,450 | 1,950 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஈ) இளங்கலை பட்டப் படிப்பு (ஆண்டு ஒன்றிற்கு) | 1,750 | 2,250 | 2,000 | 2,500 |
| | உ) முதுகலை பட்டப் படிப்பு (ஆண்டு ஒன்றிற்கு) | 2,250 | 2,750 | 3,250 | 3,750 |
| | ஊ) சட்டம், பொறியியல், மருத்துவம் போன்ற தொழில் கல்விகள் இளங்கலை (ஆண்டு ஒன்றிற்கு) | 2,250 | 2,750 | 4,250 | 4,750 |
| | எ) முதுகலை தொழில் கல்விகள் (ஆண்டு ஒன்றிற்கு) | 4,250 | 4,750 | 6,250 | 6,750 |
| 5. | திருமண உதவி | | | | |
| | அ) உறுப்பினரின் திருமணம்<br>(i) ஆண்<br>(ii) பெண் | 3,000<br>5,000 | | | |
| | ஆ) உறுப்பினரின் மகன் அல்லது மகள் திருமணம்<br>(i) ஆண்<br>(ii) பெண் | 3,000<br>5,000 | | | |
| 6. | மகப்பேறு / கருச் சிதைவு / கருக்கலைப்பு உதவித் தொகை | | | | |
| | (i) மகப்பேறு | 6,000 (மாதம் ஒன்றிற்கு ரூ.1,000 வீதம் 6 மாதங்கள்) | | | |
| | (ii) கருச்சிதைவு | 3,000 | | | |
| | (iii) கருக்கலைப்பு | 3,000 | | | |
| 7. | முதியோர் ஓய்வூதியம் (மாதம் ஒன்றுக்கு) | 400 | | | |

## 5.5 தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978

நகர்ப்புற கூட்டுப் பகுதிகளில் நகர்ப்புற நிலம் ஒரு சிலரிடம் குவிந்து கிடந்து, அவர்கள் இலாப நோக்கத்துடன் வாங்குவது மற்றும் விற்பதை தடுத்து நிறுத்தும் வகையில், நகர்ப்புற வெற்று நிலங்களுக்கான உச்சவரம்பு நிர்ணயிக்கும் நோக்குடன் (மத்திய அரசு சட்டம் 24/1976—ன்





அடிப்படையில்) தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1978 இயற்றப்பட்டது. பிறகு 1978—இல் திருத்தியமைக்கப்பட்டு, 3—8—1976 முதல் இச்சட்டம் அமலாக்கம் செய்யப்பட்டது.

இச்சட்டம் சென்னை, மதுரை, கோவை, திருச்சி, சேலம் மற்றும் திருநெல்வேலி நகர்ப்புற கூட்டுப் பகுதிகளில் அமல்படுத்தப்பட்டது.

தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1978, நீக்கறவு சட்டம் 1999 (தமிழ்நாடு சட்டம் 20/99)—இன்மூலமாக 16—6—1999 முதல் நீக்கறவு செய்யப்பட்டது. முதன்மை சட்டத்தின்கீழ் ஏற்கெனவே கையகப்படுத்தப்பட்டு 16—6—1999—க்கு முன்னர் அரசு வசம் சுவாதீனம் பெறப்பட்ட நிலங்களுக்கு இந்நீக்கறவு சட்டம் பொருந்தாது. நீக்கறவு சட்டம் அமலுக்கு வந்த பிறகு கையகப்படுத்தப்பட்ட மிகை வெற்று நிலங்களை தீர்வு செய்வதற்கான வழிமுறைகள் அரசு ஆணை எண் 353, வருவாய்த் துறை, நாள் 30—6—2000—இல் வெளியிடப்பட்டன.

இது தவிர, இதுபோன்ற நகர்ப்புற மிகை வெற்று நிலங்களை நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழான நடவடிக்கைகள் பற்றிய விவரம் அறியாது குடியிருப்பு வீடு கட்டுவதற்காக வாங்கியிருப்போரின் துயர் துடைப்பதற்காக இந்நிலங்களை முறைப்படுத்துவது குறித்து அரசு ஆய்வு செய்து வருகிறது.

### நகர்ப்புற நில உச்சவரம்பு

முதன்மைச் சட்டத்தின்கீழ் இதுவரை கையகப்படுத்தப்பட்ட மிகை வெற்று நிலங்களில் 98 ஹெக்டேர் நிலம் நீதிமன்ற நடவடிக்கையில் உள்ளது. 339 ஹெக்டேர் நிலத்தினை அரசுத் துறை, அரசு கழகங்கள், பொதுத் துறை நிறுவனம், வீட்டுவசதி வாரியம், குடிசை மாற்று வாரியம் மற்றும் இதர நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. எஞ்சியுள்ள 1,168 ஹெக்டேர் நிலம் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

இரயில்வே துறை கேட்டுக்கொண்டதற்கிணங்க, வேளச்சேரி கிராமத்தில் வெவ்வேறு புல எண்களில் 3.8 ஹெக்டேர் பரப்பளவு மிகை வெற்று நிலத்தில் திருமயிலை—வேளச்சேரி வரையிலான இரயில்வே விரிவாக்கத் திட்டம் (பகுதி 2) செயல்படுத்த இரயில்வே துறைக்கு முன்னுழைவு அனுமதி வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

## தமிழ்நாடு நகர்ப்புற நில வரிச் சட்டம், 1966



அரசுக்கு வருவாயை அதிகப்படுத்தும் நோக்கத்துடனும், மக்கள் அதிக நிலங்களை வாங்கி வைத்திருப்பதைத் தவிர்க்கும் பொருட்டும் தமிழ்நாடு நகர்ப்புற நில வரிச் சட்டம் முதன்முதலில் 1–7–1963 முதல் சென்னை நகரில் அறிமுகம் செய்யப்பட்டது. இச்சட்டத்தின்கீழ் எல்லா நகர்ப்புற நிலங்களுக்கும் சந்தை மதிப்பில் 0.4 சதவீதம் நகர்ப்புற நில வரியாக விதிக்கப்பட்டது.

மதுரை, கோயம்புத்தூர், சேலம், மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களுக்கு 1–7–1971 முதல் இச்சட்டம் விரிவுபடுத்தப்பட்டது. மேலும், இச்சட்டம் 1975–ல் திருத்தப்பட்டு சென்னை நகர எல்லையிலிருந்து 16 கி.மீட்டருக்கு உட்பட்ட புறநகர்ப் பகுதிக்கு 1–7–1975 முதல் நீட்டிக்கப்பட்டது.

பின்னர், இச்சட்டம் திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதிக்கு 1–7–1981 முதலும், மேலும் 23 நகராட்சிகளுக்கு 1–7–1991 முதலும் விரிவுபடுத்தப்பட்டது. நகர்ப்புற நில வரிச் சட்டம் அமலில் உள்ள எல்லா பகுதிகளுக்கும் 1–7–1981 நாளைய சந்தை மதிப்பை அடிப்படையாகக் கொண்டு 1–7–1991 முதல் வரி விதிக்கப்படுகிறது.

**வரி விதிப்பு விகிதங்கள் பின்வருமாறு:–**

| சென்னை புறநகர்ப் பகுதி தவிர்த்த ஏனைய நகர்ப்புற நிலங்கள் | | சென்னை புறநகர்ப் பகுதியில் உள்ள நிலங்கள் | |
|---|---|---|---|
| 1. முதல் இரண்டு மனைகள் | வரி இல்லை | 1. முதல் மூன்று மனைகள் | வரி இல்லை |
| 2. இரண்டு மனைக்கு மேல் ஐந்து மனைக்குள் | சந்தை மதிப்பில் 0.7 சதவீதம் | 2. மூன்று மனைக்கு மேல் ஏழு மனைக்குள் | சந்தை மதிப்பில் 0.7 சதவீதம் |
| 3. ஐந்து மனைக்கு மேல் பத்து மனைக்குள் | சந்தை மதிப்பில் 1 சதவீதம் | 3. ஏழு மனைக்கு மேல் பத்து மனைக்குள் | சந்தை மதிப்பில் 1 சதவீதம் |
| 4. பத்து மனைக்கு மேல் இருபது மனைக்குள் | சந்தை மதிப்பில் 1.5 சதவீதம் | 4. பத்து மனைக்கு மேல் இருபது மனைக்குள் | சந்தை மதிப்பில் 1.5 சதவீதம் |
| 5. இருபது மனைக்கு மேல் | சந்தை மதிப்பில் 2 சதவீதம் | 5. இருபது மனைக்கு மேல் | சந்தை மதிப்பில் 2 சதவீதம் |



இந்தச் சட்டத்தின் பிரிவு 29–ன்கீழ் மத்திய, மாநில அரசு நிலங்கள், மாநில அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனை நிலங்கள், மயான பூமி நிலங்கள், சாலைகளாக பயன்படும் நிலங்கள், பொது பூங்காக்கள், நூலகங்கள் மற்றும் அருங்காட்சியகங்கள் உள்ள நிலங்கள், ஆதரவற்றோர் மற்றும் அனாதை விடுதிகள் உள்ள நிலங்கள் ஆகியன விலக்கு பெறுகின்றன. மேலும், பொது வழிபாட்டிற்கு மட்டுமே பயன்படுத்தப்படும் நிலங்கள், குடிசைப் பகுதி என அறிவிக்கை செய்யப்பட்ட நிலங்கள் மற்றும் தமிழக அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளி, கல்லூரி மற்றும் பல்கலைக்கழக நிலங்கள் ஆகியவையும் விலக்கு பெறுகின்றன.

அறக்கட்டளைகள் மத சம்பந்தமான நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்கள் தங்கள் நிலங்களுக்கு நகர்ப்புற நிலவரி செலுத்துவதில் அதிகமான சிரமம் இருப்பின், அரசுக்கு மனு செய்து கொண்டால், பிரிவு 27(1)–ன்கீழ் தகுதி அடிப்படையில் வரிவிலக்களிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும்,

i) சொந்த குடியிருப்பு வீடுகள் உள்ள நிலங்கட்கும், இசை அரங்குகள், பொழுது போக்குக் கூடங்கள் மற்றும் திரைப்பட படப்பிடிப்பு அரங்குகள் ஆகியவற்றுக்கும் 50 சதவீதம் வரிச் சலுகையும்;

ii) திரை அரங்குகளுக்கும் மற்றும் பெரிய தொழிற்சாலைகளுக்கும 10 சதவீதம் வரிச் சலுகையும்; மற்றும்

iii) சிறு தொழில் சான்று பெற்ற நில உரிமையாளர்கள் நடத்தும் தொழிற்சாலைகளுக்கு 25 சதவீதம் என வரிச் சலுகை அளிக்கப்பட்டுள்ளது.

நகர்ப்புற நில வரி விதிப்பினை எதிர்த்து தொடரப்படும் மேல்முறையீட்டு மனுக்களை விரைவாக தீர்வு செய்யவும், மக்களுக்கு நிவாரணம் கிடைக்கவும் அந்தந்த மாவட்ட வருவாய் அலுவலர்களையே நகர்ப்புற நில வரி தீர்ப்பாயமாக அரசு நியமித்துள்ளது. சென்னை நகரைப் பொறுத்தவரையில், சென்னை சேப்பாக்கத்தில் நிலச் சீர்திருத்தத் துறையில் உள்ள மாவட்ட வருவாய் அலுவலர் (நிலத் தீர்ப்பாயம்) தீர்ப்பாய நீதிபதியாக செயல்படுகிறார்.

### 5.6 நகர்ப்புற நில வரி

நகர்ப்புற நில வரித் துறை, சிறப்பு ஆணையர் மற்றும் நிலச் சீர்திருத்த ஆணையர் மற்றும் நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நில வரித் துறை ஆணையர் ஆகியோரின் நேரடி மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகிறது. மேலும், நகர்ப்புற நில வரி சட்ட விதிமுறைகளை செயல்படுத்த சென்னை நகரம், சென்னை புறநகர் மற்றும் கோயமபுத்தூர் நகர்ப் பகுதிகளில் 11 உதவி ஆணையர் அலுவலகங்கள், 5 உதவி ஆணையர்களின் நிர்வாகத்தின்கீழ் செயல்படுகின்றன. இதர பகுதிகளில் நகர்ப்புற நில வரி சட்ட விதிமுறைகள் அமல்படுத்தும் பணி மதுரை, திருச்சி, திருநெல்வேலி மற்றும் ஈரோடு நிலச் சீர்திருத்த உதவி ஆணையர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நகர்ப்புற நில வரி வசூல், அந்தந்த மாவட்ட ஆட்சியர்களின் கண்காணிப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட வட்டாட்சியர்கள நகர்ப்புற நில வரி அதிகாரிகளாக நியமிக்கப்பட்டு, அவர்கள் நகர்ப்புற நில வரியை வசூல் செய்து வருகிறார்கள். சென்னை நகரில், இப்பணியினை ஐந்து தனி வட்டாட்சியர்கள் கவனிக்கிறார்கள். வரி வசூல் பணி குறித்த முன்னேற்றம் சிறப்பு ஆணையர் மற்றும் நிலச் சீர்திருத்த ஆணையரால், காலமுறையாக மாவட்ட வருவாய அதிகாரிகளுடன் ஆய்வு செய்யப்படுகிறது.

இம்மாநிலத்தில் தமிழ்நாடு நகர்ப்புற நில வரி திருத்தச் சட்டம் 1991-னகீழ் 31-3-2006 வரை 179,742 இனங்களில் வரி விதிப்பு செய்யப்பட்டு, ரூ.36.77 கோடி நகர்ப்புற நில வரியாக நிர்ணயம் செய்யப்பட்டது. இவற்றில், பல பிரிவுகளில் விலக்களிக்கப்பட்ட இனங்கள் தவிர நடப்பு ஆண்டு வரித் தொகை ரூ.17.38 கோடி ஆகும். 31-3-2006 வரை முடிந்த நிதி ஆண்டில் ரூ.11.89 கோடி வரித் தொகையாக வசூலிக்கப்பட்டுள்ளது. ஜூன் 2006 வரை ரூ.219.38 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. 1-7-2006 நாள் நிலவரப்படி நகர்ப்புற நில வரி ரூ.5,798.42 இலட்சம் நிலுவையாக உள்ளது.

ஃஃஃஃஃ

சென்னை-600 006

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Special Commissioner and Commissioner of
Stationery and Printing, Chennai-600 002.